# உதயன்




www.onlineuthayan.com

54 பக்கங்கள் சுடர் 28 கதிர் 027 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 08 ஞாயிற்றுக்கிழமை (23/12/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 30.00


# சர்வதேச விசாரணையை இலங்கை எதிர்கொண்டேதான் ஆக வேண்டும்

## சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்து

கொழும்பு, டிசெம்பர் 23

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிக் கட்டப் போரில் இடம்பெற்ற கொலைகள் குறித்து சர்வதேச சுயாதீன விசாரணை ஒன்றை இலங்கை அரசு எதிர்கொண்டே ஆகவேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.

''கொலைகளுக்குப் பொறுப்பான குற்றவாளிகளை முழுமையான, சர்வதேச, சுயாதீன விசாரணை ஒன்றின் முன் கொண்டுவரவேண்டும் என்று கோருகின்றோம்'' என்றார் சர்வதேச மன்னிப்புச் சபையின் பொதுச் செயலாளர் சலில் ஷெட்டி. இவர் ஒரு இந்தியர்.

2008–09 மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கை அரசு மேற்கொண்ட விசாரணைகள் போதாது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பார்க்க பக்கம் 4

**"மனித உரிமை மீறல் சம்பவங்கள் 2009 ஆம் ஆண்டு மட்டுமல்லாது இன்றும் இலங்கையில் தொடர்கின்றன."**

## 114 சீனர்கள் கைது

கொழும்பு, டிசெ. 23

இணையத்தை பயன்படுத்தி பணமோசடியில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் சீனர்கள் 114 பேர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மோசடி குறித்து சீனப் பொலிஸார் வழங்கிய தகவலின் அடிப்படையில் குற்றப்புலனாய்வு பிரிவு பொலிஸார் இவர்களைக் கைது செய்துள்ளனர்.

இணையத்தை பயன்படுத்தி சீனக் கணக்குகளிலிருந்து பணமோசடியில் ஈடுபட்ட குற்றத்திற்காகவே இவர்கள் 114 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் பேச்சாளர் எஸ்.எஸ்.பி. பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார். (த-5)

# புதிய அயலுறவு அமைச்சர் அமெரிக்காவில் அறிவிப்பு

## ஜான் கெர்ரி நியமனம்; இலங்கை உறவில் மாற்றம் வருமா?

வோஷிங்ரன், டிசெ. 23

அமெரிக்காவின் புதிய வெளியுறவுத்துறை செயலாளராக அமைச்சர் ஜான் கெர்ரி நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரை பதவி வகித்து வந்த ஹிலாரி கிளின்டன் அந்தப் பதவியில் இருந்து விலகியதைத் தொடர்ந்து ஜோன் கெர்ரி அவரது இடத்துக்கு ஜனாதிபதி ஒபாமாவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் முதல் நான்கு ஆண்டு கால ஆட்சியில் ஹிலாரி கிளின்டன் வெளியுறவுத் துறைச் செயலாளராக பணியாற்றினார். ஒபாமாவின் வலது கரமாக இருந்து உலக நாடுகளுடன் அமெரிக்காவின் உறவை வலுப்படுத்தியது மட்டுமன்றி உலக அளவில் ஹிலாரி கிளின்டன் பெரும் புகழ் பெற்றிருந்தார்.

ஹிலாரியின் காலத்தில் இலங்கை தொடர்பான அமெரிக்காவின் இராஜாங்கக் கொள்கை மிக இறுக்கமானதாகவே இருந்தது. ஜோன் கெர்ரியும் அதே பாணியைப் பின்பற்றுவார் என்று எதிர்பார்க்கப்பட்டாலும் அவரது அணுகுமுறையில் வித்தியாசம் இருக்கும் என்று

பார்க்க பக்கம் 4

## இரணைமடுக் குளத்தின் 4 வான் கதவுகள் திறப்பு

### கனமழையை அடுத்து

யாழ்ப்பாணம்,டிசெ.23

வன்னியில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் கனமழை காரணமாக இரணைமடுக்குளத்தின் நீர் மட்டம் அதிகரித்துள்ளது. இதனால் குளத்தின் பதினொரு வான் கதவுகளில் 4 வான் கதவுகள் நேற்று சனிக்கிழமை மாலை வரை திறந்து விடப்பட்டுள்ளதாகக் கிளிநொச்சிப் பிராந்திய பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் என்.சுதாகரன் தெரிவித்தார்.

கடந்த சில நாள்களாகப் பெய்துவரும் பருவமழை காரணமாக வவுனியா மாவட்டத்திலுள்ள பெரும்பான்மையான குளங்களின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதுடன் அவற்றில் சில குளங்கள் வான் பாய ஆரம்பித்துள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதான குளமான இரணைமடுக்குளத்தின் நீர்

பார்க்க பக்கம் 4

## சிறுபான்மையினருக்கு எதிரான பேரணிகளைத் தடுக்க முடியாது

### கோத்தபாய திட்டவட்டம்



கொழும்பு, டிசெ. 23

சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டப் பேரணிகளையோ ஊர்வலங்களையோ தடுக்க முடியாது என்று ஆணித்தரமாகக் கூறியிருக்கிறார் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ. ''ஊர்வலங்களையும் பேரணிகளையும் தடுப்பது ஜனநாயகத்துக்கு மாறான

பார்க்க பக்கம் 4

### பரிசளிப்பு இன்று

'உதயன் பரிசுக் கொண்டாட்டத்தில்' வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு இன்று முற்பகல் 10 மணிக்கு உதயன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொள்ளவுள்ளார்.

## வினாத்தாள் வெளியானதற்கு தனியார் அச்சகம் காரணமா?

கொழும்பு, டிசெ. 23

ஜி.சி.ஈ. சாதாரண தரப்பரீட்சையின் விஞ்ஞான பாட வினாத்தாள் பரீட்சைக்கு முன்பே வெளியாகியமைக்கு அவை தனியார் அச்சகம் ஒன்றில் அச்சடிக்கப்பட்டமையே காரணமா என்று குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் தனியார் அச்சக உரிமையாளரான ஆசிரியரும் மற்றொருவரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் பொலிஸார் கடுவளை பதில் நீதிவான் கோம்பலகேவிடம் நேற்று சனிக்கிழமை முற்படுத்தினர். அந்த இருவரையும் எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்

பார்க்க பக்கம் 4

## பல்கலை. ஆசிரியர் சங்க தலைவரிடம் விசாரணை

### மூன்றரை மணிநேரம் நடந்தது

யாழ்ப்பாணம், டிசெ. 23

மாவீரர் வாரத்தில் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற நிகழ்வுகள் தொடர்பிலேயே பயங்கரவாத விசாரணைப் பிரிவுப் பொலிஸார் மூன்றரை மணி நேரம் தன்னிடம் விசாரணைகளை மேற்கொண்டனர் என்று, யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் ஆர்.இராசகுமாரன் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக ஆசிரி

பார்க்க பக்கம் 4

## பிலியந்தலவில் தமிழ்ப் பெண் கொலை

கொழும்பு, டிசெ. 23

கழுத்து வெட்டிக் கொலை செய்யப்பட்ட நிலையில் தமிழ்ப் பெண் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப் பட்டுள்ளது.

பார்க்க பக்கம் 4






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை அனைவரும் ஏற்கவேண்டும்

## லக்ஷ்மன் கிரியெல்ல வேண்டுகோள்

கொழும்பு, டிசெ. 23

அரசியலமைப்பே நாட்டின் உயரிய சட்டம் என்பதால் அது தொடர்பிலான உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானத்தை சகலரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். குற்றப் பிரேரணை தொடர்பில் அரசியலமைப்புக்கு சார்பாக நீதிமன்றம் வியாக்கியானத்தை வழங்கியுள்ளது. இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியலமைப்பை உயர் நீதிமன்றத்தினால் மட்டுமே வியாக்கியானத்திற்கு உட்படுத்த முடியும். நிறைவேற்று அதிகாரம், சட்டவாக்கம் மற்றும் நீதித்துறை ஆகியன ஆட்சியின் மூன்று தூண்களாகும்.



இவ்வாறான நிலையில் அரசியலமைப்பை உயர்நீதிமன்றத்தினால் மட்டுமே வியாக்கியானத்திற்கு உட்படுத்த முடியும். அந்த வியாக்கியானத்தை இறைமையுள்ள நாட்டில் வாழ்கின்ற சகலரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் - என்றார். (ஐ -5)

## குற்றப் பிரேரணையை எதிர்த்ததால் விஜயதாஸவுக்கு அச்சுறுத்தல்

கொழும்பு, டிசெ. 23

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப் பிரேரணைக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொண்டதால், விஜயதாஸ ராஜபக்ஷவின் உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜயதாஸ ராஜபக்ஷவின் வீட்டின் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகம் தொடர்பில் சிரேஷ்ட சட்டத்தரணியும் சங்கத்தின் முன்னாள் செயலாளருமான ஜயசூரிய நேற்று இந்த முறைப்பாட்டை செய்துள்ளார்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப்பிரேரணைக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டதை அடுத்தே அவருடைய உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## உயிரிழப்பு 31ஆக உயர்வு

கொழும்பு, டிசெ. 23

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 31 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் காணாமல் போனவர்களின் எண்ணிக்கையும் 12 ஆக குறைவடைந்துள்ளது என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் கடந்த சில தினங்களாக நிலவிய சீரற்ற காலநிலையினால் 16 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக 80,534 குடும்பங்களைச் சேர்ந்த மூன்று இலட்சத்து 64,116 பேர் வெள்ளம் காரணமாக பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளனர்.

இவர்களில் 56677 பேர் தற்காலிக முகாம்களில் இன்னும் தங்கியிருப்பதாகவும் சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாக அந்த நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (ஐ-5)

## ஈரானுடன் இணைந்து இலங்கை மின் உற்பத்தி

கொழும்பு, டிசெ. 23

இலங்கை ஈரானுடன் மின் உற்பத்தி ஒப்பந்தம் ஒன்றை செய்துள்ளது.

ஈரானின் 'சுனிர்' என்ற நிறுவனத்துடன் 2009 ஆம் ஆண்டு அப்போதைய இலங்கை மின்துறை பிரதி அமைச்சர் சாகல ரத்நாயக்க ஒப்பந்தம் ஒன்றை செய்திருந்தார்.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் ஈரான் நிறுவனம் மின் உற்பத்தி திட்டத்தில் ஈடுபடவுள்ளது. இதற்கான காப்புறுதியை ஈரான் ஏற்றுமதி நிறுவனம் ஒன்று வழங்குகிறது.

106 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் செயற்படுத்தப்படவுள்ள இந்தத் திட்டத்தின் கீழ் இலங்கையில் தெரிவுசெய்யப்பட்ட பிரதேசங்களில் 180 ஆயிரம் குடும்பங்களுக்கு மின் விநியோகிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானிடம் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்யக் கூடாதென இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கு அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-5)

## தொல்லை கொடுத்த தொலைபேசி அழைப்பு

கொழும்பு, டிசெ. 23

உலக அழிவு தொடர்பில் அறிந்து கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்ட நூற்றுக் கணக்கான தொலைபேசி அழைப்புகள் காரணமாக தாம் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டதாக வளிமண்டலவியல் திணைக்கள பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

உலக அழிவு தொடர்பில் ஏற்படுத்தப்பட்ட வதந்தி மற்றும் பொய் பிரசாரங்களை நம்பி அச்சமடைந்த மக்கள் இவ்வாறான தொலைபேசி அழைப்புகளை ஏற்படுத்தியதாக அவர் தெரித்துள்ளார்.

சில இணையத் தளங்கள் உலக அழிவு தொடர்பிலான வதந்திகளைப் பரப்பி மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தி வந்தன. எப்படியிருப்பினும் எந்தவித ஆபத்துமின்றி வழமையை போன்று 21 ஆம் திகதி முடிவடைந்ததாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-5)

## படகு விபத்தில் இருவர் சாவு நால்வரைக் காணவில்லை

கொழும்பு, டிசெ. 23

படகு ஓட்டி விளையாடிக் கொண்டிருந்த போது அந்தப் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் 6 பேர் காணாமல் போயினர். அவர்களில் இருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹோமாகம பிரதேச தனியார் நிறுவனமொன்றில் பணி புரியும் 28 பேர் கதிர்காமத்திற்கு சென்று திஸ்ஸமகாராம வாவி ஊடாக படகில் பயணித்த போது படகு நேற்று மாலை விபத்துக்குள்ளானது.

10 பேர் பயணிக்க வேண்டிய படகிலேயே 28 பேர் பயணித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்தப் படகில் பயணித்தவர்கள் இங்கிரிய மற்றும் ஹொரனை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

**22 பேர் மீட்கப்பட்டு அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.**

படகு கவிழ்ததில் அதிலிருந்து 22 பேர் மீட்கப்பட்டு அம்பாந்தோட்டை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர்.

எஞ்சிய 6 பேரில் இருவர் உயிரிழந்துள்ளனர். ஏனைய நால்வரை தேடும் பணிகளில் கடற்படையினர், சுழியோடிகள் மற்றும் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (ஐ-5)



கல்முனைப் பிரதேசத்தில் 13 அடி நீளமான முதலை பிரதேச வாசிகளால் வலை வீசிப் பிடிக்கப்பட்டது. கரைக்குக் கொண்டுவரப்பட்ட முதலை உயிரிழந்துள்ளது

## விபத்தில் பெண் சாவு

மல்வானை மாப்பிட்டிகம பகுதியில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் இடம் பெற்ற வாகன விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் மல்வானை மாப்படிகம பிரதேசத்தைச் சேர்ந்த அலங்கார கபுகே குஸூமாவதி (வயது - 41) என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார். குறித்த பெண், மல்வானை பிரதேசத்திலுள்ள தனியார் ஆடைத்தொழிற் சாலைக்கு நேற்றுக் காலை வேலைக்குச் செல்லும் வழியில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்துடன் சம்மந்தப்பட்ட வாகனம் மற்றும் சாரதி தப்பிச் சென்றுள்ளதாகவும் மேலதிக விசாரணைகளை தொம்பே பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## ஆஸி. சென்ற 26 பேர் கைது

சிலாபம், டிசெ. 23

படகு மூலம் ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல முயற்சித்த 26 பேர் சிலாபம் கடற்பரப்பில் வைத்து நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர். இவர்களில் தமிழர்கள் மட்டுமின்றி சிங்களவர்களும் அடங்கியிருந்தனர்.

யாழ்ப்பாணம், மாரவில, நீர்கொழும்பு, சிலாபம், வவுனியா போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

மீன்பிடி படகொன்றில் பயணித்துக் கொண்டிருந்தபோது இவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஐந்து பெண்களும் ஏழு சிறுவர்களும் அடங்குகின்றனர்.

**யாழ்ப்பாணம், மாரவில, நீர்கொழும்பு, சிலாபம், வவுனியா போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.**

கைது செய்யப்பட்டவர்கள் முத்துவெல மீன்பிடி துறைமுகத்திற்கு அழைத்து வரப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (த-5)

## விரிவுரையாளர் பிரச்சினைக்கு தீர்வுகாண சுற்றறிக்கை விரைவில்

கொழும்பு, டிசெ. 23

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு சம்பள உயர்வு குறித்த ஆவணங்கள் உயர்கல்வி அமைச்சிடம் சமர்பிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய தமது பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் சுற்றறிக்கை விரைவில் வெளியிடப்படும் என்று விரிவுரையாளர்கள் தொழிற்சங்க சம்மேளனத்தின் செயலாளர் கலாநிதி டெரன்ஸ் மதுஜித் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக ஆசிரியர்கள், சம்பள உயர்வு கோரி 100 நாள்கள் வரையில் போராட்டம் நடத்தியிருந்தனர். அரசின் கோரிக்கைக்கு அமைவாக பின்னர் போராட்டம் கைவிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுடன் நேற்று முன்தினம் இடம் பெற்ற பேச்சை அடுத்து சம்பள உயர்வு குறித்த ஆவணங்கள் உயர் கல்வி அமைச்சிடம் சமர்பிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதன்படி தமது சம்பள பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் எதிர்வரும் நாட்களில் சுற்றறிக்கை வெளியிடப்படும் என்று அவர் கூறினார். (ஐ-5)

## வான் கதவுகள் திறப்பு

பராக்கிரம சமுத்திரத்தின் நான்கு வான் கதவுகள் நேற்று திறக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. அத்துடன் ராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் இரு வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன.

அதனால் நீர்த்தேக்கங்களுக்கு அருகாமையில் இருக்கும் மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ-5)

## சிறுமி மீது துஷ்பிரயோகம்; தெற்கு நபர் கைது

கிளிநொச்சியில் 4 வயதுச் சிறுமியைத் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் தென்பகுதியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று யாழ். பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார். நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சிறுமியைத் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர் இலப்பிட்டிய என்ற இடத்தைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது. எனினும் அதுபற்றிய மேலதிக விவரங்கள் எவையும் தெரிவிக்கப்படவில்லை. (த-4)

தேவை

கொழும்பில் உள்ள வீடொன்றில் பணிப் பெண்ணாகக் கடமையாற்றுவதற்கு ஒருவர் தேவை.

- வயதெல்லை - 40 முதல் 60 வரை
- நல்ல தேக ஆரோக்கியமும் சுறுசுறுப்பாகச் செயற்படக்கூடியவர்களும் விரும்பத்தக்கது.
- தங்குமிட வசதி, உணவுடன் சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 0715 232 232

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் பிரச்சினையை சிறிதாக நினைக்கிறது அரசு

## கோப்பாய் கோமானின் சிலை திறப்பில் மாவை எம்.பி.




யாழ்ப்பாணம்,டிசெ.23

*நீதித்துறைக்கு எதிராக இயங்கிக் கொண்டிருக்கும் இந்த அரசின் முன்னால் தமிழர்களுடைய பிரச்சினை சிறியதொரு பிரச்சினையாகவே தற்போது உள்ளது. நீதித்துறைக்கும் அரசுக்கும் இடையிலான இந்தப் பிரச்சினை விஞ்சிக் கொண்டு தமிழர்களது பிரச்சினையை நாம் முன்நோக்கிக் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. அதற்கான நடவடிக்கையை முன்னெடுத்து வருகிறோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.*

கோப்பாய் கோமான் அமரர் கு.வன்னியசிங்கத்தின் உருவச்சிலை திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது நாட்டில் நீதித்துறைக்கும் அரசுக்கும் இடையே எழுந்துள்ள பிரச்சினை தீர்வுக்கு வராமல் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

நீதித்துறைக்கே சவால் விடும் வகையில் அரசு செயற்படும் நிலைமையே தற்போது உள்ளது. இந்தப் பிரச்சினைக்கு முன்பாக தமிழர்களது பிரச்சினை சிறியதொரு பிரச்சினையாகவே தற்போது உள்ளது. அதனை விஞ்சும் வகையில் எமது பிரச்சினைகளை நாம் முன்னோக்கிக்கொண்டு செல்ல வேண்டியுள்ளது.

எமது போராட்டங்களையும் சரி பல்கலைக்கழக மாணவர்களது போராட்டங்களையும் சரி சிதறடிப்பதே அரசின் நோக்காக உள்ளது. இந்த நிலையில் இவற்றைச் சமாளித்தே நாம் செயற்பட வேண்டும்.

ஒரு வருடத்துக்கும்மேலாக அரசுடன் பேசி வருகிறோம். ஆனால் தீர்வு எந்த நிலையில் உள்ளது என்பது அனைவருக்கும் தெரியும். பல நாடுகள் இலங்கை அரசுடன் சேர்ந்திருப்பதால் இங்குள்ள நிலைமை தொடர்பாக அந்த நாடுகளுக்கு நாம் தெரியப்படுத்த வேண்டும்.

இந்திய இராணுவத் தளபதி இலங்கை வந்து இலங்கை இராணுவத்தின் நடவடிக்கை சரியாக உள்ளது எனத் தெரிவித்தது உண்மையானால் அது கண்டிக்கப்பட வேண்டும்-என்றார்.

நிகழ்வில் கலந்து கொண்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் உரையாற்றுகையில்:-

வடக்கில் 15 ஆயிரம் இராணுவத்தினரே உள்ளனர் என்று யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி தெரிவித்துள்ளார்.

ஆனால் தற்போது வடக்கில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் இராணுவத்தினர் உள்ளனர். 15 ஆயிரம் இராணுவத்தினர் தான் இங்கு உள்ளனர் என்றால் இராணுவத்தில் இத்தனை பிரிவுகள், பிரிகேட் பிரிவுகள் எதற்காக?

இங்குள்ள காணிகளை எதற்காகக் கேட்கிறார்கள். வன்னியில் கிராமம் கிராமமாக அலைக்களிக்கிறீர்கள். காணி தரும்படி கோருகிறீர்கள். இது எதற்காக.- என்றார்.

கோப்பாய் கோமான் அமரர் கு.வன்னியசிங்கம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராவார் அவரது உருவச் சிலையே நீர்வேலிச் சந்தியிலுள்ள வாழைக்குலை உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் முன்பாக நேற்று முற்பகல் திறந்து வைக்கப்பட்டது.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா உருவச் சிலையைத் திறந்து வைத்து அங்கு பொறிக்கப்பட்ட ஞாபகார்த்தக் கல்லையும் திரைநீக்கம் செய்தார்.

அதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன், சுரேஸ் பிரேமச்சந்திரன் மற்றும் கட்சி உறுப்பினர்கள், கூட்டமைப்பின் யாழ். மாவட்ட இளைஞர் அணித்தலைவர் கஜதீபன் உட்பட பலர் உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்தனர்.

தொடர்ந்து சிலைத்திறப்பு விழா சிறப்பு மலர் வெளியிடப்பட்டது. மலரை கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வெளியிட்டு வைக்க கட்சியின் பொருளாளர் எஸ்.தியாகராசா முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார். (ம-4)

## நிகழ்வுகள் இன்று

**செயலமர்வு**

வடமாகாண விஞ்ஞான சங்கம், யாழ். மாவட்ட விஞ்ஞான கழகத்தின் கல்விப் பிரிவு இணைந்து நடத்தும் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றி கணிதம், உயிரியல் துறையைத் தெரிவு செய்த மாணவர்களுக்கான கல்வி வழிகாட்டல் செயலமர்வு மு.ப. 9.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

**ஒளி விழா**

யாழ். றோட்டறிக் கழகம் நடத்தும் ஒளிவிழா பிற்பகல் 3 மணிக்கு இல.396, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள உதயன் விருந்தினர் தங்ககத்தில் நடைபெறவுள்ளது. (ம)

* * *

மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்தின் நிர்வாக சபை மற்றும் கழகம் என்பவற்றின் ஒழுக்கமைப்பில் ஒளிவிழாவும் சான்றிதழ் வழங்கலும் நிகழ்வு மாலை 6 மணிக்கு ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளன.

பங்குத்தந்தை அருட்பணி ம.பத்திநாதர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் புனித நீக்கிலார் சமூக கனடா கிளையின் நிதியுதவியுடன் நடத்தப்பட்ட இலவச கணினிக் கல்வித் திட்டத்தில் பயின்று வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசளிப்பும் இடம்பெறும். (ம-14)

**லயன்ஸ் கழக வேலைத்திட்டம்**

தீவக லயன்ஸ் கழகத்தின் மாபெரும் சேவைத் திட்டம் காலை 9 மணிக்கு புங்குடுதீவு சர்வோதயம் புஸ்பா மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் சமய வழிபாடு, முதியோரைக் கௌரவித்தல், குழந்தைகளுக்கான சேவைத் திட்டம், பற்பரிசோதனை, அறநெறி ஆசிரியர்களுக்கு சீருடை வழங்கல், மரநடுகை, போக்குவரத்து விதிமுறை கருத்தரங்கு ஆகியன இடம் பெறவுள்ளன. (ம-14)

**பொதுக் கூட்டம்**

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையின் பொதுக் கூட்டம் இன்று பளை முல்லையடியில் அமைந்துள்ள பேரவை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-9)

**கிறிஸ்மஸ் நிகழ்வு**

கல்வாரி திருச்சபை வாலிபர்களின் ''விண்பணி'' எனும் கிறிஸ்மஸ் சிறப்பு நிகழ்வு மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (ம-14)

**கலை நிகழ்வும் பரிசளிப்பும்**

கைதடி கலைநகர் வளர்மதி முன்பள்ளியும் நவபுரம் நவசக்தி முன்பள்ளியும் இணைந்து நடத்தும் கலைவிழாவும் பரிசளிப்பும் பிற்பகல் 2 மணிக்கு கைதடி வளர்மதி கலையரங்கில் முன்பள்ளி முகாமைத்துவக் குழுத்தலைவர் திருமதி மா.சசிகலா தலைமையில் நடைபெறவுள்ளன. இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக கைதடி ஒன்றிய லண்டன் வாழ் பிரதிநிதி சி.புரட்சிதாசன், இ.சசிக்குமார் ஆகியோர் கலந்துகொள்வர். (ம-288)

## பருத்தித்துறை–கொழும்பு பஸ்கள் வழமையான பாதையில் சேவை

வடமராட்சி,டிசெ.23

பருத்தித்துறை கொழும்பு இ.போ.ச, தனியார் பஸ் சேவைகள் வியாழன் இரவு தொடக்கம் வழமையான பாதையில் நடைபெற்று வருகின்றது.

கடந்த சில தினங்களாகப் பெய்து வந்த பெருமழையால் சிலாபம் பகுதியில் வீதிக்கு மேலாக வெள்ளம் பாய்ந்ததால் அந்தப் பாதை ஊடாக போக்குவரத்துக்கள் தடைப்பட்டிருந்தன.இந்தப் பாதை தடைப்பட்டிருந்ததால் பருத்தித்துறையில் இருந்து கொழும்புக்கு நடைபெற்று வந்த பஸ் சேவைகள் யாவும் தம்புள்ளை, குருநாகல் ஊடான மாற்றுப்பாதையால் நடைபெற்று வந்தன.

> சிலாபம் பகுதியில் வீதிக்கு மேலாக வெள்ளம் பாய்ந்ததால் அப்பாதை ஊடாக போக்குவரத்துக்கள் தடைப்பட்டிருந்தன.

மழை குறைவடைந்து , வெள்ளம் வடிந்தோடியதைத் தொடர்ந்து பருத்தித்துறை-கொழும்பு பஸ் சேவைகள் புத்தளம் -சிலாபம் பாதை ஊடாக நடைபெற்று வருகின்றன. (ம-8)

**சுந்தர்சன் நிறுவனத்தின் மாபெரும் மலிவு விற்பனையில் பரிசு வென்ற 50 அதிர்ஷ்டசாலி வாடிக்கையாளர்கள்**

**1 ஆம் பரிசு** - Single Door Fridge - திரு. P. முருகவேல் - சங்கரத்தை
**2 ஆம் பரிசு** - Washing Machine - திரு. T. ஆனந்த் - யாழ்ப்பாணம்
**3 ஆம் பரிசு** - Microwave Oven - திரு. B. அகிபன் - வட்டுக்கோட்டை

**4 - 10 ஆம் பரிசில்கள்** - Mixture Grinder
P. முகுந்தன் - நவாலி / S. கணபதிப்பிள்ளை - சுழிபுரம் / J. பவளலோசினி - வவுனியா / K. சிவலோகநாயகி - இணுவில் / U. அபிஷன் - நவாலி / பாலமுருகன் - மானிப்பாய் / T. நரேந்தன் - கரவெட்டி

**11 - 20 ஆம் பரிசில்கள்** - Pedestal Fan
V. சுவேதா - இளவாலை / K. கருணா - நவாலி / P. சிறீதரன் - சுழிபுரம் / Barakath Traders -யாழ்ப்பாணம் / R. வரதன் - வட்டுக்கோட்டை / S. [illegible] - [illegible] / A.F. றொஷானி - யாழ்ப்பாணம் /K. பாலகிருஷ்ணன் - [illegible] /M. [illegible] - பாசையூர் /S. மார்க்கண்டு - சாவகச்சேரி

**21 - 30 ஆம் பரிசில்கள்** - Mobile Phone
S. கணேஷ்குமார் - உடுவில் / S. தனுஷன் - அச்சுவேலி / N. திருமோகனதாஸ் - வட்டுக்கோட்டை / J. சதீஸ்குமார் - இணுவில் / T. நேசரம்யா - நவாலி / S. ஜெயசீலன் - யாழ்ப்பாணம் / V. ஜெகதாம்பிகைபாகன் - மல்லாகம் / R. சசிகலா - அச்சுவேலி / Y. ஆதவன் - யாழ்ப்பாணம் / J. றேமன் - இளவாலை

**31 - 40 ஆம் பரிசில்கள்** - Water Filter
K. சிவரூபன் - பருத்தித்துறை / R. பாஸ்கரன் - கோண்டாவில் / S. கிருபாகரன் - மீசாலை / R. சந்திரபாலன் - மாதகல் / J. யாழினி - கொக்குவில் / A. இந்துதாஸ் - சண்டிலிப்பாய் / S. கிஷோக்குமார் - இளவாலை / V. றேமண்ட் - ஆனைக்கோட்டை / S. சிவகுமாரன் - கொக்குவில் / V. ஜெயந்தி - ஆனைக்கோட்டை

**41 - 50 ஆம் பரிசில்கள்** - Toaster
S. [illegible] / B. பிரதீபன் - கொக்குவில் / N. சிவகுமார் - சாவகச்சேரி / R. சிவகுமார் - [illegible] / T. ஜீவிதன் - சண்டிலிப்பாய் / R. சாந்தரூபி - சண்டிலிப்பாய் / T. கிருபன் - மானிப்பாய் / S. அம்புஜன் - கோப்பாய் /T. தக்சிகன் - சிந்துபுரம் / V. கந்தசாமி - சண்டிலிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதியின் சுதந்திரத்தை உறுதி செய்யுங்கள்

## ஷிராணி அறைகூவல்

யாழ்ப்பாணம், டிசெ. 23

நாட்டில் நீதித்துறை சுதந்திரமாக இயங்குவதற்கு உரிய வழிவகைகள் உறுதி செய்யப்பட வேண்டும். ஒரு நாட்டில் ஜனநாயகம் இருக்க வேண்டுமானால் அங்கு நீதித்துறை சுதந்திரமாக இயங்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் பிரதம நிதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க.

நீதிபதிகளின் வருடாந்த மாநாடு நேற்றுக் கொழும்பில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய பிரதம நீதியரசர் அங்கு மேலும் தெரிவித்திருப்பதாவது :-



நாட்டின் சாதாரண சட்டங்களைக்கூட அரசு கடைப்பிடிக்காவிட்டால் அரசின் நிறைவேற்றுத்துறை, சட்டத்துறை மற்றும் நீதித்துறை ஆகிய மூன்று கூறும் இயங்க முடியாது போகும்.

இதன்மூலம் சட்டத்தின் முன் யாவரும் சமம் என்கின்ற அடிப்படைச் சமத்துவக் கோட்பாடு தகர்க்கப்பட்டு விடும்.

நாட்டிலுள்ள சகல மக்களும் சமமாக நடத்தப்படக்கூடியவாறு எல்லா மட்டங்களிலும் சட்டத்தின் ஆட்சி உறுதிப்படுத்தப்பட்டால் மட்டுமே நீதித்துறை சுதந்திரமாக இயங்கும்.

ஒரு நபர் மீது ஏதாவது குற்றம் சுமத்தப்படுகிறது எனின் முதலில் அவர் தரப்பு வாதத்தை முன்வைக்குமளவுக்கு முறையான சுதந்திரம் வழங்கப்பட வேண்டும்.

நீதிபதிகள் எந்தவித அழுத்தங்களோ சலனங்களோ இன்றி தமது பணிகளை செய்ய நாட்டின் சட்ட மற்றும் நிறைவேற்றுத்துறை உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும் - என்றார். (ஐ-16)

# பெண்கள் மூவர் மீது பாலியல் துஷ்பிரயோகம்

## சுகாதார அமைச்சு நிறுவனங்களில்

கொழும்பு, டிசெ. 23

சுகாதார அமைச்சின் கட்டுப்பாட்டில் இயங்கும் நிறுவனங்களில் பணிபுரியும் மூன்று பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் குறித்த விசாரணை செய்யும் பொறுப்பு பொலிஸ் மகளிர் மற்றும் சிறுவர் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனைக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வைத்திய விநியோக பிரிவு மற்றும் தேசிய வைத்தியசாலை ஆகியவற்றில் வைத்து குறித்த மூன்று பெண்களும் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சுகாதார அமைச்சரின் ஆலோசனைக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

இது குறித்து சம்பந்தப்பட்ட பெண்கள் சுகாதார அமைச்சரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதன் பின்னரே சுயாதீன விசாரணைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (த-5)

## பிலியந்தல..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மஹரகம- பிலியந்தல லும்பினி ஒழுங்கையிலுள்ள வீட்டிலிருந்து 30 வயது மதிக்கத்தக்க பெண்ணின் சடலத்தை பொலிஸார் மீட்டனர்.

கொலை செய்யப்பட்ட பெண் தாயுடன் வசித்து வந்தார். அவரது கணவர் சில காலங்களுக்கு முன்னர் வீட்டைவிட்டு வெளியேறி நேற்றுமுன்தினமே மீண்டும் வீட்டிற்கு வந்திருந்தார். பெண்ணின் தாயாருடன் அவர் சண்டையிட்டுக் கொண்டிருந்ததை அயலவர்கள் அவதானித்துள்ளனர் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

இரவு வேலை முடித்துவிட்டு பெண் நேற்றுக் காலை வீட்டுக்குச் சென்ற போது தாய் வேலைக்கு சென்றுவிட்டார். அந்த நேரம் பார்த்து வீட்டுக்கு வந்த கணவர், பெண்ணுடன் மோதலில் ஈடுபட்டுள்ளார். இதனை அயலவர்கள் பெண்ணின் தாய்க்கு தொலைபேசி மூலம் தெரிவித்துள்ளனர்.

உடனடியாகவே தயார் வீட்டில் வந்து பார்த்தபோது மகள் கழுத்து வெட்டி கொலை செய்யப்பட்டு கிடந்தார் என்கிறது பொலிஸ்.

இந்தக் கொலையுடன் குறித்த பெண்ணின் கணவர் தொடர்புப்பட்டிருக்கலாம் என்று சந்தேகப்படுவதாக தெரிவித்த பொலிஸார் சந்தேகநபரைத் தேடி வருகின்றனர்.(த-5)

## சர்வதேச...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இலங்கை அரசின் மீதும் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதும் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள அவர், தமிழீழ விடுதலைப் புலிகளும் தங்கள் கட்டுப்பாட்டில் இருந்த மக்களை கொலை செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளதென தெரிவித்துள்ளார்.

''மனித உரிமைகள் மீறல் சம்பவங்கள் 2009 ஆம் ஆண்டு மட்டுமல்லாது இன்றும் இலங்கையில் தொடர்கின்றன'' என்றார் அவர். மனித உரிமை மீறல்கள் என்பது இப்போதும் தொடரும் பிரச்சினை என்றார் அவர்.

சர்வதேச மன்னிப்புச் சபையின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள முதலாவது இந்தியர் ஷெட்டி.

இலங்கையின் நிலை தொடர் பில் இந்தியா பெரும்பாலும் அமைதிகாப்பதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

''இந்தியா புதிய கோணத்தில் இப்பிரச்சினையை அணுகும் நேரம் வந்துவிட்டது'' என்றார் அவர்.

போரின்போது மனித உரிமைகள் மீறப்பட்டன என்ற சர்வதேச சமூகத்தின் குற்றச்சாட்டுக்களை இலங்கை அரசு தொடர்ச்சியாக மறுத்து வருகின்றது.

(த -5)

## சிறுபான்மை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

செயலாக இருப்பதால் அரசை அது நெருக்கடிக்கு உள்ளாக்கும்'' என்றார் கோத்தபாய ராஜபக்ஷ.

முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும், பாதுகாப்பு அமைச்சின் செயலருக்கும் இடையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

''இன்று இந்த நாட்டில் சிறுபான்மையினருக்கு உரிய உரிமைகள் வழங்கப்படவில்லை என்று சர்வதேச அழுத்தங்கள் எமக்கு கொடுக்கப்படுகின்றன. ஆனால் கொழும்பில் பௌத்தர்களைவிட முஸ்லிம்களினதும் தமிழர்களினதும் விகிதாசாரம் கூடியுள்ளதை பிறநாட்டு தூதுவர்களிடம் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது'' என்றும் கோத்தபாய தெரிவித்தார்.

நாட்டின் உளவுப் பிரிவுக்கு பொறுப்பாகவிருப்பவர் சிறுபான்மையினத்தைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவரே என்றும் அவர் அங்கு கூறினார்.

''முஸ்லிம்களுக்கு எதிராக செயற்படுபவர்கள் ஒரு சிறு எண்ணிக்கையை கொண்டவர்கள். அவர்களைத் தூக்கிப்பிடித்து நாங்கள் செயற்பட்டால் அவர்களை நாம் வீரர்களாக்கி விடுவோம்.

பாதுகாப்பை பற்றி முஸ்லிம்கள் அச்சப்பட தேவையில்லை. முஸ்லிம்களுக்கு எதிராக ஒட்டப்படும் 'போஸ்டர்களை' உடனடியாக அகற்றுவதற்கு நான் நடவடிக்கை எடுத்துள்ளேன். முஸ்லிகளாகிய நீங்கள் உங்கள் தரப்பு நியாயங்களை எம்மிடம் முன்வைப்பது போல் உங்களுக்கு எதிரானவர்களும் பலவிடயங்களைச் சுட்டிக்காட்டி எமக்கு பல அழுத்தங்களைக் கொடுக்கின்றார்கள் - என்றார். (த-5)

## இரணைமடு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மட்டம் நேற்று முன்தினம் 28 அடியாகக் காணப்பட்டது. தொடர்ச்சியாகப் பெய்த மழை காரணமாக நேற்று அது 30 அடி 4 அங்குலமாக உயர்ந்துள்ளது.

இதனால் குளத்தின் 11 வான்கதவுகளில் 4 வான் கதவுகள் நேற்று மதியம் திறந்து விடப்பட்டன.

வான்கதவுகள் திறக்கப்பட்ட நிலையிலும் மணிக்கு 3 ஆயிரத்து 8 கன அடி நீர் குளத்தை வந்தடைந்த வண்ணம் இருந்தது. நீர் மட்டம் மேலும் உயர்வடையுமாயின் குளத்தின் ஏனைய கதவுகளும் திறக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய வான்கதவுகள் திறக்கப்படும் பட்சத்தில், தாழ் நிலப் பகுதிகளில் வாழும் குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர வேண்டிய நிலை ஏற்படும் என்றும், அதுதொடர்பில் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் தெரிவித்தார். (த-5-6-18)



## பல்கலை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

யர் சங்கத் தலைவரான ஆர்.இராச குமாரனை விசாரணைக்கு வருமாறு பயங்கரவாத விசாரணைப் பிரிவுப் பொலிஸார் நேற்றுமுன்தினம் தொலைபேசி ஊடாக அழைப்பு விடுத்திருந்தனர்.

இதற்கமைய, பல்கலைக்கழக வாகனத்தில் கலைப்பீட பீடாதிபதி வி.பி.சிவநாதன் மற்றும் முகாமைத்துவப் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் சிவராஜா ஆகியோருடன் வவுனியா சென்றிருந்தார் இராசகுமாரன்.

விசாரணையின்போது நவம்பர் 26, 27, 28 ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாகவே திரும்பத் திரும்பக் கேட்கப்பட்டதாக இராசகுமாரன் தெரிவித்தார். (த-5-4)

## வினாத்தாள்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

ஜி.சி.ஈ. சாதாரண தரப்பரீட்சையில் விஞ்ஞான வினாத்தாள்கள் பரீட்சைக்கு முன்னதாகவே வெளியானதாகக் கூறப்படுவது தொடர்பில் பரீட்சைகள் திணைக்களத்தின் கணினிப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் கடந்த இரு தினங்களாக குற்றப் புலனாய்வு அதிகாரிகளினால் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வந்ததன் பின்னணியிலேயே இந்தக் கைதுகள் இடம்பெற்றுள்ளன.

தனியார் கல்வி நிறுவனம் ஒன்றின் ஆசிரியரால் வழங்கப்பட்டுள்ள மாதிரி வினாத்தாளில் உள்ள கேள்விகளில் 18 கேள்விகளும், படங்களும் விடைகளும் பரீட்சையின் போது வழங்கப்பட்ட வினாத்தாளில் உள்ள கேள்விகளும் பதில்களும் படங்களும் ஒரேமாதிரியாக இருப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதான செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் குற்றப் புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

மேற்படி தனியார் கல்வி நிறுவன உரிமையாளரின் அச்சகத்திலே பரீட்சை வினாத்தாள்கள் அச்சடிக்கப்பட்டதாகவும் அதனால் மேற்படி தனியார் கல்வி நிறுவனம் இந்த வினாத்தாள்களை பரீட்சைக்கு முன்பே விநியோகித்திருக்கலாம் என்றும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

விஞ்ஞான வினாத்தாள்கள் முன்கூட்டியே விநியோகிக்கப்பட்டுள்ள விடயம் நிரூபிக்கப்படும் பட்சத்தில் அதற்கு பொறுப்பானவர்களுக்கு அதிகபட்சமான தண்டனை நிச்சயமாக வழங்கப்படும் என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். (த-5)

## புதிய...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கூறப்படுகிறது.

2016 ஆம் ஆண்டு தேர்தலில் அதிபர் பதவிக்கு போட்டியிடுவதற்கு வசதியாக இரண்டாவது முறையாக வெளிவிவகாரச் செயலர் பதவியில் தொடர ஹிலாரி விரும்பவில்லை. இதனாலேயே வெளியுறவுத் துறைச் செயலர் பதவியிலிருந்து விலகியுள்ளார்.

இந்த நிலையில், தன்னை தேசிய அரசியலில் அறிமுகப்படுத்திய 'குரு' என்று கருதும் ஜோன் கெர்ரியை அமெரிக்காவின் புதிய வெளியுறவுத்துறை செயலாளராக நியமிக்கவிருப்பதாக ஜனாதிபதி ஒபாமா நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வமாக அறிவித்தார்

**கெர்ரியின் பின்புலம்**

2004ஆம் ஆண்டு அதிபர் தேர்தலில் ஜோர்ஜ் புஷ்ஷை எதிர்த்து ஜனநாயகக் கட்சியின் சார்பில் போட்டியிட்டுத் தோற்றவர் ஜான் கெர்ரி.

ஜோன் கெர்ரி பல ஆண்டுகளாகவே ராஜாங்க அமைச்சர் பதவியைப் பெற முயன்றுவருகிறார்.

2009இல் தனக்கு அந்தப் பதவி கிடைக்கும் என அவர் நம்பியிருந்தார். ஆனால் ஜனாதிபதி ஒபாமா ஹிலாரி கிளின்டனைத் தெரிவு செய்துவிட்டார்.

இந்த தடவையும்கூட இப்பதவிக்கு ஒபாமாவின் முதல் விருப்பமாக ஜோன் கெர்ரி இருந்திருக்கவில்லை.

ஐ.நாவில் அமெரிக்காவின் தூதராகவுள்ள சூசன் ரைஸுக்குத்தான் இந்தப் பதவி வழங்கப்படும் என்ற நிலை இருந்தது. ஆனால் தனக்கு அப்பதவி வேண்டாம் என்று [illegible] ஒதுங்கிக்கொண்டார்.

2009ஆம் ஆண்டு முதல் செனெட் அவையில் வெளியுறவு விவகாரங்கள் சம்பந்தப்பட்ட குழுவின் தலைவராக இருந்து வரும் கெர்ரிக்கு உலக விவகாரங்கள், அமெரிக்கா பல்வேறு நாடுகளுடன் கொண்டுள்ள ராஜீய உறவு போன்றவைகள் எல்லாம் அத்துப்படி எனலாம்.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட பல பிரச்சினைக்குரிய இடங்களிலும் சிலிர்த்து நிற்கும் தலைவர்களை இறகு நீவி விட ஜோன் கெர்ரியைத்தான் உத்தியோகபூர்வமற்ற தூதராக ஒபாமா நிர்வாகம் பயன்படுத்தி வந்துள்ளது. ஆனால் சிரிய அரசிடம் பேசிச் சமாளிக்க கெர்ரி செய்த முயற்சிகள் பரவலாக விமர்சிக்கப்பட்டிருந்தன.

அந்த நாடு ரணகளமாகி பல வாரங்கள் ஆகிவிட்ட நிலையிலும், ஜனாதிபதி அசாத் வழிக்கு வந்துவிடுவார் என்று கெர்ரி கூறிக்கொண்டிருந்தார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—

advt@uthayan.com
0215671111



**இலவச திருமணசேவை**

பல்லாயிரம் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பதிவுகள் தொடர்புகள் முற்றிலும் இலவசம்.

www.mailgroom.com or
www.subamangalam.com



## வேலை வாய்ப்பு

யாழ். நகரில் புதிதாக விஸ்தரிக்கப் பட்டுள்ள நட்சத்திர தரத்திலான ஹோட்டல் ஒன்றுக்கு கீழ் குறித்த பதவிகளுக்காக தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன

- வரவேற்பாளர் (Receptionest) (ஆண்/ பெண்)
- வரவேற்பாளர் பயிலுநர் (Trainee Receptionest) (ஆண்/பெண்)
- வெயிட்டர் (Waiter) (ஆண்)
- வெயிட்டர் பயிலுநர் (Trainee waiter) (ஆண்)
- சுத்திகரிப்பாளர் (ஆண்)
- பகுதி நேர வேலையாள்கள்

உங்கள் சுயவிவரக் கோவையை தபால் மூலமாகவோ மின்அஞ்சல் முலமாகவோ கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்புங்கள்

விளம்பர இல.4427 C/O உதயன்
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
மின் அஞ்சல்
fivester 121212@ gmail .com


## 70 வயது பூர்த்தியடைந்தோருக்கான 1000 ரூபா கொடுப்பனவு அட்டை



கல்முனை, டிசெ.23

கல்முனைப் பிரதேச செயலகப் பிரிவில் வதியும் 70 வயதைப் பூர்த்தி செய் தோருக்காக மாதாந்த ஆயிரம் ரூபா கொடுப்பனவுக்கான அட்டைகள் வழங்கும் ஆரம்ப நிகழ்வு கடந்த வியாழக்கிழமை மருதமுனை அல் மனார் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவு மண்டபத்தில் இடம் பெற்றது.

70 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளுக்கு சில மாதங்களாக வங்கிகளின் ஊடாக வழங்கப்பட்டு வந்த ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்குவதில் நடைமுறைச் சிக்கல் ஏற்பட்டது.

இதன்காரணமாக இதனை அட்டைகளின் மூலம் தபால் நிலையங்களிலும், உப தபால் நிலையங்களிலும் வழங்குவதற்கான முறைமையை அரசு நடைமுறைப்படுத்தி உள்ளது. இதற்கமைவாகவே கல்முனைப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 453 சிரேஷ்ட பிரஜைகளுக்கு மாதாந்த ஆயிரம் ரூபா கொடுப்பனவுக்கான அட்டைகள் வழங்கப்பட்டன.

(வ)



கிழக்கு மாகாண விவசாய, கால்நடை உற்பத்தி அபிவிருத்தி, கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி, மீன்பிடி மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான ஹாபிஸ் நஸீஸ் அஹமட்டின் அழைப்பின் பேரில் ஐக்கிய அரபு ராஜ்ஜியத்தில் இருந்து கமீத் சகீல் அல் அக்கீலி குழுவினர் வருகை தந்துள்ளனர். ஒலுவில், ஹம்பாந்தோட்டை துறைமுகங்களில் முதலீடுகளைச் செய்து தொழிற்பேட்டைகளை அமைப்பதற்கு அவர்கள் முன்வந்துள்ளனர். துறைமுக நெடுஞ்சாலைகள் பிரதியமைச்சரின் மேலதிக செயலாளர் அனுராத விஜய சேகரவை துறைமுக அதிகார சபையில் அமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட்டுடன் சந்தித்து ஒலுவிலில் அமைக்கப்பட்டு வரும் துறைமுக அபிவிருத்தி தொடர்பாகக் கலந்துரையாடினர்.

## மட்டக்களப்பில் இயல்பு நிலை

மட்டக்களப்பு, டிசெ.22

கடந்த சில தினங்களாக சீரற்ற கால நிலையால் இயல்பு நிலை பாதிக்கப்பட்டிருந்த மட்டக்களப்பு மாவட்ட மக்கள் வெள்ளிக்கிழமை முதல் இயல்பு நிலைக்குத் திரும்பி னர்.

மழை குறைவடைந்து வெள்ளம் வடிந்தோட ஆரம்பித்துள்ளது.

இந்த நிலையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்களின் வீடுகளுக்குத் திரும்புகின்றனர்.

வெள்ளத்தால் மன்னம் பிட்டியூடாக மட்டக்களப்பிலிருந்து கொழும்பு செல்வதற்கான பாதையின் போக்குவரத்து பாதிக்கப் பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகலிலிருந்து இதனூடான போக்குவரத்து இடம் பெற்று வருகின்றது.

மேலும், மட்டக்களப்புக்கும் படுவான்கரைக்கும் இடையில் துண்டிக்கப்பட்டிருந்த போக்குவரத்தும் பட்டிருப்பு பாலம், வவுண தீவு பாலம், மண்டூர் கோஸ்வே ஆகியவற்றின் ஊடான போக்குவரத்துக்களும் வழமைக்குத் திரும்பியுள்ளன. (வ)

## மரண அறிவித்தல்

### முத்துத்தம்பி புனிதவதி

ஓய்வு பெற்ற நெசவு ஆசிரியர் (மன்னார்- திருக்கேதீஸ்வரம்)



உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முத்துத்தம்பி புனிதவதி நேற்று (22.12.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி- தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும், பத்மாவதி, லீலாவதி, குகானந்தவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர், கனகநாயகம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2012) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 1 மணியளவில் உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி/5041)(9.14)

பெற்றோல் செற் முன் ஒழுங்கை,
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர். (0776176580)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் நவரத்தினம்



பலாலி கிழக்கைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி பத்தமேனியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் நவரத்தினம் நேற்று முன்தினம் (21.12.2012) வெள்ளிக்கிழமை அதிகாலையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், தெய்வானைப் பிள்ளையின் பாசமிகு கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பத்தமேனியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் பத்தமேனி தீர்த்தக்குளம் இந்துமயானத்தில் நேற்று முன்தினம் (21.12.2012) வெள்ளிக்கிழமை பி.ப நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்தமேனி, அச்சுவேலி. (சி/5040)(3.14)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### ஆழ்வாப்பிள்ளை இராமச்சந்திரன்

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆழ்வாப்பிள்ளை இராமச்சந்திரன் நேற்று (22.12.2012) சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகம்மாவின் கணவரும், பாலச்சந்திரன் (இந்தியா), கணேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் சீதேவி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2012) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பாலா வித்தான் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சாய் வீதி, கொடிகாமம். (27134)(3.14)

தகவல்:
பொ.யோகானந்தன்
(மருமகன்)


## புதிய பிரிவுகள் ஆரம்பம்

20% OFF

27.12.2012

CHRISTMAS OFFER

### City & Guilds Levels: A1, A2, B1, B2

**London Metropolitan College Awarded by City &Guilds 2012**

- UK அரசாங்கத்தினால் சிபாரிசு செய்யப்பட்டது.
- இலகுவாக்கப்பட்ட புதிய பரீட்சை நடைமுறைக்கேற்ப A1 Exam இல் Listening and Speaking மாத்திரமே உள்ளடக்கப்பட்டுள்ளது.
- பரீட்சைகளை எமது கல்லூரியிலேயே மேற்கொள்ள முடியும்.
- இதுவரை நடந்த பரீட்சைகளில் 100% மான பெறுபேறு.
- முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்ட கற்பித்தல் வசதி.
- மாணவர்களின் வசதிக்கேற்ப weekdays, weekends பிரிவுகள் ஒழுங்கு செய்யப்படும்.
- எம்மிடம் visa procedures செய்பவர்களுக்கு பூரணமான இலவச கற்பித்தலும் ஏனையவர்களிற்கு மிகவும் குறைவான கட்டண சலுகை.

**Duration : 2 Months**

### IELTS (General/ Academic)

- ஒவ்வொரு மாணவர்கள் மீதும் தனிப்பட்ட கவனம்.
- இலவச tutorials facilities.
- British Council exam registered centre

**Duration : 2 Months**

### Diploma in English

அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்படும்

**Duration : 2 Months**

### Spoken English

அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்படும்

**Duration : 2 Months**

**அதி நவீன முறையிலமைந்த கற்பித்தல் வசதி.**
**திறமை வாய்ந்த விரிவுரையாளர்களால் பயிற்சியளிக்கப்படும்**
**யாழ்ப்பாணத்திலே ஆங்கில கற்கை நெறியில் முதன்மை வாய்ந்த நிறுவனம்.**
**மட்டுப்படுத்தப்பட்ட பதிவுகளே உள்ளதால் உங்கள் பதிவுகளிற்கு முந்துங்கள்.**

City & Guilds அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை நிலையம்

LONDON METROPOLITAN COLLEGE
No: 197, Arasady Road, Jaffna.
(Between Kantharmadam Junction & Hindu Ladies College)
Tel: 021 222 7230 | 021 753 8395
info@lmcjaffna.edu.lk | www.lmcjaffna.edu.lk



## YEAR END SALE அதிரடி மலிவு விற்பனை

மங்களா காட்சியறையில் விசேட பந்தலில் ஏல விற்பனை
நீங்களே விலையைத் தீர்மானியுங்கள்
காலம்- மு.ப 10 மணி தொடக்கம் ந.ப 12மணி வரை
பி.ப 3 மணி தொடக்கம் பி.ப 6மணி வரை
எமதுகாட்சியறையில் அனைத்து தளபாடங்களுக்கும் விசேட விலைக் குறைப்பு
அத்துடன்
Singer, Sharp நிறுவனத்தின் உத்தரவாதத்துடன் மின்னியல் பொருள்களுக்கும் விசேட விலைக்குறைப்பு
கையிருப்புஉள்ளவரை மட்டுமே
மங்களா காட்சியறை
536, கே.கே.எஸ் வீதி , மனோகராசந்தி, யாழ்ப்பாணம்.
மின்னியல் சாதனங்களுக்கு விசேட விலைக் குறைப்பு

அனைத்துத்தளபாடங்களுக்கும் விலைக் குறைப்பு

Mega Sale இற்றைப் நாளையும் மட்டுமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை வெள்ளத்தால் கிண்ணியாவில் பாதிப்பு

கிண்ணியாவில் ஏற்பட்ட மழை மற்றும் வெள்ளம் காரணமாக 150 குடும்பங்கள் மேட்டு நில பகுதியில் தஞ்சம் அடைந்துள்ளன. பூவர சந்தீவு, சமாவச்சத்தீவு, கண்டல் காடு, கிரான் ஆகிய பகுதிகள் வெள்ளத்தால் பாதிக் கப்பட்டுள்ளதாக பிரதேச செயலக அதிகாரி கள் தெரிவித்தனர்.

குறித்த கிராமங்களில் வசித்து வந்த 150 குடும் பங்கள் சின்னக் கிரான் என்ற இடத்தில் உள்ள மேட்டு நிலமொன்றில் தஞ்சம் அடைந்துள்ளனர். அவர்களை மீட்கும் நடவடிக்கைகளில் படகுகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கிண் ணியா பிரதேசத்தில் 1200 இற்கும்அதிகமான ஏக்கர் நெற் காணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக கிண்ணியா பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இன்னும் ஓரிரு வாரங்களில் அறுவடை செய்யக் கூடிய நிலையில் இருந்த கண்டல் காடு, தீனேரி, கல்லடிவெட்டுவான், கிரான் மற்றும் பூவரசந்தீவு ஆகிய பிரதேச வயல் நிலங்களே இவ்வாறு பாதிக்கட்டுள்ளன.

குறித்த பிரதேசத்தில் ஆறடிக்கு மேல் வெள்ளம் பாய்வதாகத் தெரிவிக்கப் படுகின்றது. அங்குள்ள சகல தரைவழிப் போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

(வ

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி பொன்னம்மா



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பொன்னம்மா 21.12.2012 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா தம்பதியினரின் மகளும், காலஞ்சென்ற சின்னத் தம்பியின் மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து, சின்னம்மா மற்றும் சிந்தாமணி, சரணவணமுத்து ஆகியோரின் சகோதரியும், அருணாசலம் சின்னாச்சியின் மைத்துனியும், விநாசித்தம்பி (ஓய்வுபெற்ற ஊழியர்-CTB), குகலட்சுமி, காலஞ்சென்ற தணிகைநாயகி மற்றும் சண்முகநாதன் (CEB-வட்டுக்கோட்டை),நாகேஸ்வரி, சத்தியதேவி (கனடா), காலஞ்சென்ற அருள்கிருபைநாதன் ஆகியோரின் தாயும், காலஞ்சென்ற அப்புத்துரை (KCW) மற்றும் நடேசன், காலஞ்சென்ற தேவகி மற்றும் மகேந்திரராஜா (CGR-வவுனியா), கந்தசாமி(கனடா),விக்னேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (22.12.2012) சனிக்கிழமை பி.ப. 12.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டு. கிழக்கு,
வட்டுக்கோட்டை. (தாவளை வீதி) (3-6-14)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### முருகுப்பிள்ளை மயில்வாகனம்

(அச்சுவேலி பெற்றோல் செற், முன்னால் ஊழியர்)



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், உடுப்பிட்டி புறாப்பொறுக்கி ஆலடியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகுப்பிள்ளை மயில்வாகனம் 20.12.2012 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் முருகுப்பிள்ளை - பூரணம் தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பொன்னம்மா மற்றும் சின்னராசா, திருச்செல்வம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், துஸ்யந்தன் (சுவிஸ்), மதியழகன் (நோர்வே), லிங்கேஸ்வரன் (சுவிஸ்), சுதாகரன் (யாழ்ப்பாணம்), மதிவதனன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவந்தன், சரணியா, மதுஷன், லேமோறியன், திலக்ஷன், லாகினியா, ஹம்சினி, ஹேமினி, கௌசிகன், கௌதமன், ஆர்ஜன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வல்லை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றக்கொள்ளவும்.

புறாப்பொறுக்கி ஆலடி,
கரணவாய் மேற்கு, கரவெட்டி. (27127)(3.14)

தகவல்:
குடும்பத்தினர்.

## விற்பனைக்கு

ஜேர்மனியில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 2ஆம் தர இயந்திரங்களான

- கடைச்சல் இயந்திரம்
- தச்சுப் பட்டறை இயந்திரம்
- றில்லர் கருவி

மற்றும் மோட்டர்கள் போன்ற பல இயந்திரங்கள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

0212222588 / 0779749343 (27122)(3.14)

## தவறிவிட்டது

MITSUBISHI - RVR (Remote)

வாகனத்திறப்பு சுண்டுக்குளிச் சந்திக்கும் யாழ்ப்பாணம் பஸ்தரிப்பிடத்துக்கும் இடையில் தவறிவிட்டது. (கண்டெடுத்து தருபவர்களுக்கு மிகுந்த சன்மானம் வழங்கப்படும்.

0777320799, 0113071407, 0212221851

(27133)(3.14)

## மரண அறிவித்தல்

### சிவலிங்கம் சிவபாக்கியம்



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவலிங்கம் சிவபாக்கியம் நேற்று (22.12.2012) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - ஆரணம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - செல்லாச்சி தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சிவலிங்கத்தின் அன்பு மனைவியும், சிவசுஜாத்தா, சிவகீதா, சிவறதீஸ் ஆகியோரின் பாசமிகு தாயும், அமரேசன், ராஜன், கேமினி ஆகியோரின் அன்பு மாமியும், டனாசினி, வினுஷான், தக்ஷாலினி, சிரோமி, பபிஷாந், ஜசித்தா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், நவேந்திரராசா, தருமராசா, கௌசலாதேவி, மகேந்திரராசா, கேசவராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுசிலாதேவி, இராஜேஸ்வரி, காலஞ்சென்ற செல்வராசா, கமலேஸ்வரி, சசிகலா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2012) ஞாயிற்றுக்கிழமை பி.ப 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை. (சி/5037)(3.14)

தகவல்:
குடும்பத்தினர்.



சுன்னாகம் அபான்ஸ் வழங்கும்


மாபெரும் நத்தார் - புதுவருட சேல்




23.12.2012 முதல் கையிருப்பு உள்ளவரை

உங்கள் தெரிவுக்கு முந்துங்கள்













3750/= வைச் செலுத்தி ஒற்றைக்கதவு
5500/= வைச் செலுத்தி இரட்டைக் கதவு

குளிர்சாதனப் பெட்டி ஒன்றை மாதாந்த தவணை அடிப்படையில் பெற்றுக் கொள்ளலாம்







4900/= வைச் செலுத்தி 32" LCD தொலைக்காட்சிப் பெட்டி
5990/= வைச் செலுத்தி 32" LED தொலைக்காட்சிப் பெட்டி
2790/= வைச் செலுத்தி 22" LCD தொலைக்காட்சிப் பெட்டி
3590/= வைச் செலுத்தி 23" LED தொலைக்காட்சிப் பெட்டி

என்பவற்றை மாதாந்த தவணை அடிப்படையில் பெற்றுக் கொள்ளலாம்.



இன்னும் பல பொருள்களை விசேட சலுகைகளுடன் பெற்றுக் கொள்ளலாம்.

(சி/5039)(3.14)

இடம்- 160A, K.K.S வீதி, சுன்னாகம். தொடர்பு- 021 2240440


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பாகுபாடும் பாரபட்சமும் நீக்கப்படுவது எப்போது...?

காலநிலை மாற்றத்தினால், எமது நாட்டின் வெவ்வேறு பகுதிகளிலும் புதியன பலவும் நிகழ்ந்ததாக கடந்த சில நாள்களாக ஊடகங்களில் தகவல்கள் வெளிவந்தன. சிவப்பு நிற மழை, மழையுடன் கடல் வாழ் உயிரினங்கள் வீழ்ந்தன, நீர்த்தேக்கப் பகுதியில் அடை மழையால் சரிந்து வீழ்ந்த மண்ணுக்குள் இருந்து சிவப்பு மற்றும் நீல நிற மாணிக்கக் கற்கள் கண்டெடுக்கப்பட்டன என்பன அத்தகைய ஊடகத் தகவல்களில் சிலவாகும்.

கடந்து சென்ற நேற்று முன்தினம், டிசெம்பர் 21ஆம் திகதி பூமி அழிந்து போய்விடும் என்றும், மாயன் நாள்காட்டி அன்றோடு பூர்த்தியாகுவதால் அது நிச்சயமானது என்றும் உலகளாவிய ரீதியில் தகவல் பரப்பப்பட்டது.

பல நாடுகளில் மக்கள் அது குறித்து முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகள் பலவற்றை வெவ்வேறு வடிவங்களில் மேற்கொண்டதும் உண்டு.

ஆனால் உலகளாவிய மட்டத்தில் மக்களில் பெரும்பான்மையினர் அவ்வாறு நடைபெறும் என்று நினைக்கவில்லை; நம்பவில்லை; கருத்தில் கொள்ளவும் இல்லை.

அந்த எதிர்பார்ப்பின் பிரகாரம் மாயன் நாள்காட்டி முடிவடைந்த வெள்ளியன்று உலகம் அழியவில்லை. ஏற்கனவே இருந்தது போன்றே 'கெட்டியாக' இருக்கிறது!

ஆனால் வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் பெருமழை பெய்து, அங்கு வாழும் மக்களில் மிகப் பெரும் எண்ணிக்கையினரை அகதிகளாக மாற்றிவிட்டது; இடம்பெயர வைத்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில், அதன் மாவட்டங்களில் கடந்த வாரத்து மழையால் பல்லாயிரக் கணக்கானோர் இடம்பெயர நேர்ந்துள்ளது. அதனை விடவும் அம்பாறை மாவட்டத்தில் பதின்மூவாயிரம் ஏக்கர் நெற் செய்கை பாதிப்புற்றுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகப் பல குளங்கள் நிரம்பி வழிகின்றன. பெரு வெள்ளம் காரணமாக பல இடங்களில் போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டுள்ளது. பல கிராமங்கள் தரை வழித் தொடர்பு முற்றாகத் துண்டிக்கப்பட்ட நிலையில் உள்ளன.

கடும் மழையினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டு லட்சத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். திருகோணமலை மாவட்டத்தில் பாதிப்புற்றோரின் எண்ணிக்கை 2,684. அம்பாறை மாவட்டத்தில் 1,095 பேர் பாதிப்புற்றுள்ளனர் என்பது அரசின் புள்ளிவிவரம்.

அதே வரிசையில் வன்னி மாவட்டத்தில் பல குளங்களின் நீர் மட்டம் மணிக்கு மணி உயர்ந்து வருவதாக அறிவிக்கப்படுகிறது. பல ஆயிரம் ஏக்கர் நெற்செய்கை வெள்ளத்தால் நாசமாகி உள்ளது. மக்கள் மீளக் குடியமர்ந்த பிரதேசங்கள் பலவற்றிலும் உப உணவுப் பயிர்ச்செய்கையும் பெரிய அளவில் சேதமுற்றுள்ளது.

போர்க் காலத்தின் பின்னர் வன்னிப் பிரதேசத்தில் போக்கு வரத்துப் பாதைகள் பயன்படுத்த முடியாத அளவுக்கு மிக மிக மோசமடைந்திருந்தன. அவை புனரமைக்கப்பட்டு வருகின்றன. பட்டகாலிலே படும், கெட்ட குடியே கெடும் என்பதற்கு இணங்க, புனரமைக்கப்பட்ட வீதிகளும் பாதைகளும் பெரும் வெள்ளம் காரணமாகச் சேதமடைந்துள்ளன.

போர் ஓய்ந்த பின்னர், ஆமை வேகத்தில் முன்னெடுக்கப்பட்ட மீளக் குடியமர்தல் மற்றும் வாழ்வாதாரத் தேவைகளைப் பெறுவதற்கான வசதிகளைக் கொண்டு மெதுவாகத் தலையை உயர்த்த, உன்னி எழுவதற்கு முயற்சிக்கும், முனையும் வன்னி வாழ் மக்களை இயற்கையும் அடிக்கடி சோதிக்கிறது.

இயற்கை தரும் சோதனைகளை, மனிதனால் முழு அளவில் தடுக்க முடியாது என்பது ஒரு வகையில் நியதியாகிவிட்டது. அந்த வகைச் சோதனைகளால் ஏற்படும் பாதிப்புகளில் இருந்து மீள்வதற்கு உகந்த வழிவகைகளில் உதவ வேண்டியது அரசாங்கத்தின் தலையாய கடமைகளில் ஒன்று.

ஆனால் தமிழ்ப் பிரதேசங்களைப் பொறுத்த அளவில், அரசின் செயற்பாடுகள், சொல் ஒன்று, செயல் வேறு என்ற நிலையே தொடர்கிறது. தமிழ் மக்களும் இந்த நாட்டவர்களே என்ற உணர்வு ரீதியான தன்மை அரச செயற்பாடுகளில் மிக மிகக் குறைவு. தமிழ் மக்களுக்குரிய சேவைகளை, தேவைகளை அரசு வழங்குகிறது என்று பிரசாரம் செய்யப்படுகிறது. எனினும் மனிதாபிமானச் சேவைகளில் பாகுபாடும், பாரபட்சமும், புறக்கணிப்பும் தொடர்கதையாக நீண்டே செல்கிறது.

அத்தகைய நிலையில் இருந்து அரசு தன்னை எப்போது மாற்றிக்கொள்ளும் என்ற ஏக்கம் தமிழ் மக்களது மனங்களில் இருந்து அகலுவதை அரசு எப்போது தனது செயற்பாடுகள் மூலம் புலப்படுத்தப்போகிறது? அவ்வழி நாடும் விருப்பமும் அதன்வழி செயலும் அரசிடம் பிறக்கப்போவது எப்போது? காத்திருங்கள் என்பதே அரசின் பதிலாக இருக்குமோ...?

# ஜனவரிக்குள் ஆசிரியர் இடமாற்றங்கள் ஆளுநருடனான சந்திப்பில் தீர்மானம்

யாழ்ப்பாணம்,டிசெ.23

வடமாகாணத்தில் உள்ள ஆசிரியர்களின் இடமாற்றங்கள் ஜனவரி மாதம் 30 ஆம் திகதிக்குள் நடைபெறும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை 9 மணிக்கு கொழும்பு பத்தரமுல்லையிலுள்ள வடமாகாண ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து இவ்வாறு கூறப்பட்டது.

வடமாகாண ஆளுநர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் வடமாகாண கல்வி விளையாட்டு பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர், வடமாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அதிகாரிகள் உட்பட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மாவட்ட தலைவர், செயலாளர், பிரதிநிதிகள் ஆகியோருடன் முஸ்லிம் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளில் ஒருவரும் பங்குபற்றினர்.

கடந்த காலங்களில் வன்னிக்கு ஒப்பந்த அடிப்படையில் சென்ற ஆசிரியர்கள் 316 பேரதும், வன்னி மாவட்டத்துக்கு இம்முறை இடமாற்றம் செய்யப்பட இருக்கும் 183 பேருக்குமான மொத்தம் 499 ஆசிரியர்களின் இடமாற்றங்கள் மீளாய்வு செய்யப்படவுள்ளன.

ஐந்து மாவட்டங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு இலங்கை ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் இந்த மீளாய்வுக் குழுவில் பங்குபற்றுவர். வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் போன்றோரின் தலைமையிலேயே இந்த மீளாய்வு நடைபெறவுள்ளது.

ஜனவரி மாதம் இரு கிழமைக்குள் இடமாற்றங்கள் மீளாய்வு செய்யப்பட்டு ஜனவரி மாதம் 30 ஆம் திகதிக்குள் இடமாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எனவே, வழங்கப்பட்ட இடமாற்றங்கள் உடன் நிறுத்தப்பட்டு மீளாய்வு செய்யப்பட்டே வழங்கப் படவுள்ளன.

வவுனியா கல்வி வலயத்தில் இந்த மீளாய்வு செய்வதற்கான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

உள்ளக இடமாற்றங்கள் வலயக் கல்வி அலுவலகங்களில் வலயக் கல்வி அதிகாரிகளால் இடமாற்றச் சபை ஊடாக தெரிவு செய்யப்பட்டு அதுவும் ஜனவரி 30 ஆம் திகதிக்குள் நடைபெறும். அதிபர்களின் இடமாற்றங்கள் முறையாக ஆளுநரின் மேற்பார்வைக்கு கொண்டு சென்று ஆளுநரால் கையொப்பமிடப்பட்டு சட்டரீதியாக நடைபெற வேண்டும்.

யாழ்.மாவட்டத்திலுள்ள அதிபர்களின் நியமனம் தொடர்பில் குறைபாடுகள் உள்ளன. அவையும் உடனடியாக தீர்க்கப்படவுள்ளன.

வடமாகாணத்திலுள்ள கல்வி அலுவலகங்களில் நிதி மோசடி தொடர்பாகவும், சம்பளக் குறைபாடும் சுட்டிக்காட்டப்பட்டது. ஆசிரியர்களின் சம்பள நிலுவைகள் வழங்குவதற்கும் 130 மில்லியன் பணம் தேவைப்படுகிறது. இதற்கு திறைசேரியிலிருந்து நிதி ஒதுக்கப்பட வேண்டியுள்ளது என்றும் கூறப்பட்டது.

ஆசிரியர்களுக்கான கடன் கொடுப்பனவுகள் உரிய வகையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். ஆசிரியர்களுக்கான நடைமுறை விடயங்களில் கல்வி வலயங்களில் பல குறைபாடுகள் தொடர்பாகவும் ஆளுநருக்கு சுட்டிக்காட்டப்பட்டு கவனத்தில் கொண்டு வரப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்ட தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இதனைவிட மன்னார் மாவட்டத்தில் ஆசிரியர்கள் மேலதிகமாக உள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டது. ஆனால் அப்பகுதிக்கும் ஆசிரியர்களின் பற்றாக்குறை சுட்டிக்காட்டப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாணவர்களின் கல்வி நிலையை பாதிக்காமல் இந்த இடமாற்றங்கள் உடனடியாக நடைபெறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-422)

# உள்ளூராட்சிச் சபைகளின் தரம் 'சுப்றா' தரத்துக்கு இறக்கப்பட்டது

யாழ்ப்பாணம்,டிசெ.23

வடக்கு மாகாணத்தில் உள்ளூராட்சிச் சபைகளின் தரம் கீழ் இறக்கப்பட்டு 'சுப்றா' தரத்துக்கு உள்வாங்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைகளில் கடந்த காலங்களில் செயலாளர்களாக நிர்வாகப் பதவி வகித்தவர்களின் தரம் இலங்கை நிர்வாக சேவை தரம் II வகுப்பு II இல் இருந்தது.

இந்தச் சேவையை முன்னிருந்த அரச நிர்வாகிகள் தனித்துவமாகப் பெற்றுக் கொடுத்த நிலை யில் இது வரை காலமும் இலங்கை நிர்வாக சேவைத் தரம் வலுவில் இருந்தது.

தற்போது வடக்கு மாகாண ஆளுநரால் உள்ளூராட்சிச் சபைகளின் தரம், ஆளணி வெற்றிடம் அதிகரிப்பு என்ற போர்வையில் கீழிறக்கப்பட்டுள்ளதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது. செயலாளர் பதவி இலங்கை நிர்வாக சேவைத் தரம் II வகுப்பு II என்பதற்கு பதிலாக அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் 'சுப்றா' தரத்துக்கு கீழ் இறக்கப்பட்டுள்ளது.

இதனால் உள்ளூராட்சிச் சபைகளின் தலைவர், செயலாளர்களின் மேற்படி பதவிநிலை குறித்து வடக்கு மாகாண உயர்நிலை அதிகாரிகள் அதிர்ச்சி தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மேற்படி 'சுப்றா' தரத்துக்குச் செயலாளர் பதவி கீழ் இறக்கப்பட்டது நவீன முகாமைத்துவ காலத்தில் பின்னடைவு என்று அதிகாரிகள் தரப்பில் கூறப்படுகிறது.

வடக்கில் உள்ளூராட்சி சபைகளின் செயலாளர் தரம் இலங்கை நிர்வாக சேவைத் தரத்தில் இருந்து 'சுப்றா' தரத்துக்கு கீழ் இறக்கப்பட்ட நிலை குறித்து சபைத் தலைவர்கள், ஏனைய உள்ளூராட்சி நிர்வாகிகள் ஆகியோர் திறைசேரியின் பணிப்பாளர் நாயகத்துக்கு கடிதம் எழுதியுள்ளனர். (ம)

# சவுக்குக்கு கிராக்கி

யாழ்.நகரப் பகுதியில் சவுக்கு கிளைக்கு நேற்று பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தை முன்னிட்டு சவுக்குக் கிளைகளைப் பெறுவதற்கு மக்கள் அலைந்து திரிந்தனர்.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் இருந்து நேற்று வாகனம் மூலம் பெருந்தொகையான சவுக்குக் கிளைகள் எடுத்து வரப்பட்டு யாழ். நகரில் வைத்து விற்கப்பட்டன.

இந்த சவுக்குக் கிளை ஒன்று ஐம்பது ரூபா முதல் நூறு ரூபா வரை விற்கப்பட்டது. கரையோரப் பகுதியிலும் நேற்று இந்த சவுக்குகளுக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டது. மக்கள் அதை முண்டியடித்து பெற்றுக் கொண்டனர்.

கரையோரப் பகுதியில் இந்த சவுக்குத் தடிகள் கட்டுக்கட்டாக வாகனங்களில் வைத்து விற்பனை செய்யப்பட்டன. (ம-17)

### இரண்டாவது தடவையும் தோற்கடிக்கப்பட்டதால்

# மானிப்பாய் பிரதேச சபை 'பட்ஜெட்' மக்கள் பார்வைக்கு வரவில்லை

யாழ்ப்பாணம்,டிசெ.23

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் வரவு-செலவுத் திட்டம் மக்கள் பார்வைக்கு இதுவரை விடப்படவில்லை.

சபைப் பிரதிநிதிகளின் ஆலோசனை பிரதிபலிப்பின்றி தலைவர் முன்வைத்ததால் இந்த வரவு-செலவுத் திட்டம் இரண்டாவது தடவையாகவும் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

இது மனவருத்தப்பட வேண்டிய விடயம். மக்களுக்கு முழுச் சேவையை வழங்க முடியாத இக்கட்டான நிலைக்கு மானிப்பாய் பிரதேச சபை தள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினர் சி.சி.மகேந்திரன் கவலையுடன் தெரிவித்தார்.

சபையின் வரவு-செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டது தொடர்பாக கருத்துத் தெரிவித்த போதே மேற்கண்டவாறு கூறினார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சபையின் தலைவர் ஒருங்கிணைந்த ரீதியில் செயற்படவில்லை. எதனையும் தன்னிச்சையாகவும், செயலாளரின் ஆலோசனைகள் இன்றியும் மேற்கொள்வார்.

ஒவ்வொரு பிரதேசத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தி சபைக்கு உறுப்பினர்கள் தெரிவாகியுள்ளனர்.

இந்தப் பிரதேசம் 28 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட பரந்த பிரதேசம். ஆனால் சில கிராம அலுவலர் பிரிவுகளை நோக்கியே தலைவர் திட்டங்களையும் முன்மொழிவுகளையும் முன்னகர்த்தியுள்ளார்.

இதனால் தான் சபை உறுப்பினர்கள் 11 பேர், இரண்டாவது வரவு-செலவுத் திட்ட வாசிப்புக்கு எதிராகவும் வாக்களித்து தோற்கடித்தனர்.

இந்தச் சபையின் நிலை பற்றி சகல ஊடகங்களும் செய்தி வெளியிட்டுள்ளன.

எனினும், மக்கள் வாக்களித்ததனால் தெரிவாகிய நாம், மக்களுக்கு ஏதாவது அபிவிருத்தியை முன்னிறுத்த வேண்டும் என்ற நிலைப்பாடு கொண்டிருந்ததால்தான், நாம் பிழையான முடிவை எடுக்க முன்வராது வரவு-செலவுத் திட்டத்தை தோற்கடித்தோம்.

புதிய உபாயம் ஊடாக புதிய நோக்கில் முன்னெடுக்க வேண்டும் என்ற சிந்தனையுடன் செயற்படுகின்றோம்.

எமது சபைக்கு அனுபவமுள்ள புதிய செயலாளர் நியமிக்கப்பட வேண்டும்.

இதனூடாக 2013 இன் அபிவிருத்தியை நோக்கிய புதிய பாதையில் செல்ல அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.- என்று அவர் மேலும் கூறினார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா படைமுகாம் கழிவு நீரால் பொது மக்களுக்கு அசௌகரியம்

## நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

வவுனியா, டிசெ.23

வவுனியாவிலுள்ள பிரதான படைமுகாமில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரால் குடியிருப்புப் பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்பட்டது.

வவுனியா நகரசபை நிர்வாகத்துக்கும், வவுனியா நகர சபைக்குட்பட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நேற்று சனிக்கிழமை நகரசபை மண்டபத்தில் நகர சபை பதில் தலைவர் எம்.எம்.ரதன் தலைமையில் இடம்பெற்றது.

வவுனியா நகரப் பகுதிகளில் கழிவுகள் சீராக அகற்றப்படுவதில்லை. பல லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட பூந்தோட்டம் மின்சார எரியூட்டும் மயானம் இதுவரை செயற்படுத்தப்படாமை, வீதிகள் உரிய முறையில் செப்பனிடப்படாமை, பொது அமைப்புக்களால் அனுப்பப்பட்ட கடிதங்களுக்கு உரிய முறையில் பதில் அளிக்கப்படாமை மற்றும் கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்தாமை உட்பட பல குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி நகரசபை நிர்வாகத்துக்கு எதிராக பல்வேறு பொது அமைப்புக்களால் கடிதங்கள் அனுப்பப்பட்டன.

அது தொடர்பான விளக்கமளிக்கும் கூட்டம் இடம்பெற்றபோதே படைமுகாமிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் குறித்தும் பிரஸ்தாபிக்கப்பட்டது.மேற்படி விடயம் சுட்டிக் காட்டப்பட்டது.

வவுனியா பிரதான இராணுவத் தளமான ஜோசப் படைமுகாமிலிருந்து நாளாந்தம் வெளியிடப்படும் கழிவு நீரால் குடியிருப்பு பகுதியில் வசிக்கும் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகவும் அதிலிருந்து வெளிவரும் துர்நாற்றங்களால் அந்தப் பகுதி மக்கள் அவஸ்தைப்படுகின்றனர் எனவும் சுட்டிக் காட்டப்பட்டதுடன். அதனை உரியமுறையில் வெளியேற்றுவதற்கு நகரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் வவுனியா நகர சபை உறுப்பினர்கள், நகரசபைச் செயலாளர் எஸ். வசந்தகுமார், வரியிறுப்பாளர் சங்கம், கிராமிய அபிவிருத்திச் சங்கம் மற்றும் சனசமூக நிலைய நிர்வாகிகள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (த-400-402)

# கசிப்புக்கு குறைவே இல்லை புதுக்குடியிருப்புப் பகுதியில்!

புதுக்குடியிருப்பு, டிசெ.23

புதுக்குடியிருப்புப் பகுதியில் கசிப்பு உற்பத்தி அண்மைக் காலமாக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக மன்னங்கண்டல், ஆனந்தபுரம், புதுக்குடியிருப்பு 8 ஆம் வட்டாரம், கோம்பாவில் போன்ற பகுதிகளில் கசிப்பு உற்பத்தி கூடியளவில் இடம்பெற்று வருவதாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பாக பொலிஸாரிடம் முறையிட்டபோதும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் ஆனந்தபுரம் பகுதியில் கசிப்பு உற்பத்தி அதிகளவில் இடம்பெறுவதாக பொலிஸாருக்கு பொதுமக்களால் முறைப்பாடு செய்யப்பட்ட போது எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படாததை அடுத்து அந்தப்பகுதி இளைஞர்கள் கிராம சேவையாளரின் உதவியுடன் தேடுதல் மேற்கொண்டபோது கசிப்பு உற்பத்தி மையம் ஒன்று கண்டறியப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது.

ஆளரவம் அற்ற காட்டுப் பகுதியில் ஆற்றோரமாகக் கசிப்பு உற்பத்தி செய்யும் இடத்தை அந்தப் பகுதி இளைஞர்கள் முற்றுகையிட்ட வேளை ஒரு பரல் கசிப்பு கைப்பற்றப்பட்டது. அதனை உற்பத்தி செய்தவர்கள் தப்பிவிட்டனர். (ஐ-400)

# பாவற்குளம் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை

வவுனியா, டிசெ.23

வவுனியா பாவற்குளத்தை அண்மித்த தாழ் நிலப் பகுதிகளில் வாழும் குடும்பங்களை மிகவும் அவதானமாக இருக்குமாறு வவுனியா மாவட்ட அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

கடந்த சில நாள்களாக தொடர்ந்து பெய்து வரும் அடைமழை காரணமாகப் பாவற்குளத்தின் நீர் மட்டம் உயர்ந்துள்ளது. அதன் நீர்மட்டம் அதிகரித்த காரணத்தால் வான் கதவுகள் நான்கு ஏற்கனவே திறந்து விடப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் இரவு முதல் பெய்து வரும் அடை மழையால் மேலும் நீர்மட்டம் உயரக் கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன. இதனால் எஞ்சிய வான் கதவுகளும் திறந்து விடப்படவுள்ளன.

குளத்தின் நீர் மட்டம் நிரம்பி வான் பாயும் சூழ்நிலை ஏற்பட்டால், குளத்தை அண்மித்த பகுதிகளில் தாழ்வான நிலப்பகுதியில் வசித்து வரும் குடும்பங்களை மிகவும் விழிப்பாக இருக்குமாறு அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழையால் வவுனியா மாவட்டத்தின் இயல்பு நிலைகள் பாதிக்கப்பட்டுள்ளன. வீதிகள், குறுக்கு வீதிகள் என்பன வெள்ளம் மேவிப் பாய்கின்றன. வீட்டு வளவுகளுக்குள்ளும் நீர் தேங்கி நிற்பதனால் பொது மக்களின் நாளாந்தச் செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. (த-400)

# புதுக்குடியிருப்பில் 675 ஏக்கர் காணிகள் படையினரின் வசம்

புதுக்குடியிருப்பு, டிசெ.23

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள சுமார் 675 ஏக்கர் நிலப்பரப்பை இராணுவத்தினர் தமது தேவைக்காக கையகப்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர் விடுதலைப் புலிகளினால் பயன்படுத்தப்பட்ட பண்ணைகளின் பெரும் பகுதியே படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் உடையார்கட்டு தெற்குப் பகுதியில் 125 ஏக்கரும், தேவிபுரம் பகுதியில் 100 ஏக்கரும், கோம்பாவிலில் 200 ஏக்கரும், கைவேலியில் 250 ஏக்கரும் இவ்வாறு கையகப்படுத்தப் பட்டுள்ளன.

இவற்றில் கோம்பாவில் பகுதியில் அமைந்துள்ள சுமார் 200 ஏக்கர் பண்ணை நிலத்தைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு படைத்தரப்பினரால் பிரதேச செயலகத்திடம் விண்ணப்பித்திருந்த போதும் காணி பயன்பாட்டுக் குழுவின் கூட்டத்தில் அது நிராகரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கைவேலிப்பகுதியில் தனியாருக்குச் சொந்தமான சுமார் 250 ஏக்கரை கையகப்படுத்தியுள்ள படையினர் அதில் படையினருக்குச் சொந்தமான பகுதி என பெயர்ப் பலகையும் நட்டுள்ளனர். இதில் 10 ஏக்கர் நிலப் பரப்பை படையினர் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்தக் காணியை மீளப் பெற்றுத் தருமாறு அதன் உரிமையாளர் பிரதேச செயலகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த-410)

# வவுனியாவின் வரலாற்றை உள்ளடக்கி நூல்

வவுனியா, டிசெ.23

வவுனியா பிரதேசத்தின் வரலாற்றுத் தகவல்களை ஆவணப்படுத்தும் வகையிலும் வவுனியாவின் பல்வேறு துறை வளர்ச்சிகளை இனம் கண்டு அடையாளப்படுத்தவும் நூல் ஒன்று எதிர்வரும் ஜனவரி மாதம் வெளியிடப்படவுள்ளதாக வவுனியா பிரதேச செயலர் அ. சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.

இந்த நூலின் ஆய்வுக் கட்டுரைகள், கவிதை, சிறுகதை, விளக்கப்படங்கள், சித்திரம் உட்பட பல்வேறு விடயங்கள் நூல் வெளியீட்டுக்கெனப் பிரதேச செயலகத்தால் நியமிக்கப்பட்ட குழுவினால் பரிசீலனை செய்யப்பட்ட பின்னர் உள்ளடக்கப்படவுள்ளதாகவும் எதிர்வரும் ஜனவரி மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் குறிப்பிட்ட ஆக்கங்களை அனுப்பிவைக்குமாறும் பிரதேச செயலர் கேட்டுக் கொண்டுள்ளார். (த-402)

# நடைபாதை வியாபாரத்துக்குத் தடை


புதுக்குடியிருப்பு,டிசெ.23

புதுக்குடியிருப்பு பிரதேச சபை பொதுச் சந்தைகள், இறைச்சிக் கடைகள் அமைந்துள்ள பகுதிகளுக்கு அண்மையில் நடைபாதை வியாபார நடவடிக்கைகளை முற்றாகத் தடைசெய்துள்ளன.

இவ்வாறு தடையுத்தரவு பிறப்பிக்கும் துண்டுப் பிரசுரம் புதுக்குடியிருப்பு பிரதேச சபையால் வெளியிடப்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் புதுக்குடியிருப்பு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பிரதேச சபையின் முன் அனுமதி இன்றி பலர் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இதனை அடுத்து அத்தகைய நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் முகமாக இவ்வறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (த-400)

# பாலியாற்றுப் பாலம் மக்களின் போக்குவரத்துக்கு



மல்லாவி,டிசெ.23

பாலியாற்றுப் பாலம் மக்களின் போக்குவரத்துக்காக திறக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி பாலியாற்றுப் பால வேலைகள் கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக இடம்பெற்று வந்தன. தற்போது இதன் வேலைகள் முடிவுக்கு வந்துள்ளன. இதனை விரைவாகத் திறப்பதற்கான ஏற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றன.

தற்போது பாலம் அமைந்துள்ள பிரதான வீதியில் துப்புரவுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த மாந்தை கிழக்கு, பாண்டியன்குளம், துணுக்காய் ஆகிய பகுதிகளுக்கு இந்தப் பாலியாற்றுப் பாலம் இணைப்பாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-415)

# ஜனவரி மாத இறுதிக்குள் வியாபார உரிமம் பெறுக

## புதுக்குடியிருப்பு பிரதேச சபை அறிவிப்பு

புதுக்குடியிருப்பு பிரதேச சபை எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் தொழில் முயற்சிகளை மேற்கொள்வோர் மற்றும் பிரதேச சபை எல்லைக்குள் பொருள் விநியோகிப்போர் அடுத்த வருடத்துக்கான வியாபார உரிமத்தை எதிர்வரும் ஜனவரி மாதம் 31 ஆம் திகதிக்குள் பெற்றுக் கொள்ளுமாறு புதுக்குடியிருப்பு பிரதேச சபையினர் அறிவித்துள்ளனர்.

கடந்த கால போர் இடர்களின் பின் தற்போதைய சூழ்நிலையில் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட எல்லைக்குள் பல்வேறு வர்த்தக நிறுவனங்கள் இயங்கத் தொடங்கியுள்ளன. அவற்றில் பல வரத்தக நிலையங்கள், தொழில் முயற்சி செய்வோர் தமது வர்த்தக நடவடிக்கைகளுக்கான உரிமத்தை இதுவரை பெற்றுக் கொள்ளவில்லை.

அவ்வாறு வியாபார உரிமத்தைப் பெற்றுக் கொள்ளாதவர் மேற் குறித்த திகதிக்குள் அதனைப் பெற்றுக் கொள்ளுமாறும் தவறும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் புதுக்குடியிருப்பு பிரதேச சபைச் செயலாளர் அறிவித்தல் விடுத்துள்ளார்.

இதேவேளை புதுக்குடியிருப்பு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அரச தனியார் கட்டடங்கள், மதில்கள், மலசலகூடங்கள் மற்றும் கிணறுகள் என்பவற்றை அமைத்தல் அல்லது புதுப்பித்தல் போன்ற செயற்பாடுகளுக்கு பிரதேச சபையிடம் அனுமதியைப் பெற்று அப்பணிகளை மேற்கொள்ளுமாறும் முன் அனுமதியின்றி அமைக்கப்படும் கட்டுமானங்களை [illegible] உடன் [illegible] மேற்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-400)

# பஸ் தரிப்பிடமும் சந்தைத் தொகுதியும் அமைக்க பிரதேச சபை ஏற்பாடு

புதுக்குடியிருப்பு,டிசெ.23

புதுக்குடியிருப்பு பகுதிக்கான புதிய பஸ்தரிப்பிடம் புதிய சந்தை தொகுதி என்பன அமைப்பதற்கான நடவடிக்கைகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன.

புதுக்குடியிருப்பு பகுதிக்கான பஸ் தரிப்பிடம் இன்மையால் சேவையில் ஈடுபடும் பஸ்கள் புதுக்குடியிருப்புச் சந்தியில் தரித்து நிற்கின்றன.

இதனால் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனை தவிர்க்கும் முகமாக பரந்தன்-புதுக்குடியிருப்பு வீதியில் கைவேலிப் பகுதியில் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குச் சொந்தமான சுமார் 2 ஏக்கர் விஸ்தீரணமுடைய நிலப்பரப்பில் ஒரு மில்லியன் ரூபா செலவில் புதிய பஸ்தரிப்பிடம் அமைக்கப்பட்டு வருகின்றது.

இதன் வேலைகள் முடிவுறும் தறுவாயில் காணப்படுவதால் ஜனவரி முதல் மக்களின் பயன்பாட்டுக்கெனத் திறந்து வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை புதுக்குடியிருப்பு பகுதிக்கான பொதுச் சந்தையும் பஸ்தரிப்பிடத்துக்கு அண்மையில் 3 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்படுகின்றது.

முன்னர் காணப்பட்ட சந்தை கடந்த காலங்களில் இடம்பெற்ற இடர்களினால் சேதமடைந்தது. தற்போது புதுக்குடியிருப்புச் சந்தை கோம்பாவில் பகுதியில் இயங்கி வருகின்றது.

அதனை கைவேலிப் பகுதியில் சுமார் 3 மில்லியன் ரூபா செலவில் நவீன முறையில் அமைப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. (த-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் சங்கங்களில் அதிகரித்த விலையில் பொருள்கள்

காரைநகர்,டிசெ.23

காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் அதிகரித்த விலையில் பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன என்று நுகர்வோர் கவலை தெரிவிக்கின்றனர்.

காரைநகரில் உள்ள தனியார் கடைகளிலும் பார்க்க அதிகரித்த விலையில் பொருள்கள்விற்பனை செய்வது குறித்து சங்க நிர்வாகத்திடம் தெரிவித்தும் எதுவித பயனும் ஏற்படவில்லை எனவும் கூறினர்.

இதனால் குறித்த திகதியில் தனியார் கடையில் பொருள்களைக் கொள்வனவு செய்த பற்றுச் சிட்டையையும் அதே பொருள்களை சங்கக் கிளையில் கொள்வனவு செய்த பற்றுச் சிட்டையையும் யாழ். மாவட்ட கூட்டுறவு G15 அபிவிருத்தி உதவி ஆணையாளரிடம் சமர்ப்பித்து முறையிட்டதாகவும் மக்கள் கூறினர்.

சேவை நோக்குடன் செயற் படவேண்டிய சங்கம் இவ்வாறு அதிகரித்த விலையில் பொருள்களை விற்பனை செய்வது குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதனிடம் தொடர்புகொண்டு கேட்டபோது:-

**அச்சு வேலி, நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் லக்ஸ்பிறே 310 ரூபாவுக்கு விற்கப் படுகிறது.**

காரைநகர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் லக்ஸ்பிறே பால்மா மட்டுமே விலை அதிகமாக விற்கப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

சங்கத்தில் லக்ஸ்பிறேமா நிர்ணயிக்கப்பட்ட விலையான 315 ரூபாவுக்கு விற்கப்படுகின்றது. ஆனால் அந்தப் பகுதி தனியார் கடைகளில் குறைந்த விலையில் விற்கப்படுகிறது.

அதேவேளை, அச்சுவேலி, நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் லக்ஸ்பிறே 310 ரூபாவுக்கு விற்கப்படுகிறது.

காரைநகர் சங்கம் நிர்ணயிக்கப்பட்ட விலையில் பொருள் விற்பனை செய்வதால் நடவடிக்கை எடுக்க முடியாது. அப்பகுதிகளில் 4 சங்கக் கிளைகள் உள்ளன. அத்தோடு மக்களின் எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளது.காரைநகர் சங் கத்தில் எதிர்காலத்தில் குறைந்த விலையில் பொருள்கள் விற்கப்படுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன- எனத் தெரிவித்தார்.

(ம-13-250)

# போரால் பாதிப்புற்றோருக்கு வீடமைக்க ஐரோப்பிய ஒன்றியம் நடவடிக்கை

## முதற்கட்டமாக 2.9 பில்லியன் ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,டிசெ.23

ஐரோப்பிய ஒன்றியம் வடக்கு, கிழக்கில் போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடமைப்பு வசதிகளை மேற்கொள்ளவுள்ளது.

முதற்கட்டமாக 2.9 பில்லியன் ரூபா இதற்கென செலவிடப்படவுள்ளது என்று கூறப்பட்டது.

ஐரோப்பாவுக்கான இலங்கைத் தூதுவர் பர்னாட் அஜோ இந்த விடயம் தொடர்பாக வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர்களுக்கு தெளிவுபடுத்தியுள்ளார்.

உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்டவர்களில் இருந்து வீடமைப்புக்கான பயனாளிகள் தெரிவு குறித்தும் வடக்கு, கிழக்கு ஆளுநருக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையிலான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக 4 ஆயிரத்து 100 வீடுகள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இந்தத் திட்டம் பூரணமாக வெற்றியளிக்கும் சந்தர்ப்பத்தில் 2 ஆவது கட்டம் குறித்து ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் எனவும் தூதுவரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயங்களைத் தெளிவுபடுத்தும் முகமாக வடக்கு, கிழக்கில் உள்ள அரச அதிபர்களுக்கு விரைவில் விளக்கமளிக்கப்படவுள்ளது என்றும் கூறப்பட்டது.

(ம-50)

# வேலணை பிரதேச சபை ‘பட்ஜெட்’ நிறைவேறியது

யாழ்ப்பாணம்,டிசெ.23

வேலணை பிரதேச சபை வரவு - செலவுத் திட்டம் நேற்று முன்தினம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

வேலணை பிரதேச சபைத் தலைவர் வரவு - செலவுத் திட்ட முன்வரைவைச் சமர்ப்பித்து உரையாற்றியதைத் தொடர்ந்து ஆளுங்கட்சி உறுப்பினரான மு.சிவராசா வழிமொழிந்ததைத் தொடர்ந்து வரவு - செலவுத் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

(ம-50)

# ஆழிப்பேரலை கோர அழிவுகள் 8ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு

## புதனன்று துர்க்காபுரத்தில்

யாழ்ப்பாணம்,டிசெ.23

ஆழிப் பேரலையின் கோர அழிவுகளின் எட்டாவது ஆண்டு நினைவு நிகழ்வு தெல்லிப்பழை துர்க்காபுரம் காங்கேசன்துறை வீதியில் உள்ள சிற்பாலய கலைக் கூடத்தில் 26 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். திருமறைக் கலாமன்றம், மல்லாகம், தெல்லிப்பழை லயன்ஸ் கழகங்கள் ஆகியவற்றின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் ஏ.வி.ஆனந்தனின் சிற்பக் கண்காட்சியும் கடந்த இரண்டு தசாப்தங்களாக மேற்குலக நாடுகள் பலவற்றில் காட்சிப் படுத்தப்பட்ட புகழ்பெற்ற சிற்பங்களின் கண்காட்சியும் இடம்பெறும்.

**மேற்குலக நாடுகள் பலவற்றில் காட்சிப் படுத்தப்பட்ட புகழ் பெற்ற சிற்பங்களின் கண்காட்சியும் இடம்பெறும்.**

இந்த நிகழ்வில் கலந்து கருத்துக்களை வழங்குமாறு நிகழ்வின் அமைப்பாளர்களான விழாக்குழுவினர் கேட்டுள்ளனர். (ம-7-86)

# இரண்டாவது நாளாகவும் மருத்துவர் பணி புறக்கணிப்பு

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று இரண்டாவது நாளாகவும் மருத்துவர்களின் பணிப் புறக்கணிப்புப் போராட்டம் தொடர்ந்ததால் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு செயற்படாது முடங்கிக் காணப்பட்டது.

வைத்தியர் திருமாறன் இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பணிப்புறக்கணிப்பு இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவைத் தவிர ஏனைய செயற்பாடுகளில் மருத்துவர்கள் ஈடுபடவில்லை.

அத்துடன் வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவும் நேற்று இயங்காமையால் தூர இடங்களில் இருந்து வந்த நோயாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

(ம-4-17)

# மீள்குடியமர்ந்த மக்களின் வாழ்வாதாரத்துக்கு உதவி

## சிக்கன கடன் வழங்கும் சங்கம் முன்வந்தது

யாழ்ப்பாணம்,டிசெ.23

வலி.வடக்கு மற்றும் வடமராட்சி கிழக்கு பிரதேசங்களில் மீளக்குடியமர்ந்த மக்களின் வாழ்வாதார திட்டங்களுக்கு உதவ மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவு சமாசம் முன்வந்துள்ளது.

இந்தப் பிரதேசங்களில் மீள்குடியமர்ந்த மக்களின் வசதி கருதி சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவு சங்கங்களின் கிளைகளை இங்கு அமைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்று சமாசத்தின் தலைவர் எஸ். இலகுநாதன் தெரிவித்தார்.

அமைக்கப்படும் இந்த சிக்கன சேமிப்பு கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக மீளக்குடியமர்ந்த மக்கள் சுய தொழில்களை மேற்கொள்வதற்கு வசதியாகக் கடன் வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்தப் பிரதேச மக்களின் வாழ்வாதார திட்டத்துக்கென குறிக்கப்பட்ட கடன் வழங்கும் திட்டம் ஒன்றையும் சமாசம் ஆரம்பித்துள்ளது. (ம-17)

# சட்டவிரோத வலைகளை அகற்றுமாறு அறிவுறுத்து

காரைநகர்,டிசெ.23

காரைநகர் பொன்னாலை கடற்பரப்பில் சட்ட விரோதமாகப் போடப்பட்டுள்ள மீன்பிடி வலைகளை உரியவர்கள் உடனடியாக அகற்ற வேண்டும் என்று காரைநகர் பிரதேச கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் எஸ். ஜெயதீபன் தெரிவித்துள்ளார்.

பொன்னாலை பாலம் வீதியின் இரு பகுதிகளிலும் 50 மீற்றருக்கு உட்பட்ட பகுதியில் வீசப்பட்டுள்ள இறால் கூடு, களங்கண்டி வலை என்பவற்றை அகற்றி ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் வீசுமாறும் கூறப்பட்டுள்ளது.

இந்த மாத இறுதிக்குள் அகற்றப்படாத வலை உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ம-250)

# பண்டத்தரிப்பு நிலையத்தில் வினைத்திறனான பயிற்சிகள்

யாழ்ப்பாணம்,டிசெ.23

பண்டத்தரிப்பு பிரான்பற்றில் இயங்கும் தொழிற்பயிற்சி நிலையத்தில் பல்வேறு வினைத்திறனான பயிற்சிகள் இடம்பெறுகின்றன.

எனவே இந்தப் பயிற்சி கூடத்தை வலி.தென்மேற்கு பிரதேச இளைஞர் மட்டுமன்றி யாழ். குடாநாட்டு மாணவர்களும் பயன்பெற விண்ணப்பிக்க வேண்டும்.

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினரும் - கலைமகள் சன சமூக நிலையத் தலைவருமான சி.சி.மகேந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பண்டத்தரிப்பு பிரான்பற்றில் பிரதான வீதியருகே பல மில்லியன் ரூபா செலவில் தொழிற்பயிற்சிகள் இடம்பெறுகின்றன.

பாடசாலையை விட்டு விலகிய மாணவர்கள், தொழில் தேடும் மாணவர்கள் மற்றும் ஏனையோர் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் ஊடாக இடம்பெறும் பயிற்சிகளை பெற வேண்டும்.

பிரான்பற்றில் ஒரே வளவில் எங்களால் வழங்கப்பட்ட பொது நோக்கு காணியில் பாலர்பாடசாலை, சமுர்த்தி வங்கி, ஆரம்ப சுகாதார நிலையம் என்பன இயங்குகின்றன. மேலும் இரண்டு பரப்பு காணி அங்கு உள்ளது.

பொது நோக்கு - உட்கட்டுமான தேவைகருதி யாராவது விண்ணப்பித்தால் அவர்களுக்கு காணி வழங்குவது குறித்து பரிந்துரை செய்யலாம் என மேலும் தெரிவித்தார். (ம-50)

# அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் கைதடி ஊரியான் இந்து மயானம்

கைதடி,டிசெ.23

சடலங்களை உரிய முறையில் எரியூட்டக் கூடிய அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் கைதடி ஊரியான் இந்து மயானம் உள்ளது என்று பொது மக்கள் பலராலும் முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன.

இந்த இந்து மயானத்தை கடந்த நூறு வருடங்களுக்கு மேலாக கைதடி மற்றும் நாவற்குழி பிரதேச மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

எனினும் இதுவரை சடலங்களை வைத்து எரியூட்டக்கூடிய மேடை அமைக்கப்படவில்லை.

அத்துடன் மழை காலங்களில் சடலம் நனையாதவாறு தகனம் செய்ய கொட்டகை வசதிகள் எதுவும் இல்லை. இதனால் வெறும்



நிலத்திலேயே எரிக்க வேண்டிய நிலைமை உள்ளது.

இந்த மயானத்துக்குச் செல்லும் பாதைகளும் சீராக திருத்தப்படாத காரணத்தால் மேடு, பள்ளமாகவே காணப்படுகின்றன.

அத்துடன் மயானத்தில் உள்ள கிணறும் மிக நீண்டகாலமாக பாதுகாப்புச் சுவர் அமைக்கப்படாத நிலையில் உள்ளது.

இது சம்பந்தமாக உரிய தரப்பினருக்கு பல தடவைகள் கைதடி பொது அமைப்புக்கள் முறைப்பாடு செய்த [illegible] நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

இந்த விடயத்தில் இனியாவது கவனமெடுத்து இந்த மயானத்தை சீர் செய்வதுடன் மயானத்தை சுற்றி சுற்றுமதில் அமைத்துத் தர வேண்டும் எனவும் கைதடிப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-288)

# நகைக்களை வாங்கி மோசடி; சந்தேகநபர் நீதிமன்றில்

யாழ்ப்பாணம்,டிசெ.23

தங்க நகைகளை வாங்கி பணத்தைக் கொடுக்காது மோசடி செய்த ஒருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

யாழ்.கோயில் வீதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் இவ்வாறு வாங்கப்பட்டு மோசடி செய்யப்பட்டுள்ளது. கடந்த செப்ரெம்பர் மாதம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. கடந்த வாரம் இது தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தவிர வெளிநாட்டில் வேலை வாய்ப்புப் பெற்றுத்தருவதாகக் கூறி 2 லட்சத்து 52 ஆயிரம் ரூபா பணத்தை மோசடி செய்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார். முறைப்பாட்டுக்காரரும் கைது செய்யப்பட்டவரும் யாழ். நகரைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் கூறினர்.

(ம-4-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Car விற்பனைக்கு

Maruti Alto Sportz, 2012 Model 5000 km Mileage, 19 km/L, red, TV/DVD, R/C, R/S, Remote Security and More.
T.P. 0773444801 (C 2733)(2.6)

## பாவித்த வாகனங்கள் விற்பனைக்கு

### ட்ரக்டர்கள் / ட்ரெய்லர்

| | | |
|---|---|---|
| 49-8056 | ட்ரக்டர்கள் | Massey Fegurson |
| 37Sri4077 | ட்ரக்டர்கள் | Massey Fegurson |
| NP RB-7625 | ட்ரக்டர்கள் | John Deer |
| 49-4212 | ட்ரக்டர்கள் | Massey Fegurson |
| 49-1195 | ட்ரக்டர்கள் | Massey Fegurson |
| 49-3695 | ட்ரக்டர்கள் | Massey Fegurson |
| 49-3681 | ட்ரக்டர்கள் | Massey Fegurson |
| 49-5329 | ட்ரக்டர்கள் | Massey Fegurson |
| 37-9972 | ட்ரக்டர்கள் | Massey Fegurson |
| 270-0624 | ட்ரக்டர்கள் | Massey Fegurson |
| NP RW-5961 | டரெய்லர் | Localy Built |

இவ் வாகனங்களை கிழமை நாட்களில் இல.05, குணசேகர கார்டன், நாவலையிலுள்ள, நாவல வெயிகள் பெசிலிட்டி சென்டரில் காலை 9.00 மணியிலிருந்து 4.00 மணிவரை பார்வையிடலாம்.
2013 ஜனவரி 06ம் திகதி மதியம் 12.30 மணிக்கு கேள்வு முடிவடையும்

முன்னறிவித்தலின்றி எந்த வாகனம் / வாகனங்களையும் மீளப்பெற நிறுவனத்திற்கு உரிமையுண்டு.

ASIA ASSET FINANCE PLC
64/16, ஸ்டென்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு.: 0777 555 826 (பார்த்திபன்),
0776 120 953 (லக்ஷ்மன்)
(C2739)

சர்வதேச ரீதியில் அங்கீகரிகப்பட்ட **British** பல்கலைக்கழகத்தின் பட்ட படிப்பு மற்றும் **MBA** படிப்புக்கள் இப்பொழுது இணையத்தில் இணைந்து கொள்ளுங்கள்.

Finance, Accounting, Marketing, Computing, Managment / Business

மேலதிக தொடர்புகளுக்கு 077 301 3060

**ICS Study overseas**
(C2740) 77, Clock Tower, Jaffna.

## வீடு வாடகைக்கு

21/2, கலாசாலை வீதி, திருநெல்வேலியிலுள்ள இரு வீடுகள் வாடகைக்குண்டு. நிறுவனத்துக்கும் உகந்தது.
தொடர்பு: 077 609 0837. (27159)(6.7.4)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி ராஜினி குணரட்ணம் அவர்களின் அன்பு மாமனார்

**கதிரேசு கந்தையா**

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்

ஆசிரியர் நலன்புரி கழகம்,
யா/ கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை.
(27110)(6.7.11)

## Basic English with spoken

**G.C.E(O/L)** பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான விசேட ஆங்கில கற்கை 3 மாத கால பயிற்சி

- English vocabulary
- Reading Skills
- ஆங்கிலம் சரளமாக பேசுவதற்கான நவீன கற்பித்தல் வழிமுறைகள்
- English Writing skills with basic Grammar
- பயிற்சி நெறியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்
- கொழும்பு ஆசிரியர்களால் விரிவுரைகள் வழங்கப்படும்

**இலவசம்** சான்றிதழுடன் கணினி பயிற்சி நெறி / ஆசிய அபிவிருத்தி வங்கியின் புலமைப் பரசில் / மகளிர்களுக்கான அழகுக்கலைப் பயிற்சி (27103)

பயிற்சி நெறிகள் நடைபெறும் இடம்

**International Knowledge Pool**

19,ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம் (மக்கள் வங்கி 3வது மாடி)
இளந்தொண்டர் சபை மண்டபம் இணுவில் கந்தசாமி கோவில்
கலைவாணி கல்வி நிலையம் கைதடி-மானிப்பாய் வீதி,கோப்பாய்
வதிரி வீதி, உடுப்பிட்டி உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அருகில்

மேலதிக விபரங்களுக்கு: 2221864 / 0771895164

## மரண அறிவித்தல்

### இராமுப்பிள்ளை கந்தையா

(சுபாரத்தினம்)

காரைநகர்,களபூமி, பாலாவோடையைப் பிறப்பிடமாகவும், திக்கரை வீதி, களபூமியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமுப்பிள்ளை கந்தையா நேற்று (22.12.2012) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை -செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான துரைச்சாமி-இராசலட்சுமி தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற தேவநாயகியின் அன்புக் கணவரும், விஜிதரன், கிரிகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான சின்னம்மா, தில்லையம்பலம், ஆறுமுகம், வேலுப்பிள்ளை,சுப்பிரமணியம் மற்றும் K.R.கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், புவனேஸ்வரி, கணேசன், சுப்பிரமணியம்,சிவசோதி, சிவபாதம், அமுதமணி மற்றும் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை, செல்லம்மா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(23.12.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தில்லை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திக்கரை வீதி,
களபூமி, காரைநகர். (27157)(5-6-7)

தகவல்:
பிள்ளைகள்.

## விற்பனைக்குண்டு

Sony video Camera. Model NO- HDR-AX 2000 E (27113)(6.7.4)
தொடர்பு: 077 650 3827

## வாகனம் விற்பனைக்கு

புதிய மகேந்திரா மக்சிமோர் படி விற்பனைக்கு. விவரம் யாவும் நேரில் மட்டும்.
0777 066487 (27107)(6.7.4)

## காணி உடன் விற்பனைக்கு

நல்லூர் முருகன் கோயிலுக்கு அண்மையில் இல.383/15, கோயில் வீதி, நல்லூரில்,(134, அடிநீளம், முன் பக்க அகலம் 55 அடி, பின்பக்க அகலம் 67, அடி) 2 ¾ பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.
தொடர்பு: 077 770 4457, 075 554 6000. யாழ்ப்பாணம்.
(27159)(6.7.4)

## தேவை

சுஜித் என்றபிறைசஸ்,டச்சு வீதி, சாவகச்சேரி எமது மட்டக்களப்பு கிளைக்கு பணம் வசூலிப்பாளர் தேவை. சிங்களம் தெரிந்திருத்தல் அவசியம். மாதாந்தம் ரூபா 40,000 - 45,000 வரை சம்பாதிக்கலாம். நேர்முகப் பரீட்சை 24.12.2012, 25.12.2012 ஆகிய திகதிகளில் சாவகச்சேரி அலுவலகத்தில் நடைபெறும். அத்துடன் சாவகச்சேரி அலுவலகத்திற்கு விற்பனைப் பிரதிநிதியும் தேவை. மாதாந்தம் ரூபா 30,000- 35,000 வரை சம்பாதிக்கலாம்.

தொடர்பு : 021 227 0586 (c/2851)(6.7.11)

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

January இல் ஆரம்பிக்கப்படவுள்ள கீழ்வரும் ஆங்கில கற்கை நெறிகளுக்கான பதிவுகள் தற்போது நடைபெறுகின்றன.
அனுமதிக் கட்டணம் எதுவும் இல்லை.

* Elocution * Communication Skills (Spoken English)

**Age Groups**
3-6 yrs, 7 - 12 yrs, 13 - 15 yrs, 16 - 19 yrs

* Spoken English (Adults & Workers Group)
* Paper Classes (O/L, A/L) * KET * IELTS

தொடர்பு: **Spectra Skills, 19,Stanley Road,** (People's Bank 2nd Floor), Jaffna.
Tel:- 021 222 1422, 021 222 1423
(27151) (6.7.2)

## கணினி கருத்தரங்கு

முன்னெப்போதும் இல்லாத தொழில் நுட்ப ரீதியானது

Topics
Hardware
Networking
Multimedia

இந்தியா மற்றும் இலங்கையில் 25 வருடங்களுக்கு மேல் துறைசார் அனுபவம் கொண்டவர்களால் நடத்தப் படுகிறது

**Expressing Techniques By Video Visuals**

இடம்: International Knowledge Pool
காலம்: 06/01/2013
நேரம்: 09am to 04pm

மட்டுப்படுத்தப்பட்ட ஆசனங்கள் மட்டுமே பதிவுகளை உடனடியாக மேற்கொள்ளவும். அனுமதி இலவசம் (27102)

பதிவுகளுக்கு: International Knowledge Pool
19, Stanley Road (மக்கள் வங்கிக் கட்டிடம் 3வது மாடி)
2221864 / 0771895164

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




திருநெல்வேலியைச் சேர்ந்த **ஆறுமுகம் சிவலிங்கம் ஆச்சாரி** கொழும்பு டீ சில்வா அரங்கில் 15.12.2012 அன்று இந்து கலாசார அமைச்சால் மர சிற்பத் துறைக்கான "கலாபூஷணம்" விருது பெற்றமையையிட்டுப் பாராட்டுகின்றோம். அவர் மேலும் பல விருதுகள் பெற வாழ்த்துகின்றோம்.

சு.பாஸ்கரன்-சிற்பாலயம்,
479, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C5631)(2.6.7) 021 222 3515, 0776106718

# 31 ஆம் நாள் நினைவலைகள்

## அமரர் கனகசபை அருளையா

நேசத்துடன் எமை வளர்த்து நேர்வழியில் வாழ வைத்து
ஆசைக் கனவுகளை அவனியிலே நிறைவேற்றிய எங்கள் அன்புத் தெய்வமே!
இப் பாரினில் நாம் வாழும்வரை எம் இதயத்தில் இருந்து எந் நாளும் பூஜிப்போம்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய யாழ்.வண்ணை வைத்தீஸ்வரரைப் பிரார்த்திக்கின்றோம்.

காரைநகர். குடும்பத்தினர்.
(27112) (2.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹரி ஓம் நாராயணாயநம

அளவெட்டி – நாகேஸ்வரம்

## ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்

சுவர்க்கவாயில் ஏகாதசி

விஞ்ஞாபனம்

நிகழும் நந்தன வருஷம் மார்கழி மாதம் 9 ஆம் நாள் (24.12.2012) திங்கட்கிழமை அதிகாலை 6 மணிக்கு சுவர்க்கவாயில் தரிசனம் இடம்பெறும். தொடர்ந்து பின்வரும் நிகழ்வுகள் இடம்பெறும். அன்படியார் அனைவரும் வந்து தரிசித்துத் திருவருள் பெறுமாறு வேண்டுகிறோம்.

### நிகழ்வுகளின் கால விவரம்

24.12.2012 திங்கட்கிழமை காலை 8 மணிக்கு அபிஷேகம்

முற்பகல் 10 மணிக்கு வசந்தமண்டபப் பூசை

முற்பகல் 11 மணிக்கு எம்பெருமான் தேரில் எழுந்தருளி வீதி வலம் வருவார்.

மாலை 6 மணிக்கு சாயங்கால பூசை

25.12.2012 செவ்வாய்க்கிழமை

நள்ளிரவு 12 மணிக்கு அர்த்தசாமபூசை

அதிகாலை 2 மணிக்கு 1008 சங்காபிஷேகம்

அதிகாலை 4 மணிக்கு வசந்தமண்டப பூசை

அதிகாலை 5 மணிக்கு தீர்த்தோற்சவம்

**திங்கட்கிழமை மாலை விசேட கலை நிகழ்வுகள் இடம்பெறும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.**

பொறுப்புரிமையர் பரிபாலன சபை,

நாகேஸ்வரம், அளவெட்டி.

(27029)(7.6.7)

## வீடு வாடகைக்குண்டு

வசதியான வீடு, 4 அறைகள், சமையலறை etc, திருநெல்வேலி வடக்கு சைவப் பாடசாலைக்கு முன்பாக வாடகைக்குண்டு. தரகர்கள் வேண்டாம்.

தொடர்பு: சண்முகம் முத்துலிங்கம். 077 321 2711, 077 542 9876.

(27041) (6.7.4)

## நாய் விற்பனைக்கு

9 மாத குட்டி German Sapped குட்டி, ஊசி போட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது. புத்தகம் ஒப்படைக்கப்படும். உரிமையாளர் தை மாதம் 7 ஆம் திகதி நாட்டை விட்டு செல்வதால் உடனடியாக விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு: E.K.ஸ்ரீபத்மநாதன் 077 8030073, 021 320 1285.

இடம்: சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

(26913) (6.7.4)

## வேலையாள்கள் தேவை

25,000/ சம்பளத்திற்கு எங்களுடைய க்ளவுஸ் உற்பத்தி செய்யும் கம்பனிக்கு 16-55 வரை ஆண்கள், பெண்கள் தேவை. சாப்பாடு, தங்குமிட வசதி உண்டு. குழுக்களாகவும் வரலாம். வரும் அன்றே வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர்.

தொடர்பு : 077 3032004, அனுராதபுரம்.

(24880)(6.7.5)

## நடமாடும் சேவை

கணினிகள், மற்றும் LED,LCD,TV கள், SCANNER,PRINTER,LAPTOP போன்றன உங்கள் இடங்களுக்கே வந்து உத்தரவாதத்துடனும் நம்பிக்கையுடனும் திருத்திக்கொடுக்கப்படும்.

(27097)(5-6-7) தொடர்பு:077 191 4725 கோப்பாய்

## வேலையாள்கள் தேவை

சம்பளம் 18,000/=, 25,000/=, 30,000/= வரை எங்கள் தனியார் விமான நிலையத்துக்கு கிளீனர், பாதுகாப்பு உத்தியோகத்தர், சாரதிகள் உடனடியாகத் தேவை. 18 வயது தொடக்கம் 50 வயது வரை உணவு தங்குமிடம் உண்டு.

தொடர்பு: 077 4568 264

(24381) (45.8.7)

## வீடும் காணியும் விற்பனைக்கு

பருத்தித்துறை நகரில்(தற்போது உள்ள பொதுச் சந்தைக்கு அருகில்) ஒரு பரப்பில் அமைந்த வீடும் மற்றும் 1½ பரப்புக் காணியும்(இருவழிப்பாதை உடைய, வாகனம் செல்லக் கூடியது) விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 573 1506, 052 225 8776

(27078)(6-6-7)

## காணி விற்பனைக்குண்டு

கச்சேரி வீதி, நல்லூரில் கிணறு சுற்றுமதிலுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0757100884

(24882)(3.5.4)

தாய்மடி

Thaaimadi Montessori &Daycare and Language centre

## வேலை வெற்றிடம்

**ஆங்கிலத்தில் கற்பிக்கக்கூடிய முன்பள்ளி ஆசிரியர்கள்**

**சிறுவர் பராமரிப்பு மற்றும் அலுவலக உதவியாளர் தேவை**

நேர்முகப்பரீட்சை :

02.01.2013 (walk in interview)

**இடம்:**

**இல-86, 4ஆவது ஒழுங்கை, பாலவிநாயகர் வீதி, தவசிக்குளம், வவுனியா.**

**நேரம்:**

**முற்பகல் 10.00 முதல் மதியம் 2.00 வரை**

**தொடர்புகளுக்கு: 0776151433**

(24379)(3.6.7)

## தகுதிக்கேற்ப தொழில் வாய்ப்பு

சம்பளம் 38,000/= முதல். எங்கள் பிரதான தொழிற்சாலைகள் மூலம் ஜாம், பிஸ்கட், டொபி, ரயர், கோடியல், தேயிலை, பால்மா, நுளம்புச்சுருள், பீங்கான் உற்பத்தி மற்றும் குளோஸ் உற்பத்தி பகுதியில் 100 இற்கும், லேபல் ஒட்டுதல் பிரிவுக்கும் தரம் 6 முதல் A/L வரை பயின்ற, 17 வயது முதல் 55 வயது வரையான ஆண்கள், பெண்கள் தேவை. உணவு, தங்குமிடம் இலவசம், நண்பர்கள் குழுவாக ஒரே இடத்தில் தொழில் புரியலாம். வவுனியா, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலிருந்து விசேடமாக இணைத்துக்கொள்ளப்படுகின்றனர்.

**தொடர்புகளுக்கு: 071 3460 295**

**அனுராதபுரம்**

(24379) (6-7-46)

# நீங்கா நினைவுகளுடன்

# ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு:-22.07.1948



உதிர்வு:-23.12.2011

## அமரர் முருகேசு பாக்கியநாதன் (சொக்கர்)

(விநாயகர் ரேனிங் வேக்ஸ் உரிமையாளர்)



*ஆண்டொன்று ஆனதப்பா நீர் எமைவிட்டுப் பிரிந்து சென்று*
*பார்க்குமிடமெல்லாம் உம் வதனம் தெரியுதப்பா*
*நீர் இவ்வுலகில் இல்லையென்று*
*எம்மால் நம்பவும் முடியுதில்லையப்பா*
*எங்கள் வாழ்வில் வசந்தத்தை அள்ளித் தந்த அப்பாவே*
*நீங்கள் மறைந்து போனதும்*
*எங்கள் வாழ்க்கையில் பெரும் புயலே வீசுதப்பா*
*வாழ்க்கை எனும் கப்பலுக்கு வழிகாட்டியாய் இருந்து விட்டு*
*திடீரென்று மறைந்ததுமே*
*நாம் திசைதெரியாது தவிக்கின்றோம் அப்பா*
*எங்கள் கண்களில் கண்ணீரைக் கண்டதும்*
*ஓடி வந்து துடைப்பீரே அப்பா – இப்போ கதறி அழுகின்றோம்*
*எங்கே அப்பா சென்று விட்டீர்*
*மறக்க முடியாத உங்கள் நினைவுகளுடனும்*
*நனைந்த விழிகளுடனும்*
*நீங்கள் போன வழிதேடி காத்திருக்கின்றோம் அப்பா.*

**என்றும் உங்கள் உயிருடன் கலந்திருக்கும்.**

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

**ஞானப்பிரகாசர் வீதி, மல்வம், உடுவில்.**

(26703) (2.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்து



யா/விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தில் 27.01.1998 இல் முதல் நியமனம் பெற்று இன்று (23.12.2012) ஓய்வு பெறும்

**திருமதி கருணாதேவி சிவபாதசுந்தரம்**

ஆசிரியை அவர்களின் மணிவிழாவையொட்டி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆசான் அவை**
**யா/விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்.**

## வீடும் காணியும் விற்பனை

இல. 695/25 நாவலர் வீதியில் உள்ள ஒரு பரப்பு காணியுடன் கூடிய வீடு உடனடி விற்பனைக்கு.
தொடர்பு: 077 8566117, 075 7635 662
(27039) (6,7,4)

## வீடு வாடகைக்குண்டு

பொற்பதி வீதியில் உள்ள வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 011 291 6751
(27038)(5-6-7)

## வீடும், காணியும் விற்பனைக்கு

சங்கத்தானை, சாவகச்சேரியில் (கந்தசாமி கோயில் பின்புறம் - ஞானவைரவர் கோயில் ஒழுங்கை) 4 Bed Rooms, 2 Hall கொண்ட வீட்டுடன் கூடிய 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 077 9585 847
(18088)(6.11)

## விற்பனைக்கு



Wheel Chair
Gent's Bicycle
0777225689

## மணமகன் தேவை

யாழ்ப்பாணம் இந்து கௌரவ 1974 பட்டதாரி, நட்சத்திரம் அனுசம், 7 இல் செவ்வாய், மட்டக்களப்பில் அரசாங்க திணைக்களம் ஒன்றில் கௌரவமான பணியில் ஈடுபட்டுள்ள மகளுக்கு அதே குடும்பத்தைச் சேர்ந்த அரச, தனியார் நிறுவனத்தில் சேவையாற்றுகின்ற வரனை பெற்றோர் எதிர் பார்க்கின்றனர். கிழக்கு மாகாணத்தை சேர்ந்தவரும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்பு : 077 1250 332
E.mail - pcmallevr@gmail.com
(26937)(6,...)

## வீடு வாடகைக்கு உண்டு

ஸ்ரான்லி கல்லூரி (கனகரத்தினம் மா.வி) முன்பாக சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
(நிறுவனங்கள் விரும்பத்தக்கது)
தொடர்பு: 077 5834770, 077 302 7557.
(26919) (6.7.4)

## மணமகள் தேவை

யாழ். அச்சுவேலியைச் சேர்ந்த, இந்து கௌரவ குடும்பம், பாவக் கிரகம் 32½ உடைய, 13.12.1982 இல் பிறந்த,(விசாகம் 3ஆம் பாதம்), கனடாவில் தற்போது நிரந்தர தொழிலுடன் வசித்துவரும் எங்கள் மகனுக்கு பட்டதாரி அல்லது கணினியில் உயர் தகைமையுள்ள மணமகள் தேவை.
தொடர்பு:077 667 0382
(26951)(5-6-7)

## காணி விற்பனைக்கு

இராச வீதியில் 8½ (எட்டரைப்) பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
(பொலிஸ் ஸ்ரேசனுக்கு முன்பாக பூபாலசிங்கம் புத்தகசாலைக்கு அருகில்)
தொடர்பு: 0714275724
இல .87,பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(26992) (6.7.4)

## சாரதி தேவை

வவுனியா-கொழும்பு Transport சேவையிலீடுபடும் லொறியொன்றிற்கு நன்கு அனுவம் வாய்ந்த சாரதி உடன்தேவை.
குறிப்பு: கொழும்பு நகரில் லொறி செலுத்துவதில் நல்ல அனுபவம் இருத்தல் வேண்டும்.
தொடர்பு: 077 955 4595
(24576)(5-6-7)

## வீடு வாடகைக்கு

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் பஸ் நிலையம், போதனா வைத்தியசாலைக்கு மிக அண்மையில் மின்சார நிலைய வீதியில் சகல வசதிகளுடனும் கூடிய ஒரு பெரிய வீடு வாடகைக்கு உண்டு.
(நிறுவனங்களுக்கும் உகந்தது).
தொடர்பு:0722150734, 0718474214, 077 31 80918.
(227054) (6.7.4)

## காணி விற்பனைக்கு

கரந்தன் நீர்வேலியில் இராச வீதிக்கு மேற்குப் பக்கமாக 500 மீற்றர் தூரத்திலுள்ள (தெல்லுளுவை) 20 ½ பரப்பு விவசாய காணி நீர்ப்பாசன வசதிகளோடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: க.சின்னராசா
077 1697680
(26917) (6.7.4)

## வைத்திய சேவை

வாதரோகங்கள், சருமரோகங்கள், நரம்புத்தளர்ச்சி,தொய்வு,உடல் மெலிவு, உடல் பருமன், தலை முடி உதிர்தல், தலை முடி நரைத்தல் மற்றும் நாள் பட்ட வியாதிகள் அனைத்துக்கும் அரிய சிகிச்சையும், உரிய ஆலோசனையும் அளிக்கப்படும்.
தொடர்பு :
"ஹோப் கிளினிக்", ("HOPE CLINIC"),
100 - அரசடி வீதி,
கந்தர் மடம், யாழ்ப்பாணம்.
0778996281
(26949)(6.7.11)

## கொழும்பு நடேஸ்வராலயா நுண்கலைக் கல்லூரியின் கிளை, யாழ் மண்ணில் ஆரம்பம்

**01.01.2013 செவ்வாய்க்கிழமை மாலை 5 மணி**
**278, யாழ்ப்பாணம் வீதி, மானிப்பாய்**
(மானிப்பாய்,வில்லியம் மேதர் தேவாலயம் எதிரில்)

**கற்பிக்கப்படும் பாடங்கள்:**

**கர்நாடக சங்கீதம் (வாய்ப்பாட்டு), பண்ணிசை, பரதநாட்டியம், மிருதங்கம், வீணை, வயலின், புல்லாங்குழல், ஹார்மோனியம், சித்திரம், கீபோட்(மேலைத்தேயம்/கீழைத்தேயம்), கிற்றார், தபேலா ஆகிய கலைப்பாடங்களுடன் யோகா பயிற்சி நெறியும் கற்பிக்கப்படும்.**

- சிறந்த ஒழுங்கான வகுப்புகள் திறமைமிக்க ஆசிரியர்களால் கற்பிக்கப்படும்.
- மாணவர்களின் தரத்திற்கும், திறமைக்கும் ஏற்ப வகுப்புகள். வயதெல்லை இல்லை.
- க.பொ.த.ப(சா/த),க.பொ.த.ப(உ/த) வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சைகளின் பாடவிதானத்திற்கேற்ப கற்பித்தல்.
- வகுப்பறைகளில் விசேட கவனிப்பு.
- பிரபல்யமும் அனுபவமுமுள்ள உள்நாட்டு,வெளிநாட்டுக்கலைஞர்களால் கருத்தரங்குகள்(Seminars), பயிற்சிப் பட்டறைகள் (workshops), செய்முறை விளக்கங்கள்(Practical Demonstrations), மாணவர்களின் மாதாந்த பயிற்சிக் கலை நிகழ்வுகள் ஆகியன நடத்தப்படும்.

பதிவுகளுக்கும், விபரங்களுக்கும்
077 771 3394/ 071 609 ...
(27003)(5.6.7)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**கனகசபை நடேசன்**
(இலக்கியம்)
(பத்திரிகை ஆசிரியர்,சிறுகதை எழுத்தாளர், நிர்மலா திரைப்படத்தின் திரைக்கதை வசன எழுத்தாளர்)



**கந்தையா சரவணபவன்**
(ஓவியம்)
(விளம்பர,உயிரோவியம் வரைதல் கோபுர வர்ணம் தீட்டல், சிற்பங்கள் செய்தல்)

இலங்கை வளம் பாடி இலங்கைக்கே புகழ்தந்த நம்புலவர் நவாலியூர் சோமசுந்தரனார் வழிநின்று எம்மவர்க்கும், எம்மூரிற்கும் பெருமை சேர்க்கும் வகையில் கலைத்துறைக்கு சேவையாற்றிய முருகானந்த சனசமூக நிலையத்தைச் சார்ந்த இருவருக்கும் கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு 2012 மார்கழி மாதம் 15ஆம் திகதி நடத்தப்பட்ட 28ஆவது கலாபூஷண அரச விருது விழாவின்போது கலாபூஷண விருது வழங்கப்பட்டது. விருது பெற்ற இருவருக்கும் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதோடு, இவர்கள் சேவை மேன்மேலும் தொடர அந்திரான் பதி அழகனைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

**முருகானந்த சனசமூக நிலையம்,**
**அந்திரான் முருகமூர்த்தி கோயில், நவாலி.**
(27008)(5.6.7)

# KALAIMAGAL INTERNATIONAL COLLEGE

NOTHING IS IMPOSSIBLE

முழு நேர ஆங்கில மொழி மூல தனியார் பாடசாலை

- இலங்கை கல்வித்திணைக்களகத்திலும் பரீட்சைத்திணைக்களகத்திலும் பதிவு செய்யப்பட்ட அரசு அங்கிகாரம் பெற்ற கல்லூரி.
- Play GROUP முதல் G.C.E (A/L) வரையான வகுப்புக்கள்
- Play GROUP முதல் GRADE 05 வரை OXFORD பாடத்திட்டமும் GRADE 06 முதல் G.C.E (A/L) வரை இலங்கைப் பாடத்திட்டமும் உள்ளடக்கிய கல்விக் கொள்கை.
- 02 வருடகாலம் முழுநேரம் ஆங்கில மொழி மூலம் பயிற்சியை வழங்கும் ஆசிரியர் பயிற்சிற்கலாசாலையை தன்னகத்தே உள்ளடக்கி உள்ள சிறப்பான செயற்பாடு.
- நவீன கற்கை முறை மூலம் மாணவர்களை நெறிப்படுத்தும்தொழில் நுட்பம்
- மாணவர்களுக்கான போக்குவரத்து வசதி
- தமிழ், சமயம் ஆகிய பாடங்கள் தமிழ் மொழி மூலமும் ஏனைய அனைத்துப்பாடங்களும் ஆங்கில மொழி மூலமும் கற்பிக்கும் செயற்பாடு.

இன்னும் பல அரிய செயற்பாடுகளுடன் இயங்கி வரும் எமது கல்லூரியின் கீழ் வரும் கிளைகளில் மட்டும் அடுத்த தொகுதிக்கான(2013 ஆண்டுக்கான முதற் தொகுதி பூர்த்தியாகி விட்டது). விண்ணப்பங்கள் ஏற்கப்படுகிறது. எனவே உங்கள் அனுமதிக்கு முந்தவும்.

1) NUNAVIL EAST, KANDY ROAD, CHAVAKACHCHERI.
2) CHURCH LANE, KOKUVIL EAST, KOKUVIL.
3) HOSPITAL ROAD, ACHCUVELI.
4) THAMBACIDDI ROAD, POINT PEDRO.
5) HINDU SCHOOL LANE, VALVETTI.
6) BANGALWADI, VELANAI. (NEAR THE POST OFFICE)
7) 10-11 AMBALKULAM, KILINOCHCHI.
8) NO-263 SILVA ROAD, VADAKKACHCHI.

மேலதிக விபரங்களுக்கு:
**KALAIMAGAL INTERNATIONAL COLLEGE**
**CHURCH LANE, KOKUVIL EAST, KOKUVIL.**
**0774904286, 0778834592, 0771387697**
(C/5008)(6.11)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பட்டமளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ. 23

வங்கியியல் பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்தவர்களுக்கான பட்டமளிப்பு நிகழ்வும் சான்றிதழ் வழங்கலும் இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அருட்தந்தை டானியல் தியாகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை மத்திய வங்கியின் வடமாகாண பிராந்திய முகாமையாளர் எஸ்.கௌரிசங்கர் கலந்துகொள்வார். இந்த நிகழ்வில் 30 க்கும் மேற்பட்ட கற்கைநெறியைப் பூர்த்தி செய்த மாணவர்கள் பட்டம்பெறவுள்ளனர். (16)


## R. G. ENGINEERS

கட்டட நிர்மாணம் தொடர்பான அனைத்து சேவைகளும் நிர்மாணத்துறையில் அனுபவமுள்ள பொறியியலாளர்களால் முன்னெடுக்கப்படுகிறது.

வரைபடம் (Plan), மதிப்பீடு செய்தல் (Estimation), வடிவமைப்பு (Design work), ஒப்பந்த அடிப்படையில் கட்டட நிர்மாணிப்பு.

தொடர்பு : கோண்டாவில் மேற்கு, யாழ்ப்பாணம்.
078 583 2356

(87120)(6.7.11)

## வாகனம் விற்பனைக்கு

P.E 4XXX இலக்கமுடைய சுப்பர் G.L.172 DUAL A/C Full Adjustable Seat, Alloy wheel Good Condition.
உற்பத்திவருடம்2002, முதல்பதிவு-2007-10
விலை 46லட்சம் (46,00000)
தொடர்பு: 0777308938

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்ப 1978 ஆம் ஆண்டில் பிறந்த, மக நட்சத்திர, கிரகபாவம் 15½ உடைய கொழும்பில் தனியார் கம்பனியில் பணி புரிபவர்க்கு மணமகள் தேவை.
தரகர் தேவையில்லை.
தொடர்பு : 0777 069071

(27154)(6.7.11)

## யாழ் நகரில் எங்களது புதிய கிளை

விசேட விலைக்கழிவு
டிசம்பர் 20 - ஜனவரி 20

DISCOUNT FOR DEALERS & RESALLERS

Hotline : 077 9120842



நேரடியாக அமெரிக்காவிலிருந்து தருவிக்கப்பெற்ற Pentium iv (Dual Core, Core 2 Due) கணனிகள், கணனி உதிரிப்பாகங்கள், Webcam, Head Phones, Laptop மற்றும் அனைத்து கணனி தேவைகளையும் மிகவும் குறைந்த விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.

microtec
Computer wholesaler

Head office
No. 191/1, Vincent Perera Mw, Colombo 14.
Tel : 011 2 441757 / 077 3344388

Branch Office
Koddai Kadu Lane, Kondavil East, Kondavil.

FLEX Graphic

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## அன்பார்ந்த யாழ். மக்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

இதோ வீட்டிலிருந்தே இணையத்தில் வருமானம் ஈட்ட ஓர் அரிய வாய்ப்பு.
உங்கள் விருப்பத்துக்கான வேலை, குறைந்தது மாதம் 50,000/= மேல் உழைக்க முடியும்.
Job Profite
(Word/ Excel/ Data Entry/ Copy Typing/ Add Click)
இன்னும் பல வேலைகள்
கொழும்பிற்கு வர முடியாதவர்களுக்கு Online மூலம் உடனடிப் பதிவு
CD + Tutee Pack + International Master Card
உடனே அழையுங்கள். 0772 819322

வருட இறுதியை முன்னிட்டு 6000/= மட்டுமே Discount வழங்கப்படும்.

(8/7747) (6.7.2)

## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
முத்து சுப்பையா
பிறப்பு
14.12.1925
இறப்பு
27.12.2009



ஆண்டுகள் மூன்று சென்றாலும் ஆறவில்லை உங்கள் நினைவுகள் என்றும் எம்மை விட்டகலாத தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்

இல.03.ஸ்ரான்லி.
கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

என்றும் நினைவுடன்
குடும்பத்தினர்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### தென்றல் அலைவரிசையில் சர்வதேச செய்தியாளர்களை சேர்ப்பதற்கான விண்ணப்பம் கோரல்

மேற்குறித்த அலைவரிசையில் சமகால தகவல்களையும், செய்திகளையும் தொகுத்தளிக்கக்கூடிய வானொலி செய்தியாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கனடா, ஆஸ்திரேலியா, சுவிற்சர்லாந்து, பிரான்ஸ், ஜேர்மன், நோர்வே, டென்மார்க், இங்கிலாந்து, அமெரிக்கா, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் வசிப்பவர்கள் விண்ணப்பிக்கலாம்.

சுயவிவரக்கோவையுடன் 2013 ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு விண்ணப்பங்களைக் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

பணிப்பாளர், தென்றல் எவ்.எம்.

(8/2763) (6.7.2)

முகவரி: பணிப்பாளர், தென்றல் எவ்.எம்.
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்,
த.பெ.இலக்கம்.574, கொழும்பு, இலங்கை.

## வெற்றிடங்கள்

### வெற்றிக் குழுவில் நீங்களும் ஒருவர் ஆகுங்கள்

MACKSONS PAINTS WORLDWIDE
Multilac® PREMIUM PAINTS
ISO 9001:2000 CERTIFIED

இலங்கையில் உள்ள முன்னணி பெயின்ற் கம்பனியான Multilac கம்பனி, கடின உழைப்பு, விடாமுயற்சி, சவால்களை எதிர்கொள்ளும் ஆற்றல் மற்றும் உயர் இலக்குகளை அடையக்கூடிய, குழுவாக வேலை செய்யக்கூடிய, சுறுசுறுப்பான புதிய உத்வேகமுள்ளவர்களிடம் இருந்து பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்களை எதிர்பார்க்கிறது.

☞ விற்பனை முகாமையாளர்கள் (வடக்கு/ கிழக்கு)
(Area Sales Managers)

3 வருட முகாமைத்துவ அனுபவம், மற்றும் நல்ல தொடர்பாடல் ஆற்றலும் அறிவும், விற்பனைத்துறையில் அனுபவமும் உள்ள 40 வயதுக்கு குறைந்த விண்ணப்பதாரியாக இருக்க வேண்டும்.
தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் கவர்ச்சிகரமான சம்பளமும், ஊக்குவிப்பு பணமும், கம்பனியால் வழங்கப்படுகிற வாகனமும், பெற உரித்துடையவர்களாவர்.

☞ விற்பனை நிறைவேற்று அதிகாரிகளும் விற்பனை பிரதி நிதிகளும் (வடக்கு கிழக்கு )

எதிர்பார்க்கப்படும் தகைமைகள்:
- விண்ணப்பதாரி 35 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்
- க.பொ.த உயர்தர தகைமையை கொண்டிருத்தல்
- சிறந்த தலைமைத்துவம், தொடர்பாடல் ஆற்றல், (சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில்) தமிழ் மொழி மேலதிக தகைமையாகவும் கொள்ளப்படும்.
- நாட்டின் எப்பாகத்திலும் குழுவாக வேலை செய்யக்கூடிய ஆற்றலும் விருப்பமும் உள்ளவர்களாக இருத்தல்

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் கவர்ச்சிகரமான சம்பளமும், ஊக்குவிப்பு தொகை (ஐந்து இலக்கங்களுக்கு மேற்பட்ட தொகை) வெளிநாட்டு பிரயாண வாய்ப்பு, கம்பனியால் வழங்கப்படும் மோட்டார் சைக்கிள் - காலப்போக்கில் சொந்த கார் ஆக மாற்றக்கூடியதாகவும் இருக்கும்.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் இவ் விளம்பரம் பிரசுரித்து 07 நாட்களுக்குள் எமக்குக் கிடைக்க கூடியவாறு அண்மையில் எடுத்த பாஸ் போட் அளவிலான புகைப்படம், இரு உறவினர் அல்லாத நபர்களின் பெயர், உங்களது தொ.பே. இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு சுயமாக தயாரித்த சுயவிபரக் கோவையை எமக்கு அனுப்பி வைக்கவும். தபாலில் அனுப்புவதாயின்,கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரினை குறிப்பிடவும். E-mail இல் அனுப்புவதாயின் "Subject"எனும் பகுதியில் பதவியைக் குறிப்பிடவும்.

அனுப்பவேண்டிய முகவரி:
Group Manager – Human Resources & Administration
Macksons Paints Lanka (Pvt) Ltd
No. 75/1, Wattalpola Road, Henamulla - Panadura.
E-mail: careers@multilac.com Fax: 0115550268

WE COLOUR THE WORLD
Colourbank MITSUKO


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## Nano Lx கார் விற்பனைக்கு உண்டு

NP KP XXXX இலக்கமுடைய வங்கியாளரின் கார் விற்பனைக்குண்டு. ( விரும்பின் லீசிங் வசதி செய்து தரப்படும்.)
பார்வையிடும் நேரம்: [illegible]
தொடர்பு : 0779599364 (27108) (6.7.11)

## விழிநீர் வழிய......



எமது பல்கலைக்கழக சக மாணவ நண்பன்

### இராசலிங்கம் காந்தலிங்கம் (ஆசிரியர்)

அவர்கள் கடந்த வியாழக்கிழமையன்று (20.12.2012) இறைபதமடைந்தமையை யிட்டு, மீளாத்துயரில் மூழ்கியிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

98/99 கல்வியாண்டுப் பிரிவு,
இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,
பெலிஹுல்ஓயா. (27166) (2.7.8)

சமூகவிஞ்ஞான, மொழிகள் பீட
தமிழ் மாணவ நண்பர்கள்.

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தாய் மடியில்
1931.08.21
சிவனடியில்
2010:12.16

அமரர்

### மாணிக்கவாசகர் சிவராஜா

(ஓய்வுபெற்ற தொலைபேசி இயக்குநர். கச்சேரி. வவுனியா)
திதி: 23.12.2012

பண்புடன் எமை ஆளாக்கிய
பாசமிகு தந்தையே பார் போற்றும் பண்பாளனே
நீங்கள் மறைந்து ஈராண்டுகள்
உங்கள் கனவுகளோ என்றும் எம்முடன்

இல.251, உக்குளாங்குளம்,
வவுனியா.
T.P. 024 222 3748,
024 222 5590 (24383)(2.6.7)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர் பிள்ளைகள்.

## வாடகைக்கு

தாவடியில் இயங்கிக் கொண்டிருக்கும் NET CAFE அனைத்து பொருள்களுடனும் வாடகைக்கு கொடுக்கப்படும்.
விபரங்களுக்கு 077 9852409 (27158)(5.7.4)

## ஒத்து மாறல்

முகாமைத்துவ உதவியாளர் (Central Govt.) வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ஒத்து மாற விரும்புகிறார்.
தொடர்பு: 024 222 4489 (27158)(5.7.4)

## காணி விற்பனை

வல்வை, சோடாக்கடை ஒழுங்கையில் நெற்கொழு பக்கம் திரும்பும் வீதியில் தோட்டம் செய்யக்கூடிய 8¼ பரப்பு சதுரக் காணி இருபுறம் மதில் கொண்டது விற்பனைக்கு உண்டு.
(27109)(5-6-7) தொடர்பு: 072 183 1932

## கணக்காளர் தேவை

முழுநேரம் வேலை செய்யக் கூடிய ஆண் கணக்காளர் தேவை.
(வடமராட்சியில் வசிப்பவர் மட்டும்)

**ஜமுனா ஸ்ரோர்ஸ்**
112, பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2150
077 742 2604 (25579)(5-6-7)

## லொறி விற்பனைக்கு

(Ashok Leyland )E-COMET
லொறி 16½ அடி அலுமினியம் பொடி. LJ xxxx விற்பனைக்கு.
தொடர்பு: ஜமுனா ஸ்ரோர்,
மெயின் வீதி,
நெல்லியடி.
0777 422 604. (225578) (6.7.4)

## மரண அறிவித்தல்கள்



### இராசலிங்கம் காந்தலிங்கம் (காந்தன்)

(ஆசிரியர்- ஞானபண்டித வித்தியாலயம், கொக்குவில், முன்னாள் ஆசிரியர் - நெடுந்தீவு மகாவித்தியாலயம்)

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசலிங்கம் காந்தலிங்கம் 20.12.2012 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசலிங்கம் மற்றும் சத்தியலீலா (முன்னாள் முன்பள்ளி ஆசிரியை - இணுவில் மஞ்சத்தடி முன்பள்ளி) தம்பதியரின் அன்புப் புதல்வனும், கணேசலிங்கம் (பிரான்ஸ்), விஜயகௌரி (ஆசிரியை-ஏழாலை சிறிமுருகன் மகா வித்தியாலயம்/தற்காலிகம்- இணுவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தயானந்தனின் (இராஜா மில் உரிமையாளர்) மைத்துனரும், டிபானிக்கா, கரினிக்கா, கஜானிக்கா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று ( 23.12.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கலட்டி லேன், கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.
T.P.077 529 6680 (27009) (6.7.4)

தகவல்:
குடும்பத்தினர்.

பன்னலை கணேஸ விளையாட்டுக் கழக அணிக்கும், புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் புத்தூர் கலைமதி வியைாட்டுக் கழக அணி 25:16:25:18 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றியீட்டியது. (-23)

# உதைபந்தாட்டம்



யாழ்ப்பாணம்,டிசெ.23

யாழ் உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழககளுக்கு இடையே 22 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடர் எதிர் வரும் ஜனவரி மாதம் 12 ஆம்,13 ஆம், 14 ஆம் திகதிகளில் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.(த-23)

# கிரிக்கெட் அபிவிருத்திக் 5 இலட்சம் ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,டிசெ.23

இலங்கை கிரிக்கெட் யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் அபிவிருத்திக்கென 5 இலட்சம் ரூபா பெறுமதியனா காசோலை யாழ் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினால் செயலாளர் விமலதாசனிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை கொழும்பில் வைத்து இலங்கை கிரிக்கெட் சங்க உப தலைவரும் மாவட்டமும், பாடசாலைகளினதும் கிரிக்கெட் அபிவிருத்திக் குழுவின் தலைவருமான மதிவாணன் அவர்களினால் 5 இலட்சம் ரூபா பெறுமதியான காசோலை வழங்கப்பட்டுள்ளது. (-23)

# வெற்றிபெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,டிசெ.22

நாராந்தனை அண்ணா விளையாட்டுக்கழகம், நாராந்தனை பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடத்திய உதைந்தாட்டம், மென்பந்தாட்டம் போட்டிகளில் வெற்றியீட்டிய அணிகளின் விவரம் வருமாறு-

**உதைபந்தாட்டம்**

முதலாமிடம் - தம்பசிட்டி காந்திஜி விளையாட்டுக்கழகம்

இரண்டாமிடம்- அல்லைப்பிட்டி சென்.பிலிப்ஸ் விளைாட்டுக்கழகம்

**மென்பந்து துடுப்பாட்டம்**

முதலாமிடம் - அல்லைப்பிட்டி சென். பிலிப்ஸ் விளையாட்டுக்கழக 'ஏ' அணி

இரண்டாமிடம்- அல்லைப்பிட்டி சென்.பிலிப்ஸ விளையாட்டுக்கழக 'பி'அணி (த-23)



யாழ்.உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் சிறந்த கோல் காப்பாளருக்கான விருதை பெற்ற [illegible]காடு ஞானமுருகன் விளையாட்டுகழகத்தின் கோல் காப்பாளர் [illegible] , ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளர் த. நிறஞ்சன் விருது வழங்கிக் கௌரவிக்கிறார். (த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்திடம் இரையானது இந்தியா






இங்கிலாந்துடனான இரண்டாவதும் இறுதியுமான 'ரி-20' ஆட்டத்தில் இந்திய அணி தனது சொந்த மண்ணில் தோல்வியைச் சந்தித்தது. இதன் மூலம் 'ரி-20' தொடரின் கிண்ணத்தை வெல்லும் வாய்ப்பையும் கோட்டை விட்டது.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு இங்கிலாந்து அணி விளையாடி வருகின்றது. முதலில் இடம்பெற்ற டெஸ்ட் தொடரை வெற்றி கொண்ட இங்கிலாந்து அணி 'ரி-20' தொடரின் முதலாவது ஆட்டத்தில் தோல்வியடைந்திருந்தது. இந்த நிலையில் நேற்று இரண்டாவதும் இறுதியுமான 'ரி-20' ஆட்டம் மும்பையில் இடம்பெற்றது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணித்தலைவர் இயன் மோர்கன் முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

அதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 177 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. ஆரம்பத்தில் ஓட்டங்களைப் பெற்றுக் கொள்வதற்குத் தடுமாறிய இந்திய அணியை, டோனி - ரெய்னா ஜோடி தமது அபார அதிரடி ஆட்டத்தின் மூலம் வலுவான போட்டியிடக் கூடிய இலக்கொன்றை நிர்ணயிக்கும் அளவுக்கு அழைத்துச் சென்றது.

துடுப்பாட்டத்தில் இந்திய அணி சார்பில் டோனி 18 பந்துகளில் ( 2 சிக்ஸர்கள், 3 பவுண்டரிகள்) 38 ஓட்டங்களையும், ஹோக்லி 20 பந்துகளில் 7 பவுண்டரிகள் அடங்கலாக 38 ஓட்டங்களையும், ரெய்னா 24 பந்துகளில் 35 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் டேர்ன் பச், லுக் ரைட் இருவரும் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

கடினமான இலக்கை துரத்தியடிக்க களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு ஆரம்பம் மிகச் சிறப்பாக அமைந்தது. இந்திய அணியின் களத்தடுப்பு தவறுகள் இங்கிலாந்து அணிக்கான வாய்ப்புக்களை தொடர்ந்து வழங்கின.

முதலாவது இலக்குக்காக 50 பந்துகளில் 80 ஓட்டங்கள் பகிரப்பட்டன. லம்ப் 34 பந்துகளில் 50 ஓட்டங்களுடன் யுவராஜ் பந்தில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து நுழைந்த லுக் ரைட் 5 ஓட்டங்களுடன் யுவராஜின் சுழலில் வெளியேற இங்கிலாந்து அணியின் ஸ்ருதி குறைந்தது.

சுமாரன போராட்டத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்த கணத்தில் ஹேலிஸ் 42 ஓட்டங்களுடன் யுவராஜ் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். இங்கிலாந்து அணி இறுதியில் வெற்றிக்கான போராட்டத்தை கடுமையாக வெளிப்படுத்தியது. அணித் தலைவர் மோர்கனின் ஆட்டத்தினால் இங்கிலாந்தின் வெற்றி இறுதிக் கணத்தில் சாத்தியமாகியது. இறுதிப் பந்தில் மூன்று ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் மந்திராலோசனை நடத்தியது இந்திய அணி. இருந்தும் டின்டா வீசிய இறுதிப் பந்தை சிக்ஸருக்கு அனுப்பி இங்கிலாந்தின் வெற்றியை உறுதிப்படுத்தினார் மோர்கன்.

20 பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் 4 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்த இங்கிலாந்து அணி 'ரி-20' தொடரை 1-1 என்று சமநிலையில் முடித்துக் கொண்டது. துடுப்பாட்டத்தில் மோர்கன் ஆட்டமிழக்காமல் 26 பந்துகளில் (2 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகள்) 49 ஓட்டங்களைப் பெற்றார்.

ஆட்டநாயகனாக இயன் மோர்கனும், தொடர் நாயகனாக யுவராஜூம் தெரிவாகினர். (5)

# இலக்குகளைச் சரிப்பேன்



ஆஸ்திரேலிய அணிக்கெதிரான போட்டியில் இலக்குகளைக் கைப்பற்ற எதிர்பார்ப்பதாக இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் ரங்கன ஹேரத் தெரிவித்துள்ளார். இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்துக்கு முன்னதாகவே அவர் இந்தக் கருத்தினை வெளியிட்டுள்ளார்.

ஆஸ்திரேலியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 3 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரில் பங்குபற்றிவருகிறது. இதில் முதலாவது ஆட்டத்தில் இலங்கை அணி தோல்வியடைந்த நிலையில், இரண்டாவது ஆட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள ரங்கன ஹேரத், ஆஸ்திரேலியத் துடுப்பாட்ட வீரர்கள் உள்ளூர்ப் போட்டியிலும் 80 தொடக்கம் 90 சதவீதமானளவு வேகப்பந்து வீச்சாளர்களையே சந்திப்பதாகவும், ஆகவே தன்னால் இலக்குகளைக் கைப்பற்ற முடியும் எனத் தெரிவித்தார்.

கடந்தாண்டு தென்னாபிரிக்காவிலும் இலங்கை அணி முதலாவது ஆட்டத்தில் தோல்வியடைந்திருந்த நிலையில் இரண்டாவது ஆட்டத்தில் வெற்றியடைந்திருந்ததோடு, அந்த ஆட்டத்தில் ரங்கன ஹேரத்தின் சிறப்பான பந்துவீச்சே இலங்கை அணிக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்தது.

தென்னாபிரிக்காவிலும் இதேபோன்ற நிலையே காணப்பட்டதாகத் தெரிவித்த ரங்கன ஹேரத், முதலாவது ஆட்டத்தில் தோல்வியடைந்த பின்னர் அணி மீது அதிகமான அழுத்தங்கள் காணப்பட்டதாகவும், அணி சிறப்பாகச் செயயற்பட்டு வெற்றியைப் பெற்றுக் கொடுத்ததாகவும் தெரிவித்தார்.

ஆகவே 26 ஆம் திகதி மெல்போர்ணில் ஆரம்பிக்கவுள்ள ஆட்டத்தில் வெற்றிபெற முடியுமென்று நம்புவதாகவும் அவர் தெரிவித்தார். முதலாவது ஆட்டத்தில் இலங்கை அணி தோல்வியடைந்த போதிலும், அந்த ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவின் இரண்டாவது இன்னிங்ஸில் ரங்கன ஹேரத் 5 இலக்குகளைக் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

# தென்னாபிரிக்கா இலகு வெற்றி




தென்னாபிரிக்காவிற்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நியூஸிலாந்து அணிக்கும், தென்னாபிரிக்க அணிக்குமிடையிலான முதலாவது 'ரி-20' ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி வெற்றி பெற்றி பெற்றுள்ளது. மிகச்சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய தென்னாபிரிக்க அணி 8 இலக்குகளால் இந்த ஆட்டத்தில் வெற்றிபெற்றிருந்தது.

டேர்பனில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 18.2 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 86 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. ஆரம்பம் முதலே இலக்குகளை இழந்த நியூஸிலாந்து அணி ஒரு கட்டத்தில் 6 இலக்குகளை இழந்து 36 ஓட்டங்களை மாத்திரம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

துடுப்பாட்டத்தில் நியூஸிலாந்து அணி சார்பாக கொலின் முன்ரோ 18 பந்துகளில் 23 ஓட்டங்களையும், டக் பிரேஸ்வேல் 25 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களையும், ஜிம்மி நீஷம் 7 பந்துகளில் 10 ஓட்டங்களையும் பெற்றனர். வேறு எந்த வீரரும் இரட்டை ஓட்டங்களைப் பெற்றிருக்கவில்லை.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக ரோறி கிளெய்ன்வெல்ட்ற் 18 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், ரொபின் பீற்றர்சன் 8 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், ஸ்ரெய்ன் 13 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், கிறிஸ் மொரிஸ் 19 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

87 என்ற இலகுவான வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 12.1 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. முதலாவது இலக்கை முதலாவது பந்துப் பரிமாற்றத்திலேயே ஓட்டமெதனையும் பெறாமலேயே இழந்த தென்னாபிரிக்க அணி, அதன் பின்னர் சிறப்பாக ஆடியது.

துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பாக அணித்தலைவர் டு பிளெஸிஸ் 32 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 38 ஓட்டங்களையும், குயின்டன் டீ கொக் 23 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 28 ஓட்டங்களையும், ஹென்றி டேவிட்ஸ் 13 பந்துகளில் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நியூஸிலாந்து அணி சார்பாக மிற்சல் மக்லநகன், ரொனி ஹீரா ஆகியோர் தலா ஒரு இலக்கைக் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக தென்னாபிரிக்க அணியின் ரோறி கிளெய்ன்வெல்ட்ற் தெரிவானார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெல்லியடி சன்மார்க்க சபை பாலர் பாடசாலைக் கலை விழா நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட கரவெட்டி கோட்டக் கல்வி அதிகாரி சி.நற்குணலிங்கம், பாரியார் திருமதி ந.மனோகரி ஆகியோரை பாலர் பாடசாலை சிறார்கள் தமிழ்ப் பண்பாட்டை பிரதிபலிக்கும் வண்ணம் பொட்டிட்டு சந்தனமாலை சூட்டி வரவேற்கின்றனர். (ம-253)



கதிர்காம யாத்திரிகள் தொண்டர் சபையின் வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. அவ்வேளை எஸ்.ரி.எஸ். அருளானந்தன் மீண்டும் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். அவருக்கு பேரவை உறுப்பினர் எஸ்.கந்தசாமி மாலை சூட்டி பாராட்டுகிறார். (ம)



இந்து ஸ்வயம் சேவா சங்கத்தின் வலிகாமம் கிழக்கு பிரதேச கிளையால் நடத்தப்பட்ட சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது பிறந்த தின ஆண்டு விழாவும் இந்து சமய எழுச்சி மாநாடும் ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தில் நடைபெற்றது. விழாவில் கலந்துகொண்டு இந்து ஸ்வயம் சேவா சங்கத்தின் வதிவிடப் பிரதிநிதி சுவாமி இராதா கிருஸ்ணஜி சிறப்புரையாற்றுகிறார். (ம-11)





கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மாதாந்த நுகர்வோர் சீட்டிழுப்பின் போது வதிரி கூட்டுறவு நகரிலிருந்து பரிசில் பெற்ற வே.கந்தசுவாமிக்குருக்கள் கிளை முகாமையாளர் ஐ.செல்லசோதியிடமிருந்து பரிசில் பெறுகின்றார். சங்கத்தின் கிளை முகாமையாளர்களில் 17 பேரும் நாளொன்றுக்கு 10 ஆயிரம் ரூபாவுக்கு மேல் ஒவ்வொரு கிளைகளிலும் நுகர்ச்சிப் பொருள்கள் விற்பனை செய்தமைக்காக ஊக்கப்படுத்தி கௌரவிக்கப்பட்டனர். (ம-8)



கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவின்போது அதிபர் இ.இராகவன் மற்றும் ஆசிரியர்கள் மலர்மாலை அணிவித்து அழைத்துவரப்படுகின்றனர். (ம-8)







வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் மாற்றுஆற்றல் உடையோரின் கலாசார விழா அண்மையில் கைதடி நவீல்ட் பாடசாலையில் இடம்பெற்றது. நவீல்ட் பாடசாலை மாணவிகளின் பாடல் இடம்பெறுகிறது. நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினர் அமர்ந்துள்ளனர். வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி ந.இன்பராஜ் மங்கல விளக்கேற்றுகிறார். (ம-9)



உடுவில் பிரதேச செயலக ஊழியர்களின் ஒளி விழா நிகழ்வுகள் கடந்த வியாழக் கிழமை உடுவில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேசசெயலர் மு.நந்த கோபாலன் தலைமையில் இடம்பெற்றன. இந்த நிகழ் வில் நத்தார் பாப்பாவுடன் சிறுவர்கள் ஆடி மகிழ்கின்றனர். (ம-86)



வலி.மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட அராலியில் குடிதண்ணீர் வழங்கல் தொடர்பான அபிவிருத்தி கூட்டத்தில் பிரதம அதிதியான நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் உரையாற்றுகிறார். (ம-...)





வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் வர்ண இரவுகள் நிகழ்வு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் மற்றும் விளையாட்டு அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் இடம்பெற்ற [illegible] விக்டோரியாக் கல்லூரி மாணவிகளின் நடன நிகழ்வின் ஒரு காட்சி. (ம-86)



நல்லூர் பிரதேச செயலக நலன்புரி சங்கத்தின் ஒளிவிழா பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வை நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கிறார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிங்கப்பூர், மலேசியா**

**Student visa**

மாதாந்த வேதனத்துடன்

திசைகாட்டி பிறைவேற் லிமிட்
175,பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
0212219016 (26900) (45.6.7)



**பிலாரஸ், நாட்டில் மருத்துவம், பொறியியல்**

A/L- 3S போதுமானது
இலங்கையில் அங்கீகாரம்

திசைகாட்டி பிறைவேற் லிமிட்
175,பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
0212219016 (26899) (45.6.7)



**STUDY IN UK**

உங்கள் **LONDON** செல்லும் கனவை நனவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்

**GCE(O/L)** தகமை போதுமானது

Jan/Feb Intake ற்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

நடைமுறைகள் மாறினும் எவ்வித மாற்றமும் இன்றி London செல்லுங்கள்

நீங்கள் ஏன் Exponet ஐ தெரிவுசெய்ய வேண்டும்

- ஆகக் கூடுதலான விசாக்களைப் பெற்றுக்கொடுத்து சாதனைபடைத்துக் கொண்டிருப்பதால்
- பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்கள் VISA தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன
- 4 வருட visa உத்தரவாதம்
- ஒரு மாதத்தில் பயணம்
- 20 மணித்தியாலம் வேலை செய்யும் வசதி(per week)
- GCE(O/L) தகமை போதுமானது
- இலவச IELTS வகுப்புகள்

HOTLINE : 021 7538395 / 021 2227230
011 7 555511/14

EXPONET Overseas Consultants
379 - ½, Galle Road, Colombo 06.
197,Arasady Road, Jaffna.
E-mail:nimal@expogroup.lk
Web:www.expogroup.lk


# இந்தியாவின் பந்து வீச்சு வேதனையளிக்கிறது

இங்கிலாந்துக்கெதிரான டெஸ்ட் தொடரில் இந்திய அணி சொந்த மண்ணில் மோசமான தோல்வியை சந்தித்து தொடரை இழந்தது.

இது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் வாசிம் அக்ரம் கூறுகையில், உண்மையை சொல்வது என்றால், எதிர்கால இந்திய பந்து வீச்சு பிரகாசமின்றி இருப்பது போல் தெரிகிறது.

இங்கிலாந்துக்கு எதிரான முதல் 3 டெஸ்டில் சஹீர்கானின் பந்து வீச்சு சராசரி அளவிலேயே இருந்ததால் கடைசி டெஸ்டில் நீக்கப்பட்டார்.

இஷாந்த் ஷர்மா அவ்வப்போது நன்றாக செயல்படுகிறார். ஆனால் சர்வதேச கிரிக்கெட்டில் 5 ஆண்டுகளாக இருக்கும் ஒருவர், தொடர்ந்து நிலையாக பந்து வீசி திறமையை வெளிப்படுத்த வேண்டியது அவசியம்.

எங்களது பந்துவீச்சாளர் முகமது சமி போன்று இவரும் திறமையை வீணடித்து விடுவாரோ என்று பயப்படுகிறேன். என்றார்.


**கார் விற்பனைக்கு**

toyata camy car விற்பனைக் குண்டு HD . XXXX தொடரிலக்கமுடைய (Allow wheel revers camara DVDPlayear automatic)மேலதிகவிபரங்களுக்கு (சனி ஞாயிறு தினங்களில் மட்டும் பார்வையிடலாம்)
T:P-0773747825 ,0212228984



**வெளி வந்துவிட்டது**

- Little Atlas
திரு . சி . கமலேஸ்வரன் புவியியலை கற்கும் சகல மாணவர்களுக்கு மானது
- புவியியல் -தரம் - 6-10
சகல பிரதான புத்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள் ளலாம்



**இந்திய சாஸ்திரியார் வருகை**

யாழ்ப்பாணப் பண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்
ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
**S.N. குமாரசாமி**
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா?வெளிநாடு செல்லத் தடையா?, மனஉளைச்சலா ?
எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்
(காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை)
பீப்பிள்ஸ் இன் (PEOPLE INN)
இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)
T.P: 072 6816681, 0726816691 (20772) (15-14)



**காணி விற்பனைக்கு**

புத்தூர் ஊறணியில் 193 நெற்பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (தரகர் தேவையில்லை)
தொடர்பு
0774833931 (27124X14)



**விசேட வழிகாட்டல் வகுப்பு**

ஜனவரி 27 ஆம் திகதி நடைபெறவுள்ள முகாமைத்துவ உதவியாளர் போட்டிப்பரீட்சைக்கான வழிகாட்டல்வகுப்பு

ஜனவரி- 06,12,19 ஆம் திகதிகளில் காலை 9.00மணி-6.00மணி வரை

விரிவுரையாளர்கள்
P.உமாசங்கர்
P.கமல்தாசன்

நாவலர், ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
T.P.0774696695



**புதிய முகவரி**
**ஹரன் ஜுவல்லர்ஸ்**
நகை - வைர வியாபாரிகள்
இல: 217, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021-2226083,
0714182480



**IDM Nations Campus**
Jaffna Branch #216, Navalar Road, Jaffna
Managed by Aharam Solution (Pvt) Ltd

After O/L, What Next? (பரீட்சை பெறுபேறுகள் வெளியாகும் வரை காத்திருக்கத் தேவையில்லை. இன்றே விரையுங்கள் ஒரு சர்வதேச தரம் வாய்ந்த கற்கை நெறியினை எம்முடன் இணைந்து பூர்த்தியாக்கிடுங்கள்)

* International Certificate in ICT - computing (4 months)
* International Certificate in Business Management(4 mon)

2ம் மற்றும் 5ம் திகதிகளில் காலை 9.00 மணிக்கு புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

8 GB pen drive Free for first 20 registrations

Tel : 021 222 9901 / Mobile : 0775632056

அத்துடன் இயேசு பிறப்பை முன்னிட்டு நாம் இன்று காலை 10.00 மணிக்கு நாவலர் வீதியில் உள்ள TCT மண்டபத்தில் Christmas Cheers! நிகழ்ச்சியினை கொண்டாட இருப்பதால் உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



அன்னை மடியில்: - 01.01.1929
இறைவன் அடியில்:- 05.01.2012
**அமரர்**
**வல்லிபுரம் கனகசிங்கம்**
(முன்னாள் நேரக்கணிப்பாளர் காங்கேசன்துறை, சிமெந்து தொழிற்சாலை)
திதி: (23.12.2012)

எம் குடும்பத் தலைவரே!
காலம் ஓடிவிட்டதே உங்களைப் பிரிந்து
ஆண்டொன்று ஆகிவிட்டதே
நம்பமுடியவில்லை — எங்களால்
எம்கூட நீர் இல்லை என்பதை
ஆனாலும் என்றும் உம்பிரிவை மறவாத நினைவுகளுடன்....

புலமை கல்வி நிறுவனம்,
இணுவில் வீதி, மானிப்பாய். (26935)(2.6)

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


# Vajira House

## 97 Years 4 Generations

97 ஆண்டுகள் வரலாற்றுடன் 4 தலைமுறைகளாக சேவையாற்றி வருகின்ற வஜிர ஹவுஸ் நிறுவனத்தினரின் மகோன்னதம் பல தலைமுறைகளாகத் தொடர்கின்றது

வஜிர ஹவுஸ் நிறுவனத்தினர் தற்போது வெளிநாட்டில் தொழில்புரிபவர்களுக்கு இலங்கைக்கு வருகை தரவேண்டிய தேவையின்றி வெளிநாட்டில் இருந்துகொண்டே பணத்தை செலுத்தி தமக்கென ஆடம்பரமான ஒரு வீட்டை குறைந்த செலவில் நிர்மாணித்து குடிபுகுவதற்கு இலகுவாக மாதாந்த தவணைக் கொடுப்பனவு முறையை அறிமுகப்படுத்தியுள்ளது.

ஒரு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்துவதன் மூலம், ரூபா 20000 ஐ செலுத்தி, எங்கள் பொறியியளாளரை உங்கள் காணிக்கு வரவழைத்து, ஆடம்பரமான வீட்டின் பணியை ஆரம்பிக்க இப்பொழுதே அழையுங்கள்.

40 லட்சம்



10 லட்சம் செலுத்தி வேலையை ஆரம்பியுங்கள்

**Ruban**
**0716500800**
24 Hours Services
**Vajira House**
Housing Specialist
No 04, Vajira Road,
Bambalapitiya, Colombo 04
www.vajirahouse.net

48 லட்சம்



12 லட்சம் செலுத்தி வேலையை ஆரம்பியுங்கள்

64 லட்சம்



16 லட்சம் செலுத்தி வேலையை ஆரம்பியுங்கள்

92 லட்சம்



23 லட்சம் செலுத்தி வேலையை ஆரம்பியுங்கள்

120 லட்சம்
Apartments



30 லட்சம் செலுத்தி வேலையை ஆரம்பியுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.12.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

















# சூரியகாந்தி

உதயன்
ஞாயிறு சிறப்பம்சம்
01

உதயன் 23 டிசெம்பர் 2012 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள்: இருபத்துநான்கு


# உலகம் உயிரோடுதான்...

ஔண்யன்

இரத்தம் குடிக்கிற பேயொண்டு சுடலைக்குள்ள இருக்கு என்ற வதந்தி ஊருக்குள் பரவத்தொடங்கியிருந்தது. அதை மறு கேள்வியின்றி எல்லோருமே நம்பத் தொடங்கியிருந்தனர். ஆனால் ஒருவன் மட்டும் நம்பவேயில்லை. பேயாவது, பிசாசாவது. எல்லாம் கட்டுக்கதை என்று இந்த வதந்திகளை அவன் மறுதலித்தான். எனினும் அவனைச் சூழ இருந்தவர்கள் எல்லோரும் பேய் பற்றிய கதைகளையே உலவவிட்டபடி இருந்தனர். அதனை நம்பமறுத்தவனை பைத்தியக்காரன் என்று கேலிசெய்தனர். அவனுடன் வாக்குவாதத்திலும் இறங்கியிருந்தனர். அந்த வாக்குவாதம் கடைசியில் ஒரு பந்தயம் வரை சென்றது.

வரும் அமாவாசையன்று நள்ளிரவில் சுடலைக்கு நீ தனியனாகப் போகவேண்டும். அங்குள்ள மரத்தில் நாங்கள் தரும் ஆணியை அடித்துவிட்டு நீ திரும்ப வருவாயானால் பேய் இல்லையென்ற உன்கூற்றை ஏற்றுக்கொள்கிறோம் என்பதே அந்தப் பந்தயம். அதனைப் பேயை நம்பமறுத்தவனும் ஒத்துக்கொண்டான். அமாவாசை நெருங்க நெருங்க பேயைப்பற்றிய பயமூட்டல்கள் அவனுக்கு வந்தபடியே இருந்தன. ஒரே விஷயத்தைத் திரும்பத் திரும்ப சொல்வதன் மூலம் பொய்யையும் உண்மையாக்க முடியும். கரைப்பார் கரைக்க அவனது பயமற்ற மனதிலும் ஒருவேளை பேய் என்பது உண்மையாக இருக்குமோ? என்ற சந்தேகம் தொற்றியது. எனினும் அதனை வெளியில் காட்டிக் கொள்ளவில்லை

அமாவாசையும் வந்தது. நள்ளிரவு. ஊரவர்கள் கொடுத்த ஆணியுடனும், சுத்தியலுடனும் சுடலைக்குப்போனான். அமாவாசை என்பதால் கும்மிருட்டாக இருந்தது. காற்று வேறு ஊளையிடுவது போன்று பயங்கரமாக வீசிக்கொண்டிருந்தது. பயத்தில் மனது நடுங்கினாலும், ஒருவாறு மரத்தைக் கண்டுபிடித்து, ஆணியை அடித்துவிட்டான். சரி வந்த வேலை முடிந்தது. இனி போகலாம் என்ற நினைப்புடன் எழுந்தான். ஆனால் அவனால் இரண்டு அடிக்கு மேல் வைக்க முடியவில்லை. ஏதோ ஒன்று அவனது வேட்டியைப் பிடித்து இழுத்தது. அவ்வளவுதான். பேய்தான் தன்னைப் பிடித்து இழுக்கிறது என்று நினைத்து அங்கேயே உயிரை விட்டுவிட்டான். அடுத்தநாள் சுடலைக்குச் சென்றவர்கள் அவனது சடலத்தைக் கண்டெடுத்தார்கள். அங்கு அவன் ஆணியை அடிக்கும் போது பதற்றத்தில் தனது வேட்டியையும் சேர்த்து மரத்தோடு அடித்திருப்பதைக் கண்டார்கள். அதனாலேயே வேட்டியை பேய்தான் பிடித்திழுக்கிறதோ என்று பயந்து வீணாக இறந்துவிட்டான்.

இப்படித்தான் சில விடயங்களை நம்பமுடியாததாக இருந்தாலும், பலர் அதையே திரும்பத் திரும்ப சொல்வதன் மூலம் உண்மையை மறந்து போகச் செய்து, தாம் முன்னிறுத்திய கருத்தையே எம்மையறியாமல் நம்பவைத்துவிடுவார்கள். மாயன் நாள்காட்டியின் முடிவோடு உலகத்தின் கதையும் முடியப்போகிறது என்ற வதந்தியும் இப்படித்தான் நம்பும் வகையில் பரப்பப்பட்டு, உலகத்தவர்களை மரணபீதியை கடந்த சில மாதங்களாகவே உண்டுபண்ணியிருந்தது. ஆனால் என்ன வேடிக்கையென்றால், உலகம் இந்த வதந்திகளை தூக்கிக் குப்பைத்தொட்டியில் வீசிவிட்டு, தன்பாட்டுக்கு சூரியக்காதலனை சுற்றி சுற்றி வந்து கொண்டிருக்கிறது.


★★★

அந்தக்கடையில் வழமையாக எப்போதாவதுதான் வாடிக்கையாளர்கள் வருவதுண்டு. ஆனால் அன்றைக்கு நாலை மட்டும் தேர்த்திருவிழா போல




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலவளம் எனக்கு கடல்வளம் உனக்கு




■சொய்சா

போர் முடிவுற்று நான்கு வருடங்கள் ஆகின்ற நிலையில் ஒரு புறம் வடபகுதியின் நிலம் சார்ந்த வளங்கள் கேட்டுக் கேள்வியின்றி பல்வேறு வழிகளில் அரசபடைகளின் உதவியுடன் சிறிலங்கா அரசினால் திட்டமிட்ட ரீதியில் ஆணையிடப்பட்டுக் கொண்டிருக்க, இன்னொரு புறத்தில் வடபகுதி கடல்வளங்கள் இந்திய மீனவர்களால் தொடர்ச்சியாக பிழிந்து எடுக்கப்பட்டு வருகின்றன. இதனை எதிர்த்து பல தடவைகள் பல்வேறு மட்டங்களில் வடபகுதி மீனவர்களால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும் எதுவிதமான விமோசனமும் இதுவரை கிடைக்கவில்லை. இந்த மாத முற்பகுதியில் வடபகுதி மீனவர்கள் மீண்டும் ஒருமுறை இந்திய மீனவர் ஊடுருவலைத் தடுத்து நிறுத்தக்கோரி அமைதி வழியில் எதிர்ப்புப் பேரணி ஒன்றை நடத்தியிருந்தனர். இதனைத் தொடர்ந்து சகாதேவன் என்ற இளைஞர் இந்திய மீனவர்களும், வடபகுதி சில மீனவர்களும் வடபகுதி கடற்பரப்பில் மேற்கொண்டு வரும் இழுவைமடித் தொழிலை நிறுத்தக் கோரி சாகும் வரையிலான உண்ணாவிரதம் ஒன்றையும் மேற்கொண்டிருந்தார். உரிய மட்டத்தில் நடவடிக்கை எடுப்பதாக உயரதிகாரிகள் வழங்கிய வழமையான வாக்குறுதிகளையடுத்து உண்ணாவிரதமும் கைவிடப்பட்டது. இக்காலப் பகுதியிலேயே கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சர் யாழ்.குடாநாட்டுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஐஸ் தொழிற்சாலை ஒன்றைத் திறந்து வைத்த நிகழ்வும் இடம்பெற்றிருந்தது.

இவரது விஜயத்தின் போது வடபகுதி மீனவர்கள் எதிர்நோக்குகின்ற மிகப் பெரிய நெருக்கடிகளுள் ஒன்றான இந்திய மீனவர்களின் ஊடுருவல் தொடர்பான விடயங்கள் பற்றி இவர் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. ஆயினும் இவர் திறப்பு விழா நடத்திக் கொண்டிருக்க வடபகுதிக்கடலில் இந்திய இழுவைப் படகுகள் பெருமளவில் சுதந்திரமாக தமது நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மீனவர் விவகாரம் தொடர்பாக கடந்த வாரத்தில் காலியில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றிய இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் "ஒரு நாட்டின் எல்லையை மீறிப்போய் மீன்பிடித்தல் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்துக்கு கேடாகவும், கடற்றொழில் செய்யும் சமூகத்தினிடையே பதற்றத்தை தோற்றுவிப்பதாகவும் உள்ளது எனவும், தென்னிந்திய மீனவர்கள் இலங்கை கடலில் மீன்பிடிப்பது இலங்கை-இந்திய அரசுகள் எதிர்கொள்ளும் பிரச்சினையாகவுள்ளது" எனவும் குறிப்பிட்டிருந்தார்.

அடாத்தாக எல்லைமீறி-பலம்வாய்ந்த மீனவர் அணியானது பெரும் படகுகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவது உள்ளூர் மீனவர்களின், அதாவது வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரத்துக்கு கேடாகவும் பதற்றத்தை தோற்றுவிப்பதாலும் மீனவர்கள் ஊடுருவுவது நிறுத்தப்பட வேண்டும் என்ற அவா அவரது கருத்திலிருந்து தெளிவாகிறது. இது வரவேற்கத்தக்கது. இவ்வாறு கடலில் நடக்கும் தவறுகள் நிலத்தில் நடக்கும் போதும் இக்கருத்து பொருந்தும். அதிகரித்துள்ள இந்திய மீனவர்களின் பிரசன்னம் மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதித்துள்ளமை போன்று, வடக்கில் நிலப் பகுதியில் அதிகரித்துள்ள இராணுவ பிரசன்னம், நில அபகரிப்பு, திட்டமிட்ட குடியேற்றங்கள், இடம்பெயர்ந்த மக்களை தமது சொந்த இடங்களில் மீளக்குடியமரவிடாது பாரம்பரிய கிராமங்களை அபகரித்தல், வலுக்குன்றிப் போயுள்ள மக்களின் மனம் புண்படும் வண்ணம் அவர்களுடைய பகுதிகளில் புத்தர் சிலைகள், விகாரைகள் மனம்போன போக்கில் அமைத்தல் போன்ற நடவடிக்கைகளும் வடபகுதி மக்கள் வாழ்வாதாரத்துக்கு கேடாகவும் இந்தப் பகுதி மக்களின் சமூகத்தினரிடையே பதற்றத்தைத் தோற்றுவித்துள்ளதையும் நினைவிற் கொள்ளுதல் பொருந்தும். இந்திய மீனவர்கள் அத்துமீறுவது தவறு எனில் மேற்குறித்த வடபகுதி நிலப் பகுதியில் அரசு மேற்கொள்ளும் தமிழ் மக்கள் விருப்புக்கு மாறான நடவடிக்கைகளும் தவறே, தப்பும் கூட.

கடந்த வாரத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அவர்கள் நாடாளுமன்றில் ஆற்றிய நீண்ட உரையில் வடகிழக்குப் பகுதியில் போரின் பின்னர் அரசு மேற்கொண்டு வருகின்ற நடவடிக்கைகள், முக்கியமாக முப்படைகளின் பிரசன்னமும் நில அபகரிப்பு, கிராமங்கள் பறிப்பு, முகாம்களின் விஸ்தரிப்பு, சிவில் நிர்வாகத்தில் படையினரின் அநாவசிய தலையீடுகள் தொடர்பான நீண்ட பட்டியல் ஒன்றை வெளியிட்டு தமது எதிர்ப்பினையும் ஆதங்கத்தையும் தெரிவித்திருந்தமையும் இங்கு நோக்கத்தக்கது. போரினால் சீரழிந்த தமிழ்ச் சமூகம் போரின் பின்னர் புதிய பாணியில் போர்க்களத்தைவிட மோசமான முறையில் சீரழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒருபுறம் கடல் வளங்களானவை இந்திய மீனவர்களால் சூறையாடப்பட்டு மீனவ சமூகம் சீரழிந்து போக, மறு புறத்தில் நிலவளமானது பல்வேறு கோணங்களில் இலங்கை அரசினால் சூறையாடப்பட்டு இங்கு வாழும் மக்களின் வாழ்வாதாரமும் அவர்களது தனித்துவமும் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.



மேலும், இதே காலப் பகுதியில், புதுடில்லியில் பாதுகாப்பு கற்கைகள் மற்றும் ஆய்வு நிறுவனத்தின் பணிப்பாளராக உள்ள கலாநிதி அரவிந்த குப்தா அவர்கள் கொழும்பில் நடைபெற்ற வேறு ஒரு கருத்தரங்கின் போது கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையில் "மாகாணங்களுக்கு கூடுதல் அதிகாரங்கள் பகிரப்படுவதும், தமிழர்களின் அபிலாஷைகளுக்கு இணக்கமான தீர்வு காணப்படுவதும் பிராந்தியத்தின் நீண்ட கால உறுதித் தன்மைக்கு மிக முக்கியமானவை" எனக் குறிப்பிட்டிருந்தார். போரின் பின்னரான காலப் பகுதியில் தமிழர் பகுதிகளில் அம்மக்களின் அபிலாஷைகள், தனித்துவம் என்பன பேணப்படவில்லை என்பதையும், இந்தப் பகுதியில் பதற்றம் நீடித்துள்ளதையும் கருத்திற் கொண்டதாகவே அவரது கூற்று அமைந்துள்ளது.

பாதுகாப்புச் செயலாளர் கூறுவது போல, தென்னிந்திய மீனவர்கள் வடபகுதிக் கடலில் மேற்கொள்ளும் வளச்சூறையாடல் நடவடிக்கைகளாலும் சம்பந்தன் அவர்கள் குறிப்பிடுவது போல வடகிழக்குப் பகுதிகளில் அரசபடையினர் மேற்கொண்டு வருகின்ற நிலம்சார் நடவடிக்கைகளாலும் தமிழ் மக்களே மிக மோசமான நெருக்கடிகளுக்குள்ளாகி வருகின்றனர். போர்க் காலத்தைக் காட்டிலும் போரற்ற காலங்களில் இது தீவிரமடைந்திருக்கிறது. இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு மேற்கொள்ளும் முயற்சிகள் அனைத்தும் பயனற்றுப் போய்க் கொண்டிருக்கிறது. இது மேலும் தீவிரமடையின் தமிழர் இருப்பும் கேள்விக்குறியாகவே அமையும் எனலாம்.

## திசைதிரும்பும் இந்திய மீனவர் பிரச்சினை


வடபகுதியில் போரின் பின்னரான காலப் பகுதியில் இந்திய மீனவர் தொடர்பான பிரச்சினைகள் புதிய திசை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாகவே எண்ணத் தோன்றுகின்றது. முன்னர் கச்சதீவைச் சுற்றுக் கடலில் மட்டும் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த தென்னிந்திய மீனவர் இன்று மன்னார் குடா முதல் முல்லைத்தீவு வரை தமது நடவடிக்கைகளை விஸ்தரித்துள்ளனர். கடந்த வாரம் திருகோணமலை வரை கூட இவர்கள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டிருந்தபோது கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் சடுதியாக விடுவிக்கப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. சுமார் மூவாயிரத்துக்கும் அதிகமான இழுவைப் படகுகள் தமிழ் நாட்டின் கரையோரங்களில் உள்ளன. ஆரம்ப காலங்களில் ஒற்றை இழுவைமடிகளை பயன்படுத்தியிருந்த இவர்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> “ பாதுகாப்புச் செயலாளர் கூறுவது போல, தென்னிந்திய மீனவர்கள் வடபகுதிக் கடலில் மேற்கொள்ளும் வளச்சூறையாடல் நடவடிக்கைகளாலும் சம்பந்தன் அவர்கள் குறிப்பிடுவது போல வடகிழக்குப் பகுதிகளில் அரசபடையினர் மேற்கொண்டு வருகின்ற நிலம்சார் நடவடிக்கைகளாலும் தமிழ் மக்களே மிக மோசமான நெருக்கடிகளுக்குள்ளாகி வருகின்றனர். போர்க் காலத்தைக் காட்டிலும் போரற்ற காலங்களில் இது தீவிரமடைந்திருக்கிறது.





கள் இன்று இரட்டை மடிகளை (PAIR DRAWL NET) (அதாவது இரு படகுகள் மூலம் அகன்ற மடியினை பரந்த பிரதேசத்தினை வாரி இழுக்க பயன்படுவது) பயன்படுத்துகின்றனர். அடித்தளம் முதல் மேற்பரப்பு வரையுள்ள மீன்களை வாரி அள்ளக்கூடியதாக அவை காணப்படுவதனால் பெறுமதி மிக்க கடலுணவுகளான இறால், கடலட்டை, சங்கு, நண்டு ஆகியனவும் அறக்குளா, பாரை, சீலா போன்ற பெறுமதி மிக்க மீன்களும் சிறிய ரகமீன் வகைகளும் அவர்களால் அள்ளிச் செல்லப்படுகின்றன. தினமும் 1000 முதல் 1500 வரையிலான படகுகள் தொழிலில் ஈடுபடுவதனால் தினமும் பலமில்லியன் ரூபா பெறுமதியான வளங்களை வடபகுதியிலிருந்து இழக்க நேரிடுகிறது.

இலங்கை இந்தியாவுக்கிடையிலான ஆள்புல கடல் எல்லைக்கோடு (Indo-Srilankan Marutime Boundary) என்பது இன்று தேசப்படத்தில் மட்டுமே உள்ளது. நிஜத்தில் இன்று கடல் எல்லை கிடையாது. வடபகுதி கடலோரப் பகுதியே அதன் எல்லை என்ற அளவுக்கு மீனவர்களின் அத்துமீறல் உள்ளது. வாரத்தில் மூன்று தினங்கள் வருகைதந்த மீனவர்கள் இன்று வாரம் முழுவதும் வந்து போவதுடன் புதிய தங்கூசி வலைகளையும் பயன்படுத்தி வருதாகவும் மீனவர்கள் கூறுகின்றனர். இதுவும் தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணமே என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை கடற்படையினரால் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு இன்று நிலைமை மாறியுள்ளது. கடலில் கடற்படையினர் மீனவர்களுக்கு எதிராக 'சத்தவெடி' கூட வைக்கக்கூடாது என உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும் தகவல்கள் வந்துள்ளன. அதனால்தான் கடற்படையினர் கற்களால் எறிந்து தம்மைத் தாக்குவதாக இந்திய மீனவர்கள் அங்கு புகார்கள் செய்வதைப் பத்திரிகைகள் வாயிலாக அறிய முடிகிறது. ஒருவகையில் அவர்களுக்கு மீன்பிடிக்க பூரண சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளதாகவே தோன்றுகிறது.

மத்திய-மாநில அரசுகளுக்கு இந்திய மீனவர்கள் எதுவரை ஊடுருவுகின்றனர், எவ்வளவு மீன்களைப் பிடிக்கின்றனர், படகுகளின் எண்ணிக்கை, பயன்படுத்தும் வலைகள், அவைதடை செய்யப்பட்டவைதான் என்ற தகவல்கள் முழுவதும் தெரியாத ஒன்றல்ல. வடபகுதி மீனவர்கள் இதனால் எதிர்கொள்ளும் பாதிப்புக்கள் பற்றியும் தெரியாததல்ல. ஆயினும் எல்லைகளை மீறி இவ்வாறு மீனவர்களை அனுமதிப்பது ஏன்? என்பதுதான் விளங்கவில்லை. இழுவை மடிகளைத் தடைசெய்து இந்திய மீனவர்கள் எல்லைதாண்டிச் செல்வதை தடைசெய்வதனால் பெருந்தொகையான மீனவக் குடும்பங்கள் பாதிப்புக்குள்ளாகுவதும், இதனால் அரசியற் கொந்தளிப்புக்கள் உருவாகும் வாய்ப்புக்கள் இருப்பதும் மத்திய மாநில அரசுகளுக்கு புரியாததல்ல. நஷ்ட ஈடுகளை வழங்கி இழுவைப் படகுத் தொழிலை வாபஸ் பெறச்செய்தல், படுப்பு வலைகள், தூண்டில் வலைகளைப் பயன்படுத்துதல், ஆழ் கடலில் மீன்பிடியில் ஈடுபடுதல் போன்ற மாற்றுத் தொழில் வாய்ப்புக்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்ட போதிலும் நடைமுறையில் எவையும் இதுவரை சாத்தியமாகாத நிலையே அங்கு தொடர்கிறது. இலங்கை அரசின் மீது அழுத்தும் பிரயோகித்து இந்திய மீனவர்களைத் தொடர்ச்சியாக வடபகுதிக் கடலில் மீன்பிடிக்க ஊக்குவிப்பது போலவே இந்திய மீனவர்களின் அண்மைக்கால நடவடிக்கைகள் அமைந்துள்ளன என சந்தேகிக்க வேண்டியுள்ளது.

மேலும், இந்து சமுத்திரத்தில் சீனாவின் முத்துமாலைத் தந்திரோபாய கடல் ஆதிக்கமும், போரின் பின்னரான காலப் பகுதிகளில் சீனாவுடன் இலங்கை கொண்டுள்ள தீவிர நெருக்கமும் படிப்படியாக இந்தியாவை ஓரங்கட்டி வரும் போக்குகளும் சீனாவின் இந்து சமுத்திர கடலாதிக்கப் போட்டிக்கு வலுச்சேர்ப்பதாகவே அமைந்துள்ளன. புவியியல் ரீதியில் இலங்கை-இந்திய தூரம் மிகக் குறுகியதாக இருப்பினும், சார்புத் தூரமானது இன்று மிகத் தொலைவிலேயே சென்றுள்ளது. அதேவேளை சீனாவுடனான புவியியல் தூரம்-நீண்டதாயினும், அதன் சார்புத் தூரமானது மிக கிட்ட நெருங்கியுள்ளது. இது இந்தியாவுக்கு எரிச்சலை ஊட்டுவதுடன் புலிகளின் வெளியேற்றத்தின் பின்னரான வடபகுதியில் இலங்கையின் அதிகரித்த இராணுவப் பிரசன்னம், சீனாவுடனான நெருக்கம் போன்ற காரணிகள் இந்தியாவுக்கு தென்கோடியில் சற்று பீதியையும் ஏற்படுத்தியிருப்பது போலவே தோன்றுகிறது. இந்தப் பின்னணியிலேயே வடபகுதிக் கடலில் இந்திய மீனவர்களின் அதிகரித்த பிரசன்னத்தையும் பார்க்கவேண்டியிருக்கிறது. இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் காலி கருத்தரங்கில் சீனாவின் இந்து சமுத்திர கடலாதிக்க நிலைமைகளை நியாயப்படுத்தி பேசியிருப்பதும் இந்தியாவுக்கு எரிச்சலை ஊட்டியிருக்கலாம்.

பொதுவாக இந்து சமுத்திரத்தில் இந்தியாவைச் சூழவுள்ள கடல் எல்லைகளைக் கொண்ட நாடுகள் அனைத்தும் இந்தியாவுக்கு சார்பான நாடுகள் அல்ல. அவைகள் சீனா சார்புடைய நாடுகளாக இருப்பதும் இங்கு கவனிக்கத்தக்கது. தென் கோடியில் இந்தியாவுக்கு ஆதரவான ஒரேயொரு தளம் இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதியும், அங்கு வாழும் தமிழ் மக்களுமே. ஆயினும், இது அரசற்ற ஒரு தேசியம் என்பதும், வன்னிப் போரின் பின் இதுவும் இழக்கப்பட்டு விட்டதாகவுமே தோன்றுகிறது. இதற்கு இந்தியாவே பொறுப்பு. "கிணறுவெட்ட பூதம் புறப்பட்டது போல" புலிகளை இந்தியா வெளியேற்ற உதவ அவ்விடத்தில் 'ட்ராகன்' குடிகொண்டுள்ளது என்பதே இன்றைய யதார்த்த நிலையாகும். எனினும் இன்று இந்து சமுத்திரத்தில் சீனா விரித்துள்ள சுருக்கு வலைக்குள் சிக்கி திமிறுகின்ற சுறாவின் நிலையை ஒத்ததாகவே இந்தியாவின் நிலை உள்ளது போல் தெரிகிறது.

**மீனவர் பிரச்சினையில் தமிழ்ப் பிரதிநிதிகளின் பங்களிப்பு**

கடந்த வாரத்தில் சம்பந்தன் நாடாளுமன்றத்தில் ஆற்றிய நீண்ட உரையில் வடபகுதியில் படையினரின் உதவியுடன் அரசு மேற்கொண்டு வருகின்ற பல்வேறு ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் தொடர்பான நீண்டதொரு பட்டியலை வெளியிட்டிருந்தார். எனினும் கடலில் இடம்பெறும் அசம்பாவிதங்கள், முக்கியமாக இந்திய மீனவர் தொடர்பான பிரச்சினை தொடர்பாக எவ்வித கருத்துக்களையும் அவர் முன்வைக்கவில்லை. உரையின் போது புலிகளைக் கண்டபடி விமர்சித்த நேரத்தில் வடபுல மீனவர்கள் பிரச்சினைகள் பற்றியும் பட்டியலிட்டிருப்பின் அது பயனுள்ளதாக அமைந்திருக்கும். பொதுவாக தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முக்கியமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இது விடயத்தில் மௌன விரதத்தையே கடைப்பிடித்து வருவது போல தெரிகிறது. இந்திய மத்திய மாநில அரசுகளின் அழுத்தமோ அல்லது தொப்புள் கொடி உறவு வேரோடு பிடுங்கப்பட்டு விடும் என்ற அச்சமோ அல்லது தமக்கு வேண்டாத துறை என்ற புறக்கணிப்போ, தேவையின்மையோ இவைகள் என்று கடற்றொழிலாளர்கள் மத்தியில நிலவுகின்ற கேள்விகளாகவுள்ளன. இந்த விடயத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை இவர்கள் எடுப்பது அவசியம். இல்லையேல் தேர்தலின் போது தக்க பாடம் படிக்கும் நிலை ஏற்படலாம்.

தடையையும் மீறி வடபகுதியிலுள்ள சில மீனவர்கள் இழுவை மடித் தொழிலைச் செய்வது இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியது அவசியமாகிறது. சுமார் 150 இற்கும் மேற்பட்ட இழுவைப்படகுகள், இந்திய இழுவைப் படகுகளுடன் சேர்ந்து வளச்சுரண்டலில் ஈடுபடுவதை வடபகுதி சிற்றளவு மீன்பிடியாளர்கள் தொடர்ந்து எதிர்த்தே வருகின்றனர். இந்திய மீனவர்கள் இதனை நிறுத்தினாலே ஒழிய தாமும் நிறுத்தப்போவதில்லை என இவர்கள் குதர்க்கம் பேசி வருவது நியாயமல்ல. இங்குள்ள ஒரு சில அரசியல்வாதிகள் - தேர்தல் காலங்களில் இழுவைமடித் தொழிலுக்கு அனுமதி அளிக்க வழி சமைப்பதும், பின்னர் அதனை நிறுத்துவதும் வாடிக்கையாக்கியுள்ளது. இத்தகைய செயற்பாட்டை அவர்கள் நிறுத்திக் கொள்வது நல்லது.

ஒட்டு மொத்தத்தில் ஏற்கனவே இலகுவாக தீர்த்து வைக்கப்பட்டிருக்க வேண்டிய இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினையானது இன்று ஆழ வேரூன்றி விட்ட ஒரு பிரச்சினையாக வளர்ந்துள்ளமைக்கு வடபகுதியில் இன்று நிலவும் அரசின் ஸ்திரமற்ற நிலையும், இலங்கையின் முப்படைகளின் அதிகரித்த பிரசன்னமும், இதே வேளை சீன- இலங்கை மற்றும் இந்திய- இலங்கை உறவுகளில் ஏற்பட்ட மாற்றங்களும் சீனாவின் இந்து சமுத்திர கடலாதிக்க விஸ்தரிப்பு நடவடிக்கைகளும் பிரதான காரணிகளாகவுள்ளன. இந்து சமுத்திர கடலாதிக்கப் போட்டியுடன் மீனவர்கள் பிரச்சினையும் ஒன்றாகக் கலந்துவிட்ட நிலையாகவே இன்று மாறியுள்ளது. ஆகவே வடக்கில் தமிழ் மக்களின் தனித்துவம் மற்றும் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதான அரசியல் தீர்வும், ஸ்திரமான அரசியல் சூழலும் நிலவாதவரைஇந்திய இலங்கை மீனவர் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பது சாத்தியமில்லை. எவ்வாறாயினும் இன்று கடலாலும் நிலத்தாலும் பாதிக்கப்பட்டு வருவது வடபகுதி மக்களே என்பது கசப்பான உண்மையாகும். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவு காணாதீர்கள்

விகேளம்

“கைதான நான்கு மாணவர்களையும் விடுவித்தால்தான் பல்கலைக்கழகத்தை மீள ஆரம்பிப்போம் என்பீர்களானால் அது நடக்காது. கைதான மாணவர்கள் இன்றும் பிரபாகரன் இருக்கிறார் என்று வாதிடுகின்றனர். அவர்களை அவரே காப்பாற்றுவார்”

யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவப் பிரதிநிதிகள், கைதான மாணவர்களது பெற்றோர்கள், மத்தியில் இறுமாப்புடன் பேசிய விடயம் இது.



கடந்த நவம்பர் மாதம் 27 ஆம், 28ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழகம் இராணுவ மயமாகி இருந்தது. 27ஆம் திகதி கார்த்திகை தீபத் திருநாள் என்பதாலும் அன்றே மாவீரர் தினமும் கொண்டாடப்பட்டது என்பதாலும் பல்கலை வளாகத்தை இராணுவம் முற்றுகையிட்டிருந்தது.

பல்கலைக்கழக மாணவர்கள் மாவீரர் தினத்தைக் கொண்டாடிவிடக் கூடாது என்பதற்காக அவர்கள் முழு முயற்சி எடுத்திருந்தனர். இராணுவப் புலனாய்வாளர்களின் வெளிப்படையான அச்சுறுத்தல்கள் மத்தியிலும் மாணவர்கள் போரில் இறந்து போன தமது உறவுகளுக்காக அஞ்சலிக்க வேண்டிய தமது கடமையை நிறுத்திவிடவில்லை.

உணர்வுகளை எப்படித்தான் கட்டுப்படுத்துவது? அவர்கள் அமைதியான முறையில் தமது கடமைகளை நிறைவேற்றி விட்டனர். ஆனாலும் 27ஆம் திகதி இரவு இராணுவத்தினர் சீருடையுடன் பெண்கள் விடுதிக்குள் புகுந்து விரும்பத்தகாத நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இந்த அத்துமீறிய செயற்பாட்டைக் கண்டித்து 28ஆம் திகதி காலை பல்கலை மாணவர்கள் எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தினர். அவர்களது போராட்டம் அமைதியான முறையில் நடைபெற்றது.

பல்கலைக்கழகப் பிரதான வாயிலில் இருந்து விஞ்ஞான பீட வாயில் வரை பேரணியாகச் செல்வது என அவர்கள் திட்டமிட்டிருந்தனர்.

பேரணியாக மாணவர்கள் நகரத் தொடங்கியபோது வளாகத்துக்கு வெளியே குவிக்கப்பட்டிருந்த பொலிஸாரும் புலனாய்வாளர்களும் திடீரென மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தினர்.

### காரணமற்ற கைது

ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்ட அன்று நான்கு மாணவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு ஓரிரு மணித்தியாலயங்களில் விடுதலை செய்யப்பட்டனர். அதன் பிற்பாடு ஸ்ரீரெலோ அலுவலகம் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்பட்டு கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் ஜனமேஜெயந், மருத்துவ பீட மாணவன் சுதர்சன், விஞ்ஞான பீட மாணவர் ஒன்றிய உறுப்பினர் சொலமன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

அன்று நள்ளிரவே பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் தர்சானந் அவரது வீட்டில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

இரண்டு நாள்களின் பின்னர் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் பவானந்தன் விசாரணைக்காக அழைக்கப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டார்.

மருத்துவபீட மாணவன் சுதர்சன் மூன்று நாள்களில் விடுவிக்கப்பட ஏனைய நால்வரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வெலிக்கந்த, கந்தக்கடுவ புனர்வாழ்வு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கைதானவர்களுக்கும் ஸ்ரீரெலோ காரியாலயத்துக்கு பெற்றோல் குண்டு வீசியவர்களுக்கும் முடிச்சுப்போட நினைத்தவர்கள் வெளிப்படையாகவே விடுதலைப்புலிகளின் மாவீரர் நாளைக் கொண்டாடியமைக்காகவே கைதானார்கள் என்ற உண்மையை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

### இராணுவத் தளபதியின் கண்டுபிடிப்பு

புனர்வாழ்வு பெற்றுவரும் நான்கு மாணவர்களும், தலைவர் இருக்கிறார் என வாதிடுகிறார்களாம். வெளிநாட்டில் இருக்கும் புலி ஆதரவாளர்களே இவர்களுக்கு உரமூட்டுகிறார்களாம்.

பிரபாகரன் தலைமையில் மீண்டும் ஒரு போராட்டம் உருவாகும், அதன்மூலம் நாங்கள் தமிழீழம் பெறுவோம் என்று அடாப்பிடியாய் நிற்கிறார்களாம். இதனால் அவர்களை இப்போதைக்கு விடுதலை செய்யமுடியாது என்று அடித்துக் கூறியிருக்கிறார் இராணுவத் தளபதி.

### தாயின் புலம்பல்

நேற்றுமுன்தினம் நடைபெற்ற சந்திப்பில் கைதான மாணவர்களின் பெற்றோர்களும் உடனிருந்தனர். இராணுவத் தளபதியின் கருத்துக்களைக் கேட்டதும் அந்தத் தாய்மார் எழுந்து “ஐயா, எங்கள் பிள்ளைகள் அப்படிச் சொல்லியிருக்க மாட்டார்கள், அவர்கள் அப்படியானவர்கள் அல்லர். அவர்களை விடுதலை செய்துவிடுங்கள்” என்று இரந்துள்ளனர்.

தாய்மாரின் கண்ணீரை நிராகரித்த இராணுவத் தளபதி உங்கள் பிள்ளைகள் இப்படித்தான் பேசுகிறார்கள். நேற்றும் கூட அவர்கள் அதனைத்தான் பேசிக் கொண்டிருந்தார்கள். விரும்பினால் உங்கள் பிள்ளைகளை நீங்கள் சந்திக்கச் செல்லும்போது முடிந்தால் “பிரபாகரன் பற்றியோ விடுதலைப் போராட்டம் பற்றியோ பேசாதிருக்கச் சொல்லுங்கள்” என்றார்.

### அம்மணிக்கு ஒன்றுமே தெரியாது

ஹத்துருசிங்க முன் தாய்மார்கள் கதறி அழுது கொண்டிருந்த போது ஒன்றும் தெரியாதவர் போல் இராணுவத்தினர் கொடுத்த பலகாரத்தை ருசித்துக்கொண்டிருந்தார் யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம்.

தாய் ஒருவர், “எங்கள் பிள்ளைகள் எங்களிடமிருக்கும் போது அவர்களுக்கு நாங்கள் பாதுகாப்பாக இருப்போம், அவர்கள் பல்கலைக்கழகம் செல்லும் போது அவர்களுக்குப் பொறுப்பு பல்கலை நிர்வாகம்தானே” என்று கேள்வி எழுப்பியபோது அவர் கெக்கட்டம் விட்டுச் சிரித்தார்.

தாய்மாரின் அழுகைக்கு மத்தியில் அவரின் சிரிப்பு அனைவருக்கும் சினத்தை ஏற்படுத்தியிருந்தது.

### ஒன்றும் செய்யாத இராணுவம்

27ஆம் திகதி இரவு பெண்கள் விடுதிக்கு இராணுவம் புகுந்தது பிழைதான் என ஏற்றுக்கொள்ளும் இராணுவத் தளபதி, கார்த்திகைத் திருநாளில் வீடுகளின் முன்பும் வியாபார நிலையங்களின் முன்பும் ஏற்றி வைக்கப்பட்டிருந்த தீபங்களை இராணுவத்தினர் சப்பாத்துக் கால்களால் மிதிக்கவோ அவற்றை தூக்கி வீசவோ இல்லை, அது வெறும் கட்டுக்கதை என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

### ஊடகங்களே குழப்புகின்றனவாம்

இராணுவத் தளபதியும் துணைவேந்தரும் ஊடகங்கள் மீது தமது கடுங்கோபங்களை வெளிப்படுத்தினர்.

ஊடகங்கள் சம்பவங்களை வெளிப்படுத்தும் ஆற்றல் கொண்டவை. அவற்றுக்குப் பொறுப்புக் கூற வேண்டிய கடமை சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கடமை.

27ஆம் திகதி பல்கலைக்கழகம் அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருக்கும்போதும் மறுநாள் மாணவர்கள் ஈவிரக்கமின்றி தாக்கப்பட்ட போதும் பல்கலைக்கழகத்தின் அதிகாரிகள் மாயமாகி இருந்தனர். வந்திருந்த பொறுப்பு வாய்ந்த அதிகாரியும் மாணவர்களை காட்டிக் கொடுப்பவராக மாறியிருந்தார். வசந்தி அம்மையார் கடமையில் இருக்கவில்லை. அவரது தொலைபேசியும் கடமையைச் செய்யவில்லை. அதிகாரமற்ற சில உணர்வாளர்கள் மட்டும் தங்களால் இயன்ற காரியங்களைச் செய்து கொண்டிருந்தனர்.

இம்மாத்திரத்தில் ஊடகங்கள் மக்களுக்கும் மாணவர்களுக்கும் ஏற்பட்ட அவலங்களை வெளிப்படுத்தத் தவறவில்லை. அதற்காக அந்த ஊடகங்களை வஞ்சிப்பதில் துணைவேந்தருக்கு என்ன இலாபம் இருக்கிறது?

### தூண்டும் அரசியல்

பல்கலைக்கழக அசம்பாவிதங்களை அடுத்து சம்பந்தப்பட்ட மாணவர்களையும் விரிவுரையாளர்களையும் புலனாய்வுப் பிரிவினர் விசாரிக்க வேண்டும் என தமிழ்த் தேசியத்துக்கு விரோதமான சிலர் குரல் கொடுத்து வருகின்றனர்.

இதற்காக அவர்கள் ஆள் அடையாளப்படுத்தும் பணிகளையும் செய்து வருகின்றனர். இதன் தொடர்ச்சியாகவே மாணவர்களுக்கும் விரிவுரையாளர்களுக்கும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு விசாரணைக்கு வருமாறு அழைப்பு விடுக்கிறது.

### இவர்கள் சொல்வதை இவர்களே கேட்பதில்லை

ஜே.வி.பி. ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் அரசியல் கட்சியாம். அவர்கள் இறந்து போன தமது சொந்தங்களுக்கான தினத்தைக் கொண்டாடுவது தப்பேயில்லையாம். ஆனால் விடுதலைப்புலிகள் பிரிவினைவாத, பயங்கரவாத அரசியல் நடத்தினார்களாம். ஆதலால் அந்த அமைப்பில் இருந்து மாண்டுபோனவர்களுக்கு வணக்கம் செலுத்தவே கூடாதாம்.

கிளிநொச்சிக்கு ஒருதடவை வந்திருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழ் மக்கள் போராட்டத்தில் இறந்த தமது பிள்ளைகளின் படங்களை வீட்டில் வைத்திருப்பதற்குத் தடையில்லை என அறிவித்தார்.

மாறாக இறந்துபோன அந்தப் பிள்ளைகளுக்காகத் தீபம் ஏற்றக் கூடாது என கோத்தபாயவும் யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியும் அறிவித்திருக்கின்றனர்.

### அடக்கினால் வெடிக்கும்

அடக்குமுறைகளில் இருந்தே அதற்கு எதிரான போராட்டமும் உருவாகிறது. நான்கு மாணவர்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பதால் மட்டும் விடுதலை உணர்வை நசுக்கிவிட முடியாது.

தமிழ் மக்கள் இன்றும் தமது உரிமைகளைக் கேட்டு வாதிடுகின்றனர். அவர்கள் எதைக் கேட்கிறார்கள், ஏன் கேட்கிறார்கள் என்பது பற்றிச் சிந்திப்பதை விடுத்து அப்படி எதுவுமே கேட்கக் கூடாது என அடித்து இருத்திவிட முடியும் என அரசு நினைத்தால் அது நாட்டின் அமைதிக்குக் கெடுதலாகவே இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளி வட்டங்களின் முரண்கள்

த.அஜந்தகுமார்



இலக்கிய சிற்றிதழ்கள் வாசகருக்குக் கொடுக்கக் கூடிய பயன் என்ன என்பதில் எப்போதும் ஒரு ஐயப்பாடு தோன்றிக்கொண்டே இருக்கிறது. கடந்த வாரமும் இதே பத்தியில் இந்த விடயம் பற்றி விவாதிக்கப்பட்டிருந்தது.

சிற்றிதழ்கள் சில தம்மைப் பிரபல்யப்படுத்துவதற்கான தந்திரங்களுடனேயே இயங்கிவருகின்றன. அதைப்போல குறுக்கு வழியில் பிரபலம் பெற அல்லது நட்சத்திர அந்தஸ்து அடைய நினைக்கும் சிலரும் சிற்றிதழ்களைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். இதனால் தந்திரங்களும், தம்மைப் பற்றிய விம்பப் பெருப்பிகளும், எதிர் நிலையாளர்கள் பற்றிய வசை பாடல்களும் நிறைந்தவையாக சிற்றிதழ்கள் மாறத் தொடங்கியுள்ளன. இலங்கையில் வெகு அரிதாகவே சிற்றிதழ்கள் வெளிவருகின்ற சூழலில், இத்தகைய போக்கோடு முளைக்கின்ற இதழ்கள், சிற்றிதழ்கள் தேவையா என்ற கேள்வியை முன்நிறுத்துகின்றன.

அண்மையில் ஒரு சிற்றிதழில் எழுத்தாளர் இராகவனின் நேர்காணல் ஒன்றை வாசிக்க முடிந்தது. 'உலகச்சிற்றிதழ்களில் இதுவரை வெளிவராத மிகநீண்ட நேர்காணல்' என்ற உப மகுடத்துடன் அல்லது விளம்பரப் படுத்தலுடன் இரண்டு இதழ்களில் இரு பகுதிகளாக அது வெளிவந்திருந்தது.

நேர்காணல் என்பது அற்புதமான படைப்பு ஒன்றைப் போல புனைவு வெளிக்குள் அழைத்துச் செல்லும் பரவசத்தை எளிதில் தந்து விடுவதில்லை. ஆனால் இராகவனின் நேர்காணல் சரி பிழைகளுக்கு அப்பால் ஒரு புனைவுப் பரவசத்தைக் கொடுப்பதை உணர முடிந்தது. அவரது சிறுகதை ஒன்றைப் படிப்பதைப் போன்றே நேர் காணலையும் புனைவு வெளிகளுக்குள் பயணித்தபடி படிக்க முடிந்தது.

ஒருவரது தனிப்பட்ட நாட்குறிப்பை - தணிக்கை செய்யப்படாத அதன் அந்தரங்கங்களோடு - வாசிப்பதைப் போன்ற ஒரு திறந்த உரையாடலை இராகவன் இந்த நேர்காணலில் வெளிப்படுத்தி உள்ளார்.

★ இராகவனின் வாழ்வில் மறக்க முடியாத அடையாளங்களை உண்டுபண்ணிய நபர்கள், சம்பவங்கள்

★ அவரது படைப்புகள் பற்றிய தன்னிலை விளக்கம் .

★ சமூகம், அரசியல் சார்ந்த இராகவனின் பார்வை

என்பன போன்ற வழமையான நேர்காணல் ஒன்று கொண்டிருக்க வேண்டிய அம்சங்களுடன் மேலதிகமான சில விடயங்களைப் பற்றி இங்கு இராகவன் பேச முற்பட்டுள்ளார்.

★ தனது வாழ்வு, எழுத்து என்பவற்றில் காணப்படும் பாலியல் சார் விடயங்கள்

★ தனது துணைவியுடனான வாழ்வு மற்றும் அது பற்றிய சமூகத்தின் கதையாடல்கள் பற்றிய திறந்த வாக்கு மூலம்

★ தன்னோடு எதிர் முனையில் உள்ள படைப்பாளிகள் பற்றிய ஆதாரமற்ற வசை பாடல்கள் (குறிப்பாக அ.யேசுராசா, சசீவன், மலர்ச்செல்வன் என்போர் பற்றியவை.)

தனது அந்தரங்கங்களை, ஒளிவு மறைவின்றி இந்த நேர்காணலில் புல்லரிக்கும்படி சொல்கிறார்.தந்தை பற்றிய வசைபாடல், தந்தைக்கு தான் அடித்த சரித்திர நிகழ்வு, தனக்கும் சகோதரர்களுக்கும் இடையிலான சண்டைகள் என்பனவற்றையும் விவரிக்கிறார். மகாத்மா காந்தி தன் சத்திய சோதனையில் தன் தந்தை சாகக்கிடந்த தறுவாயில் தன் மனைவியோடு முயங்கியதைக் கூறியதைப்போல் எம்மண்ணின் 'இலக்கிய மகாத்மாவாக' இராகவன் சத்திய சோதனை சொல்கின்றார்.

தமக்கு எதிரானவர்கள் மீதான வசை பாடலாகவும் சார்பானவர்கள் மீதான புகழ்மொழியாகவும் இந்த நேர்காணல் மாறிமாறி இயங்குகின்றது. தாங்கள் எதைச் சொல்கின்றார்களோ அதற்கு எதிராக இயங்குகிறார்கள் என்பதை இந் நேர்காணல் தெளிவாகக் காட்டிவிடுகின்றது. இத்தகைய விடயங்களை இராகவன் சொல்வதற்கு ஏற்றால் போல நேர் கண்ட பா.துவாரகனும் வாகாய் கேள்விகளை தொடுத்திருக்கிறார். சில இடங்களில் நேர் காணப்பட்டவரை விடவும் நேர் கண்டவரது கருத்துகள் தலை தூக்கி நிற்கின்றன. அதனை இராகவனும் மறுதலிக்கவில்லை. ஆமோதிக்கிறார். இந்த இடங்களில் யாரை யார் நேர் கண்டார் என்று வாசகர்கள் குழப்பமுறக் கூடும்.

இராகவனின் நேர் காணலில் முதற் பகுதியைப் படித்த எழுத்தாளர் மு.பொ., "அவரது மறைக்காத உண்மையும் தனக்குரியதாகக் கொண்டதாகக் கூறும் மௌனமும் ஒருவித ஆத்மீக (சத்திய) பரிசோதனைக்கு கிட்டே கொண்டு செல்கிறது" என்கிறார்.

இராகவன் தனது நேர்காணலின் முதற்பகுதியில் எழுத்தாளர் மு.பொவை "கொண்டாட்டத்திற்குரிய மேதை" என்று குறிப்பிட்டிருந்தார். மு.பொ சிறந்த ஆளுமையாளர் என்பதில் எப்போதும் மாற்றுக்கருத்து இல்லை. ஆனால் நேர்காணலின் இரண்டாவது பகுதியில் "அ.யேசுராசுவுக்கு 'அவார்ட் மேனியா' உண்டு" என்று இராகவன் சொல்லியிருந்தார். இந்த 'அவார்ட் மேனியா' கும்பலுக்குள் மு.பொவையும் இராகவன் உள்ளடக்கியிருந்தால் அவர் (மு.பொ.). இதே கருத்தைத் கூறியிருப்பாரா? இலக்கிய வாதிகள் தொடர்பாக - அவர்களின் 'முரண்' தொடர்பாக - இந்த விடயங்கள் மனதுக்குள் உதைத்துக்கொண்டே இருக்கின்றன.

இராகவன் சில கதைகளில் பாத்திரங்களை யதார்த்தத்தில் உள்ள மனிதர்களின் (தனக்குப் பிடிக்காத படைப்பாளிகளின்) சொந்தப் பெயரை படைத்திருப்பார். அவற்றில் வரும் சம்பவங்கள் கூட அந்தப் படைப்பாளியின் வாழ்வில் உண்மையில் நடந்தவையாகவோ அல்லது அவ்வாறு நடந்ததாக இராகவன் செவி வழியில் அறிந்ததாகவோ இருக்கும். தன் எதிர் நிலை படைப்பாளிகளை அவமானப் படுத்துதல், பழி வாங்கல் என்னும் நோக்கங்களுக்காக இந்திய எழுத்தாளர்கள் கைக்கொள்ளும் உத்தியை இராகவனும் பயன்படுத்துகிறார். ஆனால் இந்திய எழுத்தாளர்கள் கூட படைப்பாளிகளை பாத்திரங்களாக மாற்றும்போது சொந்தப் பெயரை அந்தப் பாத்திரங்களுக்கு இடுவதில்லை. ஆனால் இராகவன் சொந்தப் பெயருடன் அந்தப் பாத்திரங்களை உலவ விட்டிருந்தார். ஆனால் இந்த நேர் காணலில் அதனை மறைத்து "கதாபாத்திரங்களின் பெயர்களை வைத்து புனைகதைக்கு நேரடி அர்த்தங் கொள்ள முனைவது ஒருவகையில் அபாயகரமானது" என்றும் குறிப்பிடுகிறார்.



ஆனால் காலம் 35ஆவது இதழில், வெளியான அ.யேசுராசாவின் 'முகம் பற்றிய மூன்று கவிதைகள்' என்ற கவிதையில் வரும் 'இரட்டை முகக் குஞ்சுகள்" என்பது இராகவன் உள்ளிட்ட மூவரை குறிப்பதாக நேர் கண்டவர் எடுத்துக் கொடுக்கிறார். அதனை அப்படியே உள் வாங்கி ஆமாம் போடும் இராகவன் "நாங்கள் குஞ்சுகளாக அல்லது குழவிகளாக அல்லது சிறுபிள்ளைகளாக இருந்ததால் தானே அவரை (யேசுராசாவை) அம்மணராசா என அடையாளங்காண முடிந்தது" என்று ஏற்றுக்கொள்கின்றார்.

தனது படைப்பில் வரும் பாத்திரத்தின் பெயரை (அது நேரடியாக குறித்த நபரை சுட்டியிருந்தாலும் கூட) பொருத்திப் பார்ப்பது அபாயம் எனக்கூறும் இராகவன், ஒருவரது கவிதையில் பெயர் இல்லாமல் வரும் படிமம் ஒன்றை பிடித்து வைத்துக்கொண்டு "அது தான் உள்ளிட்ட மூவர் தான்" என்று அடம் பிடிப்பது பெரிய முரண் நகை.

தனது படைப்பில் பன்முக வாசிப்பை கோரி நிற்கும் இராகவன் ஏனையோரின் படைப்புகளை மட்டும் ஒற் றைப் பார்வையோடு நோக்குகிறார். அதற்கு இந்த 'மூன்று முகம்' கவிதை பற்றிய அவரது கருத்துகள் நல்ல எடுத்துக்காட்டு. "பின் நவீனத்துவ வாசிப்பில் எழுதியவன் இறந்து விட்டான்" என்று சொல்லும் இராகவன் குறித்த கவிதையில் மட்டும் அதை எழுதிய அ.யேசுராசாவுக்கு ஊாகாவரம் கொடுத்து விடுவது ஏன் என்று புரியவில்லை.

'யேசுகாவியம்' என்ற கதையை ராகவன் கணையாழியில் எழுதியிருந்தார். "குறித்த கதை யேசுராசாவை பற்றியது தானே?" என்று இப் பத்தி எழுத்தாளர் இராகவனிடம் கேட்டிருந்தார்.

"அப்படிப் பார்த்தால் அந்தப் படைப்பு தட்டையாகி விடும்" என்று சாமர்த்தியமாக சொல்லியிருந்தார் இராகவன். ஆனால் இப்போது குறித்த நேர்காணலில் "நீங்களாவது யேசுராசாவுக்கு கடிதம் எழுதியதுடன் ஓய்ந்து விட்டீர்கள். நானோ காவியம் எழுதக் காத்திருக்கின்றேன்" என்று குறிப்பிடுகிறார். ஆக, யேசு காவியம் என்ற சிறு கதை ஒரு குறித்த படைப்பாளியை இலக்கு வைத்து நிகழ்த்தப்பட்ட திட்டமிட்ட வசைபாடல் பிரதியே என்பதை அவரே ஒத்துக்கொள்கிறார். அத்தோடு உமாவரதராஜனின் "மூன்றாம் சிலுவை" நாவலை இலங்கையின் அரசியலை விமர்சிக்கும் ஒரு குறியீட்டுப் பாங்கான புதினமாகப் பார்க்கிறேன் என்று இராகவன் குறிப்பிடுகிறார். ஆனால் குறித்த நாவலை வாசித்தவர்களுக்கே இந்தக் கருத்து ஒரு புதினமாகவே இருக்கிறது.

"எனது படைப்புகள் பற்றி வாசகனுக்கு போதிய சுதந்திரம் கொடுக்கிறேன்" என்று கூறும் இராகவன் தன் கதைமீதான எதிர் வினைகளை ஏற்கவல்லவா வேண்டும். ஆனால் மாறாக தனது கதைகளை எதிர் மறையாக விமர்சித்தவர்களை ஒன்றும் தெரியாத முட்டாள்கள் என்று நிராகரித்து விடுகிறார். சசீவன் என்பவர் இராகவனின் கதை பற்றி தரக் குறைவான வார்த்தைகளால் தன்னிடம் தெரிவித்ததாக நேர் கண்டவர் ஒளிவு மறைவின்றி இராகவனிடம் ஒப்புவிக்கிறார். உடனே பொங்கியெழுந்த இராகவன்

'சசீவன் தான் எல்லாம் தெரிந்த ஏகாம்பரமோ' என்று கிண்டலில் இறங்கி வசை பாடத் தொடங்குகிறார். பின்னர் தான்தான் எல்லாம் தெரிந்த ஏகாம்பரமாக இராகவனே மாறி

"எனது நோக்கில் ஈழத்தில் பின் நவீனத்துவம் குறித்து உரையாடக்கூடிய தகுதி பெரு வெளிக் குழுமத்துக்கும் ரியாஸ் குரானவுக்குமே இருக்கிறது" என்று பின்நவீனத்துவத்தை உயில் எழுதி கொடுத்து விடுகிறார். பின்நவீனத்துவத்தின் ஏகப் பிரதிநிதிகள் என்று தனக்குப் பிடித்த சிலரை சுட்டிக் காட்டும் அதிகாரத்தை இராகவனின் கையில் யார் கொடுத்தார்கள் என்று தெரியவில்லை.

"யாழ்ப்பாணத்தில் வசித்துவரும் மூத்த படைப்பாளிகளோ விமர்சகர்களோ மாற்றுக்கருத்துக்களுக்கு செவி மடுக்கும் நிலையில் இல்லை" என்று கூறும் இராகவன், தானும் மாற்றுக்கருத்துக்களைச் செவிமெடுக்காத ஓர் எழுத்தாளராகவே தெரிகின்றார்.

நேர்காணலில் எதிர்நிலை படைப்பாளிகளின் சேலையை உருவுவதாக நினைத்து கடைசியில் தானே அம்மணமாகியிருக்கிறார் இராகவன். இத்தகைய நேர்காணல்கள் மற்றவர்களது உள்வீட்டு விடுப்புகளை அறிய விரும்பும் மனம் கொண்டவர்களுக்கு உவப்பாக இருக்கலாம். ஆனால் இலக்கியத்தின் மீது விருப்புக் கொண்டவர்களை இத்தகைய நேர் காணல்கள் முகம் சுளிக்க வைப்பதோடு சிற்றிதழ்கள் மீதான நம்பிக்கையீனத்தையும் அதிகப்படுத்தி விடுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலுக்குள் காசு மரம்

■ கலை பாஸ்கரன்

## பணத்தைக் குவிக்கும் கடலட்டைகள்

### ஒரு நேரடித் தரிசனம்



இயந்திரத்தை விடவும் அவர்களது கரங்கள் வேகமாக இயங்கிக் கொண்டிருந்தன. பார்ப்பதற்கே அருவருப்பான, வழுவழுப்பான உடல் கொண்ட அந்த உயிரியை சிலர் தரம் பிரித்தனர். வேறு சிலர் அவற்றை அவித்தனர். இன்னும் சிலர் சலவைக் கல்லில் உடையைத் துவைப்பது போன்று அந்த உயிரியின் மேலிருந்த கல்சியம் மற்றும் அழுக்குப் படிவுகளை அகற்றினர். என்ன ஆச்சரியம்! வழமையாகக் கறுப்பாக இருக்கும் பொருள்கள் சுத்தம் செய்தால் வெண்மை பெறுவதே வழமை. ஆனால் வெள்ளை வர்ணம் கொண்ட இந்த உயிரியைச் சுத்தம் செய்தவுடனேயே அது கறுப்பாக மாறிவிட்டது. வயிற்றைக் குமட்டச் செய்யும் வாடை அந்தப் பகுதியெங்கும் வியாபித்திருந்தாலும் அங்கு பணிபுரிபவர்கள் அதைப்பற்றி அலட்சியம் செய்தவர்களாகத் தெரியவில்லை. அதற்கு இரண்டு காரணங்கள் இருக்க வேண்டும். ஒன்று, பழக்க தோஷத்தால் அந்த வாடை அவர்களுக்கு ஒத்திசைவானதாக மாறியிருக்கும். இரண்டு, மணத்தைப் பார்த்தால் பணத்தைப் பார்க்க முடியாது. அவர்கள் சுத்தம் செய்துகொண்டிருந்த உயிரி வேறொன்றுமல்ல, யாழ்ப்பாணத்துக்குச் செல்வத்தை வாரி இறைக்கும் கடலட்டைதான்.



பொதுவாகவே ஆழம் குறைந்த சதுப்பு நிலம் கொண்ட கடற்படுக்கைகளில் உற்பத்தியாகும் கடலட்டைகளுக்கு உள்ளூரை விடவும் வெளிநாடுகளில் மதிப்பு அதிகம். கடலில் ஒன்றரை மீற்றர் தொடக்கம் இரண்டரை மீற்றர் வரையான ஆழத்தில் உள்ள சேற்றுப் பகுதிகளே கடலட்டைகளின் வாழ்விடம். கடலட்டைகள் மிக மென்மையான உடலமைப்பைக் கொண்டவை. வெப்பத்துக்கும் கடலட்டைகளுக்கும் எட்டாப்பொருத்தம். கடும் வறட்சி நிலவும் காலத்தில் கூட அரை மீற்றர் உயரத்துக்குத் தண்ணீர் இருந்தால் மாத்திரமே இவற்றால் தப்பிப் பிழைக்க முடியும். இலேசான சூரிய வெப்பம் பட்டால்கூட கடலட்டைகளின் கதி அதோகதிதான்.

யாழ்ப்பாணத்தில் தீவகப் பிரதேசம் , குருநகர் கடற் பகுதிகளில் கடலட்டைகள் பெரிதும் பிடிபடுகின்றன. ஆழம் குறைந்த கடற்பகுதிகளிலேயே கடலட்டைகளால் வாழ முடியும். வடமராட்சி கிழக்கு, வடமராட்சி வடக்கு போன்ற சமுத்திரப் பகுதிகளில் கடலட்டைகள் வாழ்வதில்லை.

மிகவும் பெறுமதியான கடல்வாழ் உயிரினம் என்பதால் அனுமதி பெற்றவர்கள் மாத்திரமே கடலட்டைகளைப் பிடிக்க முடியும். இதற்கான அனுமதிகளைப் பெறாமல் கடலட்டை பிடிப்பில் ஈடுபடுவோர் மீது பாய்வதற்குச் சட்டம் விழிப்பு நிலையிலேயே இருக்கிறது. குருநகர் பகுதியில் 120 பேரும், தீவகப் பகுதியில் 200 பேரும் கடலட்டையைப் பிடிப்பதற்கான அனுமதியைப் பெற்றுள்ளனர். நுளம்புகளின் வாழ்க்கை வட்டத்தையே கடலட்டைகளின் வாழ்வும் ஒத்திருக்கிறது. ஒரு கடலட்டை தனது ஆரம்ப நிலையிலிருந்து முதுநிலையை அடைவதற்கு இரண்டு வருடங்கள் தேவைப்படுகிறது. கடலட்டைகளில், ஆண், பெண் என்ற பால் வேறுபாடு காணப்பட்டாலும் அவற்றை இனங்காண்பது கடினமே. அவ்வளவு ஏன்? ஒரு கடலட்டை உயிரோடு இருக்கிறதா? இல்லையா? என்பதைக்கூட கண்டறிவது சுலபமானதல்ல. கடலட்டைகள் தமது சுவாசத்தை உடலின் மேற்புறப் பகுதியூடாகவே நிகழ்த்துகின்றன. எனவே மேற்புறத்தோலின் அசைவை உன்னிப்பாக நோக்குவதன் மூலமே அவற்றின் உயிர், உயிரற்ற தன்மையைப் பிரித்தறிய முடியும்.

கிட்டத்தட்ட ஒவ்வொரு கடலட்டையும் அவற்றின் நீளம், தரம் என்பவற்றின் அடிப்படையில் உள்ளூர் மீனவர்களிடமிருந்து 100 ரூபாவிலிருந்து 1,000 ரூபாவரை கொள்முதல் செய்யப்படும். பின்னர் அவை உரிய முறையில் பதனிடப்பட்டு, பொதி செய்யப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும். யாழ்ப்பாணக் கடலில் சான்பிஷ், டிஸ்கோ என்னும் பெயருடைய இரு வகையான கடலட்டைகள் தாரளமாகப் பிடிபடுகின்றன.

பணங்காய்ச்சி உயிரியான கடலட்டையை ஏனைய கடல்வாழ் உயிரினங்களைப் போல, வலை போட்டோ, கூரிய கம்பிகளால் குத்தியோ பிடிக்க முடியாது. அதற்கெனத் தனி நுட்பம் தேவைப்படுகிறது.

''கடலட்டையளைப் பிடிக்கிறது அவ்வளவு லேசான வேலையில்லை. ஏனெண்டால் அதுகளுக்கு நோவில்லாமல் பிடிக்க வேணும். தப்பித்தவறி கடலட்டையளுக்குச் சின்னதா ஒரு வலி ஏற்பட்டாலும் உடன தங்கட குடலையும், தேவையில்லாத உறுப்புகளையும் அதுகள் வெளியிலை தள்ளிப்போடும்.அதுக்குப் பிறகு கடலட்டையளைப் பிடிக்கிறது ஏலாத காரியம். ஆக்கள் போன பிறகு திரும்பவும் குடலை அது வயித்துக்குள்ளை எடுத்திடும். இல்லாட்டிச் செத்திடும். இதாலை வலையைப் பாவிக்கிறதோ, குத்திப் பிடிக்கிறதோ சரிவராது. அதாலை நாங்கள் கடலுக்கடியிலை மூச்சடக்கிப் போய்த்தான் கையாலை கடலட்டையைப் பிடிச்சுக் கொண்டு வரவேணும். சில இடங்களிலை சிலிண்டரைக் கட்டிக்கொண்டும் கடலட்டையைப் பிடிக்கப் போறவை. ஆனால் இஞ்சை (யாழ்ப்பாணத்திலை) சிலிண்டர் கட்டிக்கொண்டு தொழில் செய்யத் தடை இருக்கிறதாலை கையாலைதான் பிடிக்க வேண்டியிருக்கு.'' என்று கடலட்டை பிடிக்கும் நுட்பத்தை எம்மிடம் விளக்கினார் ஒரு மீனவர்.

இவ்வாறு பிடிக்கப்படும் கடலட்டைகள் ஏனைய கடல்வாழ் உயிரினங்களைப் போல அப்படியே சந்தைக்கு எடுத்துவரப்படுவது இல்லை. அவை உரிய முறையில் பதப்படுத்தப்பட்டாலே நீண்ட காலம் வைத்திருக்க முடிவதுடன், அதன் தரத்தையும், சுவையையும் அதிகரிக்கச் செய்ய முடியும்.

யாழ்ப்பாணத்தில் நகரின் மத்தியில் காங்கேசன்துறை வீதியில் கடல்வாழ் உயிரினங்களைப் பதனிடும் நிலையம் ஒன்று உள்ளது. இங்கு சங்கு, சுறா போன்றவற்றைப் பதனிட்டாலும், பிரதானமாக கடலட்டையைப் பதனிடலே விளங்குகிறது.

இதுகுறித்து அந்த நிறுவனத்தின் முகாமையாளர் விளக்கினார்.

''கடலட்டை மண்ணையே உணவாகக் கொள்கிறது. இதனால் கடலட்டையின் உடலுக்குள் ஏராளமான சகதி நிறைந்திருக்கும். இதனால் கடலட்டையை முழு உடலாக அப்படியே பதப்படுத்த முடியாது. கடலில் இருந்து பிடிக்கப்பட்ட கடலட்டை ஒருநாள் முழுதும் அப்படியே இருக்கும். ஆயினும் நாங்கள் அவை பிடிபட்ட 3 மணித்தியாலத்துக்கு உள்ளேயே பதனிடலுக்குக் கொண்டுவந்து விடுவோம்.

உள்ளூர் மீனவர்களிடம் கொள்வனவு செய்த கடலட்டைகளின் வாய்ப்பகுதியைக் கிழித்து, அதனூடாகக் குடல் மற்றும் உண்பதற்கு ஒவ்வாத உறுப்புகள் என்பவற்றை வெளியே எடுத்துவிடுவோம். அதன் பின்னர் கடலட்டைகளை ஒரு பெரிய பாத்திரத்தில் போட்டு நன்றாக அவிப்போம். கிட்டத்தட்ட 25 நிமிடங்கள் அவித்த பின்னர், மென்மையாக இருக்கும் கடலட்டையின் உடல் இறுகிவிடும். இந்தப் பதத்தில் அவற்றை இறக்கி, வடிகட்டி ஒரு பாத்திரத்தில் ஆறவிடுவோம்.

இத்தோடு பதனிடல் முடிந்துவிடாது. கடலட்டை நீண்டகாலம் கடலின் அடியிலேயே இருப்பதால் அதன் மேற்பகுதியில் பாசி, கல்சியம் என்பன படைபோன்று படிந்திருக்கும். அதனை அகற்றுவதற்கு இலகுவான ஒரு வழியுண்டு. உப்பு இடப்பட்ட கடலட்டைகளை ஓர் உரப்பையில் காற்றுப் புகாதவண்ணம் போட்டு, இறுகக் கட்டிவிட வேண்டும். ஐந்து, ஆறு மணித்தியாலங்கள் சென்றபின்னர் கட்டப்பட்ட உரப்பையைத் திறந்தால், கடலட்டைகளின் மேல் படிந்திருந்த பாசி, கல்சியம் என்பன காணாமல் போயிருக்கும். இவையெல்லாம் அழுகிய நிலையில் வெளியேறி இருக்கும்.

பின்னர் கடலட்டையை மீண்டும் ஒருமுறை அவிக்க வேண்டும். இதன் போது எஞ்சியிருந்த கல்சியமும் கழன்றுவிடும்.

அவித்த கடலட்டைகளை 'பிரஷ்' மூலமும், கல்லில் வைத்து உராய்வதன் மூலமும் முற்று முழுதாகச் சுத் தம் செய்துவிட முடியும். ஆரம்பத்தில் வெள்ளை நிறமாக இருந்த கடலட்டை துப்புரவு செய்யப்பட்ட பின்னர் மேற்பகுதி கறுப்பாகவும், கீழ்ப் பகுதி மஞ்சள் ஆகவும் மாறியிருக்கும். பின்னர் மூன்றாவது முறையாக உப்பிட்டு, அவித்து இருநாள்கள் வைத்திருக்க வேண்டும்.

அதற்குப் பின்னர் இறுதியாக நான்காவது தடவையாக அவித்து உப்பிட்டு, கடலட்டைகளை ஈரத்தன்மை அகலும் வரை வெயிலில் நன்றாகக் காயவைக்க வேண் டும்.

உலர்ந்த கடலட்டைகள் தரம் பிரிக்கப்பட்டு பொதி செய்யப்படும். அதன் பின்னர் சீனா, சிங்கப்பூர், மலேசியா, ஹொங்கொங், தாய்வான் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வோம். ஒரு கிலோ கடலட்டையின் விலை சுமார் 8 ஆயிரம் ரூபாவரை போகும்.

யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்புப் பகுதிகளில் பிடிபடும் கடலட்டைகளையும் அந்தந்தப் பகுதிகளுக்குச் சென்று கொள்வனவு செய்துவருவோம். எமது நிறுவனத்தில் தற்போது 25 இற்கும் மேற்பட்ட பணியாளர்கள் பணியாற்றுகிறார்கள். இவர்களுக்குரிய வேதனத்தைவிட மிகைப்பணிக் கொடுப்பனவு, மதிய உணவு என்பவற்றையும் வழங்குகின்றோம்.'' - என்று விலாவாரியாக விளக்கினார்.



கடலுக்குள் முளைத்த காசு மரம் போல, அள்ள அள்ளக் குறையாத அன்னியச் செலவாணியை ஈட்டித் தரக் கூடிய கடலட்டை யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்தை வளப்படுத்தும் ஒரு வரம். வயிற்றை குமட்டும் மணத்தைக் கொண்டிருந்தாலும் அது மீனவர்களை பணத்திலல்லவா புரள வைக்கிறது.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துவாரகனின் ‘தூக்கணாங்குருவிக் கூடு’



■ ந.மயூரரூபன்

துவாரகன், இயற்பெயர் சு.குணேஸ்வரன். ஈழத்தில் சமகால எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்கவர். ‘மூச்சுக்காற்றால் நிறையும் வெளிகள்’ இவரது கவிதைத் தொகுதி.

“அழகென்ன மீனா
ஓசையின் தூண்டிலில் சிக்குமா”

ந.பிச்சமூர்த்தியின் இவ்வரிகளை கவிதை தொடர்பான கோட்பாடு வியாக்கியானங்களில் பொருத்திப் பார்க்கலாம்.

“எழுத்தாளன் என்பவன் தன் செயலுக்குத் துணையாகும் எழுத்தை எழுதுபவன் என்றும், ஒரு தத்துவத்தின் சார்பில் அணி சார்ந்தே எழுதவேண்டும்”

இது சார்த்தரின் கூற்று.

துவாரகனின் கவிதைகள் போரின் விளைவுகளைச் சாதாரண மனிதனின் மனச்சூழலின் கட்டமைவுகளை பேசுவனவாய் அமைகின்றன. இவரது கவிதைகளில் இயற்கையின் மீதான விருப்பும் இயற்கை உயிர்கள் மீதான அதீத கவனமும் வெளிப்பட்டு நிற்கின்றன.

கவிதை என்பது பொதுப்புத்தி சார்ந்ததல்ல. இதற்கு துவாரகனின் கவிதைகளைச் சான்றாக எடுத்துக் கொள்ளலாம். ஏனெனில் ஒரு தனி மனிதன் கவிதை மொழிதல் என்பது பொதுமைப்படுத்தி விடக் கூடியதல்ல. அதனால்தான் கவிதைகள் பன்முக வாசிப்பு வெளிகளைக் கொண்டுள்ளன.

சொற்களுக்கான குணமும் தனித்துவமானது. அது சொற்களின் இயல்பு. ஒரு கவிதையில் வந்துவிடும். ஒரு சொல் அதற்குரிய காலத்தினையும் கவிதைக்கான தளத்தினையும் பொத்தி வைத்திருக்கும். மனிதர்களின் நாடித்துடிப்பு, சந்தோஷம், துன்பம், வலி, கோபம் வாழ்க்கையின் ஒட்டுமொத்த சாரம். இந்தச் சொல்லின் வழி வாசகனை இணைக்கிறது.

இந்த முன்புரிதலை துவாரகனின் கவிதைகள் தரவல்லன. பெரும்பாலும் இவரது கவிதைகள் ‘கூடுபாயும் மனவெளி’களைக் கொண்டவை. மனிதர்களாயிருத்தல் அல்லது மனிதர்களோடிருத்தல் பிரச்சினையாகும்போது-அவலமாகும் போது விலங்குகளுடன் வாழ்தல், விலங்குகளாதல் அல்லது விலங்குகளின் வாழ்வெளியை அவாவுதல் என்பதே இவரது இந்தக் கூடுபாயும் மன வெளி.

அந்த அவாவும் கணங்கள் எவ்வளவு திருப்தியைத் தரவல்லனவாய் அமைகின்றன, துவாரகனுக்கும் எமக்கும்.

“.......
நானும் ஓர் எலியாகிச் சென்றேன்
.........
நான் இனி
வெளியில் வாழ்வதை விட
வெள்ளெலிகளுடன் வாழப்போகிறேன்”
(வெள்ளெலிகளுடன் வாழ்தல்)

கலை என்பது அறிவியலுக்கும் தொன்மத்துக்கும் இடைப்பட்டது. கவிதையில் தொன்மங்களின் ஊடறுப்பை அதிகமாக கண்டு கொள்ளமுடியும். துவாரகனின் கவிதைகளில் தொல்மனப் படிமம் (archaic image) உறைந்து போயுள்ளது.

இயற்கையையும், கலாசாரத்தையும் ஒன்றாயிணைக்கும் செயலினை தொல்மனப்படிமம் செய்கிறது. இங்கு இயற்கையின் கூறுகளான விலங்குகள், பறவைகள், மரங்கள் என்பன மனிதனுடன் இரத்த உறவுகொண்ட நிலையில் படிமமாக்கப்படுவதைத் துவாரகனின் ‘தூக்கணாங்குருவிக்கூடு’ கவிதையில் காணமுடியும்.

ஆழ வேர்கொண்ட, விழுதுகள் விட்ட பெருமரத்தில் தூக்கணாங்குருவிக் கூடு, மிகுந்த உழைப்புடன் கட்டியகூடு,

“...கூடுகளைச் சிதைத்துவிட
காற்றுடன் சல்லாபிக்கிறது
சாரைப்பாம்பு”

சாரைப்பாம்பு முட்டை குடிப்பதற்கும், குரங்கு கூடுகளைக் கலைத்துப் போவதும் என்பதால் குருவிகளின் வாழ்க்கைப் போராட்டம் நிகழ்கிறது.

இவ்வாறு உருக்கமாகச் சொல்லப்படுகின்ற கவிதையில் இறுதியாக சமூக மெய்மை (social fact) ஒன்றினை தொன்மங்களின் கட்டமைவின் போக்கில் துவாரகன் கூறுகிறார்.

“கூடுகளைத் தாங்கும் வலிய கிளைகளும்
ஆழ ஊன்றிய வேர்களும் உள்ளவரை...
முடியுமா என்ன?
மரம் வலியன்
அதன் வாழ்வோடு வாழும்
கூடுகளும் வலியன்
ஊழிக்காலம் முடியும் வரை!”

இங்கு, தொன்மையான நீண்ட வரலாற்றைக் கொண்ட வாழ்க்கையின் பெறுமதி அதன் கூட்டுப் பெறுமதியாக வெளிப்படுகிறது. ஓர் இனத்தின் அதன் கூட்டுப் பிரக்ஞையின் கருத்துருவமாய் துவாரகனின் ‘தூக்கணாங்குருவிக்கூடு’ கவிதையைச் சொல்ல முடியும்.

பொதுவாக மார்க்ஸிய சிந்தனையின் செல்வாக்கு அநேகமான கவிஞர்களின் மொழிதலில் வெளிப்படுவதுண்டு. துவாரகனின் இக்கவிதையிலும் ‘வர்க்க மனிதாபிமானம்’ வெளிப்படுவதைக் காணமுடியும்-இது இவரது அநேக கவிதைகளில் ஊடுருவிக் காணப்படுகிறது. அதே நேரத்தில் புரட்சிகர மனிதாபிமானமும் இணைந்தேயுள்ளது.

‘முடியுமா என்ன
மரம் வலியன்.’

சமூக மெய்மைகளைப் பேசும் துவாரகனின் கவிதைகள் எந்தன் மனங்களைத் தொடர்ந்து அருட்டிச் செல்லும் தொல்மனப் படிமங்களால் உலாவுகின்றன.

# நித்தியஸ்ரீ: நீறு(ரு)ம் நெருப்பும்

■ ஆதங்கன்

சாம்பல் மூடியிருக்கும் நெருப்பின் வெம்மை வெளியே தெரிவதில்லை. காற்றின் வேகத்திலோ அல்லது ஏதேனும் புறக்காரணிகளின் பாதிப்பாலோ சாம்பல் மெல்ல விலகும்போதுதான் உள்ளே தகித்துக் கொண்டிருக்கும் அக்கினியின் அனல் முகத்தில் ‘பட்’டென்று தெறிக்கிறது.

நித்தியஸ்ரீ மகாதேவன். தென்னிந்திய கர்நாடகச் சங்கீதக் குயில். கர்நாடக சங்கீதத்தில் பேரரசியாக விளங்கிய டி.கே.பட்டம்மாளின் பேர்த்தி. தனது பாட்டியைப் போலவே நித்தியஸ்ரீ மகாதேவனும் கேட்போரை மயங்க வைக்கும் குரல்வளம் கொண்டவர்.

கர்நாடக இசைத்துறையில் உச்ச நிலையிலிருந்த நித்தியஸ்ரீ மகாதேவனை சினிமா உலகுக்குள் அழைத்துவந்தவர் இசைப்புயல் ஏ.ஆர்.ரஹ்மான். ‘ஜீன்ஸ்’ என்ற படத்தில் “கண்ணோடு காண்பதெல்லாம் தலைவா கண்களுக்குச் சொந்தமில்லை” என்ற கணீர்க்குரலோடு பரவலாக அறியப்படத் தொடங்கினார் நித்தியஸ்ரீ மகாதேவன்.

ஏனைய பின்னணிப் பாடகர்களைப் போல பிழைப்புக்காக இசையின் தனித்துவத்தை விற்றுவிட நித்தியஸ்ரீ மகாதேவன் தயாராக இல்லை. ஆபாசச் சொற்கள் அடங்கிய பாடல்கள், துள்ளிசைத் தன்மை கொண்ட வக்கிர உணர்வை வெளிப்படுத்தும் பாடல்கள் என்பவற்றை அறவே தவிர்த்தார். தனக்குப் பிடித்த பாடல்களைத் தேர்ந்தெடுத்தார். இத்தகைய தெரிவு காரணமாக அவர் தென்னிந்திய சினிமாவில் பாடிய பாடல்களின் எண்ணிக்கை மிகக் குறைவுதான். ஆயினும் எண்ணிக்கைகள் ஒரு கலைஞனின் இருப்பைத் தீர்மானிப்பதில்லை. இசையின் தரத்தைத் தொடர்ந்தும் பேணியதால் தென்னிந்திய கர்நாடக இசை மரபிலும் சினிமா இசைத்துறையிலும் நித்தியஸ்ரீ மகாதேவனுக்கு தனித்துவமான இடமுண்டு.

இவ்வாறு பாடிக்கொண்டிருந்த குயிலாக தன்னுடைய இசையால் வசமாக்கிய நித்தியஸ்ரீ மகாதேவனின் வாழ்வில் கடந்த வியாழக்கிழமை வீழ்ந்தது பேரிடி. அவரது கணவர் திடீரென்று ஆற்றில் குதித்து தற்கொலை செய்துகொண்டார். இதனையறிந்து நித்தியஸ்ரீயும் தற்கொலைக்கு முயன்றார் என்று கூறப்பட்டபோதும் அது உறுதிப்படுத்தப்படவில்லை.

நித்தியஸ்ரீயின் கணவரின் மரணம் இதுவரை காலமும் அவரது வாழ்வில் தகித்துக் கொண்டிருந்த நெருப்பை மூடியிருந்த சாம்பலை விலக்கியிருக்கிறது. கிட்டத்தட்ட ஐந்து வருட காலமாக நித்தியஸ்ரீயின் கணவர் மகாதேவன் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டு அதற்காகச் சிகிச்சை பெற்று வந்துள்ளார் என்ற தகவல் இப்போது வெளியாகி இருக்கிறது. வெளியே என்றைக்கும் வாடாத புன்னகையைச் சுமந்துகொண்டு இசை வெள்ளத்தைப் பரவ விட்ட நித்தியஸ்ரீயின் மனதுக்குள் பெரும் எரிமலையே இருந்திருக்கிறது. அதனைக் காட்டிக்கொள்ளாது, தன்வாழ்வின் துன்பத்தை மறைத்து இசையின்பத்தில் மற்றோரை ஆழ்த்தியிருந்தார்.

இரு வருடங்களுக்கு முன்னர் நித்தியஸ்ரீ யாழ்ப்பாணம் வந்தபோது “ஒருமுறை தற்கொலை செய்யச் [illegible] தனது [illegible] என்னிடம் சொல்லியிருந்தார்.” என்று உதயனுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்திருந்தார்.



மற்றவர்களையெல்லாம் தற்கொலை செய்யாமல் தடுத்த நித்தியஸ்ரீயின் குரலால் தனது கணவரின் தற்கொலையைத் தடுக்க முடியாமல் போய்விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறி வைக்கப்படும் டோனி



இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் இந்திய அணியில் குழப்பங்களை ஏற்படுத்திச் சென்றுள்ளது. மறுபுறத்தில் குழம்பியிருந்த இங்கிலாந்து அணியை ஒற்றுமைப்படுத்திச் சென்றிருக்கின்றது.

கடந்த ஆண்டு இங்கிலாந்தில் பறிகொடுத்த தொடரையும், முதலிடத்தையும் பெற்றுக் கொள்ள இந்த ஆண்டு இந்தியா தனது சொந்த மண்ணில் இங்கிலாந்தை வீழ்த்தத் திட்டம் போட்டது. ஆசிய மண்ணில் சுழலில் இங்கிலாந்து சுழற்றியடிக்க இந்தியாவால் போடப்பட்ட திட்டம் இறுதியில் இந்தியாவுக்கே வினையாகிப் போனது.

ஏற்கனவே இந்திய அணித் தலைவர் டோனியின் தலை உருண்டு கொண்டிருந்த நிலையில் சொந்த மண்ணில் இந்தத் தோல்வி அவரது தலையை குறிவைப்பதற்கு வித்திட்டு விட்டது. அத்துடன் சச்சினின் ஆட்டத்தின் மீதான விமர்சனங்கள் அவர் கௌரவ ஓய்வை அறிவிப்பதற்கு வித்திடத் தொடங்கியுள்ளன.

இந்திய அணியின் தோல்வி ஒட்டுமொத்தமாக டோனியின் தலையிலேயே போடப்பட்டுள்ளது.



ஷேவாக்கை அடுத்த அணித் தலைவராக நியமிக்க வேண்டும் என்று குரல்கள் ஒலிக்கத் தொடங்கியுள்ளன.

ஷேவாக் டெஸ்ட் தலைமைத்துவத்துக்கு தகுதியுள்ளவரா? ஆக்ரோஷமான ஆட்டம் அணியை வெற்றிப்பாதையில் அழைத்துச் செல்லுமா? ஷேவாக்கை அணித் தலைவராக நியமித்தால் இந்திய அணி தொடர் வெற்றிகளைப் பெற்றுக் கொள்ளுமா?

இந்தக் கேள்விகளுக்கான விடைகளைச் சொல்லாமலேயே டோனியின் தலை குறிவைக்கப்பட்டுள்ளது.

இலங்கை அணி ஒரு வருடத்திற்கு முன்னர் தலைமைக்கு தகுதியில்லாத ஆக்ரோஷமான டில்ஷானை அணித் தலைவராக நியமித்தது. அணியை எப்படி வழிநடத்துவது? களத்துக்கு தகுந்தவாறு எவ்வாறு முடிவெடுப்பது? என்று எதையும் சரியாக செய்யாத டில்ஷானை இலங்கை கிரிக்கெட் ஓரங்கட்டியதால் இன்று ஒழுங்கான தடத்தில் அணி பயணிக்கின்றது. இதே போன்றுதான் ஷேவாக்கை நியமித்தாலும் இந்திய அணிக்கும் நடக்கும். டோனியைக் குறிவைப்பதை விட இவ்வளவு காலமும் வெற்றிப் பாதையில் வழிநடத்திய டோனி ஏன் சறுக்குகிறார் என்பதை ஆராய்ந்து அதனைத் திருத்தியமைக்கலாமே?

மைதானத்தை மாற்றியமைப்பது போல் அணித் தலைமையையும் மாற்றினால் வெற்றி கிடைக்கும் என்று நினைக்கிறார்களோ தெரியவில்லை. அனுபவத்திலிருந்து இன்னும் படிக்காத அணியாக இந்தியா இருக்கே!

## சகிப் புதுப் பிரவேசம்

பங்களாதேஷ் அணி கிரிக்கெட்டில் நீண்ட காலம் கத்துக்குட்டி அணியாகவே இருந்தது. இடையிடையே பலமிக்க அணிகளை வீழ்த்தி தனது பெயரை பட்டை தீட்டிக் கொள்ளும். இவ்வாறு இருந்த பங்களாதேஷ் அணியை ஏனைய நாடுகளை மிரட்டும் அளவுக்கு மாற்றியமைத்த பெருமை சகிப் அல் ஹசனைச் சாரும்.

பங்களாதேஷின் புதுப் பிரவேசத்துக்கு வித்திட்ட சகிப், தனது வாழ்க்கையிலும் புதுப் பிரவேசத்தை தொடங்கியுள்ளார். பங்களாதேஷைப் பற்றி பலரையும் கதைக்க வைத்த சகிப் தனது திருமணத்தையும் பலராலும் பேசும்படி வைத்துள்ளார்.

இந்த ஆண்டின் அதிசய நாளான 12-12-12 அன்று தனது திருமணத்தை நடத்தி எல்லோரையும் ஒரு கலக்குக் கலக்கியுள்ளார்.

அமெரிக்காவை சேர்ந்த பங்களாதேஷ் வம்சாவளி உம்மி அகமது ஷிசிரை மணமுடித்தார். இவர்களது திருமண நிகழ்ச்சிக்கு நெருங்கிய உறவினர்கள், நண்பர்களுக்கு மட்டும் அழைப்பு விடுக்கப்பட்டது.

25 வயதான சகிப், இதுவரை 28 டெஸ்ட் (1835 ஓட்டங்கள், 102 இலக்குகள்), 126 ஒருநாள் (3635 ஓட்டங்கள், 160 இலக்குகள்) என்று கலக்கியுள்ளார். சகலதுறை வீரரான சகிப் தனது வாழ்க்கையிலும் சகலகலா வல்லவனாக கலக்கட்டும்!



# இவர் ஏன் வருகிறார்?



கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவிக்கும் வீரர்களில் சிலர் உடனடியாக தமது முடிவுகளை மாற்றி பின்னர் அணியில் இணைந்து விளையாடுவார்கள். ஆனால் இவர் அணியிலிருந்து ஓய்வு பெற்று 5 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் அணியில் இணைந்து கொள்வதற்கு ஆசைப்படுகின்றார்.

பெண்களிடம் பல லீலைகள் புரிந்த ஆஸி.யின் ஷேன் வோர்ணே இவ்வாறு மீள் வருகைக்கான தனது அறிவிப்புக்களை வெளியிட்டுள்ளார். ஆஸி. அணியின் தொடர் தோல்விகளை தாங்காமலேயே தான் மீண்டும் அணிக்குள் வருவதாக தனது அறிவிப்புக்களை பல குழப்பங்களுடன் வெளியிட்டுள்ளார்.

உலகில் அதி கூடிய டெஸ்ட் இலக்குகளைக் கைப்பற்றிய வீரர் என்ற பெருமையை தன்னகத்தே கொண்டிருந்த வோர்ண் அந்தச் சாதனையுடனேயே ஓய்வு பெற்றார். ஆனால் முத்தையா முரளிதரன் அவரது ஓய்வின் பின்னர் அதனைத் தகர்த்தெறிந்தார்.

முரளியால் அந்தச் சாதனை முறியடிக்கப்படும் என்று ஆஸி. அணியினருக்குத் தெரியும். இதனாலேயே முரளி பல தடவைகள் ஆஸி. கிரிக்கெட் வீரர்களாலும், ஆஸி. நடுவர்களாலும் குற்றச்சாட்டுக்குள் உள்ளாக்கப்பட்டார். பல தடவைகள் முரளியின் பந்து வீச்சு சரியானது என்று நிரூபணமாகியும் ஆஸி. நாட்டவர்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆஸ்திரேலிய மண்ணில் இடம்பெறும் போட்டியில் முரளி பந்து வீசும் போது ஆஸ்திரேலிய ரசிகர்கள் அவர் பந்தை எறிவதாகவே கூச்சலிடுவார்கள். இத்தனை தடைகள் மத்தியிலும் முரளி அதிகூடிய டெஸ்ட் இலக்குகளை கைப்பற்றிய சாதனையை தன்னகத்தே கொண்டுள்ளார். இதன் பின்னர் முரளியும் டெஸ்ட் அரங்கிலிருந்து விடைபெற்றுக் கொண்டிருந்தார்.

வோர்ண் மீண்டும் களமிறங்கக் காத்திருப்பது, யாருமே நெருங்கமுடியாத உயரத்தில் தான் ஓடி அதி கூடிய டெஸ்ட் இலக்குகள் கைப்பற்றிய வீரர் என்ற சாதனையைப் பெற்றுக் கொள்ளவே.

வோர்ண் மீண்டும் வருவதனால் முரளி ஏன் இலங்கை அணிக்கு மீண்டும் வரக் கூடாது? சர்வதேச டெஸ்ட் அரங்கில் இலங்கையின் முத்திரை பதிக்கக் காரணமாயிருந்த முரளியை அணிக்கு மீண்டும் வருமாறு ஏன் கேட்கக் கூடாது.

தற்போது இலங்கை அணியின் டெஸ்ட் அணித் தலைமையிலிருந்து மஹேல விலகும் சந்தர்ப்பத்தில் முரளியை ஒரு கௌரவத்திற்காகவாவது அந்தத் தலைமைப் பதவியில் அமர்த்தி ஏன் விளையாட வைக்கக் கூடாது.

ஓட்டப் பந்தயத்தில் இருவர் ஓடினால் மாத்திர[illegible] ஒரு முனையில் வோர்ன் [illegible] முனையில் முரளி களமிறங்கினால் மீண்டும் சுழல் களைகட்டும்.

# கலக்கல் தொடரட்டும்

டென்னிஸ் உலகின் ஜாம்பவான்களில் ஒருவர் பெடரர். விளையாட்டுத்துறையில் சாதித்தவர்களில் தனது முத்திரையை நிரந்தரமாகப் பதித்துள்ளார்.

கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை லாவகமாக வென்ற இவர் என்றுமே சுவிட்சர்லாந்தின் மக்கள் நாயகன். சுவிட்சர்லாந்தின் 2012 ஆம் ஆண்டுக்கான சிறந்த விளையாட்டு வீரராக பெடரர் மீண்டும் தெரிவாகியுள்ளார். விளையாட்டு நிபுணர்கள், பொது மக்கள் அனைவரும் வாக்களித்து 43.9 சதவீதம் என்ற அடிப்படையில் பெடரர் இந்த விருதை வென்றிருக்கின்றார்.

டென்னிஸ் தரவரிசையில் இரண்டாம் இடத்தில் இருக்கின்றார். தங்கம் எங்கிருந்தாலும் அதன் தரத்தில் குறைவில்லாதது போல், தரவரிசையில் இரண்டாம் இடத்திலிருந்தாலும் 17 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்று இன்னமும் பட்டங்கள் வெல்லத் துடிக்கும் உத்வேகத்துடனேயே இருக்கின்றார். அதிகம் சம்பாதிக்கும் பெடரர், தனது நாட்டு மக்களின் அன்பையும் பெரிதும் சம்பாதித்துள்ளார். இதனால் தான் இவர் சுவிட்சர்லாந்தின் சிறந்த வீரருக்கான விருதை 2003, 2004, 2006, 2007, 2012 என்று ஐந்து தடவைகள் வென்றுள்ளார். தொடர்ந்தும் பெடரர் கலக்குவார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# தென்தமிழ் நாட்டு குற்றாலமும் பொதியமலையும்

மட்டுவில் நல்லதம்பி

தமிழ்நாட்டிலே வளமும் வனப்பும் மகிமையுங்கொண்ட நாடுகளாகக் குற்றால மலைநாடும் பொதிய மலைநாடும் விளங்கின. இந்த இரு மலைநாடுகளிலும் குறவர் சமூக மக்கள் வாழ்கின்றனர். ஆண்களில் சிலர் பாம்பாட்டுவதிலும் பெண்களில் சிலர் குறி சொல்வதிலும் (குறி-சாத்திரம்) ஈடுபடுவதுண்டு. அவர்கள் பலர் நமது ஈழநாட்டுக்கும் வந்து போவார்கள்.

இவ்வாறாக வசந்தகாலத்தில் ஒருநாள் குற்றாலக் குறவஞ்சி ஒருவரும் பொதியமலைக் குறவஞ்சி ஒருவரும் தத்தம் ஊரிலிருந்து புறப்பட்டு மதுரையை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார்கள். இருவரும் திருநெல்வேலி வீதியிலே ஒருவரையொருவர் சந்திக்க நேர்ந்தது.

ஒத்த தொழில் சார்ந்த இருவரும் தமக்குள் மகிழ்ந்து ஒன்றாய்த் தமது பயணத்தைத் தொடர்ந்தனர். தங்களைத் தாங்களே அறிமுகம் செய்து கொள்ளுகின்றனர். அப்பொழுது குற்றாலக் குறவஞ்சி தங்களின் மலைதான் சிறந்தது என்று பெருமையாகப் பேசுகின்றாள். மிகைப்படுத்தியும் புதினமாகவும் பேசும் இவரை அவ்வூரார் 'விண்ணானக் குறத்தி' என்றும் சொல்வதுண்டு.

குறத்தி சொல்வதைப் பார்ப்போ:
தேனருவித் திரையெழுப்பி
வானின்வழி ஒழுகும்
செங்கதிரோன் தேர்க்காறும்
பரிக்காலும் வழுகும்
தவமுனிவர் கூட்டுறவும்
அவர் இருக்கும் குகையும்
சஞ்சீவி முதலான
விஞ்சைமூ லிகையும்
கவனசித்தர் ஆதியரும்
மவுனயோ கியரும்
தவமிருக்கும் கயிலாயம்
ஒத்திருக்கும் அம்மே.

என்று தனது குற்றாலம் பற்றிப் பாடுகின்றாள். இதைக்கேட்ட பொதிய மலைக் குறவஞ்சி, "வஞ்சியே! எனது மலையின் பெருமையை மறைத்துவிட்டு நீ பெருமை பேசுகிறாய். பொதியமலையைப் பாடாத புலவர் உண்டோ? மலையின் முடியிலே வெண்மதி தவழும். தமிழ் வளர்க்கும் அகத்தியர் அங்கேயே தங்கி வாழ்கிறார். அங்கயற்கண்ணி அம்மைபோல அருளருவி நீர் சொரியும் பொதியமலை போல் இவ்வுலகில் வேறு உண்டோ?" என்கிறாள்.

திங்கள்முடி சூடு மலை
தென்றல்விளையாடும் மலை
தங்கும் முகில் சூழுமலை
தமிழ்முனிவன் வாழுமலை
அங்கயற்கண்ணி அம்மைதிரு
அருள்சுரந்து பொழிவதென
பொங்கருவி தூங்கும் மலை
பொதியமலை என்மலையே.

என்று பாடினாள் பொதியமலைக் குறவஞ்சி.

அது கேட்ட குற்றாலக் குறவஞ்சி, கொஞ்சம் அடங்கிப் போனாள். ஆயினும் இன்னொரு விதமாகத் தன் மலைவளங் கூற முற்படுகிறாள். பழங்களும் மலர்களும் குற்றாலத்திற்றான் நிறைய உண்டு என்கிறாள். மாம்பழங்களைக் குரங்குகள் பிடுங்கிப் பந்தடித்து விளையாடும்; செண்பக மலர்களின் வாசனை வானுலகம் வரை மணக்கும். திரிகூட மலை எனப் பெயர் பெற்றது எங்கள் குற்றாலம் என்கிறாள்.

செழுங் குரங்கு தேமாவின்
பழங்களைப் பந்தடிக்கும்
தேனலர்கள் பகவாசம்
வானுலகில் வெடிக்கும்
வழங்குகொடை மகராசர்
குறும்பலவில் ஈசர்
வளம்பெருகும் திரிகூட
மலையெங்கள் மலையே.

என்பது குற்றாலக் குறவஞ்சி தரும் பாடலாகும்.

அப்படியானால் பொதிய மலையில் அதுபோன்ற வளம் எதுவும் இல்லையா? இருக்கிறது என்கிறாள் பொதியமலைக் குறவஞ்சி! "மலையிலே வள்ளிக்கிழங்கை அகழ்ந்தெடுப்போம்; குறிஞ்சி மலர் கொய்து முல்லைக் கொடியில் தொடுத்து விளையாடுவோம்; மலைத்தேனும் பழச்சாறும் கலந்து உண்போம்; புலித்தோலை உடுப்போம்; அங்கயற் கண்ணி அம்மையைத் தொழுது வரம் பெறுவோம்" எனக் கூறிப் பெருமைப்படுகிறாள்.

கொழுங்கொடியின் விழுந்த வள்ளிக்
கிழங்குகல்லி எடுப்போம்
குறிஞ்சி மலர் தெரிந்து முல்லைக்
கொடியில் வைத்துத் தொடுப்போம்
பழம்பிழிந்த கொழுஞ்சாறும்
தேறலும்வாய் மடுப்போம்
பசுந்தழையும் மரவுரியும்
இசைந்திடவே உடுப்போம்
செழுந்தினையும் நறுந்தேனும்
விருந்தருந்தக் கொடுப்போம்
வன வேங்கைப் புலித்தோலின்
பாயலின்கண் படுப்போம்
எழுந்துகயற் கணிகாலில்
விழுந்துவினை கெடுப்போம்
எங்கள் குறக் குடிக்கடுத்த
இயல்பிதுகாண் அம்மே!

எனப் பொதியமலைக் குறவஞ்சி தனது மலையின் பெருமைபற்றிப் புகழ்ந்து உரைக்கின்றாள்.

இவ்வாறு (நிகழ்காலப் பெருமைகளைக் கூறிப் புகழ்ந்த) குற்றாலக் குறவஞ்சிக்கு பொதியமலைக் குறவஞ்சி (பதிலாகத்) தனது மலைப் புகழ்பாடி நிற்கிறாள்.

இனிமேல் என்ன புதினம் பேசினால் பொதியமலைப் பெண்ணை மடக்கலாம் எனக் குற்றால மாது யோசிக்கிறாள். எங்கள் பழம்பெருமை கூறினால் பொதியமலை மாதை வெல்லலாம் எனப் பாடத் தொடங்குகிறாள்.

(வளரும்)

# காலந்தோறும் ஊற்றெடுக்கும் இன்பம்

போஜினி பஞ்சலிங்கம்

மனிதனுடைய முழுமையான உருவாக்கத்துக்குப் பரவலாகவும், ஆழமாகவும், அழுத்தமாகவும் வித்திடும் ஒரே ஒரு சாதனம் இலக்கியமே ஆகும். அதாவது நல்லனவற்றையும், தீயனவற்றையும் - நியாயபூர்வமாகவும், தர்க்க ரீதியாகவும் வேறுபடுத்திக் கூறுவன இந்த இலக்கியங்களே. உரையினாலோ அல்லது செய்யுளினாலோ இயற்றப்படும் நூல்கள் எல்லாம் பொதுவாக இலக்கியத்தின் பாற்படும். எனினும் வாழ்க்கையின் கண் வரும் அனுபவங்களை அழகுறப் புனைந்து கூறும் நூல்களே சிறப்பான இலக்கியம் எனக் கருதத்தக்கன. இலக்கிய நூலாசிரியன் ஒருவனுடைய மனோபாவம், அனுபவம், குறிக்கோள், சூழல் முதலியவற்றுக்கு இணங்கவே அவன் இயற்றுகின்ற நூலின் நடை, தன்மை, அமைப்பு முதலியன உருக்கொள்ளும். ஆதலினால் அந்த நூலைச் செவ்வனே படித்து இன்புறுவதற்கு அவனுடைய வாழ்க்கை, சூழல் முதலியவற்றை நாடி அறிதல் அவசியமாகிறது. அந்த வகையிலே இலக்கியமானது கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல், நாடகம் எனப் பல்வேறு வடிவங்களாகி இன்பத்தைப் பயக்கின்றது.

இலக்கிய இன்பம் ஊற்றெடுக்கத் தொடங்கிய காலமாக சங்க காலத்தைக் குறிப்பிடலாம். சேர, சோழ பாண்டியர் ஆட்சி புரிந்த கிறிஸ்துவுக்குப் பின்னரான முதல் மூன்று நூற்றாண்டு காலப் பகுதியிலேயே இன்பம் பயக்கும் அகத்திணை, புறத்திணை சார்ந்த எட்டுத்தொகை, பத்துப் பாட்டு எனப்படுகின்ற பதினெண் மேற்கணக்கு நூல்கள் தோற்றம் பெற்றன. இந்தக் கால இலக்கியங்களிலே தலைவன், தலைவியருக்கு இடையிலான தூய காதலானது இன்பம் பயக்கத்தக்க வகையில் கருத்துடை செய்யுள்களாக ஆக்கப்பட்டுள்ளன. எடுத்துக் காட்டாக :-

"யாயும் ஞாயும் யாராகியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளீர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சம் தான் கலந்தனவே"

எனும் பாடலிலே சிவந்த மண் நிலத்திலே பொழிந்த மழை நீருக்கு ஒப்பாகச் சுட்டிக் காட்டப்படும் தலைவன், தலைவியருக்கு இடையிலான கருத்தொருமித்த நிலை சங்க கால இலக்கிய இன்பத்தை வெளிப்படுத்தி நிற்கின்றது எனலாம்.

சங்ககாலத்திலே காதல் இன்பத்தையும் போர் வீரத்தையும் மிகையாகவே கூறி நின்ற இலக்கியங்கள் சங்கமருவிய காலத்திலே அந்த நிலையில் இருந்து மாறுபட்டு அறநூல்களாக வளர்ச்சி கண்டன. சங்ககால மக்களுக்கு அக வாழ்விலும் புறவாழ்விலும் ஏற்பட்ட சலிப்பே அற நூல்களின் தோற்றத்துக்கு வித்திட்டது எனலாம். இந்தத் தன்மை உடையதாகக் குறித்த கால மக்களின் வாழ்க்கை முறையினை இயல்பாக எடுத்துக் கூறுவதனாலேயே இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடி எனப்போற்றப்பட்டன. பெருங்காப்பியங்கள் ஐந்தினுள் காலத்தால் முந்திய சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சங்கமருவிய காலப் பகுதிக்கு உரிய செம்மை சான்ற இலக்கியங்கள் ஆகும். காலத்தின் போக்குக்கு இணங்க இலக்கியங்கள் அமைகின்றது என்பதற்கு மணிமேகலை சிறந்த உதாரணம் ஆகும்.

இந்த வண்ணமாக அடுத்து வந்த பல்லவர், சோழர் முதலிய காலங்களிலும் தோற்றம் பெற்ற இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடியாகவே விளங்குகின்றன. பல்லவர் காலம் பக்தி நெறிக் காலம் எனக்கூறப்படும் அளவுக்கு பக்தி இலக்கியங்களின் வளர்ச்சி காணப்பட்ட அதேவேளை சோழர் காலம் பொற்காலம் எனக் கூறப்படுவதற்கு ஏற்ப பல்துறை வளர்ச்சியும் காணப்பட்டது. எனவே இந்தக்கால இலக்கியங்களிலும் மக்களின் வாழ்வியல் முறைகள் உணர்ச்சி மிக்க செய்யுள்களாகவும் உரைநடைகளாகவும் இன்பச் சுவை ததும்ப எடுத்துக் கூறப்படுகின்றன.

மேற்கூறியபடி கால வரன்முறையில் தோன்றிய இலக்கியங்களில் காணப்படும் இன்பச் சுவையைப் போலவே அவ்வப்போது பாவேந்தர்களால் ஆக்கப்பட்ட இலக்கியங்களிலும் இன்பச் சுவை ஊற்றெடுக்கக் காணலாம். அந்த வகையிலே கலைமகள் அருள் பெற்ற உண்மைக் கவிவாணன் பாரதியின் இலக்கியங்களிலும் இன்பச் சுவையைக் காணமுடியும். சான்றாக;

"அல்லிக் குளத்தருகே - ஒரு நாள்
அந்திப் பொழுதினிலே - அங்கோர்
முல்லைச் செடியதன் பால் - செய்தவினை
முற்று மறந்திடக் கற்றதென்னே எயன்று
சொல்ல வல்லாயே கிளியே
சொல்ல நீ வல்லாயோ



(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி பெறலாம் வாங்க!

ராகவன் அல்பி



**வேலை செய்யும் இடத்தில் சிறுசிறு விடயத்துக்கெல்லாம் சண்டை போட்டுக் கொண்டிருக்காமல் அலுவலக வேலைக்குத் தகுந்தாற்போல கண்ணியமாக நடந்துகொள்ள வேண்டும்.**

29

உங்கள் வாழ்க்கையை மாற்றப்போகும் தொடர்....

**சக பணியாளர்கள் மதிப்பதில்லை**- நீங்கள் மதிக்கும் ஒருவரிடம் இது பற்றி விவாதியுங்கள். அது அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதைத் தீர்மானிக்க உதவும். அவ்வாறு செய்தால் தானாகவே மதிப்பு ஏற்படும்.

**அரசியல்**- உங்கள் நிறுவனத்தில் ஏன் இவ்வளவு பொலிடிக்ஸ் உள்ளது என யோசித்துப் பாருங்கள். ஏன் இந்தப் பதட்டம்? இதைப் போக்குவதற்கு என்ன செய்ய வேண்டுமென்று யோசியுங்கள்.

**கெடுதல்**- பல நிறுவனங்கள் ரெசிடெண்ட் பெர்ச்ண்ட் கொண்டிருப்பார்கள். அவர்களைப் புறக்கணிப்பது என்பது சிறந்ததே. சமயத்தில் அவர்கள் உங்களைக் கீழே தள்ளி விடவும் வாய்ப்பு இருக்கிறது.

**அமைதி இல்லை**- தொடர்ந்து தொல்லையுற்று அமைதியுற்று இருப்பதாக இருந்தால், அமைதியாக இருப்பதற்கான வழிமுறைகளைக் கண்டறிய வேண்டும். அதன் முக்கியத்துவத்தைப் பிறருக்கும் தெரிவிக்க வேண்டும். அதை மற்றவர்களும் நீங்களும் பின்பற்றும் போது தொல்லைகள் போய் அமைதி உண்டாகும்.

**முதலாளியும் பணியாளர்களும்**- நடக்கும் அத்தனை விடயத்துக்கும் முதலாளிதான் காரணம் என்று சாதாரணமாகப் பழி போட்டுவிடும் மனநிலை வருவது எளிது. உங்கள் முதலாளிக்கு அடைய வேண்டிய இலக்குகள் இருக்கும். குறிப்பிட்ட பட்ஜெட்டுக்குள் வேலையைச் செய்தாக வேண்டியிருக்கும். சகபணியாளர்களைத் திறம்படச் செயலாற்றும் விதத்தில் உற்சாகப்படுத்த வேண்டியிருக்கும். அதனால் வெறுமனே உங்கள் முதலாளியை மட்டும் குறை கூறுவதை விட்டு விட்டு எல்லோரும் பொறுப்புக்களைப் பகிர்ந்து கொண்டு வேலை செய்ய வேண்டும்.

சில சமயத்தில் பணிபுரியும் இடத்தில் மோசமான சூழ்நிலைகள் ஏற்படலாம். அதுபோன்ற சமயங்களில் அந்த அபாயங்களைத் தெரிவிக்கின்ற நபராக நீங்கள் இருக்கலாம். வேலை செய்யும் இடத்தில் சிறுசிறு விடயத்துக்கெல்லாம் சண்டை போட்டுக் கொண்டிருக்காமல் அலுவலக வேலைக்குத் தகுந்தாற்போல கண்ணியமாக நடந்துகொள்ள வேண்டும். நம்மைச் சுற்றியுள்ளவர்களின் பாதுகாப்புக்கும் நலத்துக்கும் நாம்தான் பொறுப்பு. அதனால்ஒரு அபாயம் நடக்கப்போவதை உணர்ந்து கொண்ட பின்பும் கண்ணை மூடிக் கொண்டு போவது நல்லதல்ல.

**முதலாளியைக் கையாள்வது எப்படி**- முதலாளி உங்களை விட அதிக அதிகாரம் படைத்தவர்தான். ஆனால் நீங்கள் இல்லாமல் அவரால் வெற்றி பெற முடியாது. பின்வரும் அத்தியாயத்தில் உங்கள் முதலாளியை எவ்வாறு எளிதாகக் கையாளலாம் என்பது குறித்த ஆலோசனைகள் தரப்பட்டுள்ளன.

**அனைத்தையும் எழுதுங்கள்**- மற்றவர்கள் வாய்மொழியில் ஒப்புக்கொண்டதை நம்பி இருக்காதீர்கள். அது எளிதில் மறந்துபோக வாய்ப்பிருக்கிறது. அதனால் எழுதி அவர்களிடம் ஒப்புதல் பெறுங்கள்.

**புரிந்து கொள்ளுதல்**- அவர்களுடைய விருப்பு, வெறுப்புகள், பயங்கள், நம்பிக்கைகள், என்னவென நன்கு தெரிந்து கொள்ளுங்கள். எது அவர்களை உற்சாகப்படுத்துகிறது என்பதையும் அறிந்து கொண்டால் அவர்களை எளிதாகக் கையாளலாம்.

**லட்சியம்**- நீங்கள் தற்போது எந்த இடத்தில் இருக்கிறீர்களோ அங்கேயே இருப்பீர்கள். வேறு எங்கும் போகமாட்டீர்கள் என்ற நிலையிலும் உங்கள் இலட்சியங்கள் என்னவென்பது தெளிவாகச் சொல்லப்பட வேண்டும். நீங்கள் என்ன விரும்புகிறீர்கள் என்பது கண்டிப்பாக உங்கள் முதலாளிக்குத் தெரிய வேண்டும்.

**சொன்னதைச் செய்தல்**- உங்கள் முதலாளி சொன்னதை, சொன்ன நேரத்தில், சொன்ன தரத்தில் செய்து முடிப்பதற்கு பதிலீடு வேறு இல்லை. ஒரு வேலையைச் சொல்லிவிட்டு உங்கள் பின்னாலேயே அவர்கள் அலைந்து கொண்டிருக்காமல் நீங்களே உடனடியாகச் செய்து முடித்துவிடுவது நிறையப் பாராட்டைப் பெற்றுத் தரும்.

**பின்னால் நில்லுங்கள்**- எல்லோரும் தவறு செய்பவர்கள்தான். உங்கள் முதலாளி எப்போதேனும் தவறு செய்ய நேரிடும் போது அதைச் சுட்டிக்காட்டி அவரைக் காப்பாற்ற வேண்டும்.

**தேவையான விடயங்களைச் சொல்லுதல்**- வேலைகளில் படுபிஸியாக இருக்கும்போது பல தகவல்களைத் தேடித் தெரிந்து கொள்ளுதல் கடினம். உங்கள் முதலாளிக்குத் தேவையான நேரத்தில் சரியான தகவல்களை அளிப்பது நிச்சயம் உங்களுக்குப் பரிசுகளைப் பெற்றுத் தரும்.

**சக பணியாளர்கள்**- புத்திசாலித்தனம் நல்லது, ஆனால் சகபணியாளர்களைக் குற்றம் சாட்டுவது மோசமானது.' ஆனால் அவர்கள் வரம்பு மீறிப் போகும் போது அது நியாயமானதுதான்.

**பிறந்தநாளை நினைவில் வைத்திருங்கள்**- மிகக் கடுமையான முதலாளிகளிடம் கூட மனசில் ஈரமிருக்கும். அவர்களின் பிறந்தநாள், திருமண நாள் போன்றவற்றை நினைவில் வைத்துக் கொண்டு அந்த நாளில் வாழ்த்துக் கூறினால் மகிழ்வார்கள்.

## ஏதிருந்தேது பயன்



"ஹலோ"...
வலைவீசியபடி
கழுத்திடுக்கில் கைப்பேசி
மீன் வருமோ இல்லையோ
'கோல்' வரும் கட்டாயம்

தொழில்நுட்பம் வளர்ந்து
தொண்டைவரை வந்து
இறுக்கி நிற்கிறது
மானுடத்தை...

வீட்டிலே ஆளுக்கொரு ரீவி
அதன் நடுவே
வலைப்பின்னல்...
தரவிறக்கம் செய்தபடி
தலைப்பேசி கொழுவி
காணொளி காணும் நம்மவர்க்கு..

அந்தநாளில்
ஊருக்கொரு கறுப்பு வெள்ளை
[illegible]
ஏன் தெரிய [illegible]

பழசு பழசென்று புதுமை
கண்டவனுக்கு
பெண்சாதி கூட புதிசு புதிசாய்
தேவை தெரியுமோ?

ஏன் பறைவான்
கைப்பேசிக் குறுஞ்செய்தி
காமக் நெருப்பு எரிந்து
கருக்கலைப்பு வரை செல்ல..

மறுபுறம் பத்திரிகைச் செய்தி நீளும்..
பாலியல் வல்லுறவு..
பெரியப்பன் சித்தப்பன்
பேதமேதுமில்லாப் பெருந்துயர்
இது...!

பண்பாடு கலாசாரம் என்று
ஒன்றுக்கு பலமுறை கூறி
மூலை முடுக்கெல்லாம்
மன்றமும் பேரவையும்
மாநாடும் வைப்போரே...!
இழுத்து மூடுங்கள் உங்கள் அவைகளை!

பெண்மைகளை
கொண்டுவந்து சந்தியில் விட்ட
சனியன்களே...
[illegible]ந்த முடியா உங்கள் பேரவைகளைச்
சாற்றுவதாற் பயனென்?

- சுபாஷினி பிரணவன்

பள்ளிக்குச் சென்...
என்கடன் ப...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிமைகளின் மீட்பர்

## ஆபிரஹாம் லிங்கன்

30

பா.உண்மை

நெடுந் தொடர்



"ரோட்டில் சாதாரணமாக இரண்டு பேர் காரசாரமாக விவாதிப்பதைக் கேட்கவே எல்லோருக்குமே ஆசை இருக்கும். அதிலும் ஒரே மேடையில் வெவ்வேறு அரசியல் கட்சியைச் சேர்ந்த இரண்டு பேர் பேசுகிறார்கள் என்றால் கேட்க வேண்டுமா? கூட்டம் அலை அலையாகத் திரண்டு வந்தது. அது வரை அமெரிக்க வரலாற்றில் ஒரு மேடைப் பேச்சைக் கேட்க அவ்வளவு கூட்டம் கூடியதில்லை."

குடியரசுக் கட்சியில் இணைந்தார் லிங்கன். இல்லினாய்ஸ் மாநிலக் குடியரசுக் கட்சியின் மாநாடு 1858, ஜூன் மாதம் 16 ஆம் திகதி ஸ்பிரிங்பீல்டில் நடந்தது. அந்த மாநாட்டில், மாநில செனட்டர் தேர்தலுக்கு லிங்கன் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அந்தத் தேர்தலில் டக்ளஸும் வேட்பாளராக நின்றார். சிக்காகோவில் நடந்த பிரசாரத்தில் சூடு பறந்தது. டக்ளஸ் லிங்கனைத் தாக்குத் தாக்கென்று தாக்கினார். அடுத்தநாள் சிகாகோவில் பேசிய லிங்கன், டக்ளஸின் ஒவ்வொரு வார்த்தைக்கும் பதில் கொடுத்தார். கறுப்பின மக்கள் சமமாக நடத்தப்பட வேண்டும் என்ற அறைகூவலை கோரிக்கையாக மக்கள் முன் வைத்தார்.

லிங்கனும் டக்ளஸும் மேடையில் மோதிக் கொள்வதை மக்கள் ரசிக்கத் தொடங்கியிருந்தார்கள். பல ஊர்களிலிருந்து இருவரையும் பேச வரச் சொல்லி அழைப்புக்கள் வரத் தொடங்கின. இறுதியில், லிங்கனும் டக்ளஸும் ஒரே மேடையில் வாதம் செய்ய ஒப்புக் கொண்டார்கள்.

ஒட்டாவா, ஃப்ரீபோர்ட், ஜோன்போரோ, சார்லெஸ்டன், கேல்ஸ்பர்க், குவின்சி, அல்டன் ஆகிய ஊர்களில் இருவரும் சொற்போர் நடத்த ஒப்புக் கொண்டார்கள்.

சொற்போருக்கு நாள் குறித்ததிலிருந்தே லிங்கன் பரபரப்பாக இருந்தார். நிறையப் படித்தார், தகவல்கள் சேகரித்தார், குறிப்புக்கள் எடுத்துக் கொண்டார். ஒரு நாள் இரவு, தன் நண்பர்களைக் கூட்டிவைத்து, அவர் பேசப் போகும் வாதங்களை வாசித்துக் காட்டினார். அவர்களது கருத்துக்களைக் கேட்டார். தம் வாதத்தில் 'ஒரு குடும்பம் இரண்டுபட்டால் உருப்படாது' என்ற பைபிளின் கூற்றைச் சொல்லியிருந்தார் லிங்கன்.

ஒரு நண்பர் "இது பழைய கூற்று. நாட்டோடு இதை ஒப்பிடும்போது, நீங்கள் சொல்வது பொருந்தாது" என்றார். ஆனால், அந்தக் கூற்றுத் தற்காலச் சூழலோடு எப்படிப் பொருந்திப் போகிறது என்று லிங்கன் விளக்கிச் சொன்னதும் அந்த நண்பர் அமைதியாகிவிட்டார்.

ஒட்டாவா என்ற ஊரில் இந்தத் தொடர்வாதப் போரின் முதல் மேடை போடப்பட்டது.

வீதியில் சாதாரணமாக இரண்டு பேர் காரசாரமாக விவாதிப்பதைக் கேட்கவே எல்லோருக்குமே ஆசை இருக்கும். அதிலும் ஒரே மேடையில் வெவ்வேறு அரசியல் கட்சியைச் சேர்ந்த இரண்டு பேர் பேசுகிறார்கள் என்றால் கேட்க வேண்டுமா? கூட்டம் அலை அலையாகத் திரண்டு வந்தது. அதுவரை அமெரிக்க வரலாற்றில் ஒரு மேடைப் பேச்சைக் கேட்க அவ்வளவு கூட்டம் கூடியதில்லை.

1858, ஓகஸ்ட் 21. கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட தனி ரயில் பெட்டியில், மிக ஆடம்பரமான ஆடைகளை அணிந்துகொண்டு, உதவியாளர்கள் புடைசூழ வந்து சேர்ந்தார் டக்ளஸ். ஒரு அலங்கார வண்டியில், ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர்கள் அவரை ஊர்வலமாக அழைத்துப் போனார்கள்.

லிங்கன் சாதாரண ரயில் பயணிகளைப் போல, ஓர் இரண்டாந்தரப் பெட்டியில் வந்து இறங்கினார். அவருடைய ஒரு கையில் பழைய சாக்குத் துணிப் பை. இன்னொரு கையில் கைப்பிடி இல்லாத ஒரு குடை. குடை திறந்து விடக் கூடாது என்பதற்காகக் குடையை ஒரு கயிற்றைப் போட்டுக் கட்டிவைத்திருந்தார். கூட்டம் நடக்கும் இடத்துக்கு ஓர் வைக்கோல் வண்டியில் ஏறிப்போனார்.

முதலில் டக்ளஸ் ஒரு மணிநேரம் பேசுவதென்றும் அதற்குப் பிறகு லிங்கன் ஒன்றரை மணி நேரம் பேசுவதென்றும், லிங்கன் பேசி முடித்தபிறகு டக்ளஸ் அரைமணி நேரம் பேசுவதென்றும் முடிவு செய்யப்பட்டிருந்தது. அதன்படி, முதலில் டக்ளஸ் பேசினார். அவருடைய, வழக்கமான அடிமை முறையை ஆதரிக்கும் கருத்துக்களை அள்ளி அள்ளிக் கொட்டினார். இடை இடையே லிங்கனை வம்புக்கிழுத்தார்.

"லிங்கன் நீக்ரோக்களுக்குச் சரிசமமான உரிமையைக் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்" என்றார் டக்ளஸ்.

*(மீட்பர் வருவார்)*

---

...றேன் ஆசிரியர்
...கின ...த்ததனால்...
... அரசு என்னைத்
...கொடுத்திற்று

...த்து நிமிஷங்கள்
...திவுக் கொப்பியிலே
...ணும் ஒப்பம் - இல்லை
...து வரும் கோட்டம்
...டித்து
...பட்டுவிடும்

...தத்தை
...காட்டி
...வகுப்பு
...முறை
...ின் கன்றுகளை

பாலூட்ட விடுமாப்போல்
பிள்ளைகளைப் பால் குடிக்க
விட்டெடுக்க
பத்துப் பதினைந்து நிமிஷங்கள்
பிந்திவிடும் என்பதனால்
பள்ளிக்கூடம் முன்னுக்குத் தான்
மூடும்

ஒய்வறை என்றொன்றில்லை
ஒதுக்குப் புறந்தனில் நின்று
கதைத்தல் தடை செய்யப்பட்டுள்ளது
கைப்பேசி பாவனை கண்டால்
வலயப் பணிமனைக்கு
அனுப்பி
வைக்கப்படுவர்

பாடத்திட்டங்கள் உடனுக்குடன்
பதியப்பட வேண்டும்
பின்னூட்டல் வகுப்புகளைப்
பின்னேரம் எடுக்க வேண்டும்
வகுப்புக்கொரு பேப்பர் ஒரு
நாளைக்கு செய்ய வேண்டும்
அதனறிக்கை அனுப்பப்பட வேண்டும்
புள்ளிப் பகுப்பாய்வும்
செய்யப்பட வேண்டும்
புதிது புதிதாய்

கற்பித்தல் உத்திகளை
கண்டறிய வேண்டுமெனச்
செயலமர்வுகளில் அடிக்கடி
சொல்லித்தருவார்கள்
மேலதிக வகுப்புகளை
எடுக்கும் பொறுப்பை சீராக
மேற்கொள்ள வேண்டும்


எங்கள் கடன்
பணி செய்யக் கடவது
எல்லோரும் வாருங்கள் வன்னிக்கு
என்றென்றும் நன்றியுடன்
நாம் பணி புரிவோம்

...ணி செய்து கிடப்பதே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 246



அனுப்புபவர் பெயர்:..............................................

விலாசம்:..............................................

..............................................

கையொப்பம்:..............................................

### இடமிருந்து வலம்

1.திருவிழா
4.தோழன்
6.குற்றம்
7.காலடி அடையாளம்
8. தந்திரத் திறமை
11. வர்த்தக நிலையம்
12. வழங்கும்
14. தாய் வழி அமுதம் இது
15. சம்ஹாரம்
17. தந்திர மிருகம்
18. உணர்வைக் கடத்துவது
19. முள்ளந்தண்டு
20. நலம்
21. தாய், தந்தை, பிள்ளைகள் ஒருங்கு சேர
22. இந்துக்களின் பிரணவம்

### மேலிருந்து கீழ்

1. ஊக்கம் தரும் மனநிலை
2. யுத்தம்
3. தானியங்களை கலத்தில் போட்டுத் தீய்த்தலை இப்படிக் கூறுவர்.
4. பிணம்
5. வனம்
7. ஆண்கள் மத்தியில் தனது மணவாளனைப் பெண் தானே தேர்ந்தெடுக்கும் நிகழ்வு
9. நீர் பாயும் வாய்க்கால்
10. செல்வம்
13. தாமரை
14. வள்ளல் ஒருவன்
16. தமது
17. கடல்வாழ் உயிரினம்
18. கைவிரல், கால்விரல் நுனிகளில் வளர்வது
19. பசுக்கன்று
20. மங்கள

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 244 க்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) ஐப்பசி (4) ஆகவே (6) கைத்தொழில் (8) பதித்தல் (10) விதி (12) துரிதம் (13) சமாதி (14) புல் (15) புதன் (16) தாரா (17) பலம் (19) பாலம் (20) நவ (21) புயல் (22) புத்திரி

**மேலிருந்து கீழ்**

(1) ஐம்பது (2) பகைத்தல் (3) சித்தம் (4) ஆழி (5) கல்விமான் (7) தொல் (9) திரிபுரா (11) திதி (13) சதம் (15) புலம்பு (16) தாம்பு (17) பல (18) கவரி (19) பால் (20) நதி

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்ட சாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி**
**இல. 246**
*நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட்,*
*இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

என்ற முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், (02.01.2013) ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.246இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 06.01.2013 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 244 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
**வி.சுகந்தி,**
1 ஆம் வட்டாரம், முள்ளியவளை.

**2 ஆம் பரிசு**
**கு.சக்திகரன்,**
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி, சாவகச்சேரி.

**3 ஆம் பரிசு**
**றோ.மே.அ.சந்திரபாஸ்,**
வ/முருகனூர் சாரதா வித்தியாலயம், முருகனூர், வவுனியா.

**4 ஆம் பரிசு**
**திருமதி ரி.சிவதாரணி,**
புலோலி வடக்கு, பருத்தித்துறை.

**5 ஆம் பரிசு**
**எம்.எம்.எம்.இர்ஷாத்,**
இல.55 மட்டக்களப்பு வீதி, கிண்ணியா- 01

**பாராட்டுப் பெறுவோர்**

**சி.சிந்துஜா,**
இல.184, பிரதான வீதி, நெல்லியடி , கரவெட்டி.

**ம.மே.சிலெற்றீஷியா,**
இல.1625 இரத்தினபுரம், கிளிநொச்சி.

**திரு.க.சுந்தரேஸ்வரன்,**
இல.109, விநாயக முதலியார் வீதி, பருத்தித்துறை.

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ்.மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.*

# நடுவுல கொஞ்சம் பக்கத்த காணோம்

## தமிழின் இன்னொரு அத்திப் பூ



எவரும் எதிர்பாராத கணங்களில், எதிர்பாராத முனைகளில்தான் அபூர்வங்களின் வருகை நிகழ்கின்றது.. தமிழ் சினிமாவிலும் இப்படி அத்திபூத்தாற் போல சில புதிய முயற்சிகள் மேற்கிளம்புவதுண்டு. வழக்கமான பாதையைவிட்டு விலகி, அரைத்த மாவையே அரைக்காமல் தமக்கெனத் தனிப்பாதை ஒன்றில் பயணிக்கும் படைப்புகள் பெரும்பாலும் வணிக ரீதியாக வெற்றிபெறுவதில்லை. ''வீணாகக் காசைப் போட்டு கையைச் சுட்டுக்கொள்வானேன்'' என்ற எண்ணத்தில் தயாரிப்பாளர்கள் வித்தியாசமான முயற்சிகளுக்குக் களம் கொடுக்கத் தயங்குகிறார்கள். அப்படியும் சில தயாரிப்பாளர்கள் துணிச்சலோடு புதிய முயற்சிகளுக்குத் தோள் கொடுத்தாலும், அந்தப் படத்தில் வணிக ரீதியான சில சமரசங்களைச் செய்யுமாறு இயக்குநர்களை இறுதி நேரத்தில் அழுத்துவார்கள்.

இத்தகைய அழுத்தங்கள், சமரசங்கள் என்பன கடைசியில் வித்தியாசமான சிந்தனையோடு புறப்பட்ட இயக்குநரின் படைப்பையும் பத்தோடு பதினொன்றாக வழக்கமான சினிமாப் படங்களின் பட்டியலில் சேர்த்துவிடுகின்றன. இத்தகைய வணிக ரீதியான வெற்றியை மையமாகக் கொண்டு திரைப்படங்களில் புகுத்தப்படுகின்ற சூத்திரங்கள் உரிய பயனைத் தந்துவிடுகின்றன. ஒரு வெற்றியைச் சுவைத்த இயக்குநர்கள் தன்னுடைய பெயரைத் தக்க வைத்துக் கொள்வதற்காக, தாம் பயணிக்க விளைந்த 'வித்தியாசமான சினிமா' என்ற தடத்தை மறந்துவிட்டு, மசாலா சினிமாவென்ற சாக்கடைக்குள் தாமும் விழுந்துவிடுகின்றனர்.

ஆனால் இதையெல்லாம் தாண்டி வழக்கமான தமிழ் சினிமா ஒன்று கொண்டிருக்கும் பாட்டு, சண்டைக்காட்சி, ஓடியோடிக் காதலித்தல், நம்பமுடியாத - நடக்கவே முடியாத - காட்சிகள், நாயக விம்பத்தை முன்னிறுத்தும் கதை எனும் தேவையற்ற அலங்காரங்களை எல்லாம் தூக்கி எறிந்துவிட்டு நம்பிக்கையோடு பிரசவமாகியிருக்கிறது 'நடுவுல கொஞ்சம் பக்கத்தைக் காணோம்'.

தென்மேற்குப் பருவக்காற்று, சுந்தரபாண்டியன், பீட்சா என்று வித்தியாசமான கதைக் களங்களில் வெளிப்பட்ட விஜய் சேதுபதிதான் இந்தப்படத்தின் நாயகன். பாலாஜி தரணிதரன் என்ற புதுமுகமே இயக்குநர். இவர்கள் தவிர விஜய் சேதுபதியின் நண்பர்களாக இன்னும் மூன்று புதுமுக நடிகர்கள். ஆனால் இவர்கள் புதுமுகங்கள் என்பதையே மறக்கச் செய்து இயல்பான நடிப்பால் கடைசிவரையும் பார்வையாளர்களைக் கட்டிப்போட்டு இருக்கிறார்கள்.

ஒருவருடமாக உயிருக்குயிராகக் காதலித்த பெண்ணை விஜய் சேதுபதி கைப்பிடிக்க இருநாள்களே இருக்கின்றன. இந்நிலையில் நண்பர்களோடு கிரிக்கெட் விளையாடுகிறார் விஜய் சேதுபதி. அப்போது எதிர்பாராதவிதமாக பின்தலை அடிபடக் கீழே விழும் அவருக்கு கடந்த ஒருவருட கால நினைவுகள் ஞாபகத்திலிருந்து தொலைந்துவிடுகின்றன. அதன்பின்னர் ''என்னாச்சு?'' என்ற கேள்வியோடு கிரிக்கெட் விளையாடிய சம்பவத்தை அடிக்கடி சொல்லி நண்பர்களை கடுப்பிலும் பார்வையாளர்களைச் சிரிப்பிலும் ஆழ்த்துகிறார் விஜய் சேதுபதி. காதலியைக்கூட மறந்துபோன சேதுபதிக்கு இழந்துபோன நினைவுகளை மீள ஞாபகப்படுத்த நண்பர்கள் படும்பாடு எந்தவித செயற்கைப் பூச்சுகளும் இல்லாமல் யதார்த்தமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இறுதியில் விஜய் சேதுபதி தன் நினைவை மீட்டெடுத்தாரா? காதலியைக் கைப்பிடித்தாரா? என்ற வினாக்களின் முடிச்சை அவிழ்க்கிறது திரைக்கதை.

மிகமிக சாதாரணமான கதைதான். ஆனால் அதை வெகு இயல்பாகவும், வணிக சினிமாவின் வெற்றிச் சூத்திரங்கள் என்று நம்பப்பட்ட அம்சங்களைக் களைந்தும், ஆரம்பத்திலிருந்து இறுதிவரை தொய்வின்றி நகரும் திரைக்கதை மூலமும் ஒரு வித்தியாசமான சினிமாவாக தன்னை நிலைநிறுத்தியிருக்கிறது 'நடுவுல கொஞ்சம் பக்கத்தக் காணோம்'.

பெயரில் மட்டுமல்லாது படம் முழுதும் புதுமைகளைத் துணிச்சலோடு கையாண்டு இருக்கிறார் இயக்குநர். இயக்குநர் என்ன நினைத்தாரோ அதை அட்சரம் பிசகாமல் தம்முடைய நடிப்பின் மூலம்வெளிக்கொண்டு வந்துள்ளார்கள் விஜய் சேதுபதி உள்ளிட்ட நடிகர்கள். எல்லோருமே ஒருவருக்கொருவர் குறைவின்றி தம்முடைய பங்கைப் படத்துக்கு வழங்கி, வணிக ரீதியிலும் வெற்றி பெறப் பாடுபட்டு இருக்கிறார்கள். புதிய முயற்சிகள் வணிக ரீதியில் வெற்றி பெறுவதில்லை என்ற வரட்டுச் சித்தாந்தத்தின் மீது ஒற்றைப் பேரிடியாய் வீழ்ந்திருக்கிறது 'நடுவுல கொஞ்சம் பக்கத்தக் காணோம்'.

எங்கள் மொழியிலும் சர்வதேசத் தரத்துக்கு நிகரான திரைப்படங்கள் உண்டென்று ஒவ்வொரு தமிழனும் இனிவரும் காலங்களில் சொல்லிக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையில் 'நடுவுல கொஞ்சம் பக்கத்தக் காணோம்' தந்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜெ.துசாந், தரம்-7,
யா/சரசாலை ஸ்ரீ கணேச வித்தி.




சு.திவ்வியா, தரம்-7,
யா/சன்மார்க்க மகா.வி.



ர.குகராம், தரம்-7,
யா/கைதடி குருசாமி வித்தி.




உ.சாம் டில்சாந், தரம்-4,
யா/உடுவில் மகளிர் கல்லூரி



எஸ்.அனிருத்தன், தரம்-1, மானிப்பாய் மகளிர் கல்லூரி







ஈ.சித்தியா, தரம்-4சி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி



பா.தர்ஸிகா, தரம்-4, யா/சுப்பிரமணிய வித்தி.

# தமிழ் மொழியின் சிறப்பு



''கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திலே முன் தோன்றிய மூத்தகுடி தமிழ்க் குடி'' குமரிமுதல் இமயம் வரையாக குடி கொண்டு வாழ்ந்த மூத்த தமிழ். தன்னிகரற்ற காவியங்கள் பலவற்றைத் தன் ஆபரணமாகப் பூண்ட தமிழ். செந்தமிழின் பெருமை சொற்களுக்குள் அடங்காது. எனினும் இமயத்தின் பெருமையை சிறுகல் செப்புவது போல் சில கருத்துக்கள் அமைகின்றன.

சங்க காலத்தில் முச்சங்கங்கள் அமைத்து தமிழை வளர்த்தனர். இக் காலத்திலேயே எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்கள் எழுச்சி பெற்றன. அடுத்ததாக சங்கம் மருவிய காலத்தில் உலகப் பொது மறையான திருக்குறள் திருவள்ளுவரால் எழுதப்பட்டது. இந்த நூலானது அக் காலத்தில் மட்டுமன்றி எக் காலத்திற்கும் பொருந்தக் கூடிய நூலாக அமைகிறது. இந் நூலினைப் பல மொழிகளில் மொழி பெயர்த்துள்ளனர். இதிலிருந்து நமது தமிழ் மொழியின் சிறப்பினை அறியக்கூடியதாக உள்ளது. பல்லவர்காலப் பக்தி இயக்கத்தின் மூலம் பல தமிழ்ப் பாடல்கள் இடம்பெற்றன. அடுத்து சோழர்காலத்தில் இந் நூல்கள் எல்லாம் தொகுக்கப்பட்டு இன்று வரை பயன்பாட்டில் உள்ளன. ''திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்'' என்ற வகையில் தேனிலும் இனிய திருவாசகத்தின் மூலமே தமிழின் சிறப்பை அறியலாம். எமது தமிழின் சிறப்பினை ஐம்பெரும் காப்பியங்கள், ஐந்து சிறுகாப்பியங்கள் போன்ற பல நூல்கள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

தமிழ்ப் புலவர்களாலும், பெண்பாற் புலவர்களாலும் இயற்றப்பட்ட பாடல்கள், நூல்கள் பல உள்ளன. இந்த நூல்களை எழுதுவதற்கு அக்கால மன்னர்களும் புலவர்களுக்கு ஆதரவு அளித்தனர். இதற்கு சான்றாக அதியமானைக் குறிப்பிடலாம். இந்தப் புலவர்களால் எழுதப்பட்ட பாடல்களும், நூல்களும் தமிழின் பெருமையை எடுத்துரைக்கின்றன.

தமிழ் மொழியானது இருநூற்று நாற்பத்து ஏழு தனி எழுத்துக்களைத் தன்னகத்தே கொண்டது. இவற்றிலே தமிழுக்கு சூட்டிய அழகுக் கிரீடமாக 'ழ'கரம் விளங்குகின்றது. மலையாளம் தவிர்ந்த வேறெந்த மொழியிலும் இது காணப்படவில்லை. தமிழின் ''ழ,ள,ல'' வேறுபாடுகள் இசை ஒலியில் இனிமை பரப்புவன. தமிழின் இனிமையும் மென்மையும் தன்னிகரற்றன. மொழிச் சிறப்பின் தாக்கத்தை இசைகளில்லாத ஓர் அமைதியான அற்புதமான நிறைவைத் தமிழ் பாடல்களைக் கேட்கின்ற போது உணரலாம். இதனால் தான் ''தமிழுக்கு அமுதென்று பேர் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்'' என்று பாவேந்தர் பாரதிதாசன் பாடியுள்ளார்.

ஆதியில் பிறந்த மொழிகளாய் ஆரியமும் தமிழும் கருதப்படுகின்றன. இவற்றிலிருந்து பல மொழிகள் பிறந்து வளர்ந்தன. தூய்மைச் சிறப்பை விளக்கும் இவை தொன்மையும் செம்மையும் உடையன. இதில் வடமொழித் தாயின் குழந்தைகள் மட்டும் உயிரோடிருக்க, தென்மொழித் தாயான தமிழோ தன் குழந்தைகளுடன் மங்காப்புகழ் பெற்று குன்றாத இளமையுடன் திகழ்கின்றது. ''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்'' என்றார் மகாகவி. ஓசைக்கும் ஒலிக்குமிடையே நுணுக்கமான வேறுபாடு உண்டு. தமிழுக்கு மட்டுமே உரிய தாய் சிறப்பொலிகளும், சிறப்பெழுத்துகளும், பல ஓவியங்களும் செந்தமிழில் காணப்படுகின்றன. கம்பராமாயணக் காட்சிகள் இதற்கு நல்ல சான்றுகளாகும். திருப்புகழ் தெய்வத்தின் சிறப்பைப் பாடுவதாக உள்ளது. உதாரணமாக ''முத்தைத்தரு பத்தித் திருநகை'' என்ற பாடலின் தமிழ் ஒலிச் சத்தம் கேட்டால் மட்டுமே உணரத் தக்க அழகுடையது. இலகு தமிழில் இன்றி கடின தமிழ் நூல்கலான தொல்காப்பியம் பெரிதும் பொருள் செறிந்த பொக்கிஷமாகும்.




தமிழ் அறிஞர்கள் பலராலும் எமது தமிழ் பெருமையடைகிறது. அந்த வகையில் எல்லோருக்கும் விளங்கக் கூடிய புதுக்கவிதை மூலம் பாடல்களைத் தந்த பாரதியார், பாரதிதாசன் போன்றோராலும் ஆறுமுகநாவலர், விவேகானந்தர், விபுலானந்தர், சி.வை தாமோதரம் பிள்ளை, சோமசுந்தரப் புலவர் இவர்களைப் போன்று இன்று வரையும் பல தமிழ் அறிஞர்களினால் தமிழானது சிறப்படைகின்றது.

செல்வி:ஆர்த்திகா சுவேந்திரன்.




பட்டம் ஒன்று வானத்தில் பறந்து கொண்டிருந்தது. மிக உயரத்தில் பறந்ததால் அதற்கு செருக்கு உண்டாயிற்று. கீழே பூக்களின் மீது பறந்துகொண்டிருந்த வண்ணத்துப்பூச்சியைப் பார்த்து, 'இத்தனை சிறிதாக, தாழப் பறந்து கொண்டிருக்கிறாயே, என்னைப் பார்த்தாயா, நான் வானத்தைத் தொடுமளவு மேலே பறக்கிறேன்' என்று பெருமை பேசியது.

பட்டாம்பூச்சி பதிலுக்கு, ''நான் என் விருப்பப்படி பறக்கிறேன். நீயோ அடிமையாய் நூலால் கட்டப்பட்டு ஒரு சிறுவனின் விருப்பத்துக்கு ஆடுகிறாய்'' என்றது.

## அப்துல்கலாம்



தென்கரை எழில் கொஞ்சும்
பொன்மாலை கடற்கரையாம்
தமிழகத்தில்
புகழுலகும் இராமேஸ்வரத்தில்
பிறந்துதித்தார் கலாம்
இளந்துடிப்பும் மிடுக்கான
பார்வையும் அளவுலாவும்
அறிவும் வானளாவும் அறிவியலும்
விண்ணளாவ மிளிர்கின்றன
எளிமையான உடைதனிலே
பார் போற்றும் குடியரசுத் தலைவராயும்
அணு விஞ்ஞானியாகவும் மிளிர்கின்றார்
இளமை முதல் சுறு சுறுப்பும்
தன் சுயதேடல் கற்கை நெறிகளும்
விண்ணளாவ ரொக்கெட்டுகளாய்
வலம் வருகின்றன வான்வெளியில்

க. கீர்த்தன்,
யா/ஸ்ரீசோமஸ்கந்த கல்லூரி, புத்தூர்.

## வான்கோழி


வான்கோழி வளர்ப்புப் பறவைகளுள் ஒன்றாகும். இறைச்சிக்காகப் பயன்படும் இதைப் பல நாடுகளில் பண்ணை அமைத்து வளர்க்கிறார்கள்.

வட அமெரிக்கா கண்டத்தில் காட்டுப் பறவைகளாக வாழ்ந்தவற்றை அந் நாட்டில் குடியேறிய ஸ்பானியர்கள் தமது நாட்டுக்கு கொண்டுசென்றனர். அங்கிருந்து அவை பிற நாட்டுக்கு பரவின.

வளர்ப்பு வான்கோழி, காட்டு வான் கோழி என இரு வகைகள் உண்டு. வளர்ப்பு வான்கோழிகள் உருவில் சற்று சிறியவை. ஆண் பறவை ஒரு மீற்றர் வரை வளரும்.

காட்டு வான் கோழி உருவில் பெரியது. அடர்ந்த காடுகளில் கூட்டம் கூடமாக வாழ்கின்றன. காய், கனி, விதை, தானியம், புழு, பூச்சி என்பவற்றை உணவாக உட்கொள்கின்றன.

சா.ஜிந்துஜா,
கோண்டாவில்.



## விடை தெரியுமா? 191

### உங்களுக்கும் பரிசில்கள்

1. படகு வடிவில் அமைந்துள்ள நாடு எது?
2. உலக சாரணியர் தினம் எப்போது கொண்டாடப்படுகின்றது?
3. ஞாயிற்றுத் தொகுதியில் மிகப் பெரிய கோள் எது?
4. பிரான்ஸ் நாட்டின் தேசிய மலர் எது?
5. எமது உடலில் நாளொன்றுக்கு வெளியேற்றப்படும் சிறுநீரின் அளவு யாது?

### விடைகள் 189

1. இலங்கை
2. வாலன்டீனா தெரஸ்கோவா
3. எகிப்தியர்
4. வாத்து
5. அலெக்சாண்டர் போப்

### வெற்றி பெற்றோர் விவரம் (187)

* செ.விஜிதா, தரம் -8, கிராஞ்சி அ.த.க.பாடசாலை
* கி.கோபிகா, தரம் -5, வண் ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயம்
* சு.கோபீஷன், தரம்-7, இந்துக் கல்லூரி

### விடை தெரியுமா?

தெரிந்தால் 29 .12.2012 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் "சிறுவர்கதிர்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் மனதை வெல்வது எப்படி...?



திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் **"திலகம்"**, உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

*தலைமுறை தலைமுறையாக பெண்களின் மனதைக் கவர ஆண்கள் முயற்சி செய்து கொண்டுதான் இருக்கின்றனர். என்னதான் பெண்களுக்குப் பிடிக்கும்? என்று குழம்பித்தான் போகின்றனர் ஆண்கள்.*



சு.சுபா
4ஆம் கட்டை,
மானிப்பாய்.

அநேக ஆண்களின் கவலை என்னென்னவோ செய்தும் இந்த பெண்களை எளிதில் கவர முடியவில்லையே என்பது தான் இன்றைய தலைமுறை இளைஞர்களின் ஆதங்கம். இதற்காக எத்தனையோ ஆண்கள் தங்களின் சுயத்தை இழந்து அநேக வேடங்களை போடுகின்றனர். ஆனால் இந்த நடிப்பினைப் பெண்கள் எளிதில் இனம் கண்டு கொள்வதால் அநேக ஆண்களின் முயற்சி தோல்வியிலேயே முடிகிறது.

உண்மையாக இருந்தால் மட்டுமே பெண்களை எளிதில் கவரமுடியும் என்று பலருக்குத் தெரிவதில்லை.

**பெண்கள் மனதை கவருவது எப்படி என்பது குறித்து உங்களுக்காக சில யோசனைகள்: பின்பற்றிப் பாருங்களேன்.**

நாம் எதற்காகவாவது அதீத முயற்சி செய்தால் அது கிடைக்கும் வரை நமக்குப் போராட்டம் தான். பெண்கள் விடயத்தில் இது ஒரு படி மேலாகவே இருக்கும்.

பெண்களைக் கவர நீங்கள் பெரும் முயற்சி செய்யாமல் இருந்தாலே வெற்றி உங்கள் பக்கம் தான். இதுதான் பெண்களை கவருவதற்கான முதல் ரகசியம். நீங்கள் உங்கள் வேலையில் உண்மையான ஈடுபாட்டுடன் செயல்பட்டு வெற்றி பெற்றாலே அனைவரின் பார்வையும் உங்கள் பக்கம் திரும்பும். பெண்களின் கவனத்தையும் எளிதில் கவரலாம்.

இந்த ரகசியத்தை புரிந்து கொள்ளாமல் ஏராளமான ஆண்கள் தேவையற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு பெண்களிடையே வெறுப்பை சம்பாதிக்கின்றனர். பணமும், விலை உயர்ந்த பரிசுப்பொருள்களும் கொடுத்தால் பெண்களை எளிதில் கவர்ந்து விடலாம் என்று அநேக ஆண்கள் தவறாய் கணக்குப் போடுகின்றனர்.

நீங்கள் பணத்தினால் பெண்களை கவர முயலும் பட்சத்தில் உங்களை விட உங்கள் பணத்தின் மீது தான் பெண்களின் கவனம் இருக்கும். ஆகவே உண்மையான புத்திசாலித் தனத்தை பயன்படுத்தி பெண்களின் அபிப்பிராயத்தை பெற முயற்சி செய்வதே சிறந்த வழி.

பெண்களின் மனதைக் கவரவேண்டும் என்பதற்காக எத்தனையோ ஆண்கள் பகீரதப் பிரயத்தனம் செய்கின்றனர். அதையெல்லாம் கண்டு வெறுப்புற்றிருக்கும் பெண்களிடம், நீங்களும் பழைய பாணியைப் பின்பற்றி முயற்சி செய்தால் கதைக்கு உதவாது.

எனவே இயல்பாக இருந்து உங்களின் புத்திசாலித்தனத்தை வெளிப்படுத்துங்கள். பெண்களைக் கவர வேண்டும் என்பதற்காக எதையும் மிகைப்படுத்தி பேசாதீர்கள். நிறையப் படித்து விசய ஞானத்தோடு பேசுங்கள். உலக நடப்புகளை உங்களுக்குள் செய்து கொள்ளுங்கள்.

என்ன தான் புத்திசாலியாக இருந்தாலும் தோற்றத்திலும் சிறிது கவனம் செலுத்த வேண்டும். சுத்தமான உடை, கம்பீரமான தோற்றம் போன்றவையும் ஆண்களைப்பற்றி பெண்களிடையே ஒரு அபிப்பிராயத்தை ஏற்படுத்தும். உங்களின் தோற்றத்துக்கும் செயல்பாட்டிற்கும் ஒத்துப்போக வேண்டும்.

அதற்காக மிகைப்படுத்தப்பட்ட அலங்காரமோ, செயல்பாடுகளோ தேவையில்லை. சுத்தமாக இருங்கள். உங்கள் எண்ணங்களை இயல்பாய் வெளிப்படுத்துங்கள். அத்தகைய ஆண்களைத்தான் பெண்களுக்கு மிகவும் பிடிக்கும்.

பெண்களின் மனதை புரிந்து கொள்வது என்பது எவராலும் முடியாது. எத்தனையோ அறிஞர்களும், ஞானிகளும் கூட இந்த விடயத்தில் தோற்றுத்தான் போயிருக்கின்றனர். ஆண்களின் எண்ணத்திற்கு எதிராகத்தான் அநேக பெண்கள் சிந்திக்கின்றனர் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

தலைமுறை தலைமுறையாக பெண்களின் மனதைக் கவர ஆண்கள் முயற்சி செய்து கொண்டு தான் இருக்கின்றனர். என்னதான் பெண்களுக்குப் பிடிக்கும்? என்று குழம்பித்தான் போகின்றனர் ஆண்கள்.

இன்றைய 21ஆம் நூற்றாண்டு இளைஞர்களிடையேயும் இந்தச் சந்தேகம் இருக்கத் தான் செய்கிறது. எனவே மேற்கண்ட ஆலோசனைகளை பின்பற்றினாலே நீங்கள் பெண்களின் உள்ளம் கவர் கள்வனாவது நிச்சயம்.

# நம்பிக்கை துளிர்விட வேண்டும்

இன்று எந்தப் பெண்களைப் பார்த்தாலும் ஐயோ! சரியான கஷ்டம் எப்படி வாழப் போகின்றோம் என்று ஏதோ வாழ்வில் அனைத்தும் முடிந்து விட்டது என்ற ஒரு விரக்தியான உணர்வில் பேசிக் கொண்டிருப்பார்கள். உண்மையில் இப்படி மனம் சோர்ந்து போகிறவர்களைக் கண்டால் எமக்கே உற்சாகம் அற்றுப் போய்விடும் என்ற பயத்தால், சில சமயம் அந்த நபர்களை சந்திக்கவே விருப்பமில்லாமல் இருக்கும்.

இப்படியான மன நிலையோடு இருப்பதால் எம் வாழ்வில் கஷ்டம் தொலைந்து போகுமா? என்பது பற்றி உங்களுக்குள் ஒரு கேள்வியைக் கேட்டுப் பாருங்கள். புதிய முயற்சிக்கான ஆலோசனைகள் ஆரோக்கியமான சிந்தனைகள் யாவும் எம் மனதிலிருந்து முளைவிடத் தொடங்கும், அப்படி முளைவிட்ட சிந்தனைக்கு எம்மால் செயல் வடிவம் கொடுக்கும் போது, எம் வாழ்வின் கஷ்டங்கள், வறுமைகள் எந்த மாத்திரத்தில் நிலைக்கும் அனைத்தும் இருந்த இடம் தெரியாமல் துடைத்தெறியப்படும்.

நாம் ஒன்றையும் இழக்காமல் வருந்தாமல் எதையுமே அடைய முடியாது. உண்மையில் நம் வாழ்வில் அனைத்தும் இலகுவாக நிறைவேறினால் அது ஒரு வெற்றியும் இல்லை. சாதனையாகவும் அமையாது. எதிலுமே ஒரு எதிர்நீச்சல் போடும் மனவலிமை வேண்டும். அப்படி வருகின்ற போதுதான் எம்மால் உற்சாகமாகச் செயற்பட முடியும். "மலையே வந்தாலும் தலையால் சும" என்ற தத்துவத்தோடு வாழ வேண்டும்.

உலகத்தில் பிறந்த மனிதர்கள் அனைவருக்கும் ஏதோ ஒரு வகையில் துன்பங்கள் இருக்கத்தான் செய்கின்றன. அதற்காக வாழ்வே இல்லாமல் போய்விடுமா? வலிகளைத் தாங்கிய கல்லால் மட்டுமே சிற்பமாக முடியும். அது போன்றே எமது வாழ்வும் எது வந்தாலும் நன்மைக்கே என்ற நிலைப்பாடு ஏற்பட்டால் மனதில் கலக்கத்துக்கு இடமில்லை.

நாங்கள் இந்தப் பூமியை விட்டுப் போகையில் எதையும்கொண்டு போக முடியாது. இப்படியிருக்கையில் வீணாக துன்பங்களை மனதில் வலிந்து போட்டு வாழ்க்கையை நரகமாக்கலாமா? ஏதோ இன்று எம்மிடம் இருப்பதை வைத்து வாழ்ந்து கொண்டிருக் கும் நிகழ்காலத்தை மகிழ்ச்சியாக வாழப்பழக வேண்டும். இறந்த காலங்கள், முடிந்து போனவை திரும்ப வரப்போவதில்லை. எதிர்காலத்தைப் பற்றிய பயம் நிகழ்கால இன்பத்தை நிர்மூலமாக்கி விடும். அனைத்தும் எம்மில் தான் தேங்கிக் கிடக்கின்றது. நாம் முயற்சிக்காதவரை எதையுமே அடையமுடியாது.

குறிப்பாக நாம் வாழ்கின்ற வாழ்க்கையில் ஏதோ ஒன்றில் பற்று, பிடிப்பு வரவேண்டும். அப்போது தான் வாழ்வில் நம்பிக்கை ஏற்படும்.

மனிதராகப் பிறந்த நாம் அனைவரும் தன்னைத் தான் காதல் செய்ய வேண்டும். அதாவது தன்னைத்தான் அன்பு செய்ய வேண்டும். என்னையே எனக்குப் பிடிக்கவில்லை என்றால் வேறு பிடிப்பு எங்கிருந்து வரும். சிலர் முகத்தைப் பார்த்தால் எந்த நேரமும் ஒரு மலர்ச்சியிருக்கும். அவர்கள் மனம் எந்நேரமும் புதுநம்பிக்கையோடு இருக்கும். ஆனால் என்னதான் வந்தாலும் அவர்களால் மட்டும் எப்படி சிரிக்க, வாழ்வை ரசித்து வாழ முடிகின்றது என்று சிலரது மனங்கள் நினைக்கும். ஆம் அவர்களும் எம்மைப் போல் மனிதர்கள் தானே! ஏன் எம்மால் முடிவதில்லை. முயற்சித்துப் பாருங்கள். நீங்களும் அவர்களைப் போல் மகிழ்வாக வாழலாம்.


நம் வாழ்வில் நம்பிக்கை வேண்டும். அப்போது தான் அனைத்தும் நடைபெறும். தன் நம்பிக்கையின் பலப்பு ஆணிவேராக இருக்கின்ற போது எந்தச் சூறாவளிக் காற்றாலும் எம்மைப் பிடுங்கிவிட முடியாது.

எம் வாழ்வில் எம்மை உருக்குலைத்து தடுமாற வைக்கும் சம்பவங்கள் நிறையவே நடக்கும். இருந்தும் உடைந்து போக பிறந்தவர்கள் அல்லவே நாம். ஆறு அறிவு எமக்கு மட்டும் இறைவன் தந்த கொடை. அதுதான் பகுத்தறிவு.

அந்த அறிவின் மேன்மை கொண்டு தெளிவுற்றவர்களாக வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்.

படிப்படியாக கஷ்டங்களால் நாம் வாடுகின்றோமே என்று கலங்குகின்றோம்.


ஒவ்வொரு படியிலும் கால் வைக்கும் போதெல்லாம் விழுகின்றோம். என்னடா சோதனை என்று சலிப்பு வேண்டாம். விழுகின்ற ஒவ் வொரு நொடியும் நாமே தான் எழுந்தோம்; எம்மை யாரும் தூக்கி நிறுத்தவில்லை, அப்படியிருக்கையில் ஏன் அழ வேண்டும்? வென்றவர்களை விட விழுந்து விழுந்து மீண்டும் மீண்டும் எழும் நாமே என்றும் வெற்றியாளர்கள். எம் மனத்திடம் இரும்பை ஒத்தது.



சு.பூவரசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாசமே..



“துறுதுறு சிறுமியாய், தோழிகளுடன் கைகோர்த்தபடி, அவள் அந்த மரத்தைச் சுற்றி விளையாடிய நாள்கள் கண்முன் படர்ந்தது.... வீடுகள் இல்லாத போதிலும் அருகே சில குடிசைவாசிகள் வசித்தமையால் சுத்தமாக இருந்த பிரதேசம் ...... இப்போது பார்க்கையில் ......

விஜிதா இரகுநாதன்

காற்றுக்கு அவள் மேல் இன்று காதல் அதிகமாயிருந்தது. முகத்தில் சில்லென்று மோதி எத்தனை முத்தங்களைக் கொடுத்திருக்கும்.

தலைமுடி கலையாதிருக்க காதின் பின்புறமாகப் பின்னலுடன் இணைத்துக் கச்சிதமாய் பொருத்தப்பட்ட கிளிப்புகள் .... இருந்தும்,

என்ன பயன்!

எல்லை வெளியை அண்மித்ததும் காற்று தன் வேலையைக் காட்ட ஆரம்பித்தது. நானல்லவா உன் மணாளன் என்பதுபோல் அவள் கூந்தல் முடியை கொஞ்சம் கொஞ்சமாகக் கலைத்து ...... கண்ணோரமாக வந்து சில்மிஷம் செய்து கொண்டிருந்த கூந்தல் சுருளை எடுத்துக் காதின் பின்புற இடுக்கிக்குள் நுழைத்துவிட்டுக் கைகளை எடுத்தாள் ..... ஒரு விநாடிக்குள் அது மீண்டும் வந்து வருடியது,

முயன்றும்,

முடியவில்லை.

பேசாமல் கைகளைக் கட்டிக்கொண்டு இருக்கையின் பின்புறமாகச் சாய்ந்து கண்களை இறுக மூடிக்கொண்டாள்.

'காற்றே, நீ உன் இஷ்டம் போல விளையாடு ...

★ ★ ★

வீட்டை அண்மிக்கும்போதே சாலையின் குறுக்கே ஒரு மறியல் போராட்டம் ...

பாதையை மறித்து, குறுக்கே பாறி வீழ்ந்திருந்தது ஒரு முருங்கை மரம்.

'காற்றே! நீ இங்கும் வந்துவிட்டாயா....'

துறுதுறு சிறுமியாய், தோழிகளுடன் கைகோர்த்தபடி, அவள் அந்த மரத்தைச் சுற்றி விளையாடிய நாள்கள் கண்முன் படர்ந்தது.... வீடுகள் இல்லாதபோதிலும் அருகே சில குடிசைவாசிகள் வசித்தமையால் சுத்தமாக இருந்த பிரதேசம் ...... இப்போது பார்க்கையில் ......

வீதியின் ஓரமாக இங்கொன்றும் அங்கொன்றுமாக வளர்ந்திருந்த பாம்புப் புற்றுகள் அச்சுறுத்தின. அருகருகே மண்டிக்கிடந்த சருகுகள் காற்றுடன் சேர்ந்து சலசலத்தன.

மனதில் வரவழைக்கப்பட்ட தைரியத்துடன் சருகுகளின்மீது பதிந்தன அவள் கால்கள்.

★ ★ ★

வாயில் கதவைத் திறந்து உள்ளே இரண்டு எட்டு வைத்திருப்பாள்.

காதுகளில் ......

ஒரே இரைச்சலாக,

தாயின் ஒப்பாரிதான், எதையோ அவளுக்கு உணர்த்தியது.

ஒரு தடவை வீட்டை உற்றுப் பார்த்தாள்.

மாமரத்துக் கிளை ஒன்று முறிந்து சமையலறைக் கண்ணாடியை உடைத்திருந்தது. மாமர இலைகளும் வட்டுக்காய்களும் வீட்டு முற்றத்தை ஓரளவு அலங்கோலப்படுத்தியிருந்தன.

ஆனாலும்,

வீட்டின் பின்புறத்திலிருந்து வந்த தாயின் குரல் ......

'சிலவேளை, ஏதேனும் ...... சீ! சீ! இருக்காது"

சிந்தித்த மனதுக்குக் கடிவாளம் போட்டபடி சத்தம் வெளிவந்த திசை நோக்கி நகர்ந்தன அவள் கால்கள்.

கால்களினோரம் தட்டுப்பட்ட தென்னங் கிடுகுகள், ஓரளவு அவளது பயத்தைக் குறைத்திருந்தது.

கொஞ்சம் தலையை நிமிர்த்திப் பார்த்தாள். மாட்டுக் கொட்டகையின் கூரை அள்ளி வீசப்பட்டிருந்தது. பின்புறத்துத் தோட்டப் பகுதியில் தெரிந்த தந்தையின் தலையும் ஏதோ ஒன்றை உணர்த்தியது.

சருகுத் தூறல்களின் மத்தியில் மந்திரிக்கப்பட்டவளைப் போல் குந்தி அமர்ந்திருந்து அழுதுகொண்டிருந்த தாயை ஒருமுறை பரிதாபமாக நோக்கின அவள் கண்கள்.

'காற்றே! நீ இன்னும் ஓயவில்லையா .....

★ ★ ★

உச்சிவெயில் மண்டையைப் பிளந்து ஒளிக்கற்றைகளைத் தூவிக்கொண்டிருந்தது. பஸ் வருவதாகத் தெரியவில்லை. தேகம் தாகத்தின் அரிப்பினால் உழன்று ......

நா வறண்டிருந்தது, பசி வேறு ஒருபுறம் வயிற்றை அரிக்க ......

எதிர்ப்புறம் அமைந்திருந்த உணவு விடுதி, கடிகாரத்தைப் பார்த்துவிட்டுக் கால்களை நகர்த்தினாள்.

அவளுக்குப் பிடித்தமான பூந்தி லட்டுகள் ......

அவளது பசி ஒரு லட்டுடன் தணிந்துவிட தேநீரை அவசர அவசரமாக அருந்தியதும் அவள் கால்கள் அந்த இடத்தில் பின்னர் நிற்கவில்லை. பஸ்ஸுக்காகக் காத்திருப்போர் தொகை முன்னரைவிடவும் சற்று அதிகரித்திருந்தது.

'பஸ் வரும் நேரம்!" எண்ணியவாறே, எதிர்ப்புறம் நோக்கி விரைந்தன அவள் பாதங்கள்.

திடீரென உதயமான புழுதிக்காற்று கண்களில் உறுத்தலாக ......

'ஆ!" கண்களைத் திறக்க முடியவில்லை.

திடீரெனக் கேட்ட 'சதக்" என்ற ஓசை அங்கிருந்த அனைவரது கவனத்தையும் ஈர்த்தது அவளுக்குத் தெரியாது.

★ ★ ★

இறுதிப் பயணத்துக்கான ஆயத்தங்கள் மிக மும்முரமாகவே நிகழ்ந்தவண்ணமிருந்தன. உறவினர், அயலவர், அறிந்தவர் என வீடு முழுமை பெற்றிருந்தது. ஆனால் ......

அவளது செல்ல நாய்க்குட்டி 'டாமி", அங்கும் இங்குமாக யாரையோ தேடி அலைவதும், திடீரென வாயிலை நோக்கி ஓடிச்சென்று குலைப்பதுமாக ......

அதன் பார்வையில் இன்று இனம் புரியாத தடுமாற்றமாக ......

நேரம் செல்லச்செல்ல அதிகரித்த உறவினர் வருகையுடன் ஒரு கூட்டம் அவளது தாயைச் சூழ்ந்துகொள்ள ...... ஒப்பாரிகள் ஆரம்பமாயின ......

★ ★ ★ ★ ★ ★ ★

வானை நோக்கி விரைந்த புகை மண்டலத்தினூடு ஓங்கி வளர்ந்து எரிந்துகொண்டிருந்த சிதையை இறுதியாக ஒரு தடவை நோக்கிவிட்டு அனைவரும் தம் திசைநோக்கிக் கிளம்பவிட்டனர்.

சாம்பல்களிடையே வெளிக்கிளம்பிய எலும்புகள் பத்திரமாகவே பாத்திரத்தில் பொறுக்கி எடுக்கப்பட்டன.

எஞ்சியிருந்த சாம்பலுடன் இடுகாட்டுக் காற்று நன்றாகவே களமிறங்கி விளையாடியது.

மெதுவாக வந்து வருடுவதும், பின் வேகமாக வந்து வாரி, அணைத்து ......

காற்றிற்கு இன்று அதன் கர்வம் மேலும் அதிகமாகவே ......

தன் தேவதையை அடைந்தமையால் உற்பவித்த பூரிப்பு, அந்தக் குதூகலம் வரவர அதிகரித்து நீண்டது.

சாம்பல்களிடையே 'புயல் காற்றாய் 'மூன்று சாம்பல் முழுமையினையும் தன்னோடு இறுகப் பிணைந்து காவிக்கொண்டு நொடியில் விரைந்தது, வானவீதியில் உல்லாசமாக பாடித்திரியும் பட்சி போலவே ......

காற்றுக்கு அவள் மேல காதல் அதிகம்"

இப்போது, அவளுக்கும்தான் ......

# ஈன்றவளே என் தெய்வம்



பத்துமாதம் சுமந்து பெற்று
பாலூட்டித் தாலாட்டி
பள்ளிக்கு அனுப்பிவைத்து
பாதி வழி வந்து
காலில் வலிக்குமென்று
அள்ளி அரவணைத்து
தோளில் சுமந்து வந்து
வாயில் அமுதூட்டி
அன்பை அதில் பிசைந்து
அம்புலியைக் காட்டி
ஆராரோ பாடி எனை
அரவணைத்துத் தூங்கவைத்து
எத்தனை பிழை செயினும்
அத்தனையும் அவள் பொறுத்து
வாலிபக் காலத்திலும்
வடுவேதும் வந்தாலும் - தன்
தாலிக்குப் பொய் சொல்லி
வேலியாய் இருந்திடுவாள்
தாரத்தைத் தேடி நான்
தூரத்தே போன பின்பும் - தன்
பாசத்தைப் பாராமல்
வாரத்துக் கொருமுறை
வந்தென்னைப் பார்த்திடுவாள்
என்னை ஈன்றவள்தான்
என் தெய்வம் இப்புவியில்
அன்னை நான் மறவேன்
உன்னை ஒரு பொழுதும்!

- ஸ்ரீமலர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...

23.12.2012 முதல் 29.12.2012 வரை

தருபவர் - வித்தியா

**மேஷம்-** எவரிடமும் அளவுடன்பேசி உங்களின் மதிப்பு, மரியாதையை வளர்த்துக் கொள்வீர்கள். ஆரம்பிக்கும் செயல்களில் கிடைக்கிற நன்மை அதிகரிக்கும். எதிரியால் இருந்த தொல்லை குறையும். இல்லறத்துணை கூடுதல் அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வார். தொழில் வியாபாரத்தில், கூடுதல் உழைப்பினால் உபரி பணவரவு பெறுவீர்கள். உத்தியோகத்தர் சிறப்பாகப் பணியாற்றி பாராட்டு பெறுவர். மாணவர்கள், ஞாபகத்திறன் வளர்ந்து படிப்பில் நல்ல தேர்ச்சி பெறுவர்.

**இடபம்-** செயல்களில் முன்யோசனையுடன் ஈடுபடுவது நல்லது. எதிர்மறையாக நீங்கள் கருதிய விடயங்களில் கூட, அனுகூல பலன் உருவாகும். பேச்சில் நிதானத்தைப் பின்பற்றுவதால் தேவையற்ற சிரமம் வராமல் தவிர்க்கலாம். பிறரால் வம்பு, சிரமம் அணுகாத சுமுக வாழ்வு பெறுவீர்கள். இல்லறத்துணையிடம் மென்மையான அணுகுமுறை பின்பற்றுவதால் மட்டுமே ஒற்றுமை சீராக இருக்கும். தொழில் வியாபாரத்தில் தாராளமான பணச்செலவில் அபிவிருத்தி பணி செய்வீர்கள். அரசியல்வாதிகளுக்கு எதிர்பார்த்த பதவி கிடைக்கும்.

**மிதுனம்-** கடந்தகாலத்தில் உங்கள் வாழ்வில் திட்டமிட்டு நிறைவேறாத சில செயல்களை நினைத்துப் பார்ப்பீர்கள். ஆனாலும், பழைய சூழ்நிலையைவிட தற்போதைய வாழ்வுமுறையின் உயர்வை எண்ணி மனதில் பெருமிதம் கொள்வீர்கள். இல்லறத்துணை தாழ்வு மனப்பான்மை குணத்துடன் செயற்படுவார். உங்களின் அன்பு வார்த்தை நம்பிக்கை வளர்க்கும். தொழில் வியாபாரத்தில் அளவான மூலதனம், கடின உழைப்பு என்ற வகையில் செயற்படுவீர்கள். சராசரி பணவரவு கிடைக்கும். பணியாளர்கள், கூடுதல் பணி வாய்ப்பை மனமுவந்து ஏற்றுக் கொள்வர்.

**கடகம்-** உங்கள் தொழில், வாழ்வுக்கு இடையூறாகச் செயற்பட்டவர்களுக்கு பாடம் புகட்ட எண்ணம் கொள்வீர்கள். இருப்பினும், அவரவர் பலம் அறிந்து, நடந்து கொள்வது நன்மை பெற உதவும். இல்லறத்துணை, அதிக எதிர்பார்ப்புடன் நடந்து கொள்வார். பணவசதிக்கேற்ப விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். தொழில் வியாபாரத்தில், இடையூறான விடயங்களை சரி செய்து திருப்திகரமாக பணவரவு பெறுவீர்கள். பணியாளர்கள், பணி சிறக்க புதிய தொழில் நுட்பங்களை அறிந்து கொள்வர். மாணவர்கள், கவனக்குறைவினால் படிப்பில் தேர்ச்சி விகிதம் குறைவாக பெற சூழ்நிலை உள்ளது.

**சிங்கம்-** வாழ்வில் அனைத்தும் மழை தான். சாதுரியமாகப்பேசி, தாமதமான பணிகளை நண்பரின் உதவியால் நிறைவேற்றுவீர்கள். தாய்வழி உறவினர் அதிக அன்புடன் நடந்து கொள்வர். வழக்கு விவகாரங்களில், அனுகூல தீர்வு கிடைக்கும். இல்லறத்துணை அன்பு, பாசத்துடன் நடந்து, சந்தோஷ வாழ்வு நடத்துவர். தொழில் வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரித்து உபரி பணவரவைத் தரும். பணியாளர் கூடுதல் வேலைவாய்ப்புக் கிடைத்து, குடும்ப தேவையை பூர்த்தி செய்வர். மாணவர்கள் படிப்பில் உயர்ந்த தேர்ச்சி அடைந்து பரிசு, பாராட்டுப் பெறுவர்.

**கன்னி-** வாழ்வில் அதிர்ஷ்டகரமான பலன்களை பெறுவீர்கள். பிறர் உங்களை வசை பாடினாலும், அவர்களின் செயல்களை மன்னிக்கின்ற பெருந்தன்மை குணம் பின்பற்றுவீர்கள். இல்லறத்துணை சொல்கிற ஆலோசனை ஒன்று, உங்கள் வாழ்வில் ஒரு நல்ல திருப்புமுனையை உருவாக்கும். தொழில் வியாபாரத்தில், மூலதனத்தேவை அதிகரிக்கும். உத்தியோகத்தர், பணியாளர்களை அனுசரித்து வேலை வாங்குவதால், இலக்கு குறித்த காலத்தில் நிறைவேறும். மாணவர்கள், சக மாணவர்களிடம் குறை காண்பதைத் தவிர்ப்பது நல்லது.

**துலாம்-** புதிய திட்டங்களை செயற்படுத்துகிற நேரம் வரை இரகசியம் காப்பதால், தேவையற்ற சிரமம் அணுகாமல் தவிர்க்கலாம். பணவசதி தாராளமாகக் கிடைத்து, குடும்பத்தேவைகளை நிறைவேற்ற துணை நிற்கும். சிலர், தன்னை உயர்த்திக் கொள்ளும் பொருட்டு, பொது இடத்தில் உங்கள் செயல்களை விமர்சனம் செய்வர். அவர்களிடம் எதிர்பேச்சைத் தவிர்ப்பதால் மட்டுமே உங்களின் சுயகௌரவம் பாதுகாக்கப்படும். கவனம் தேவை. அரசு சார்ந்த வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பணிபுரியும் பெண்கள், சலுகைப்பயன் கிடைக்கப்பெறுவர்.

**விருச்சிகம்-** உறவினர்களின் அழைப்பின்பேரில், அவர்கள் வீட்டு விருந்து உபசரிப்பில் கலந்து கொள்வீர்கள். சமூகப்பணியிலும் ஈடுபடுவீர்கள். எதிர் மனப்பாங்குடன் உங்களிடம் பேசிய சிலர் தன் செயலுக்காக வருந்துவர். கண்களின் பாதுகாப்பில் தகுந்த கவனம் வேண்டும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை செழித்து பணவரவைத்தரும். பணியாளர்கள் தகுந்த பணவசதி கிடைத்து குடும்பத்தேவை நிறைவேற்றுவர். மாணவர்கள், புதியவர்களை நண்பராக ஏற்றுக்கொள்வதில் தகுந்த கவனத்துடன் செயற்பட வேண்டும்.

**தனுசு -** பேச்சில் மங்கலத்தன்மை நிறைந்திருக்கும். இருப்பினும், வரவேற்பு உள்ள இடங்களில் மட்டும் பேசுவது நல்லது. புதியபணி குறுக்கிட்டு அன்றாட வேலையைத் தாமதப்படுத்தும். மாற்று உபாயத்தினால் நிலைமையைச் சரிசெய்வீர்கள். உடல் நல ஆரோக்கியம் சீராக இருக்க, தொழில், வியாபாரத்தில் நிதானமான நடைமுறைகளைப் பின்பற்றுவது நல்லது. உத்தியோகத்தர், கூடுதல் பொறுப்புடன் செயற்படுவதால் மட்டுமே பணிஇலக்கு நிறைவேறும். மாணவர்கள், கூடுதல் பயிற்சியால் தேர்ச்சி வீதத்தை உயர்த்திக்கொள்வர்.

**மகரம்-** உங்கள் செயல்களில் சில குழப்பத்தை உருவாக்குவார். பொறுப்புணர்வுடன் செயற்படுவதால் தேவையற்ற சிரமம் வராமல் தவிர்க்கலாம். வம்பு, விவகாரம் அணுகாத சுமுக வாழ்வியல் நடைமுறையைப் பெறுவீர்கள். இல்லறத்துணை, குடும்பச்செலவினில் சிக்கனம் பின்பற்றி சேமிப்பை உயர்த்தும் வகையில் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் கூடுதல் வளர்ச்சி பெற புதிய நடைமுறையைப் பின்பற்றுவீர்கள். எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும். பணியாளர்கள் நிர்வாகத்தின் வழிகாட்டுதலை கவனமுடன் பின்பற்றுவதால் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும்.

**கும்பம் -** உங்களின் தகுதியை உயர்த்திக்கொள்ள தேவையான நடைமுறைகளை பின்பற்றுவீர்கள். உடல்நலம் ஆரோக்கிய பலத்துடன் அமைந்து, பணிகளை நிறைவேற்றுவதில் உத்வேகமுடன் செயற்படுவீர்கள். இல்லறத்துணை, தேவை நிறைவேற தாமதம் ஆவதால் அதிருப்தி மனப்பாங்குடன் செயற்படுவார். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரித்து கூடுதல் லாபவிகிதம் கிடைக்கும். பணியாளர்களுக்கு தாமதமான சலுகைப்பயன் எளிய அணுகுமுறையால் கிடைக்கப்பெறுவர். மாணவர்கள், படிப்பில் நல்ல தேர்ச்சிபெற கூடுதல் பயிற்சி உதவும்.

**மீனம்-** கடந்த காலத்தில் இயலாது என்று ஒதுக்கி வைத்த பணி ஒன்றை, தகுந்த முன் யோசனையுடன் செயற்படுத்தி வியத்தகு நன்மை பெறுவீர்கள். இளைய சகோதர வகையில், உங்கள் மீதான நன்மதிப்பு உயரும். பூர்வீக சொத்தில் தாராள பணவரவு கிடைக்கும். இல்லறத்துணை, உங்கள் கருத்துக்களை [illegible] தொழில், வியாபாரத்தில் பெருமைப்படத்தக்க வகையில் [illegible]. அரசியல்வாதிகளுக்கு அரசு தொடர்பான அனுகூலம் கிடைக்கும். மாணவர்கள், பொறுப்புணர்வுடன் படித்து திட்டமிட்ட தேர்ச்சி பெறுவர்.




## உன்னைப் பற்றிய கவிதைகள்

எங்காவது ஒளித்து வைக்கவேண்டும்
உன்னைப் பற்றிய கவிதைகளை
உன்னைப் பற்றிய கவிதைகளை எங்கு ஒளித்து
வைத்தாலும்
காணாமல் போய்விடுகிறது

மேற்கு வானத்தின் கடை கோடியில்
சொருகி வைத்திருந்தேன்
காற்று எடுத்து சென்றுவிட்டது
அந்த அழகிய சொற்கள்
காலையின் மலர்களிலும் பனித்துளி
முகங்களிலும் படிந்திருந்தது.
வண்ணத்துப் பூச்சிகளும் சூரியனும்
அதை வாசித்துக் கொண்டிருந்தது.
ஒளிர்ந்து கொண்டிருந்த வானவில்லும்
கவிதையின் இறுதி பகுதியிருந்தது.


எங்கு வைக்கலாம்
இசையில் இணைத்து வைத்தேன்
அது சிறகு முளைத்து பறக்கிறது
எண்ணற்ற வயலின் நரம்புகளாகி
அதிர்ந்த காதல் மொழி
காற்றில் பரவி உலகின் அழகான இடங்களில்
தங்கிவிடுகிறது.
நதிகளில் கரைந்த சொற்களை மீன்களும்
பாடுவதாக
சொல்கிறார்கள்.

இறுதியாக உனது பாடல்களை
கனவுகளில் சேமித்தேன்
இதை கனவும் களவாடி சென்றிருக்கிறது
அதிகாலை தூக்கத்தில் இருந்தவர்களுக்கு
அன்பளிப்பாக கொடுத்திருக்கிறது.

தேவ அமிர்தத்தை உண்டவர்களாய்
அதைக் கண்டவர்கள் மாறிப்போனார்கள்

கூடுகளில் ஒளித்தேன்
பறவைகளின் பாடலாயிற்று
நிலத்தில் மறைத்தேன் சோலையாயிற்று
நிலவில் ஒளிக்கலாம்
மேகங்கள் விடப்போவதில்லை.
இப்பொழுது
உன்னைப்பற்றிய கவிதைகளை
நெருப்பில் ஒளித்தேன்
இளைஞர்கள் நெருப்பில் இறங்க
ஆரம்பித்திருக்கிறார்கள்.

வேலணையூர் - தாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படைப்பாற்றல் கொண்ட பெருங்கலைஞன்

## கலைஞானச் செல்வன் ஏ.ஆர்.விஜயகுமார்



புதிதாக ஒன்றைப் படைக்கத் தெரிந்தவனே உண்மையான கலைஞன். அவ்வாறான கலைஞர்கள் பலர் எம்மிடையே இருந்தாலும் அவனது படைப்பாக்கத்தை வெளிக் கொணரக் கூடிய வழிவகைகள் எவையும் எம்மிடம் இல்லை என்றே கூற வேண்டும். கலைத்துறை நிறுவனங்கள் எவையும் இங்கே அப்படியான முயற்சிகளில் ஈடுபடுவதாகத் தெரியவில்லை.

**சாதனைக் கலைஞரைச்**
சந்திப்போம் சிந்திப்போம்

**73**

வையாவிலான்
■தவமைந்தன்

ஈழத்தமிழரின் நாடக ஆற்றுகை முறைமைகள் பல வகைப்பட்ட தன்மைகளில் வளர்ச்சியடைந்து காணப்படுகின்றன. இவ்வாறான வகைப்பாடுகள் அனைத்தையும் ஆழமாகக் கற்றறிந்த கலைஞராகவும் தலைசிறந்த நடிகராகவும் ஒப்பற்ற நெறியாளராகவும் இந்தத் துறைக்கான இசையாளராகவும் கூத்து அண்ணாவியாராகவும் இளவாலைத் திருமறைக் கலாமன்றத்தின் தலைவராகவும் கடந்த பல ஆண்டுகளாகப் பணியாற்றி வருபவர் கலைஞான வித்தகன் ஏ.ஆர். விஜயகுமார்.

மறைந்த அல்பிரட் - மாகிரட் தம்பதியரின் மகனாக 15.06.1961 இல் தாழையடியில் இவர் பிறந்தார். தாழையடி றோ.க.த.க பாடசாலை, உடுத்துறை மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலும் இளவாலை புனித கென்றி அரசர் பாடசாலையிலும் உயர்தரம் வரை கற்று அதே பாடசாலையில் 1986ஆம் ஆண்டிலிருந்து ஐந்தாண்டுகள் தொண்டர் ஆசிரியராகப் பணியாற்றிய இவர் வட இலங்கைச் சங்கீத சபையின் நாடகமும் அரங்கியலும் துறையில் ஆசிரியர் தரத்தில் சித்தி பெற்றவர்.

1995இல் நிரந்தர நியமனம் பெற்று இன்று வரை நாடகம், கத்தோலிக்கம் போன்ற பாடங்களைக் கற்பிப்பதில் மாணவர்களின் மனம் கவர்ந்த நல்லாசானாகவும் நாடகக் கலைத்துறையில் பல நுற்றுக்கணக்கான மாணவர்களை ஈடுபடுத்தி அதில் வெற்றி கண்ட சாதனையாளராகவும் இவர் விளங்கி வருகின்றார்.

இளவாலை புனித கென்றி அரசர் பாடசாலையின் கனிஸ்ர பிரிவுக்கான பகுதித்தலைவராகக் கடந்த ஏழு ஆண்டுகளாகக் கடமையாற்றி வருகின்ற இவர் இந்தப் பாடசாலையின் கலைச் செயற்பாடுகளின் முதுகெலும்பாகத் திகழ்வதுடன் தென்மோடி, சிந்துநடை, விசேட கூத்து, நவீன நாடகம் போன்ற துறைகளில் பாடசாலை மாணவர்களை ஈடுபடுத்தி போட்டிகளிலும் வெற்றிபெறச் செய்து இந்தப் பாடசாலையில் பேணப்பட்டு வரும் நாடகக் கலையின் புத்துருவாக்க மரபை நிலைநிறுத்தி, காப்பாற்றி வருவதுடன் நாடகத் துறையின் வளர்ச்சி மையமாகவும் தனது பாடசாலையை அர்ப்பணிப்புடன் வளப்படுத்தி வருகின்றார்.

ஆசிரியத் துறையில் பட்டறிவு கொண்டவராக விளங்குகின்ற இவர் நாடக ஆற்றுகைத் துறையிலும் முதிர்ச்சி கண்ட ஒருவராகத் திகழ்கின்றார். கூத்து நடிகரான தனது தந்தையின் கலைச் செயற்பாடுகளால் கவரப்பட்டு, சிறு வயதிலேயே சுருதி, இலயம் தவறாமல் பாடும் திறன் கொண்டவராகவும் நடிப்பாற்றல் கொண்டவராகவும் காணப்பட்ட இவர் இளவாலை மிருதங்க சூசை என்னும் அண்ணாவியாரால் நெறிப்படுத்தப்பட்ட ஆனந்த சீலன் என்னும் கூத்தில் முதன் முதலாக வெகு சிறப்பாக நடித்தார்.

அந்தக் காலத்தில் பி.எஸ். ஆனந்தராசாவால் மேடையேற்றப்பட்ட சேக்ஸ்பியரின் நாடகங்கள் பலவற்றில் கதாபாத்திரமேற்று நடித்து வந்த இவர் இருட்டினில் குருட்டாட்டம் என்னும் நாடகத்தில் முதியவராக நடித்து, சிறந்த நடிகர் என்னும் பெயரைப்பெற்று நாடகத்துறையில் நிரந்தரமான, தனித்துவமான இடத்தைத் தனதாக்கிக்கொண்டார்.

1982இல் யாழ். நாடக அரங்கக் கல்லூரியில் இணைந்து கலாநிதி சி.மௌனகுருவின் நெறிப்படுத்தலில் மேடையேற்றப்பட்ட சங்காரம் என்னும் கூத்தில் முக்கிய பாத்திரமேற்று நடித்த இவர் நாடக நெறியாள்கை, நடிப்பு, அரங்க முறைமைகள் போன்ற துறைகளின் நுட்பங்களைத் தெளிவாகத் தெரிந்து கொண்டதுடன் நாடகத் துறையில் எண்ணற்ற இளைஞர்களை உருவாக்க வேண்டும் என்னும் ஆர்வமுடையவராகத் தனது பணிகளைத் தொடர்ந்து வந்தார்.

1983இல் இளவாலை போயிட்டி என்னும் சிற்றூரில் நூறிற்கும் அதிகமான நடிகர்களை ஒருங்கிணைத்து இவரால் மேடையேற்றப்பட்ட திருப்பாடுகளின் காட்சி என்னும் மாபெரும் படைப்பானது பல்லாயிரக் கணக்கான இரசிகர்கள் முன்னிலையில் வெற்றிப் படைப்பாக மேடையேற்றம் கண்டது. இந்நிகழ்வில் இவரது ஆளுமை கொண்ட கலைத்திறன்களைக் கண்ட அருட்கலாநிதி நீ.மரியசேவியர் அடிகள் இவரைப் பாராட்டியதுடன் தனது திருமறைக் கலாமன்றத்தின் கலைச் செயற்பாடுகளில் இவரை இணைத்துக் கொண்டார்.

1983இல் இருந்து திருமறைக் கலாமன்றத்தால் மேடையேற்றப்பட்டு வரும் நாடக அளிக்கைகளில் முக்கிய பங்காற்றி வரும் இவர் திருப்பாடுகளின் காட்சியில் கைப்பாசாகவும் பிலாத்துவாகவும் மிகச் சிறப்பாக நடித்து வருவதுடன் இப்படைப்பிற்கான இசையாளராகவும் பணியாற்றி வருகின்றார். இம் மன்றத்தின் புலம் பெயர் நாடுகளிற்கான கலைப் பயணங்களில் பங்கு கொண்டிருந்த இவர் இளவாலையில் திருமறைக் கலாமன்றப் பணியகம் உருவாகவும் வளர்ச்சியடையவும் நிலைபெறவும் அர்ப்பணிப்புடன் உழைத்தவர் என்பது போற்றுதற்குரியதே.

கூத்துக் கலைஞராக விளங்குகின்ற இவர் மெல்லிசைத் துறையிலும் ஆழக் கால்பதித்தவர். கத்தோலிக்க பக்திப்பாடல்களைப் புதிதாக இயற்றி இசையமைத்துத் தனது சுய முயற்சியிலேயே இதுவரையில் ஐந்து இறுவட்டுக்களை வெளியிட்டிருப்பதுடன் திருமறைக் கலாமன்றத்தின் இறுவட்டு உருவாக்கங்களிலும் பணியாற்றி, இன்று வரையில் அறுபதிற்கும் அதிகமான பாடல்களைப் பாடியிருப்பதுடன் குறும்படம், தொலைக்காட்சி நாடகங்கள், விளம்பரங்கள் போன்றவற்றிலும் நடித்து வருகின்றார்.

புதிதாக ஒன்றைப் படைக்கத் தெரிந்தவனே உண்மையான கலைஞன். அவ்வாறான கலைஞர்கள் பலர் எம்மிடையே இருந்தாலும் அவனது படைப்பாக்கத்தை வெளிக்கொணரக் கூடிய வழிவகைகள் எவையும் எம்மிடம் இல்லை என்றே கூற வேண்டும். கலைத்துறை நிறுவனங்கள் எவையும் இங்கே அப்படியான முயற்சிகளில் ஈடுபடுவதாகத் தெரியவில்லை.

மக்கள் மத்தியிலும் கலை இரசனை என்பது மிக வேகமாக மாறி வருகின்றது. தேவையற்ற முறையில் கோடிக்கணக்கில் பணம் செலவழிக்கப்படுவதை நாம் அன்றாடம் காண்கிறோம். சிறு தொகைப் பணத்தையாவது எம் மத்தியில் வசிக்கின்ற ஒரு கலைஞனிற்கு மனமுவந்து கொடுக்க எம்மவர்கள் எவரும் தயாரில்லை.

ஓர் இசை இறுவட்டினை உருவாக்குகின்ற கலைஞன் அதன் உருவாக்கத்திலிருந்து இரசிகனிடம் கொண்டுசெல்லப்படும் வரையான அனைத்துச் செயற்பாடுகளிலும் நேரடியாகப் பாடுபட வேண்டிய நிலையே யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்றது.

களியாட்ட நிகழ்வுகளிற்குக் கோடிக் கணக்கில் பணத்தை வாரி இறைக்கின்ற உத்தமர்கள் எமது கலைஞர்களிற்கு உதவி புரிய முன்வருவார்களா..? என்று உணர்ச்சி பொங்கக் கேள்விக் கணைகளைத் தொடுக்கின்றார் ஏ.ஆர்.விஜயகுமார்.

## வெள்ளிலோத்திரம்



**வெள்ளிலோத்திரம்**
**வேறுபெயர்** - லோத்திரம், தில்லகம், வெள்ளலத்திப்பட்டை
**தாவரவியற்பெயர்** - Symplocos racemosa (சிம்பிளோகொஸ் ரெசிமோசா)
**குடும்பம்** - Symplocaceae (சிம்பிளோகேசியே)
**சிங்களப்பெயர்** - லோத்
**சமஸ்கிருதப் பெயர்** - லோத்ரா
**ஆங்கிலப்பெயர்** - Lodh tree

இது சிறு மரவகுப்புக்குரியது. கடல் மட்டத்திலிருந்து 7000 அடி உயரமான இடங்களில் வளரும். பட்டை வெளிறிய நரை நிறம். இலைகள் தடித்தவை, தோல் போன்றவை. தனி இலைகள், விளிம்பு அழுத்தமற்றது. ஒன்றுவிட்ட இலை ஒழுங்கு. பூந்துணர்கள் கக்கத்திலிருந்து உருவாகும். சிறிய பூக்கள் வெள்ளை அல்லது மஞ்சள் நிறம். நறுமணமுள்ளவை. பெண்களின் கருப்பை சம்பந்தமான கோளாறுகளுக்கு லோத்திரப்பட்டை மருந்தாகப் பயன்படுகிறது.

**மாதவிடாய்க் கோளாறுகளுக்கு** - லோத்திரப்பட்டை [illegible] காலை மாலை பருகிவரப் பெரும்பாடு, மாதவிடாயின் போது [illegible] தணிவடையும்.

கழிச்சல், சீதக்கழிச்சல் போன்றவற்றிற்கு இக்குடிநீரைத் தேனுடன் விட்டுப் பருகிவரமாறும்.

**கரப்பனுக்கு** - லோத்திரப் பட்டையை அவித்து அந்த நீரால் கழுவிவர, கரப்பன் மற்றும் நாட்பட்ட புண்கள் ஆறும்

**வீக்கத்துக்கு** - லோத்திரப் பட்டையைத் துவைத்துக் கட்டிவர மூட்டுகளில் ஏற்படும் வீக்கம், வலி என்பன தணிவடையும்.

**பல்லீறுகளில் இரத்தம் வடிதலுக்கு** - லோத்திரப் பட்டையை பொடித்து, வெந்நீரில் ஊற வைத்து அந்த நீரால் வாய் கொப்பளித்துவர பல்லீறுகளிலிருந்து இரத்தம் வடிதல் மாறும். பல்லீறும் பலப்படும்.

**கண் சூட்டிற்கு** - லோத்திரப்பட்டை, அதிமதுரம், பொடித்த படிகாரம், நந்தியாவட்டம் பூ இவற்றைச் சமவளவு எடுத்து நீர் விட்டரைத்து கண்ணைச் சுற்றிப் புறவளையமிட்டுவர கண்சூடு, கண்நோய் என்பன மாறும்.

**சீதக்கழிச்சலுக்கு** - லோத்திரப்பட்டை, மாதுளங்கோது, அதிமதுரம் என்பவற்றைச் சம அளவில் எடுத்துக் குடிநீர் செய்து காலை,மாலை கொடுத்துவர சீதக்கழிச்சல், வயிற்றுக் கடுப்பு, கழிச்சல் என்பன மாறும்.



Dr. சே.சிவசண்முகராஜா M.D. (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை எப்போதும் அர்த்தமுள்ளதுதான்

தானா

“அரிய மனிதப் பிறப் பெடுத்த நாம், எமது வாழ்நாளில் இந்த உலகில் எத்தனை வேடங்கள் தாங்கி நடிக்கிறோம். அத்தனை ஆட்டம்பாட்டங்களின் பின்னர் கடைசியில் ஒருநாள் அடங்கிப் போய்விட நேர்கிறதே. இதுதான் இயற்கை நியதி.



மனித வாழ்க்கை நிலையற்றது என்ற தத்துவம் எமது நடைமுறை வாழ்க்கையில் அடிக்கடி நினைவுபடுத் தப்படுவதுண்டு. அதற்கான சந் தர்ப்பங்கள் இடையிடையே ஏற் படுவதுண்டு.

தாயின் கருவறையிலிருந்து இயற்கை நிர்ணயித்த வேளையில் இந்த உலகைக் காணும் அந்தச் சிசு, தன் ஏனைய உறவுகளையெல்லாம் இனம் காணுமுன்னர், முதன் முத லில் இனம் காண்பது தன்னைப் பத்து மாதங்கள் வயிற்றில் சுமந்து பெற்றெடுத்த தன் அன்னையையே. அதனாற்றான் தாய்க் குலத்துக்கு அத்தனை மதிப்பும் கௌரவ மும் கிட்டுகிறது.

அரிதினும் அரிய மனிதப் பிறப் பெடுத்த நாம், எமது வாழ்நாளில் இந்த உலகில் எத்தனை வேடங் கள் தாங்கி நடிக்கிறோம். அத்தனை ஆட்டம்பாட்டங்களின் பின்னர் கடைசியில் ஒருநாள் அடங்கிப் போய்விட நேர்கிறதே. இதுதான் இயற்கை நியதி. இந்தப் பிரபஞ்ச இயக்கத்தில் மனித வாழ்க்கை யில் மாற்ற இயலாத விதி அது.

நான் உட்பட அந்தப் 'பழசு' களின் வழமையான மாலைநேரச் சந்திப்பில் இருந்தாற்போலிருந்து காதுக்கு எட்டிய அந்தச் செய்தி - எங்கடை செல்லப்பர் போட்டாராம்.

'போட்டாராம்' என்ற வார்த்தை இன்றைக்கு ஒரேயொரு அர்த்தத் தைத்தான் வெளிப்படுத்தும் என் றில்லை. ஏற்கனவே பொன்னையர், செல்லையர், குணத்தார் என்று ஊரிலிருந்து கனடா, சுவிஸ், லண்டன் என்று பல பேர் போய் திரும்பி வந்ததுண்டு. நிரந்தர மாய்த் தங்கிவிட்டதுமுண்டு. அப்போதும் அவர்களது பயணங் கள் 'போட்டாராம்' என்று மொட் டையாய் விளிக்கப்பட்டன.

இந்தச் செய்தி அந்த வகையான தொன்றல்ல. செல்லப்பர்திடீரென்று உலகத்தைவிட்டே போய்விட்டார்.

செல்லப்பா, செல்லப்பராக ஆனதெல்லாம் இடையிட்டு வந்ததொன்று. அவரது ஒரே மகன் லண்டனுக்குப் போய்ச் சேர்ந்த பின்னர் ஊர் மக்களால் செல்லப்பா, செல்லராக்கப்பட்டதே உண்மை.

மகன்மார் வெளிநாடுகளுக்குப் போனதன் பின்னரே, பொன் னையா, செல்லையா, குணம் என் போரின் அந்தஸ்து மட்டுமல்லாமல் பெயர்களும் கூட மாறியமை இதே விதத்தில் தான்.

கட்டுமட்டாய்க் கமம் செய்து கொண்டுதானுண்டு, தன்பாடுண்டு என்றிருந்த செல்லப்பா, ஒரே பிள்ளைதானே என்று மகனுக் குச் செல்லம் கொடுத்து வளர்த் ததால் படிக்கிறேன்; படிக்கிறேன், என்று பாசாங்கு செய்ய முடிந்ததே யன்றிச் செல்லப்பாவின் மகனால் ஓ.எல்லை கூடத் தாண்ட முடியவில்லை. மனிசிக்காரியின் தொணதொணப்பைத் தாங்க இயலாமல், தோட்டக் காணியில் பாதியை விற்று அவனை லண் டனுக்கு அனுப்பியதன் பின்னர்தான் வெறும் செல்லப்பா ஊர் மக்களால் செல்லப்பராக ஆக்கப்பட்டார்.

கோயில் குளத்துப் படிக்கட் டுகளில் கூடும் எங்களை மாதிரி கூட்டத் துக்கு பிரசன்னமாவோர் வெவ் வேறு தகுதி, தராதரம் கொண்ட வர்கள். கொஞ்சம் நாகரிகமான வார்த்தையில் சொல்லப்போனால் அதை 'ஒன்றுகூடல்' என்றுதான் சொல்லிக் கொள்வோமே. 'பழசு' களின் அந்த ஒன்றுகூடலில் பெரும் பாலும் அவரவரது இடம் ஸ், இடைஞ்சல்கள் குறித்து மனம் திறந்து கதைப்பதைவிட, ஊரார் வீட்டு விடயங்களே அலசப் படுவது வழக்கமானதொன்று.

செல்லப்பர் போய்ச் சேர்ந்த செய்தி சொல்லப்பட்டதும், அங்கி ருந்த ஒருவரின் வாயிலிருந்து வெளிவந்த கேள்வி.

“எப்ப பொடி வருதாம்..”

அதைத் தொடர்ந்து விமர் சனங்கள்.

“பாவம்; நல்ல மனுஷன், கடைசிக் காலத்திலை பாக்க மேய்க்க ஒருவரும் இல்லாமல் அந்தரிச்சுப் போனார்...”

“பொடியன் எப்படியும் வரத் தானே செய்வான்... எடுக்க, எப்படியும் நாலைஞ்சு நாள் செல்லக் கூடும்”

“பாவம், கடைசியிலை அண்டை அயல்காரர், ஊர்ப் பொடியள் கொண்டுபோய் ஆஸ்பத்திரி யிலை விட்டதாலை, ஏழெட்டு நாளாய் சுகமாய் இருந்தவர் எண்டு கேள்விப்பட்டன்...”

“ஆனாலும் ஊர் ஆக்கள், தங் கடை உறவுக்காரர்போலை நினைச்சு வேளாவேளைக்கு அவரைப் போய்ப் பார்த்து உதவி ஒத்தாசை செய்தவை...”

“அந்தாளும் ஊராக்களைத் தன்ரை உறவுக்காரர்களாய் நினைச் சுத்தானே நடந்தவர்”

ஊரில் நாலுபேர் மத்தியில் நல்ல மனுஷன் என்ற கணிப் புக்கு உள்ளான, மேசப்பட்ட செல் லப்பர் இப்போ 'பொடி' என்றாகி விட்டார். இது உலக இயல்பு; குற் றம் காண்பது பொருத்தமில்லை.

வெறும் 'செல்லப்பா' செல்லப் பரானதற்கு, பொடியன் லண் டனுக்குப் போய்ச் சேர்ந்தது ஆரம் பத்தில் காரணமாய் இருந்திருக்க லாம். ஆனால் லண்டனுக்குப் போன அவன், ஊரை மட்டு மொன்றில்லை, தன்ரை இனத்தை, நாட்டைக் கூட ஒரேயடியாய் மறந்து விட்டான்.

லண்டனுக்குப் போய் நாலு வருடம் கடந்த நிலையில் அங் கேயே ஆரோவொரு வெளிநாட்டுக் காரியைக் கல்யாணம் கட்டி விட்டதாக மகன் அறிவித்த போதும் கூட -

பொடியனின் போக்கால் மனதுடைந்து மனுஷிக்காரி ஆறு மாதத்திலை மேலைப் பயணம் போனபோதும் கூட -

செல்லப்பர் மனதுடைந்து போனதில்லை. அந்தரிச்சுப் போன தும் இல்லை. செல்லப்பரை அந்த ரிச்சுப் போக ஊரவர்கள்- அண்டை அயலார், அனுமதித்ததுமில்லை.

இரத்த உருத்துக்கள் என்று எவரும் இல்லாத போதிலும், ஊர்ச் சனத்தைத் தனது உறவு களாய் நினைச்சு நடந்த, ஊரோடு கூடி வாழ்ந்த செல்லப்பர் கடைசிவரை செல்லப்பராகவே வாழ்ந்து போயிருக்கிறார்.

'பொடி எப்ப வரும்?' மீண் டும் அதே கேள்வி; கேட்டதும் அதே ஆள்தான்.

எரிச்சலோடு கேட்டு விடுகி றேன். “ஏன், ஏன் அதற்கு இப்போ அவசரப்படுகிறாய்?” ஒருவேளை செல்லப்பரின் மறைவு இவனது மனதில் ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தி யிருக்குமோ? என்றும் மனது எண்ணுகிறது.

அவனது பதில் ஆத்திரத்தை மேலும் அதிகரிக்க வைக்கிறது. “இல்லை; ஒரு முழுக்குக்கு இடமிருக்கு எண்டு யோசிச்சன்”

இப்படிப்பட்ட பிரகிருதிக ளும் எம் மத்தியில் இருக்கத்தான் செய்கிறார்கள். என்ன செய்வது, இது உலக இயல்பு.

லண்டனிலிருந்து செல்லப் பரின் மகனது வருகை, “வரும், ஆனா வராது” கதைபோல் தான் என்று மனது எண்ணிக் கொள்கிறது.

ஆனால், யார் வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி, செல்லப்பர் ஊர் மக்கள் கவலையுடன் பின் தொடர ஊர் இளைஞர்களின் தோள்களில் இறுதி ஊர்வலம் போவார் என்பது மட்டும் நிச்சயம்.

ஏதோ கடமைக்கு செல்லப் பரின் மகனுக்கு ஊர் இளைஞர் கள் தகவல் தெரிவித்துவிட்டார் கள். எப்படியும் விரைவாக பூதவு டலை இளைஞர்கள் வீட்டுக்குக் கொண்டு வந்து விடுவார்கள்.

செல்லப்பரை ஊரில் பெரிய மனிதராக, நியாயம் நீதியுள்ள மனிதராகக் கருதி, அவரை முன்நிறுத்தி, ஊர் இளைஞர்கள் ஊருக்கு எத்தனையோ நன்மையான விடயங்களைச் செய்திருக்கிறார் கள். பதவி, பட்டம் என்றாலே கூச்சப்படும் அவரை இணக்க சபை, கூட்டுறவுச் சங்க செயற்குழு, நலன்புரி மன்றம், கோயில் பரிபாலன சபை என்பவற்றில் தலைவராக்கி வைத்து அவர் பின்னால் அணி திரண்டு நின்று எத்தனை காரியங்களை ஊர் இளைஞர்கள் ஊருக்காகச் செய்தி ருக்கிறார்கள்.

செல்லப்பர் ஒவ்வொரு பொது விடயங்களைக் கையாளும் போதும், தீர்மானம் எடுக்கும் போதும் “யாருக்குக் கணக்குக் கொடுக்கா விட்டாலும் கடவுளுக்குக் கணக் குக் காட்ட வேண்டும்” என்று சொல்வாராம். பணம் செலவழிக் கும் விடயத்தில் அவர் அத்தனை 'கறார்' பேர்வழி. அவரது போக்கும் நடத்தையுமே ஊர் மக்கள் மத்தியில்- ஊர் இளைஞர்கள் மத்தியில் அவரை ஒரு 'ஹீரோ' ஆக்கி வைத்திருந்தது.

அந்த வகையில் வெறும் செல் லப்பா, செல்லப்பராக்கப்பட்டு பட் டம் பதவிகள் சுமத்தப்பட்ட போதி லும், தனது மனிதத்துவத்தைக் கைவிட்டுவிடவில்லை. 'ஊரோடு ஒத்து ஓடு' என்பதற்கு அமைய ஊர் மக்களுடன் ஒன்றி வாழ்ந்தவர்.

மனித வாழ்க்கையில், தான், தனது குடும்பம், தனது இரத்த உருத்துக்கள் என்றதொரு குறுகிய வட்டத்துள் வாழப்பழகி, தன்னல நோக்குடன் மட்டுமே வாழ்பவர் களும் என்றோ ஒரு நாள் உலக வாழ்வைத் துறந்துதான் ஆக வேண்டும். அதேவேளை, பரந்த மனப்பாங்குடன் தனது உறவு வட்டங்களுக்கு வெளியில் நின்று தன் ஊர், ஊர் மக்கள், இனம் என்ற பரந்த நோக்குடன் தமது வாழ்நாளில் தம்மால் இயன் றதை மற்றவர்களுக்கும் செய்து, கூடி வாழ்ந்து, மற்றவர்களின் சுக துக்கங்களிலும் பங்கெடுப்போரும் என்றோ ஒருநாள் உலக வாழ்க் கையை நீத்தாகவே வேண்டும். இது மாறாத, மாற்றப்பட இய லாத உலக நியதி.

அந்த வகையில் இரத்த உருத் துக்கள் இல்லாத நிலையிலும், செல்லப்பரோ, செல்லப்பரைப் போன்று வாழ்வோரோ ஒரு போதும் 'அநாதை' என்றாகிவிடுவ தில்லை. ★

## கல்லும் கண்ணாடியும்

நீர்ப்பறவை
துப்பாக்கியுடன்
காவலன் மற்றும்
நான் ஈ, போக்கிரி
ருத்திரம் 2012
திருத்தணியோடு
ஒரு கல்
ஒரு கண்ணாடி
போடா போடி என்று
போட்டி போடும்
இவைகளின்றைய
திரைப்படங்கள்
நாளும் நடக்கும்
நாட்டு நடப்பை
[illegible]
[illegible]
இவற்றின் கதைகள்
மற்று மம்சங்கள்
கூறாவிடினும்
கூர்ந்து கவனித்தால்
இக் குறைபாட்டை
இத்திரைப்படங்களின்
பெயர்ப்பட்டியல்தான்
முன்னின்று சுட்டிக் காட்டி
நிவர்த்தி செய்கின்றது.



க.நாகராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உடையத் தொடங்கும் உறவுகள்

## மீளாய்வைக் கோரி நிற்கும் ஆசிரியர் – மாணவர் உறவுக் கட்டமைப்பு

■ வினயன்

எமது இன்றைய வாழ்வில் பல விடயங்கள் தமது இயல்பான தன்மையிலிருந்து பெரிதும் விலகிப்போய் பிறழ்வுகள் - முரண்கள் என்பவற்றால் மிகவும் பாதிக்கப்பட்டுப் போயிருக்கின்றன. அந்த நிலைமைகள் நம்மைப் பெரிதும் விசனம் கொள்ளவைப்பனவாகவும் சஞ்சலமடையவைப்பனவாகவும் உருவெடுத்துவருகின்றன. இன்றைய ஆசிரியர், மாணவர் உறவு என்கிற சமூக விடயமும் இத்தகைய ஒரு நிலைமைக்குள் வாகி வருவதை அவதானிகள் புரிந்து கொண்டிருப்பார்கள்.

போர் ஓய்ந்திருந்தமைக்குப் பின்னரான அமைதி நிலை இளைய தலைமுறையினருக்குக் கட்டற்ற ஒரு சுதந்திரப் போக்கை உருவாக்கித் தந்துள்ளது போன்ற தோற்றம் காட்டி கட்டுப்பாட்டான தன்மைக்குமுள்ள போக்கு அவசியமற்றது என்று ஒரு தவறான புரிதலை உருவாக்கிக் கொடுத்துள்ளதோ என்று எண்ணத்தோன்றும் வகையிலான போக்குத் தற்போதைய இளையோரிடம் குறிப்பாக மாணவரிடம் காணப்படுகின்ற ஒரு துர்ப்பாக்கிய மனோநிலையாயிருக்கிறது. இந்த மனப்போக்கின் எதிரொலியாகவே பாடசாலைகள், கல்லூரிகள் போன்ற இடங்களில் ஆசிரியர்களுடன் மாணவர்கள் முரண்படவும் அம்முரண்பாடுகள் கசப்பான நிலையை அடைந்து சமூக மட்டம் வரை பரவ நேரிடுகின்றது.




இத்தகைய ஒரு நிலைமை உருவாகியதன் விளைவாகப் பல விரும்பத்தகாத நிகழ்வுகள் அவ்வப்போது நடைபெற்று வருவதையும் பலரும் அறிந்திருப்பார்கள்.

அந்த நிகழ்வுகளை அலசி ஆராய்வதல்ல இந்தப் பத்தியின் நோக்கம் இவ்வாறான நிகழ்வுகள் இடம்பெறுவதற்கு அடிப்படையாக விளங்குகின்ற மனப்பாங்குகள் அணுகுமுறைகள் பற்றியும் எதிர்காலத்தில் கைக்கொள்ளவல்ல மாற்றுப் போக்குகள் பற்றியும் சமூகப்பொறுப்புள்ள நாம், குறிப்பாக ஆசிரியர் சமூகத்தினர் சிந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

அத்தகைய ஒரு நிலையில் நம்மையே நாம் கேட்டுக்கொள்ள வேண்டிய சில கேள்விகளும் கண்டுகொள்ளவேண்டிய நிலைகளும் உள்ளன.

பாடசாலைகளில் மாணவர்கள் முன்னரைப் போல இல்லை. ஆசிரியர்களை மதிப்பதில்லை. ஆசிரியர் சொல்லுக்கமைந்து மாணவர்கள் நடந்து கொள்வதில்லை. என்று பல குற்றச்சாட்டுகள் உள்ளன. உண்மைதான் - அத்தகைய குற்றச்சாட்டுகளில் உண்மை இல்லாமலில்லை.



## நம்மை நாம்...

ஆனால் இத்தகைய நிலைமை தொடர்பாக ஆசிரியர்கள் தரப்பால் எந்தவித மாற்றங்களும் ஏற்பட வேண்டிய தேவைகள் இல்லையா? ஆசிரியர்களின் கருத்துக்கள், அணுகுமுறைகள், பார்வைகள், கணிப்புகள் யாவும் சரியானதாகத்தான் உள்ளனவா என்கின்ற கேள்விகளை நாம் கேட்டுக் கொள்ள வேண்டும். குருகுலக் கல்வி முறையில் மாணாக்கர் சமூகம் ஆச்சாரிய பரம்பரையை வணங்கி வழிபட்டுப் பாடம் கேட்ட காலம் கடந்துபோய் நீண்ட காலமாகிவிட்டது. 'ஆச்சாரியதேவோ பவ' என்கின்ற மனக்கருத்து மூலமந்திரமாய் நின்று மாணவர்களைப் பதம் போட்ட காலம் இனிவரும் எனக்காத்திருப்பதிலோ வரவில்லையென்று குறைப்பட்டுக்கொள்வதிலோ அர்த்தம் இல்லை.

எண்ணிப் பார்க்கக் கொஞ்சம் சங்கடம் தருவதாக இருந்தாலும் கூட சில யதார்த்தமான உண்மைகளை நாம் நேரில் தரிசிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

*"உண்மை கொடிதே உலகில் அதனுடன் நாம்
போரிட்டு வாழப்புகுந்தோம்-கலங்குவதோ
வீரிட்டு விழுந்து புரண்டு கதறுவதோ
பார் எட்டுத்திக்காய்ப் பரந்துகிடக்கிறது"*


என்ற மகாகவி உருத்திரமூர்த்தியின் கவிதை வரிகள் இப்போது ஞாபகத்துக்கு வருகின்றது. ஆம்! நாம் அறிந்திருப்பதைக் காட்டிலும் உண்மை கொடியதுதான். அத்தகைய உண்மைகளுடன் மோதி வாழும்படி நமக்கு விதிக்கப்பட்டிருக்கிறது. கலங்கிப் புரண்டு அழுவதில் அர்த்தம் ஏதும் இல்லை. உலகம் மிகப் பரந்தது - பெரியது - எட்டுத் திசைகளாக விரிந்து அகன்று கிடக்கிறது. என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது.

காலம் மாறி வருகிறது என்பதை யாரும் மறக்கமுடியாது. காலத்துக்கு ஏற்ப எமது பார்வைகளும் [illegible] ஆகவேண்டும். [illegible] சிந்தனை அடிப்படையிலும் தவிர்க்க இயலாததாகிவிட்டது.

பாடசாலையிலும் ஒரு மாணவன் ஆசிரியரது ஏதாவது ஒரு கட்டளைக்கு கீழ்ப்படிய மறுக்கிறான் என்றால், பிரம்பை எடுத்து நாலு சாத்துச் சாத்திவிட்டு காரியத்தை நடக்கவைக்கின்ற மனப்போக்கும் கருத்தும் இனியும் பொருந்திவருமா என்று சிந்திக்க வேண்டிய காலம் இது.

பெற்ற பிள்ளையை மனம் நோகக் கண்டிப்பதே தவறு என்கின்ற மேற்கத்தேய நாடுகளின் சிந்தனைப்போக்கை எமக்கு ஒத்துவராத போக்கு எனலாம். நகைத்துவிட்டு ஒதுக்கிவிட முடியாது.

மேற்குலக நாடுகளின் முறைகளை நாம் பின்பற்ற வேண்டிய தேவை ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. குறிப்பிட்ட ஒரு வயதுக்கு மேல் வளர்ந்த பிள்ளையை ஒரு தனிப்பட்ட பிரஜையாகவே நாம் கணிக்க வேண்டும். அந்தப் பிள்ளை தனது தேவைகளை, சுதந்திரமாகத் தேடிக்கொள்ளவும், அனுபவிக்கவும், வாழ்வைப் புரிந்துகொள்ளவும் பெற்றோர் அனுபவிக்க வேண்டும் என்கின்ற மேற்குலக உளவியல் நோக்கினை நாமும் பரிசீலிக்க காலத்தால் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்.




இந்த நிலையில் பாடசாலையில் ஆசிரியர்களின் சொல்லுக்கு கட்டுப்படாத ஒரு மாணவனுக்குச் சரீர தண்டனை வழங்கி அவனை 'திருத்த' முயல்வது சரிதானா என மூத்தவர்கள் சிந்திக்க வேண்டும்.

புதிய தலைமுறையின் உலகம் முன்னைவிட அகன்று, பரந்து, விரிந்து போயுள்ளது [illegible]; புதிய இளையவர்கள் [illegible] ஆழமாகச் சிந்திக்கிறார்கள் என்பதையும் நாம் மறுக்க முடியாது.

எனவே நாம் நிதானமாகச் சிந்திக்கவும், மிகமிகப் பொறுமையாக இளைய சமூகத்தை அணுகவும், எமது கோரிக்கைகளை, நியாயங்களை அவர்கள் புரிந்து கொள்ளும்படியாக எடுத்துச் சொல்லவும் கடமைப்பட்டுள்ளோம். எமது சொந்தப் பிள்ளைகளானாலும், அடுத்தவர்களின் பிள்ளைகளானாலும் யாவருமே இன்றைய சமூகச் சூழலின் செல்வாக்குக்கு உட்பட்டவர்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

வழிகாட்டுபவர்களாகிய மூத்தோர், அதிலும் குறிப்பாக ஆசிரியர்கள் முன்னுள்ள பொறுப்பு மிகப்பெரிதாய் இருக்கிறது. அவர்களுடைய பொறுப்பில் விடப்பட்டிருக்கும் மாணவர்கள் மீது பொறுமையுடன் அன்பு பாராட்டி வழிநடத்தும் கடப்பாடு இருக்கிறது. வெறுமனே அதிகாரப் பிரயோகம் செய்யவும், அடித்து வழிநடத்தவும் கூடிய இலக்குகளாக மாணவர்களை கருதும் போக்கு மாற வேண்டும். ஆசிரியரின் கடமை 'கற்றுச் சொல்லுதல்' மட்டுமல்ல. கற்றலுக்கேற்ப நடந்து காட்டுதலுமாகும். கற்றபின் அதற்கு தக ஆசிரியர்கள் நடக்க வேண்டும்.

உளநலமும் பார்வை விரிவும் உடையவர்களாக ஆசிரியர்கள் மாறவேண்டும். ஆழமான நேசிப்பும், பொறுமையும், கருணையும் கற்பித்தல் என்ற அடித்தளம் ஆகவேண்டும்.

வீடுவிட்டு பள்ளிவரும் பிள்ளையை தனது சொந்தப் பிள்ளையைப் போன்றே உளமார நேசிப்பவர்களாக ஆசிரியர்கள் மாறவேண்டும். இத்தகைய மனவளம் ஆசிரியர்களிடம் அற்றுப்போவதால்தான் நீதிமன்றத்தையோ அல்லது வைத்திய சாலைகளையோ மாணவர்கள் நாட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது என்பதை யாவரும் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

இறுதியாக ஒரு விடயம் - இப்போதும் "அடியாத மாடு படியாது" என்று சொல்கின்ற பெற்றோரும் ஆசிரியர்களும் இருக்கவே செய்கின்றார்கள். இதன் மெய்யான அர்த்தம் அடித்து வருத்தாத எருதுகள் கீழ்ப்படிந்து வண்டி இழுக்க உதவாது என்பதுதான். ஆனால் இந்த வன்முறைச் சித்தாந்தத்தைப் பிள்ளைகள் மீது பிரயோகிப்பது, தறுக்கணித்த சமூகம் ஒன்றை உருவாக்க வித்திட்டுவிடும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவின் தொடர்பும் இந்தியாவின் உறவும்

ரம்யன்



" என்னதான் இலங்கைக்கு சீனா உதவிகள் புரிந்தாலும் சரித்திரகாலம் தொட்டு இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கிடைத்துள்ள – கிடைக்கக்கூடிய உதவிகளை விரல்விட்டு எண்ணிவிட முடியாது.

இலங்கைக்கும் அதன் மக்களுக்கும் இந்தியாவா சீனாவா முக்கியம்?

இன்றுள்ள அரசியல் நிலைமையில் இலங்கை அரசுக்கு இந்தியாவை விட சீனாவே முக்கியமாக தென்படலாம். சீனா பெரியநாடு. இந்தியாவை விட பலகோடி மக்களை அதிகமாகக் கொண்டது. கம்யூனிஸ் - மற்றும் மா சேதுங் சிந்தனைகளின் அடிப்படையில் இந்தியாவை விட மிகவேகமாக வளர்ந்து வந்த நாடு. இன்று தொழில்நுட்பம் மற்றும் விண்வெளி ஆய்வு மற்றும் வேறு துறைகளில் இந்தியாவை மட்டுமல்ல வேறும் பலநாடுகளை முந்திக்கொண்டு முன்னேற முயல்கிறது. முன்னேறியும் வருகிறது.

2020ஆம் ஆண்டளவில் அமெரிக்காவையும் வேறு ஐரோப்பிய நாடுகள் பலவற்றையும் பின்னடையச் செய்துவிட்டு ஆசியா முன்னேறிவிடும் என்று அமெரிக்க ஆய்வொன்றில் அண்மையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆசியாவின் அவ்வாறான முன்னேற்றத்துக்கு சீனாவே முன்னிலை வகிக்கப்போகின்றது என்பது அந்த ஆய்வின் தீர்ப்பு.

இந்தப் பின்னணி மட்டுமல்ல இலங்கை அரசின் விருப்பம் அறிந்து பல்வேறு திட்டங்களுக்கு சீனா வாரிவாரிக் கொடுத்து வருகிறது.

இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சொந்த இடமான ஹம்பாந்தோட்டையில் மேற்கொள்ளப்படும் பல பெரிய திட்டங்களுக்கு சீனா உதவுகிறது. ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை நவீனமயமாக்குவதற்கு சீனா பெரும் அளவில் உதவி புரிந்துள்ளது. கீழைத்தேசங்களுக்கு கொழும்பு வழியாகச் செல்லும் பெரிய வியாபாரக் கப்பல்கள், கொழும்புக்கு வராமல் இந்தியத் துறைமுகங்களை நாடிச் செல்வதை ஹம்பாந்தோட்டைத் துறைமுகம் அபிவிருத்தியடையும் போது தடுத்து நிறுத்துவதுமட்டுமல்ல கொழும்புத் துறைமுகத்தையும் கூடப் புறந்தள்ளிவிட்டு ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை நாடிச் செல்லும் அளவுக்கு அதனை சீனா சிறப்பாக அபிவிருத்தி செய்து கொடுக்கும் என்பது இலங்கையின் எதிர்பார்ப்பு.

ஆசியாவின் ஆச்சரியம் மிக்க நாடாக இலங்கையைக் கட்டியெழுப்பும் இலங்கைத் தலைவரின் கனவை நிறைவேற்றி வைப்பதற்கு சீனா தான் உறுதுணையாக இருக்கப் போகிறது என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### விண்வெளியில் செயற்கைக்கோள்

அப்படியான ஆச்சரியங்களில் ஒன்றுதான் இலங்கையின் சார்பில் சீனநிறுவனம் ஒன்று செயற்கைக் கோள் ஒன்றை விண்வெளிக்கு அனுப்பியமையாகக் கருதலாம்.

இந்தச் செயற்கைக் கோள் திட்டத்தை முதலில் இலங்கை அரசுதான் சீனாவுடன் சேர்ந்து முன்னெடுப்பதாகக் கூறப்பட்டது.

அதெப்படி நாட்டு மக்களுக்கும் நாடாளுமன்றத்துக்கும் அறிவிக்காமல் இந்தத் திட்டத்தை முன்னெடுக்க முடியும்? நாட்டு மக்கள் பெரிய வாழ்க்கை செலவு பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள நிலையில் ஒரு வேளை உணவுக்கான வருமானத்தைக் கூட தேடிக்கொள்வது சிரமமாக இருக்கும் நிலையில் இந்தப் பெரிய திட்டத்துக்கு அரசு எங்கிருந்து பணம் பெற்றது? இப்பொழுது இந்தத் திட்டம் அவசியம் தானா என்றவாறு எல்லாம் கேள்விகள் எழுந்தன. எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்திலும் வெளியிலும் கேள்விகளைக் கேட்டுக் குடைந்தார்கள். அதனால் அரசு சடுதியாக சுதாகரித்துக் கொண்டு விண்வெளி கோள் திட்டம் அரசினுடையது அல்ல, அது தனியார் நிறுவனம் ஒன்று சீன நிறுவனம் ஒன்றுடன் இணைந்து மேற்கொள்ளும் திட்டம் என்று அறிவித்தது.

இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதில் ஜனாதிபதியின் புதல்வர்களில் ஒருவர் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் இதற்கு 360 மில்லியன் அமெரிக்க டொலர் செலவழித்திருப்பதாகவும் செய்திகள் வந்தன.

இப்பொழுது அந்த செயற்கைக் கோள் விண்ணில் வலம் வருவதாகக் கூறப்படுகின்றது. அந்தக் கோளினால் இலங்கைக்கும் மக்களுக்கும் என்ன பயன் ஏற்படப்போகிறது என்பதை இனி மேல் தான் அறிய வேண்டும்.

என்றாலும் அந்த செயற்கைக் கோளில் இலங்கையின் தேசியக்கொடி இடம் பெற்றிருப்பது பற்றி ஜனாதிபதி மகிழ்ச்சி தெரிவித்திருந்தார்.

செயற்கைக் கோள் இலங்கைக்கு மேலாக வானில் வெளிவரும் போது எந்தவிதமான தகவல்களை அனுப்பும் எந்தவிதமான ஆய்வுகளை நடத்தும் என்பது இன்னமும் பகிரங்கப்படுத்தப்படவில்லை. ஆனால் இந்த செயற்கைக்கோள் சீனாவுடன் இணைந்து செலுத்தப்பட்டிருப்பதுதான் அண்டை நாடான இந்திய அதிகாரிகளுக்கு நெருடலைக் கொடுக்கும் விடயம். இந்தியா வெளிப்படையாக இந்த செயற்கைக்கோள் குறித்து அக்கறைகாட்டிக் கொள்ளாவிட்டாலும் இரகசியமாக ஆய்வுகளை நடத்தக்கூடும் என்று கருதஇடமுண்டு. வெறும் தேசியக் கொடியை விண்ணில் கொண்டு செல்வதுதான் இந்த செயற்றைக்கோளின் பணியென்றால் இத்தனை மில்லியன் டொலர்கள் செலவழித்திருக்க வேண்டுமா என்ற கேள்வி எழுகின்றது. விரைவில் இந்த செயற்கைக் கோளின் பணி என்ன என்பதை இலங்கை அரசு அறிவிக்காவிட்டாலும் இந்தியா மற்றும் அமெரிக்க நாடுகள் தமது நுணுக்கமான வானிலை ஆய்வுகள் மூலம் அதனைக் கண்டுபிடித்து விடுவதில் சிரமம் இருக்கமாட்டாது.

58

அசை போட ஒரு விடயம்

### • இந்தியா வழங்கிய உதவிகள்

இவ்வாறு இன்னும் எத்தனையோ பயன்களை சீனாவிடமிருந்து இலங்கை எதிர்பார்க்கலாம். ஆனால் என்னதான் இலங்கைக்கு சீனா உதவிகள் புரிந்தாலும் சரித்திரகாலம் தொட்டு இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கிடைத்துள்ள - கிடைக்கக்கூடிய உதவிகளை விரல்விட்டு எண்ணிவிட முடியாது.

முதலில், இன்று இலங்கையில் காணப்படும் மக்கள் - அவர்களின் மொழிகள், கலைகள், கலாசாரங்கள், சமயங்கள், சமய சம்பிரதாயங்களை எடுத்துக்கொள்வோம்.

இலங்கை மக்களின் உடல் அமைப்பு, முகசாயல், நிறங்கள் எந்த வகையிலும் சீனர்களை ஒத்தவையாக இல்லை. அவர்கள் மங்கோலிய பாரம்பரியத்துக்குரியவர்கள். இலங்கையர் ஆரிய - திராவிட பாரம்பரியத்துக்குரியவர்கள். அதனால்தான் அவர்களின் மொழிகளும் சாயல்களும் வித்தியாசமாக உள்ளன.

- சீனாவில் பௌத்தம் பேணப்பட்டாலும் அது எல்லோராலும் அனுஷ்டிக்கப்படுவதில்லை. அனுஷ்டிக்கப்பட்டாலும் முற்றிலும் மாறுபாடான சம்பிரதாயங்களையும், நடைமுறைகளையும் கொண்டுள்ளன. அதுமட்டுமல்ல அங்கு இங்கு போல் பலகட்சி முறையிலான ஆட்சிமுறையில்லை. அங்கு தனிஒரு கட்சியே ஆட்சி புரிகின்றது. அந்தக் கட்சியும் சமயங்களை ஊக்குவிப்பதில்லை.

இலங்கை மக்களில் பெரும்பான்மையானவர்களின் மூதாதைகள் இந்திய பெருநிலத்திலிருந்து வந்தவர்களே.

சிங்களவரின் வரலாறு இளவரசன் விஜயனின் இலங்கை வருகையை அடுத்து கவனத்தில் கொள்ளப்படுகிறது. அவனும்கூட பிற்காலத்தில் தனது முதல் மனைவி குவேனியைத் துறந்தபின் தென் இந்தியாவுக்குச் சென்று தானும் தன் தோழர்களும் அங்கிருந்த உயர்குடி பெண்களைத் திருமணம் செய்து கொண்டதாக கருதப்படுகிறது. அவர்கள் சீனாவுக்கு செல்லவில்லை-சீனப் பெண்களையும் மணம் முடிக்கவில்லை.

இலங்கையில் காணப்படும் வணக்க முறைகளும் வழக்குகளும் இந்தியாவில் காணப்படுபவைகளையே ஒத்திருக்கின்றன.

இங்குள்ளவர்களின் எழுத்துக்களுக்கும் சீன எழுத்துக்களுக்கும் கொஞ்சமும் ஒப்புமை இல்லை. பேசும் மொழியும் அவ்வாறே.

இவ்வாறு இலங்கைக்கும் இந்தியாவுக்கு மிடையிலான ஒற்றுமை ஒருமைப்பாடுகளை இன்னும் விவரித்து வரித்து சொல்லிக்கொண்டு போகலாம்.

எனவே இலங்கை தற்போது சீனாவுடன்கொண்டுள்ளதொடர்பு ஒருவேளை பலகாலம் நீடித்தாலும் இந்தியாவுடனான உறவை இலகுவில் துண்டித்து விட முடியாது.

இந்தியா சுதந்திரம் பெற்றதையடுத்து இலங்கையும் சுதந்திரம் பெற்றது. அங்கே பலகட்சி முறையிலான ஜனநாயக ஆட்சிமுறை உள்ளது. இங்கேயும் அதேமுறைதான். ஆனால் சிறு வித்தியாசம். அங்கே மாநிலங்களுக்கு ஓரளவு சுயாட்சி உண்டு. அது மட்டுமன்றி சிறுபான்மை இனத்தவர்களும்கூட மக்கள் ஆதரவையும் கட்சிகளின் செல்வாக்கையும் பொறுத்து மத்தியில் பிரதம மந்திரியாக அல்லது ஜனாதிபதியாக வரமுடியும். இங்கு மாநிலங்கள் கிடையாது. இந்தியாவின் அனுசரணையில் மாகாண சபை முறை கொண்டுவரப்பட்டது. அதனையும் இல்லாதொழிக்க முயற்சி நடக்கின்றது.

பல கட்சி ஆட்சிமுறை என்றாலும் எந்த ஒரு சிறுபான்மை இனத்தவரும் ஜனாதிபதியாகவோ பிரதம மந்திரியாகவோ வருவதற்கு இடமில்லை. உண்மையில் பெரும்பான்மையினத்தவர்கள்தான் ஆட்சிபுரிகிறார்கள். அவர்களின் சமயமே முதன்மை பெற்றுள்ளது.

சரித்திர காலம் தொட்டு கலை, கலாசாரம், அரசியல் மற்றும் பல துறைகளிலும் விரும்பியோ விரும்பாமலோ இந்தியாவின் செல்வாக்குக்கு உட்பட்டுவரும் இலங்கை நாடானது ஆட்சி முறையிலும் அதே முறையைப் பின்பற்றியிருக்குமானால் நாட்டில் இன்றைய பிரச்சினைகளில் பெரும்பாலானவற்றை தவிர்த்திருக்கலாம். எதிர்காலத்திலாவது அப்படியொரு நிலைமை தோன்றுமானால் அமெரிக்கா, ஆபிரிக்காவைப் போன்று இனப்பாகுபாடுகளும் முரண்பாடுகளும் நீங்கி நாட்டில் அமைதி நிலவ வழியேற்படும். குறைந்தபட்சம் இந்தியாவில் இருப்பதுபோன்றதொரு ஆட்சிமுறை இங்கு ஏற்பட முடியாதா என்று அமைதியை விரும்புபவர்கள் ஏங்குகிறார்கள்.

ஆக சீனாவுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது சகோதரர்களும் என்னதான் நெருக்கத்தை ஏற்படுத்தி இந்தியாவுக்கு நெருக்கு தலைக்கொடுக்க முயன்றாலும் இரு நாடுகளுக்கு மிடையில் கலை, கலாசார, இன, மொழி, சமய மற்றும் இரத்த உறவினால் ஏற்பட்டுள்ள, தொடர்ந்தும் ஏற்படக்கூடிய நெருக்கமான உறவை அழித்துவிட முடியாது. - அது இயற்கையின் பாற்பட்டது. இரு நாடுகளும் பூகோள ரீதியில் இடம்பெற்றுள்ள சூழலும் அதுவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புஷ்வாணமான உலக அழிவு

அதிரன்

உலக அழிவைப் பற்றி நமது நாட்டிலும், அயல்நாடுகளிலும் பல்வேறு கருத்துக்களைக் கூறினார்கள். அவைகள் அனைத்தும் சர்ச்சைக்குரிய விடயங்களாகவே இருந்தன. இதனால் மனிதர்கள் அவரவர் கற்பனைக்கு ஏற்றாற் போல் எடுத்துக்கொண்டு தாமும் குழம்பி, பிறரையும் குழப்பித் தலையைப் பிய்த்துக் கொண்டார்கள். ஆயினும் அவர்கள் நினைத்த படி கடந்த 21 ஆம் திகதி உலகம் அழியவு மில்லை. மூன்று நாள்கள் இருட்டு வரவு மில்லை. உலக அழிவுக் கதை வெறும் புஷ்வாணமாகிப் போனது தான் மிச்சம்.

இந்த உலக அழிவு வதந்தியால் பல சுவாரஷ்யமான சம்பவங்களும் நடந்திருக் கின்றன.

உலக அழிவு தொடர்பில் அறிந்துகொள்வ தற்காக ஏற்படுத்தப்பட்ட நூற்றுக்கணக்கான தொலைபேசி அழைப்புகள் காரணமாக வளிமண்டலவியல் திணைக்களம் பெரும் நெருக்கடி நிலையை எதிர்கொண்டதாக வளி மண்டலவியல் திணைக்கள பேச்சாளர் கூறி னார்.

உலக அழிவு தொடர்பில் ஏற்படுத்தப்பட்ட வதந்தி மற்றும் பொய்ப் பிரசாரங்களை நம்பி அச்சமடைந்த மக்கள் இவ்வாறான தொலை பேசி அழைப்புகளை ஏற்படுத்தியதாக அவர் தெரிவித்துள்ளார்.

"உலக அழிவுக்கு வழிவகுக்கும் இயற்கை அனர்த்தங்கள் ஏதாவது ஏற்பட்டுள்ளதா என்பது தொடர்பில் அறிந்துகொள்வதற்காக மேற்படி மக்கள் தொலைபேசி அழைப்புகளை ஏற் படுத்தியிருந்தனர்" என அவர் தெரிவித்துள் ளார்.

இதனைவிட உலகம் அழியப் போகிறது என நினைத்து உயிரை மாய்த்துக்கொண்ட சம் பவங்களும் வெளிநாடுகளில் நடந்துள்ளன.

மாயன் நாட்காட்டி 2012 வரை உள்ளது. ஆகையால் உலகம் அழிந்து விடும் என்ற கூற்றைப் பலர் நம்பினார்கள். மாயன் இனத்தவர்கள் நம் நாட்டைப் பொறுத்த வரை வேடுவர்கள். அவர்கள் தனித் தனிக் குழுவாகத்தான் வாழ்ந்திருக்கி றார்கள். அவர்கள் வாழ்ந்த இடம் காடுகள், மலைகள். அக்காலத்தில் வாழ்ந்து வந்த ஆட்சியாளர்கள் அவர்களிடம் போரிட்டு அவர்களை அழித்ததால், அந்த இனம் அழிந்தது. அவர்கள் குறிப்பிட்டுள்ள அந்த நாட்காட்டியை மாயன் இனத்தவர்களில் யாரோ ஒருவர் அதை எழுதியிருக்க முடியும்.

அந்த ஒருவர், 2012 வரை எழுதிய பிறகு, அவர் இறந்திருக்கலாம். ஆகையால் அதைத் தொடர முடியாமல் போயிருக்கலாம். அதனால் உலகம் அழிந்து விடும் என்று அர்த்தமல்ல. ஆதிவாசி களின் சடங்குகளையும், சம்பிரதாயங்களையும் நாம் நம்புவதும் இல்லை, ஏற்றுக்கொள்ளுவதும் இல்லை. ஆனால் உலகம் அழியப்போகிறது என்பதை மட்டும் நாம் எப்படி நம்புகிறோம். காரணம் நம் அறியாமையே ஆகும்.

இந்து மத முறை, முஸ்லிம் மத முறை, கிறிஸ்தவ மத முறை இன்னும் பலவகையான முறைகளை வைத்து நாட்காட்டியை நாம் கையாளுகிறோம். அதில் மாயன் நாட்காட்டியும் ஒன்று.

நம் நாட்டில் சித்தர்கள், யோகிகள், முனி வர்கள், ஞானிகள், மகான்கள் என்று பலர் ஆன்மிக வழியில் வாழ்ந்து பல சாதனைகளைச் செய்து மக்களுக்கு நன்மைகள் செய்திருக் கிறார்கள். பூமி அழியும் என்று இதுவரை அவர்களில் எவரும் எப்பொழுதும் கூறிய தில்லை.

இறை வழிபாட்டில் நம்பிக்கை குறைவான வர்களும், இறைவனை நம்பாதவர்களுமே உலக அழிவை நம்புவார்கள்.

பூமி இருந்த இடத்தில் இருந்தபடியே மறைந்து போனால்தான் ஒட்டுமொத்த அழிவு என்று பொருளாகும். அப்படி நடப்பதற்கு வாய்ப்பே இல்லை. இந்த விடயங்களை ஆராய்ந்தோம் என்றால் உலகம் அழியாது என்று எமது அறிவுக்குப் புலப்படும்.

உலக அழிவு எப்படி ஏற்படும் என்பதை விளக்கும் வீடியோ சீடிக்கள் கடந்த ஒரு மாதகாலமாக அமோகமாக விற்பனையாகின. வெளிநாடுகளிலும் ஏன் யாழ்ப்பாணத்திலும் கூட இந்த சீடி விற்பனை நல்ல சூடு பிடித்தது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பணம் சம்பாதித்துவிட வேண்டும் என்ற ஒரே நோக் கத்தை அடிப்படையாகக் கொண்டு சீடிக் கடைக் காரர்கள் அந்த சீடிக்களை விற்பனை செய்வதில் மும்முரம் காட்டினர்.

சிறுவர் முதல் வயோதிபர்கள் வரை பெருமளவானோர் இந்தச் சீடிக்களை பார்க்கத் தவற வில்லை. உலகம் இப்படித்தான் அழியப் போகிறது என்பதை முன்கூட்டியே கூறும் வல் லமை மனிதனுக்கு இருந்தால் பிறகு எதற்கு கடவுள் என்று ஒருவர் இருக்க வேண்டும் என்ற அடிப்படைச் சிந்தனை கூட இல்லாமல் இந்த வீண் வதந்திகளையும் பொய்ப் பிரசாரங்களை யும் நம்பி ஏமாந்து போனார்கள்.

பலர் 20 ஆம் திகதி இரவு படுக்கைக்குச் செல்லும் போது பெரும் பயத்துடனும் பீதியுடனும் முகம் கறுத்தவாறே சென்றனர். பலருக்கு இரவிரவாக தூக்கமே வரவில்லை. அடுத்த நாள் உலகம் அழியுமோ இல்லையோ என்ற எண்ணமே அவர்கள் மனதில் பூதாக ரமாக இருந்தது. வேறு சிலர் நல்ல 'தண்ணி' யில் மிதந்தனர். இன்றைக்கு ஒருநாள் தானே இந்தச் சந்தோஷம். நாளைக்கு எல்லோரும் அழிந்துவிடுவோம் என்று தமக்குத் தாமே சொல்லியவாறு மூக்கு முட்ட 'தண்ணி' அடித்தவர்கள் பல பேர். 20 ஆம் திகதி மாலையில் பலர் கோயில்களுக்குச் சென்று விசேடமாக வழிபட்டார்கள்.

இப்படி இந்த உலக அழிவு நம்மில் பலரை பெரும் பீதிக்கு பயத்துக்கும் ஆளாக்கியது என்பதில் ஐயமில்லை.

இந்த உலக அழிவையே கடந்த ஒரு மாத காலமாக நினைத்து நினைத்து நோயாளர் களாகியவர்களும் உள்ளனர்.

இறைவனை நம்பாமல் மனிதனின் பொய்யான கருத்துக்களை நம்பி உலக அழிவுக் குத் தம்மை தயார்ப்படுத்தியவர்களுக்கெல்லாம் இது நல்ல படிப்பினை.

வழமை போன்றே விடிந்தது 21 ஆம் திகதி. யாழ்ப்பாணத்தில் கடந்த சில தினங்களாக மழை மந்தாரமான காலநிலை தொடர்கிறது. ஆயினும் 21 ஆம் திகதி இதற்கு மாறாக நல்ல வெயில் எறித்தது. உலக அழிவுக்கான எந்தவொரு அறிகுறியுமே தென்படவில்லை. வழமைபோன்றே அந்த நாளும் கழிந்தது. ஆனால் உலகம் அழியவில்லை.

இதிலிருந்து மனிதனால் எதனையும் முற்கூட்டியே கூறிவிட முடியாது என்பதை உறுதியாக நிரூபித்துவிட்டார் கடவுள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"ஐ லவ் யூ அம்மா. நான் சந்தோஷமாக இருக்கிறேன். உங்களுக்கு நான் இதுவரை நல்ல மகனாக நடந்துகொள்ளாததற்கு மன்னிக்கவும். நான் சொர்க்கத்திலிருந்து உங்களை நேசிப்பேன்.



■ உ சிலமணி



# உரத்துக் குரல் கொடு உலகமே.....



இந்த நெஞ்சுருக்கும் வார்த்தைகளை தனது மரணஉயிலாக எழுதி விட்டுச் சென்றிருக்கிறான் ஆறு வயது அமெரிக்க சிறுவனான பிரையன்.

உலகின் வல்லரசாக நினைத்துக் கொள்ளும் அமெரிக்காவில் ''கனெக்டிகட்' நகரில் உள்ள சாண்டி ஹுக் என்ற முன்பள்ளியில் அடம்லான்சா என்ற கொடூரன் நடத்திய கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் 20 குழந்தைகள் துடிதுடித்து உயிர் விட்டனர். இந்தத்துப்பாக்கிச் சூட்டில் இறந்துபோன பிரையன் என்ற ஆறு வயதுச் சிறுவன் தான் இவ்வாறு தனது தாய்க்கு மரணஉயில் எழுதிவிட்டு இறந்து போனான். அவனது வார்த்தைகள் இன்று உலகத் தலைவர்கள் எல்லோரையும் கண்ணீர் சிந்த வைத்திருக்கின்றன.

இந்த 20 அமெரிக்கச் சிறுவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதற்காக உலகத் தலைவர்கள் எல்லோரும் தங்கள் இரங்கல்களை தெரிவித்துள்ளனர். எங்கள் 'உத்தம' ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூட இந்தப்படுகொலைகள் தொடர்பாக தனது இரங்கலை தெரிவித்திருக்கின்றார்.

ஆனால் அம்மா என்று கத்தி முடிப்பதற்குள் செஞ்சோலைகுழந்தைகள் 61 பேர் மண்ணுக்குள் சாகடிக்கப்பட்ட போதும், நாகர் கோவில் மகாவித்தியாலயத்தில் 25 பள்ளிக் குழந்தைகள் வெள்ளையுடையுடன் புக்காராவுக்கு இரையான போதிலும் எந்த உலகத்தலைவர்களின் குரல்களும் அவர்களுக்காக ஒலிக்கவில்லையே ? ஒரு சொட்டு கண்ணீர் கூட இந்த உலகத்தலைவர்கள் சிந்தவில்லையே? அந்த நேரத்தில் இவர்களின் இரக்கம் எங்கே போய் ஒளித்திருந்தது? ஜனநாயகத்துக்கான குரல்வளை எங்கே பதுங்கியிருந்தது?

1995 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 22 ஆம் திகதி நாகர் கோவில் மாகவித்தியாலத்தில் 25 குழந்தைகள் காவு கொள்ளப்பட்டபோது உலகத் தலைவர்களின் குரல்கள் இத்தகைய படுகொலைகளுக்கு எதிராக ஓங்கி ஒலித்திருந்தால், பேரின அரசுக்கு ஒரு பயம் வந்திருக்கும். அந்தப்பயம் பல்லாயிரக் கணக்கான ஈழத்தமிழ்க் குழந்தைகளின் உயிர்களைத் தப்ப வைத்திருக்குமே ?

1999 ஆம் தமிழ்மாணவியான கிருஷாந்தி ''செம்மணி வெளியில் புத்தரின் பிள்ளைகளால்' சின்னாபின்னமாக்கப்பட்ட போதும்,2001 ஆம் ஆண்டு பச்சையுடை தரித்த அரச வெறியர்களால் யாழ். இந்து மாணவன் நடுவீதியில் சுட்டுக் கொல்லப்பட்ட போதும்,2006 ஆம் ஆண்டு தமிழரின் தலைநகரமான திருகோணமலையில் 4 தமிழ் மாணவர்கள் 'இனந் தெரியாதோரின்'(?) துப்பாக்கி வேட்டுக்களுக்கு இரையான போதும்,2006.08.14 இல் செஞ்சோலையில் 61 பிஞ்சுகள் கிபிரின் குண்டுகளுக்குள் சிக்குண்டு உயிர்விட்ட போதும் திறக்காத உலகத்தலைவர்களின் உதடுகள் 2012.12.15 இல் 20 குழந்தைகள் அமெரிக்காவில் கொல்லப்பட்டதும் திறந்து கொண்ட மர்மம் என்ன?

வடிவேலு பாணியில் கேட்டால் உங்களுக்கு வந்தால் ரத்தம். எங்களுக்கு வந்தால் அது தக்காளி ஜூஸா?

வலிகள் அதிகாரம் உள்ளவர்களுக்கு மட்டுமே உரியனவா? நாங்கள் கத்திக் கத்திக் களைத்துப் போய்விட்டோம். கதறி அழுதழுது கண்களில் கண்ணீரும் இல்லை. ஆனால் எங்களுக்காக எந்தவொரு உலகத்தலைவர்களின் குரல்களும் இன்னமும் ஒலிக்கவில்லையே? வெள்ளையர்கள் மட்டும்தான் மானிடர்களா? இங்கே துடிதுடித்து மரணித்துப் போன கறுப்புத் தமிழ்க்குழந்தைகள் என்ன, வேற்றுக்கிரகத்தில் இருந்தா வந்தவர்கள்? இன்று அமெரிக்கச் சிறுவர்கள் 20 பேருக்காகவும் குரல் கொடுக்கும் அத்தனை தலைவர்களும் சேர்ந்துதானே எங்கள் இனத்தை முள்ளிவாய்க்காலில் கருவறுத்தீர்கள் ?

இறுதிக்கட்டப் போரில் தமிழனின் அடுத்த தலைமுறையையே இல்லாதொழிக்கும் நோக்குடன் நச்சு வாயுக்களையும், கொத்துக் குண்டுகளையும் பொழிந்து, கிபிரால் குண்டு அபிஷேகம் செய்து,ஷெல்லால் பூத்தூவி எங்கள் பச்சிளம் பாலகர்கள் பலரையும் துடிக்கத் துடிக்கக் கொன்றீர்களே ?

இன்று நீங்களெல்லாம் எப்படித் திடீரென்று உத்தமர்களாக உருமாறி, இறந்துபோன அமெரிக்க சிறார்களுக்காக இரங்கல் தெரிவிக்கின்றீர்கள் ?

ஆளும்வர்க்கத்துக்கு ஆதரவாகக் குரல் கொடுப்பதே எல்லோரதும் கலையாய கடமையாகி விட்டது. இன்று அமெரிக்காவில் 20 குழந்தைகள் உயிரிழந்த போது கொடுக்கப்பட்ட குரல்கள். இலங்கையில் தமிழர் பிரதேசங்களில் மட்டுமல்ல ,ஆப்கானிஸ்தானிலோ, சிரியாவிலோ, ஈரானிலோ குழந்தைகள் கொல்லப்பட்ட போது சிறு அதிர்வைக் கூட எழுப்பவில்லை. எல்லோரும் மௌனிகளாகியிருந்தனர்.

உலகின் வல்லரசு என்று தன்னைத்தானே அமெரிக்கா வர்ணிப்பதால், அதற்குப் பயந்து தானோ என்னவோ எல்லோரது குரல்களும் ஆளும் வர்க்கத்துக்கு சிறு கீறல் விழுந்தாலும் முந்திக் கொண்டு குரல் கொடுக்கின்றன போலும்.

இறுதிப் போரில் ஐ.நா செய்தது பிழையென்று அறிக்கைகள் விடுவதுடன் உங்களின் பணி முடிந்ததா? இனிமேலும் தவறுகள் நடக்காது இருக்க என்ன செய்தீர்கள்? என்ன செய்கின்றீர்கள் ?

தமிழன் தனிநாடு கோரினால் தவறு என்றீர்கள். ஆனால் இன்று பலஸ்தீனத்துக்கு பார்வையாளர் அந்தஸ்துடன் ஐ.நாவில் இடம் கொடுத்திருக்கின்றீர்கள்.

தமிழர்கள் தமிழீழமே தீர்வு என்று என்றைக்கும் சொல்லவில்லை. சிங்கள இனவெறி ஆட்சியாளர்களே அவ்வாறு சொல்ல வைத்தார்கள். நாங்கள் கையில் ஆயுதம் தூக்கியிருந்த போது, எங்களைத் தேடி ஓடி வந்த உலக நாடுகள், சமாதானம் என்று சொல்லி எங்களை சாக்கடைக்குள் தள்ளிவிட்டு இன்று எங்களுக்காக குரல் கொடுப்போரின் குரல் வளையை நசுக்கத் தேடித்திரிக்கின்றன.



யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் அரசால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். பிரபாகரன் வருவார் என்று சொல்கிறார்கள். அவரது சிந்தனையையே பின்பற்றுகின்றனர். இவ்வாறு கைது செய்யப்பட்டு புனர்வாழ்வில் இருக்கும் போதும் அவர்கள் சொல்லிக் கொண்டேயிருக்கின்றார்கள். இவர்கள் இவ்வாறு சொல்லாவிட்டால்தான் விடுவிக்கப்படுவார்கள். என்று கைது செய்யப்பட்ட தனது மகனின் விடுதலைக் காக கதறியழுத தாயிடம் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி ஹத்துருசிங்க சொல்லியுள்ளார்.

உயிரிழந்த -மீட்கவே முடியாத -அமெரிக்க மாணவர்களுக்காக நீ முந்தி நான் முந்தி என்று குரல் கொடுக்கும் சர்வதேசமும் , ஐ.நாவும் எந்தக் காரணமுமின்றி கைது செய்யப்பட்டு , தொலைதூர இடத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ், பல்கலை மாணவர்களை விடுவிக்க குரல் கொடுக்க ஏன் தயங்குகிறது?

இன்னும் சிறிது காலத்தின் பின்னர், எல்லாம் முடிந்த பின்னர், நாங்கள் செய்தது தவறுதான் என்று அறிக்கை விடவா காத்திருக்கிறார்கள் உலகத்தலைவர்கள்? அப்படியானால் இவர்களும் வெறும் அறிக்கைப்புலிகள் மட்டும் தானா? கண் கெட்ட பின்னர் உங்களின் சூரிய நமஸ்காரம் தேவையா?

கொல்லப்பட்ட 20 அமெரிக்க குழந்தைகள் மட்டுமே மாணவர்கள் அல்லர். ஈழத்தில் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கின்ற குழந்தைகளும் மாணவர்கள்தான். உலகமே! உன் குரலொலியை எங்கள் மாணவர்களுக்காகவும் உரக்க கொடு! ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோதி வென்ற மோடி



தொகுப்பு- ஒளாவீஷ்

இந்தியா முழுதுமே உற்று நோக்கிக் கொண்டிருந்த குஜராத் மாநிலத்தேர்தல் முடிவுகள் வெளிவந்துவிட்டன. தொடர்ந்து மூன்றாவது முறையாக அரியணையில் ஏறியிருக்கிறார் பாரதிய ஜனதாக் கட்சியின் நரேந்திரமோடி. உண்மையில் குஜராத்தில் பாரதிய ஜனதாக் கட்சி வெற்றி பெற்றுள்ளது என்பதனை விடவும், நரேந்திரமோடி என்ற தனிநபர் பெற்ற வெற்றியாகவே இதனைக் கருத வேண்டியுள்ளது. ஏற்கனவே பாரதிய ஜனதாக் கட்சியின் கோட்டையாக குஜராத் இருந்தாலும் எவராலும் அசைக்கமுடியாத இரும்புக்கோட்டையாக மாற்றியவர் மோடி.

அதனால் தான் குஜராத் தேர்தல் பிரசாரங்களை ராகுல்காந்தி தலைமையில் காங்கிரஸ் கட்சி என்றுமில்லாத வகையில் பெரு மெடுப்பில் முன்னெடுத்த போதும், அந்தக் கட்சியால் மோடியோடு மோதி வெல்லமுடியவில்லை. தொடர்ந்து மூன்றாவது முறையாக தேர்தலில் வென்று தன் இராஜ்ஜியத்தினை நிறுவிக் கொண்டுள்ள மோடி, தனது இளமைக்காலத்தில் ஒரு தேநீர்க்கடை நடத்தியவர் என்றால் நம்பமுடிகிறதா? ஆனால் நம்பித்தானாக வேண்டும்.

நரேந்திர தாமோதர் தாஸ் மோடி, குஜராத் மாநிலம், மேஹ்சனா மாவட்டத்தின் வத்நகரில், 1950 செப்ரெம்பர், 17இல் பிறந்தார். இவரது பெற்றோர் தாமோதர் தாஸ் முல்சந்த் மோடி - ஹீரா பா. பள்ளியில் படிக்கும் போதே, ஆர்.எஸ்.எஸ்., மற்றும் ''அகில பாரதிய வித்யார்தி பரிஷத் அமைப்பில் இணைந்து, ஊழல் எதிர்ப்பு போராட்டங்கள், அரசியல் தொடர்பான கூட்டங்களில் பங்கேற்றார். பின், பா.ஜ.,வில் சேர்ந்தார்.

இளம் வயதில் சகோதரருடன் இணைந்து தேநீர்க்கடை நடத்தினார். பின்னர் அரசியல் ஆர்வத்தால், குஜராத் பல்கலைகழகத்தில், ''அரசியல் அறிவியலில் முதுகலைப்பட்டம் பெற்றார். மோடி இதுவரை திருமணம் செய்து கொள்ளவில்லை. மக்கள் பணிக்காகவே திருமணத்தை அவர் உதறினார் என்று மோடியின் விசுவாசிகள் புகழ்கின்றனர்.

1998இல் குஜராத் மற்றும் இமாச்சல மாநிலங்களுக்கான தேர்தல் பொறுப்பாளராக, பாரதிய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவர் அத்வானியால் நியமிக்கப்பட்டார் மோடி. இந்தப்பணியை மோடி திறம்பட செய்து முடித்தார். குஜராத் முதல்வராக இருந்த கேசுபாய் படேல், 2001 ஒக்ரோபர் 6ஆம் திகதி ராஜினாமா செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. இதையடுத்து, குஜராத் மாநில சட்டசபை உறுப்பினராகக் கூட தெரிவுசெய்யப்படாத மோடியிடம் முதலமைச்சர் பதவியை பா.ஜ.க வழங்கியது. ஒக்ரோபர் 7 இல், குஜராத் முதல்வராக மோடி பதவியேற்றார்.

பின், இடைத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 2002 பெப்ரவரி 27இல், ''கோத்ரா ரயில் எரிப்பு'' சம்பவத்தை தொடர்ந்து, குஜராத்தில் பெரும் கலவரம் மூண்டது.

இதையடுத்து தனது முதல்வர் பதவியை மோடி, ராஜினாமா செய்தார். எனினும் அதே வருடம் நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில், வெற்றி பெற்று மீண்டும் முதல்வரானார் . மதவாதத்தை முன்னிறுத்தி அரசியல் செய்கிறார் என்று தன் மீது வாரியிறைக்கப்படும் குற்றச்சாட்டுகளை மனதில் கொள்ளாமல், மோடி மாநிலத்தின் வளர்ச்சியை மட்டுமே கருத்தில் கொண்டு செயற்பட்டார். குஜராத்தை பல துறைகளிலும், முன்மாதிரி மாநிலமாக மாற்றிக் காட்டினார். 2007 தேர்தலிலும் வெற்றி பெற்று, மூன்றாவது முறையாக முதல்வரானார். குஜராத்தில், நீண்டகாலம் முதல்வராக இருந்தவர் என்ற சாதனையையும் படைத்தார்.

குஜராத் மின் மிகை மாநிலமாக உள்ளது. பெரிய மின் உற்பத்தியிலும் (2,000 மெகாவாட்) நாட்டில் முன்னணியில் உள்ளது. இளைஞர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாவதை தடுக்கும் வகையில், ''சுகுட்கா'' என்ற போதைப்பொருளுக்கு தடை விதித்துள்ளார். மும்பை தாக்குதலுக்குப் பின், குஜராத் கடற்கரையோரப் பாதுகாப்பை பன்மடங்கு பலப்படுத்தியுள்ளார். சமீபத்தில், இணையம் மூலம் இளைஞர்களுடன், மோடி நேரடியாக கலந்துரையாடினார். இந்தியாவில் அரசியல்வாதி ஒருவர், இது போன்ற நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வது இதுவே முதல்முறை. சமூக வலைதளமான, ''சுடுவிட்டரில்'' இவரை, 11 லட்சம் பேர் பின் தொடர்கின்றனர்.

இந்தியா ருடே நாளிதழ், இந்தியாவின் சிறந்த முதல்வர் என்ற விருதை, 2006இல் மோடிக்கு வழங்கி கௌரவித்தது. குஜராத்தில், கணினித் துறையில் மோடி ஏற்படுத்திய வளர்ச்சியின் காரணமாக, கொம்ப்யூட்டர் சொசைட்டி ஒப் இந்தியா என்ற அமைப்பு, ''இ-ரத்னா'' விருதை அவருக்கு வழங்கியது. 2009ஆம் ஆண்டுக்கான, ''ஆசியாவின் சிறந்த ஆளுமையாளர்'' விருதுக்கும் மோடி தேர்வு செய்யப்பட்டார்.

தற்போது தன் தலைமையில், மூன்றாவது முறையாக, சட்டசபைத் தேர்தலை எதிர்கொண்டு, ''ஹட்ரிக்'' வெற்றி பெற்றுள்ளதோடு, நான்காவது முறையாக, முதல்வராகப் பதவியேற்க உள்ளார் மோடி. 2007 இல் நடந்த சட்டசபைத் தேர்தலின் போது, ''மரண வியாபாரி'' என்று காங்கிரஸ் தலைவர் சோனியாவால் மோடி விமர்சிக்கப்பட்டிருந்தார். ஆயினும் அந்த பிரசாரங்களையெல்லாம் முறியடித்து கடந்த, 22 ஆண்டு காலமாக, குஜராத் மாநிலத்தில், ஆட்சி, அதிகாரத்தை பிடிக்க முடியாமல் தவிக்கும், காங்கிரஸை மீண்டும் மண்ணைக் கவ்வச் செய்து மணிமகுடம் தரிக்கவுள்ளார் மோடி.

# உலகம் ...

(சூரிய. 1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சனக்கூட்டம். எல்லோரும் சொல்லிவைத்தாற் போல கைகளில் மெழுகுவர்த்திகளை அள்ளு கொள்ளையாக வாங்கிக் கொண்டு வந்தனர். ஒன்றுமே புரியவில்லை. சிலவேளைகளில் கிறிஸ்மஸ் நெருங்குவதால் இப்படி மெழுகுவர்த்திகளை முன்கூட்டியே வாங்கிறார்களோ என்று மனதைச் சமாதானப்படுத்த முடியாதிருந்தது. காரணம், மெழுகுவர்த்திகளை பைகளில் நிறைத்துக் கொண்டு வந்தவர்களில் அநேகர் இந்துக்கள். எதற்காக இப்படி மெழுகுவர்த்திகளை வாங்குகிறார்கள் என்று அறியாவிட்டால் தலை வெடித்து விடும் போல இருந்தது. ஆனால் அதற்கு அவர்கள் சொன்ன பதிலைக் கேட்ட போது அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை.

நாளையில் இருந்து மூண்டு நாள் உலகம் முழுக்க இருட்டா இருக்கப்போகுதாம். கரண்டும் இருக்காதாம். சூரிய வெளிச்சமும் இருக்காதாம். விளக்கு கூட எரியாதாம் ஆனா மெழுகுவர்த்தி மட்டும் எரியுமாம். அதுதான் 3 நாளைக்கு வர்த்திகளை வாங்கிக் கொண்டு போறம் என்று சர்வசாதாரணமாக சொல்லி போனார்கள் அவர்கள். பின்னர் கொஞ்சம் நோண்டிப் பார்த்ததில், கடைக்காரர் தன்னிடம் தேங்கிக் கிடந்த மெழுகுவர்த்திகளை விற்றுத் தீர்ப்பதற்காக அவிழ்த்துவிட்ட கதைக்கு எடுப்பட்டவர்களே இவ்வாறு மெழுகுவர்த்திகளை வாங்கிக் குவித்தனர் என்று தெரியவந்தது. மக்களின் பயத்தை பணமாக்கும் வித்தை தெரிந்தவர்களும் இந்த உலக அழிவு பற்றிய கதையாடல்களின் பரவலுக்கு மிகமுக்கிய காரணி. உலக அழிவு பற்றிய இறுவட்டு ஒன்று வெளியாகியிருந்தது.

இங்கு அதன் விலை 60 ரூபா. யாழ்ப்பாணத்தில் மட்டும் குறித்த இறுவட்டின் பிரதிகள் 10 ஆயிரத்துக்கும் மேல் விற்பனையாகியிருக்கிறது. பயம் பணமாவது இப்படித்தான். மற்றவர்களின் பயத்தை முதலீடாகக் கொண்டு, உலகம் அழியும் என்ற கருத்தைக் கொண்டமைந்த இந்த இறுவட்டு இவ்வாறு பரபரப்பாக விற்பனையான சூழலில், உலகம் அழியவே அழியாது என்ற கருத்துடன் வெளிவந்த பல இறுவட்டுக்கள் கவனிக்கப்படாமலே போயிருந்தன. இங்கே வாய்மையை வென்றிருந்தது புனைவு.

★★★

கடந்துபோன வெள்ளிக்கிழமை விடியல் வழமையான நாள்களை விட வும் நிறைய மர்மங்களைச் சுமந்து கொண்டிருப்பது போன்றிருந்தது.

நிறையப்பேருக்கு வியாழக்கிழமையில் இருந்தே நித்திரை போய்விட்டது. இருக்காதா பின்னே? நாளைபோட உலகம் அழியபோகுது என்று காண்போரெல்லாம் அறுதியிட்டுக் கூறிக் கொண்டிருக்கையில், எப்படி நிம்மதியாக நித்திரை கொள்ளமுடியும்.

உலக அழிவுக்கு 21.12.2012, நேரம் பகல் 9 மணி என்று சுப நேரத்தையும் நிச்சயித்து இருக்கையில், ஒருவேளை மாயன் நாள்காட்டியில் சொல்லப்பட்ட விடயங்கள் உண்மைதானோ என்ற பயம் முதலில் இதனை நம்பாத பலருக்கும் உட்புகுந்துவிட்டது.

சொல்லிவைத்தாற் போல இந்த உலக அழிவுவாதிகளின் கதைகளுக்கு உயிரூட்டுவது போன்று, நிறைய விஷயங்களும் நடந்து கொண்டிருந்தன.

-இலங்கையின் பலபாகங்களிலும் -யாழ்ப்பாணத்தை தவிர- விடாது கொட்டித்தீர்த்த பெருமழை

-மலையோரப்பகுதிகளில் நிகழ்ந்து கொண்டிருந்த மண்சரிவுகள்

- தென்னிலங்கையில் வழக்கத்துக்கு மாறாகப் பெய்யத் தொடங்கியிருந்த சிவப்பு மழை, மீன் மழை, ஜெலி மழை போன்ற வித்தியாசமான மழைவகைகள்

-இலங்கையின் கடலோரங்களில் கூட்டம்கூட்டமாக செத்து மிதக்கும் மீன்கள் -சில இடங்களில் வீழ்ந்து பலாமரங்களையும் கோழிகளையும் பதம் பார்த்த விண்கற்கள்

-சூரியனை வெற்றுக் கண்களால் பார்க்க வேண்டாம் என்னும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் திடீர் அறிவிப்பு

இவையெல்லாம் 21ஆம் திகதி பூமி அழியத்தான் போகிறது என்று கதை பரப்பியோரின் வெறு வாய்களுக்கு அவலாக வாய்த்தன. நம்ப மறுத்தவர்களும் ஒருவேளை உண்மையில் மாயன் நாள்காட்டியின் முடிவோடு உலகம் அழியத்தான் போகிறதோ? என்று நினைக்கத் தொடங்கிவிட்டார்கள்.

ஆயினும் எல்லாப்புதிர்களையும் வெள்ளிக்கிழமை விடியல் விடுவித்தது. 9 மணி, 10 மணி என்று மணித்தியாலங்கள் தான் கடந்து கொண்டிருந்தனவே தவிர எந்தவொரு பெரிய விண்கல்லும் பூமியைச் சொறியவில்லை சூரியன் ஓடி ஒளியவில்லை.

உலகின் ஏனைய நாள்களைப் போலவே அன்றைய நாளும் சாதாரணமாகவே விடிந்து, சாதாரணமாகவே முடிந்தது.

இப்போது என்னிடம் ஒரு கேள்வி எஞ்சியுள்ளது;

மாயன் கலண்டரின் முடிவோடு உலகம் அழியும் என்பது தான் பொய்த்துவிட்டது. ஆனால் இந்த வருடம் 31 ஆம் திகதியுடன் எங்கள் வீட்டிலுள்ள லீலா சித்திரக் கலண்டர், மெய்கண்டான் கலண்டர், நாலைந்து நகைக் கடை கலண்டர்கள், வங்கிகளின் கலண்டர் என்று எல்லாக் கலண்டர்களுமே முடிந்து போகின்றன. மாயன்களின் ஒரு கலண்டர் முடிந்தாலே உலகம் அழியபோகுது என்று சொல்லப்பட்டது .இப்போது என்னடாவென்றால் டிசம்பர் 31 ஆம் திகதியுடன் எல்லாக் கலண்டர்களும் முடிகின்றனவே அன்றைக்கு உலகம் அழியாதா?

யாராவது விடை தெரிந்தவர்கள் சொல்லுங்கள். அல்லது இந்த வதந்தியையும் பரப்ப உங்கள் உலகை வதந்தியாலேயே அழியுங்கள். ஏனெனில் ஏமாற நிறையப் பேரி இங்கு இன்னமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலகம் எவ்வாறோ ஒரு காலகட்டத்தில் அழிந்துவிடும் அல்லது அழிக்கப்பட்டுவிடும் என்பது பொது நம்பிக்கை. விஞ்ஞான ரீதியில் இவை நிரூபிக்கப் படாவிட்டாலும் உலகத்தை இறைவனோ, இயற்கையோ அழிக்காது போனாலும் அறிவு மிகுந்த மனிதர்கள் தாமே அந்த அழிவை ஏற்படுத்திக் கொள்ளப் போகிறார்கள் என்பது அவர்கள் செய்யும் காரியங்களே இன்று நமக்கு எடுத்து இயம்புவதாக இருக்கின்றன.

# உலக அழிவுக்கு காலம் இருக்கிறது

## மனிதனே அதனை செய்து முடிப்பான்

■ரெங்கன்

மாயன்கள் என்றழைக்கப்படும் ஆதிகால மனிதர்களால் உருவாக்கப்பட்ட நாட்காட்டியின்படி 2012 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 21 ஆம் திகதி உலகம் அழிந்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு எதுவும் நடக்கவில்லை, நாம் எல்லோரும் நலமுடன் இருக்கின்றோம் இன்று.

இருந்தபோதிலும் முன்னொரு சமயம் பூமியை நோக்கி விசாலமான நிபுரு என்ற கோள் வேகமாக நகர்ந்து கொண்டிருப்பதாகவும் அது இந்த பூமியின் மீது மோதி நொருங்கும் போது பூமி அழியக் கூடிய நிலை இருப்பதாகவும் எதிர்வு கூறப்பட்டிருந்தது. அந்தக் கோளானது பூமியின் மீது மோதுவதையே மாயன் நாள்காட்டி குறிப்பிட்டிருந்ததாகவும் கொள்ளப்படுகின்றது.

ஆனால் அவ்வாறான கோள் ஒன்று பூமியை நோக்கி வந்து கொண்டிருந்தமை உண்மைதானா, அந்தக் கோள் ஒரு வேளை திசைமாறி வேறு உலகை நோக்கிச் செல்கின்றதா? அதுவும் இல்லையென்றால் இனிமேல்தான் அது பூமியை நோக்கி வரப்போகின்றதா? என்பவை அர்த்தமுள்ள கேள்விகள்தான். இவைகளுக்கு விண்வெளி ஆய்வில் தீவிரமாக ஈடுபட்டுள்ள நாடுகளும் அவைகளின் ஆய்வு அமைப்புக்களும் தான் பதில் தரவேண்டும்.

உலகம் ஒரு குறிப்பிட்ட கால அளவில் அழிந்துவிடும் என்பது உலகிலுள்ள முக்கிய சமயங்கள் பலவும்கூட முன்கூட்டியே எதிர்வு கூறியுள்ளன. ஆக உலகம் எவ்வாறோ ஒரு காலகட்டத்தில் அழிந்துவிடும் அல்லது அழிக்கப்பட்டுவிடும் என்பது பொது நம்பிக்கை. விஞ்ஞான ரீதியில் இவை நிரூபிக்கப்படாவிட்டாலும் உலகத்தை இறைவனோ, இயற்கையோ அழிக்காது போனாலும் அறிவு மிகுந்த மனிதர்கள் தாமே அந்த அழிவை ஏற்படுத்திக் கொள்ளப் போகிறார்கள் என்பதை அவர்கள் செய்யும் காரியங்களே இன்று நமக்கு எடுத்து இயம்புவதாக இருக்கின்றன.

உலக நாடுகள் பலவும் இப்பொழுது ஏட்டிக்குப் போட்டியாக அணு குண்டுகளையும் நீர் வாயுக் குண்டுகளையும் இரசாயனக் குண்டுகளையும் உற்பத்தி செய்து கிடங்குகளை நிரப்பிக் கொண்டுள்ளன. இம்மாதிரி குண்டுகள் உற்பத்தி செய்து அடுக்கிக் கொள்ளக் கூடிய நாடுகளாக அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா, பாகிஸ்தான், இந்தியா முதலியவை கணக்கிடப்பட்டுள்ளன.

போதாக்குறைக்கு இஸ்ரேல் ஏற்கனவே அணுகுண்டை தயாரித்துவிட்டதாகவும் அதற்கு நேர் எதிரி நாடான ஈரானும் அணுகுண்டை தயாரிக்கும் முயற்சியில் ஒரு வருவதாகவும் கூறப்படுகின்றது. இந்த முயற்சியில் வடகொரியாவும் இறங்கிவிட்டதாகத் தெரிகின்றது.

இந்த நாடுகளில் ஒன்று தற்செயலாகவேனும் தன் எதிரி நாட்டின் மீது அணுகுண்டு ஒன்றை வீசுமானால் அது உலகின் பல பாகங்களில் பெரும் அழிவுகளை ஏற்படுத்துவதாய் இருக்கும். அல்லது உலகின் அழிவுக்கே கொண்டுபோயும் விடக் கூடும்.

இரண்டாம் உலகப்போரை முடிவுக்குக் கொண்டு வந்தமைக்கு ஜப்பானின் நாகசாகி, ஹிரோஷிமா நகரங்களின் மீது அமெரிக்கா அணுகுண்டை வீசியமைதான் காரணமாக அமைந்தது.

மூன்றாவது உலகப்போர் ஒன்று ஏற்படுமானால் அணுகுண்டு அதனை முடிவுக்குக் கொண்டு வருமா? உலகின் முற்றுமுழுதான அழிவுக்கு வழிவகுக்குமா என்பதை யாரும் அறுதியிட்டு சொல்லிவிட முடியாமல் இருக்கிறது.

### சிரிய அதிபர் அசாத்தின் ஆட்சி அதிகாரம் தளர்கிறது

சிரியாவில் அதிபர் பஷார் அல் அசாத்தின் ஆட்சி அதிகாரம் படிப்படியாக குறைந்து வருவதாக உணரப்படுவதால் ஆட்சியாளரின் கட்டுப்பாட்டிலுள்ள பெரும் அழிவை ஏற்படுத்தக் கூடிய ஆயுதங்கள் இஸ்லாமிய தீவிரவாதிகளின் அல்லது வேறு கட்டுப்படுத்த முடியாத சக்திகளின் கைகளில் சிக்கிவிடலாம் என்று அமெரிக்கா கவலைகொண்டிருப்பதாக வாஷிங்டன் செய்திகள் தெரிவிக்கின்றன.

அண்மையில் அலெப்போ நகரத்துக்கு அருகிலுள்ள ஷெய்க் சுலேமான் இராணுவத் தளம் எதிர்தரப்பு படைகளினால் கைப்பற்றப்பட்டபோது அந்தப் படைகளில் அமெரிக்காவால் பயங்கரவாதிகள் என்று அழைக்கப்படும் பிரிவினரும் சம்பந்தப்பட்டிருந்ததாக அறியப்பட்டது. இந்த முகாமில் இரசாயன ஆயுதங்கள் தொடர்பான சோதனைகள் நடத்தப்பட்டு வந்துள்ளன.

புரட்சிப் படையினர் சிரியாவின் அலெப்போ நகருக்கு அருகில் உள்ள சாபிரா என்றழைக்கப்படும் இன்னொரு இராணுவ தளத்தை நோக்கியும் முன்னேறிக் கொண்டிருப்பதாக தகவல் கிடைத்துள்ளது. இந்தத் தளத்திலும் பெரும் அளவில் இரசாயன ஆயுதங்கள் பரிசோதிக்கப்பட்டு வருவதாக அமெரிக்க அதிகாரிகளும் பகுப்பாய்வாளர்களும் தெரிவித்துள்ளனர்.

எதிர் தரப்பினரான சுதந்திர இராணுவத்தினர் விடுத்துள்ள அறிவிப்பில் தாங்கள் முதலில் கைப்பற்றிய தளத்தில் இரசாயன ஆயுதம் எதனையும் காணவில்லை என்று தெரிவித்துள்ளனர்.

சிரியாவில் இப்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் ஆசாத் தமது சொந்த மக்கள் மீது இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தாது போனாலும் அவ்விதமான முக்கியத்துவமான ஆயுதங்கள் மீதான தமது கட்டுப்பாட்டை அவர் இழந்துவிடக்கூடிய நிலையை எதிர்கொள்ள ஆரம்பித்துள்ளார் என்ற பயப்பீதி தோன்றியுள்ளது.

சிரிய இராணுவத்தின் இரசாயன இராணுவப் பயிற்சிப் பிரிவுக்கு தலைமை வகித்தவரான முன்னாள் சிரிய இராணுவ ஜெனரல் ஒருவர் கூறுகையில் இரசாயன ஆயுத மற்றும் நரம்புத் தளர்வு ஏற்படுத்தும் மருந்துகளின் கிடங்குகள் ஆயிரக் கணக்கான சிரிய இராணுவத்தினரால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. ஆனால் அவை இலகுவாக கைப்பற்றப்பட்டு விடலாம் என்றார்.

### இரசாயன ஆயுதம் பயன்படுத்தினால் இராணுவ நடவடிக்கை

சிரியா மக்கள் மீது இரசாயன ஆயுதம் எதனையும் பயன்படுத்தலாகாது. அவ்வாறு செய்தால் அது சிவப்பு சமிக்ஞையாக எடுத்துக் கொள்ளப்படும். அதன் பின்னணியில் இராணுவ நடவடிக்கை எடுக்க நேரும் என்று அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவும் வேறு தலைவர்களும் ஏற்கனவே எச்சரித்துள்ளார்கள். ஆனால் அசாத் பதவி இறக்கப்பட்டு சிரியாவின் இரசாயன ஆயுதங்கள் பாதுகாக்கப்படாமல் போனால் அல்லது அமெரிக்க எதிர்ப்பு சக்திகளின் கைகளில் அவை சிக்கிவிட்டால் அவர்கள் என்னவிதமாக பிரதிபலிப்பார்கள் என்பது பற்றி வெள்ளை மாளிகை அதிகாரிகள் தெளிவாக எதனையும் வெளியிடாமல் இருந்து வருகிறார்கள்.

- அதிபர் அசாத்தின் அதிகாரம் தளர்கிறது
- இரசாயன ஆயுதம் பாவித்தால் அதிரடி நடக்கும்
- தலிபான்களுடன் சமரசம்? ஹர்ஷாய் திட்டம்

**உலக நடப்புகள் ஒரு பார்வை**

### இரு தரப்புக்கும் வெற்றி வாய்க்காது

சிரியாவில் நடைபெறும் போரில் புரட்சிப் படைகளோ அரசோ வெற்றி பெறப் போவதில்லையென்று சிரியாவின் துணை ஜனாதிபதி பாரூக் அல்-ஷாரா ஒரு பேட்டியில் கருத்து தெரிவித்துள்ளார். டமாஸ்கஸில் அமைந்துள்ள பலஸ்தீன அகதிகள் முகாம் மீது அரச படைகள் விமான தாக்குதல் நடத்திய வேளையில் இந்தக் கருத்தை அவர் வெளியிட்டார்.

### மக்மூத் அப்பாஸ் எச்சரிக்கை

பலஸ்தீன அகதிகள் முகாம் மீது சிரிய படைகள் தாக்குதல் நடத்தியிருப்பதை பலஸ்தீன அதிபர் மக்மூத் அப்பாஸ் கடுமையாக கண்டித்திருக்கிறார்.

கடந்து செல்லும் ஒவ்வொரு நாளிலும் இராணுவ அல்லது அரசியல் தீர்வென்றிலிருந்து நாம் தூரத்தில் விலகிச் சென்று கொண்டிருக்கிறோம் என்று துணை அதிபர் கூறினார்

### தலிபான்களுடன் ஆப்கான் அமைதி காண்பதற்கு திட்டம்

ஆப்கானிஸ்தானில் நிலை கொண்டுள்ள மேற்கு நாட்டு படைகள் திரும்பிச் செல்லவிருக்கும் நிலையில் ஆப்கான் அரசு அங்கு மோதலில் ஈடுபட்டு வரும் தலிபான் தீவிரவாதிகளுடன் அமைதி திட்டமொன்றை பகிர்ந்து கொள்ள முன்வந்திருக்கின்றது. இதற்காக ஐந்து கட்டத் தீர்வு திட்டமொன்றை ஆப்கான் அரசு வெளியிட்டிருக்கிறது.

2015 ஆம் ஆண்டுக்கான அமைதி செயற்பாட்டு வீதி வரைபடம் என்று பெயரிடப்பட்டுள்ள இந்தத் திட்டத்தின் படி முதற்கட்டமாக இந்தத் திட்டத்துக்கு பாகிஸ்தானில் இணக்கப்பாடு பெற்றுக் கொள்ளப்படும்.

தலிபான் தீவிரவாதிகளுக்குப் புகலிடம் கொடுத்து அவர்களை வளர்த்து வரும் நாடு பாகிஸ்தான் என்பது ஆப்கானிஸ்தானின் குற்றச்சாட்டு.

அதன் பின்னர் தலிபான்களுடன் முறையாக பேச்சு ஆரம்பிக்கப்படும். இந்தப் பேச்சுக்கள் அமெரிக்கா மற்றும் பாகிஸ்தான் ஆதரவுடன் சவூதி அரேபியாவில் நடைபெறும். இதுவரை காலமும் அதிபர் ஹமிட் கர்ஸாயி அரசுடன் நேரடி பேச்சுவார்த்தை எதுவும் நடத்துவதற்கு தலிபான்கள் மறுத்து வந்துள்ளனர். கர்ஸயி அமெரிக்காவின் கைப்பொம்மை என்று அவர்கள் வர்ணித்து வந்துள்ளனர்.

அமெரிக்காவும் தலிபான்களுடன் இந்த வருட முற்பகுதியில் கட்டாரில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்திருந்தது. ஆனால் இஸ்லாமிய தீவிரவாதிகள் அதனை இடைநடுவில் துண்டித்துக் கொண்டனர்.

வீதி வரைபடத்தின் மூன்றாவது கட்டம் 2013 ஆம் ஆண்டு இரண்டாவது அரைப் பகுதியில் ஆரம்பமாகும். இது போர் நிறுத்தம் ஒன்றுக்கு அழைப்பு விடுப்பதாகவும் தலிபான்களும் ஏனைய போராட்ட குழுக்களும் அரசியல் கட்சிகளாக தம்மை புனர் அமைத்துக் கொள்வதாகவும் இருக்கும். அதன்படி அவர்கள் தேர்தலில் பங்குபற்றுபவர்களாகவும் இருப்பர்.

அதேசமயம் தலிபான் தலைவர்கள் நாட்டின் அதிகார கட்டமைப்பிலும் பங்குகொள்வர். பல்வேறு மட்டங்களில் தெரிவு செய்யப்படாத பதவிகளை அவர்கள் அலங்கரிப்பர். இறுதிகட்டமாக 2014 ஆம் ஆண்டின் முற்பகுதியில் மோதலுக்கு ஓர் அமைதியான தீர்வு காணப்படும். அதன் மூலம் ஆப்கானிஸ்தானிலும் அதன் பிராந்தியத்திலும் நீடித்த நிலையான அமைதிக்கு வழிகாணப்படும்.

2001 ஆம் ஆண்டு தலிபான்களின் ஆட்சி அமெரிக்கத் தலைமையில் நடந்த படையெடுப்பின் போது வெளியேற்றப்பட்டது. இப்போதைய திட்டத்தின்படி தலிபான்கள் ஆட்சியில் இடம் பெறுவார்களானால் ஜனநாயக ரீதியில் பெற்றுக் கொள்ளப்பட்ட அம்சங்கள் சீர்குலைவதுடன் மனித உரிமைகள் குறிப்பாக பெண்களின் உரிமைகள் நிராகரிக்கப்படக் கூடும் என்ற அச்சம் நிலவுகின்றது. எதுவானாலும் 2014 ஆம் ஆண்டளவில் நேட்டோ மற்றும் அமெரிக்கப் படைகள் விலகிக் கொள்ளவிருப்பதால் ஆப்கானிஸ்தானில் பல தரப்பட்ட குழுக்களின் மோதல்களுக்கு வழிவகுப்பதாக இருப்பதுடன் அமைதி முயற்சி பயனற்றுப் போய்விடலாம் என்ற அச்சமும் நிலவவே செய்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Midea Electro Mart

# நத்தார்/புத்தாண்டு தினங்களை முன்னிட்டு விஷேட விலைக்கழிவுடன்

# Midea PC Show Room

Authorized Dealer for **Abans** Ltd.



Samsung 22" LED T.V. With DVD Player Free Rs.34,900/= 1Year warranty

Samsung 32" LED T.V. With DVD Player Free Rs.63,900/= 1Year warranty

Sharp TV BG 32" Rs.39,900/= 1Year warranty

LG.Wf 761 Washing Machine - Free Items Dual sim Touch Phone Free **49900/=**

69900/= LG 252 Door Cooling Fridge With free issue * Grinder * Silver Kettle * Rice Cooker * Standfan * Re chargable light

### Desktop pc

| COMPUTER | INTEL DUAL CORE | INTEL DUAL CORE | INTEL CORE i3 |
|---|---|---|---|
| Processor | Intel Dual core 2.60GHZ | Intel Dual core 2.60GHZ | Inter Core I3 3.3GHZ |
| Mother board | Intel Board DH61 | Intel Board DH61 | Intel Board DH61 |
| Memory | 2GB DDR3 1333MHz | 2GB DDR3 1333MHz | 2GB DDR3 1333MHz |
| Hart disk | 500GB SATA-7200RPM | 500 GB SATA-7200RPM | 500GB SATA-7200RPM |
| Disk drive | DVD Writer | DVD Writer | DVD Writer |
| Casing | ATX 500W | ATX 500W | ATX 500W |
| Monitor | Monitor 15.6" LED | Monitor 19" LED | Monitor 19" LED |
| Key board | Optical mouse USB | Optical mouse USB | Optical mouse USB |
| Mouse | Multimedia key board | Multimedia key board | Multimedia key board |
| Speaker | Multimedia Speaker | Multimedia Speaker | Multimedia Speaker |
| Price | price =45900 | price=48900 | price= 56900 |

அனைத்து Sony TV களுக்கும் விசேட விலைக்கழிவும் இரண்டு வருட உத்தரவாதமும்



73900/= LG 282 Door Cooling Fridge - With free issue * Grinder Silver Kettle Rice Cooker * Standfan * Re chargable light

**Laptop கொள்வனவு செய்பவர்களுக்கு HSDPA 7.2Mbps Dongle FREE**

### Laptops

| HP Mini | Dell 3520 | HP pavilion G6 | HP pavilion G4 | HP pavilion G6 |
|---|---|---|---|---|
| Atom 1.6 GHz | Intel Dual core 2.5GHz | Intel core i3 2.2 GHz | Intel core i3 2.2 GHz | IntelCorei5-2.50 GHz |
| Free Dos | Ubuntu | Free Dos | Free Dos | Free Dos |
| RAM 2GB DDRIII | RAM 2GB DDRIII | RAM 2GB DDRIII | RAM 2GB DDRIII | 4GBDDR3RAM |
| Intel Graphics | Intel HD Graphics | Intel HD Graphics | Intel HD Graphics | Intel® HD Graphics |
| H.D 320GB | H.D 320GB | H.D 320 GB | H.D 500 GB | 500 GB HDD |
| LED 10. HD LED | LED 15.6" HD | LED 15.6" HD LED | LED 14" HD LED | LED 15.6. HD LED |
| Wifi, BlueTooth | DVD super multi | DVD Writter | DVD Writter | DVD Writer |
| webCamera Mic | Wifi, BlueTooth webCamera With Mic | Wifi. BlueTooth webCamera With Mic | Wifi, BlueTooth webCamera With Mic | Wifi, BlueTooth webCamera With Mic |
| Energy Star power | Energy Star power | Energy Star power | Energy Star power | Energy Star power |
| Price=47900 | Price=57900 | Price=69900 | Price=68900 | Price=87900 |

42900/= LG 191 Single Door Fridge Free - Dual sim Touch Phone


LG.32 LED TV with Free LG Home theater Prize 72,900/

Terms & Contdition 3Years Manufacturer's warranty

**No:1-1, 1-H, STANLEY ROAD, JAFFNA. Tel: 021-2224566 Fax: 021-2221646**

**www.mideamart.com | e-mail:midea21@gmail.com**

# IELTS™




**We provide FREE IELTS study support for candidates who register with us.**

**We offer:**

- a FREE practice workbook
- a FREE 30 hour online preparation course
- preparation material at the Jaffna public library*

Register before 10 January 2013 and stand a chance to win a FREE IELTS mock test**

You can register by visiting any of our registration centres in the northern reigon: **www.britishcouncil.org/srilanka-exams-ielts-registration-centres.htm**

For more information please call us on +94 (0)11 7521 521

*Limited collection
**Terms and conditions apply

IELTS British Council Sri Lanka

BRITISH COUNCIL

IELTS is jointly owned by the British Council, IELTS Australia and University of Cambridge ESOL Examinations.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**அவுஸ்திரேலியாவுக்கு வீசா இல்லாமல் படகுமூலம் நீங்கள் பயணம் செய்தால் -**

- உங்களது விண்ணப்பம் அவுஸ்திரேலியாவில் பரிசீலிக்கப்படாது போகலாம்.
- எனவே, நீங்கள் நவுறு, பப்புவா நியூகினி போன்ற வேறொரு நாட்டிற்கு இடமாற்றம் செய்ய வேண்டிய நிலை ஏற்படலாம்.
- இலங்கையிலுள்ள உங்களது குடும்பத்தினருக்கு அனுப்பவென நவுறுவிலோ அல்லது பப்புவா நியூகினியிலோ நீங்கள் பணத்தைச் சம்பாதிக்க முடியாது.
- விசேட மனிதாபிமான திட்டத்தின் அடிப்படையில் உங்களது குடும்பத்தை உங்களுடன் இணைத்துக்கொள்ளவென உங்களால் விண்ணப்பிக்க முடியாது.

மேலதிகத் தகவல்களை www.youtube.com/user/notopeoplesmuggling என்ற முகவரியில் 'ஆட்கடத்தலுக்கு மறுப்பு' என்ற யூ டியூப் அலைவரிசை மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

## சளியைத் துரத்தும் கருந் துளசி



நம் உடலில் ஏற்படக் கூடிய எந்த நோயையும் சாதாரணமாக எடுத்துக் கொள்ளக்கூடாது. சிறுதுளி பெருவெள்ளம் போல சிறு சளி பெரிய பிரச்சினையை உருவாக்கி விடும். நோய் எதிர்ப்பு சக்தி நம்மிடம் சீராக இருந்தால், எந்த நோயையும் ஈசியாக விரட்டி விடலாம். குறைவாக இருக்கும் பட்சத்தில் சளி போன்ற உபாதை கள் அடிக்கடி ஏற்படுகிறது. இது மெல்ல மெல்ல விஸ்வரூபம் எடுத்து நமது மூச்சுப் பாதையை பாதித்து நச்சாகி விடுகிறது. நுரையீரல் பகுதியில் வறட்சி ஏற்படாமல் இருப்பதற்காக நம் உடலில் இயற்கையாகவே உருவாக்கப்பட்டதுதான் சளி. இது பல்கி பெருகும்போது, அதிகளவு சளியை வெளியேற்றி, மீண்டும் இதனால் ஒவ்வாமை ஏற்படாமல் பாதுகாப்பதற்காக மருந்துகளை நாம் உட்கொண்டு வருகிறோம். அன்றாட உணவு பழக்க வழக்கங்களில் சில மாறுதல்களை செய்தால், இந்த பிரச்சினையை ஓரளவு சரி செய்யலாம். மஞ்சள், மிளகு, சிற்றரத்தை, பூண்டு, மல்லி, சின்ன வெங்காயம் போன்றவைகள் நம் உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்து கின்றன. கருந் துளசியை சளித் தொல்லைக்கு ஒரு சிறந்த மருந்துச் செடியாக குறிப்பிடலாம். ஆசிமம் டெனியபுளோரம் டைப்பகா என்ற தாவரவியல் பெயர் கொண்ட இந்த செடிகளின், இலைகள் நமது உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்துகின்றன. சிறிது கருந்துளசி இலைகளை எடுத்து பசும்பாலில் போட்டு காய்ச்சி குடிக்க வேண்டும். இது பாலின் ஒவ்வாமையால் ஏற்படுகின்ற சளியை நீக்குகிறது. நீரில் போட்டு நன்கு கொதிக்க வைத்து ஆவி பிடித்தால், சைனஸ் தொல்லையால் ஏற்பட்ட சளி நீங்கும். அடிக்கடி சளி பிடிக்காமல் இருக்க 5 அல்லது 10 கருந்துளசி இலைகளை ஒரு லீற்றர் நீரில் ஊற வைத்து, அந்த நீரை அருந்தி பின்னர் இலைகளை மென்று சாப்பிட வேண்டும். தினமும் அதிகாலையில் வெறும் வயிற்றில் 3, 4 இலைகளை சாப்பிட்டு வந்தால் கிருமித் தொற்றால் ஏற்படும் சளித் தொல்லைக்கு முற்றுப் புள்ளி வைக்கலாம்.

**சம்பத் ரண்திரியவின் அடகுத்தொகை மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது..!**

**கரட் 24 ற்கு 50,250/-**

**கரட் 22 ற்கு 46,000/-**

சம்பத் ரன்திரிய

இந்த அடகுத்தொகைக்கான அவகாசம் ஒரு வருட காலம் மாத்திரமே!

සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
SampathBank

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# முதலாம் ஆண்டு ஆத்ம சாந்தி பிரார்த்தனை அழைப்பு

அமரர்
**கந்தையா மனோகரன்**

தோற்றம்:- 1949.01.09
மறைவு:- 2012.01.05
திதி:- 23.12.2012

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நந்தன ஆண்டு மார்கழித்திங்கள் 8 ஆம் நாள் இன்று (23-12-2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணிமுதல் யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் தங்களையும் தங்கள் குடும்பத்தினரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நாவற்குழி, கைதடி. குடும்பத்தினர்.

யாழ் மழலைகளுக்காக
புதிய வருகை!
ஆரம்பம் 23.12.2012
Abi Baby Mart
Smile at your baby
Kids Stationaries, Mother & Baby Needs, Toys.
எல்லாப் பொருட்களுக்கும் 20%-30% விலைக்கழிவு.
விசேடமாக பாடசாலை மாணவர்களின் கொப்பி 30% விலைக்கழிவு. (கையிருப்பு உள்ளவரை மட்டும்)
சிறார்களின் ஆடைகளிற்கு திறப்புவிழாவிலிருந்து 3 நாட்களுக்கு விசேட சலுகைகள்.
Vavucher உண்டு
Sale Discount 30%-50%
267, Brown Road, Jaffna
Call : 0750519482
Johnson's baby Huggies Pigeon Pampers Philips Avent

Christmas Dinner Party
Tuesday 25 December 2012 @ 7.00pm
Hotel Green Grass
Rs.999/=
* Buffet Dinner
* Santa Claus Entertainment, Games & Gifts For Kids
* Children Under 12 years- free of Charge
for more info 021 222 4185 / 0777 807 568




அதிக பாதுகாப்பு மற்றும் அவசர தேவைக்கு போதுமான பணம்
ஏராளமான பரிசுகளுடன் அதிகூடிய தொகை
24k 45,000/-
22k 42,500/-
மாதாந்த வட்டி 1.67% மட்டுமே
செலான் தங்க நகை அடகு சேவை
அழையுங்கள் 011 200 88 88
செலான் வங்கி

## ஷம்பு நுரை எவ்வாறு உண்டாகிறது

சவர்க்காரத்தின் நுண்ணிய சின்னஞ்சிறு குமிழ்களின் திரட்சியே நுரை எனப்படுகிறது. நம் தலை மயிரிழைகளின் இடைவெளியில் எப்போதும் ஏராளமான காற்று உள்ளடங்கி இருக்கும். நீரில் மிகுதியாகக் கரையும் திறன்கொண்ட மென்மையான பொருளில் இருந்துதான் ஷாம்பு தயாரிக்கப்படுகிறது. ஷாம்பைத் தண்ணீர் மற்றும் முடியுடன் இணைத்து உரசும் பொழுது மென்மையான சோப்புப் படலங்கள் உண்டாகின்றன. அப்போது முடியிடையே பொதிந்திருக்கும் காற்றின் காரணமாக நுண்ணிய சின்னஞ்சிறு குமிழ்கள் உருவாகின்றன. தலையில் ஆயிரக் கணக்கான மயிரிழைகள் இருப்பதால், ஏராளமான அளவில் ஷம்பு நுரையும் உண்டாகிறது.



www.kentonbike.com
Like us on FB
KENTON
Extra Strong! Extra Stylish!
எப் பாதையையும் வெற்றிகொள்ளும் சைக்கிள்கள்
Kenton Hurricane
With Double Suspension
Christmas Sale
Head office
FAIZAL HARDWARE STORES, No. 74, Dam St... Tel: 011 2 433 727



ஆகாஷ் கிராபிக்ஸ்
டிஜிட்டல் பிரிண்டிங்
111 பஸ் நிலைய மேல்மாடி, வவுனியா.
024 2224965
akashgraphics.lk@gmail.com

விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
உதயன்
அரசுக்கு எதிராக நேர்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Teen Girl ♥ The Lover

# இன்று யாழில் தனது 2ஆவது அகவையில் வெற்றிநடைபோட்டு தடம்பதிக்கும் The Lover Teen Girl ஸ்தாபனத்தினர்

## தமது இனிய நத்தார் புதுவருட வாழ்த்துக்களை தமது வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் தெரிவித்துகொள்கின்றது

அனைத்து தரப்பினருக்குமான ஆடைகள், அலங்காரப் பொருட்கள், காலணி வகைகள் கைப்பைகள் மற்றும் வெளிநாட்டுப் பரிசுப்பொருட்கள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்

*High in Fashion low in Prices*

**10% விசேட விலைக்கழிவு இன்று மட்டுமே!**
**இரு கிளைகளில் மட்டுமே....முந்துங்கள்**

207, Power House Road, Jaffna

362, Galle Road, Wellawatte ( Near Arpico / Rolex Hotel )






### மனமார்ந்த நன்றிகள்...

எமது வெற்றிக்குப் பங்களிப்பாற்றிய வாடிக்கையாளர்கள் அனைவருக்கும், The Lover Team இற்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, மேலும் வடமாகாணத்தில் மிக விரைவில் பல கிளைகளைவிஸ்தரிக்க தங்களின் ஆதரவினை எதிர்பார்க்கின்றேன்

அங்கஜன் இராமநாதன்
Proprietor - The Lover Teen Girl

MMW

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சதாசிவம் சிவகாமசுந்தரி**
(சுந்தரி)

அன்னையின் மடியில்
17.01.1929
ஆண்டவன் அடியில்
04.01.2012
திதி:- ஏகாதசி

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து
எமையெல்லாம் நல்நிலைக்கு ஆளாக்கிய
எம் அம்மாவே!
ஆண்டொன்று ஆனதுவோ
எம் கவலையைச் சொல்லியழ
யார் உள்ர் புவிதனில்
நயினை நாகபூசணி அம்பாளின்
பாதாரவிந்தங்களைத் தாள் பணிந்து என்றும்
உங்கள் ஆத்மா சாந்திபெறப்
பிரார்த்திக்கின்றோம்.

மகள், மகன்,
பேரப்பிள்ளைகள்.

5 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

(26932)(2.6)

---

# 2013 இற்கான புதிய அனுமதிகள்

## BBC ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலை

11 வது வருடத்தில்

| வயது 2+ முதல் வயது 3+ வரை | வயது 3+ முதல் வயது 4+ வரை | வயது 4+ முதல் வயது 5+ வரை |
|---|---|---|
| Play Group | Montessori | Pre School |

இப்பொழுது பெற்றோர்களின் வசதி கருதி எமது சில வளாகங்கள் இடமாற்றப்பட்டுள்ளன.

கற்பித்தல் முறை:

- ★ சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட Dr. Maria Montessori + Canadian ECE Method
- ★ தமிழ் கட்டாய பாடம்.
- ★ ஆங்கில மொழி மூல கற்பித்தல்
- ★ சிறார்களின் திறமைகளை வெளிக் கொணரும் நிகழ்ச்சிகளில் சகலரும் பங்கு பெறுவர்.
- ★ விளையாட்டுப் போட்டி. English Concert, முத்தமிழ் விழா. சித்திரக்கலைவேலைக் கண்காட்சி. Graduation Ceremony.

பாலர் பாடசாலை வளாகங்கள்

தலைமைக் காரியாலயம் → **யாழ்ப்பாணம்** 64, கோயில் வீதி, யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| **யாழ்ப்பாணம்** மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம் | **நீர்வேலி** [illegible] மைல் கல் இராச வீதி |
| **கோப்பாய்** பருத்தித்துறை வீதி கோப்பாய் மத்தி | **சாவகச்சேரி** சாவகச்சேரி Hindu College Primary School அருகாமை |
| **மானிப்பாய் 1** 252, ஆலடிச்சந்தி, யாழ் வீதி | **அச்சுவேலி** ஆதார வைத்தியசாலை அருகாமை |
| **மானிப்பாய் 2** சங்கரப்பிள்ளை வீதி (மானிப்பாய் [illegible] வீதி) | **சங்கானை** பிரதேச செயலகம் அருகாமை (நிகர வைரவர் கோவிலடி) |
| **சுன்னாகம்** Dr. சபாரத்தினம் வீதி சுன்னாகம் | **வடமராட்சி** பருத்தித்துறை வீதி, மாலி சந்தி, கரவெட்டி |

## சனி, ஞாயிறு மற்றும் வார நாட்களில் ஆங்கில வகுப்புகள்

- **Certificate in English** — இலக்கணம், பேச்சுத்திறனை வளர்ப்பதற்கு
- **Diploma in English** — G.C.E (O/L), (A/L) முடித்து செய்தோர் ஆங்கில அறிவை வளர்ப்பதற்கு
- **ESOL A1, A2** — Sponsor Scheme ஊடாக வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு
- **IELTS** — உயர் கல்வி கற்கவும், வெளி நாடு செல்ல விரும்புவோருக்கும்

பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புகள்

- ★ Pre Foundation
- ★ Foundation
- ★ Level 1,2,3,4

பாடசாலை பாடத்திட்டத்திற்கமைய ஆங்கில பாடநெறிகள்

**BRITISH BUSINESS COLLEGE**
64, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
**Tel:021 222 5796, 077 362 7055**

British Council இனால் அங்கிகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு நிலையம்.

Registered as an Education & Training Company with the Registrar of Companies - Sri Lanka. Reg. No: P 9718

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org